358

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கை
ஏப்ரல் 1, 1999 தொகுதி 68
எண் 3.

D
V2H,31 N99
N99. 68.3
D
V2H,31 N99
N99
D
201017

வெளியீடு 11-02-2000

Issued 11-02-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 1, 1999 - தொகுதி 68 - எண் 3

Thursday, 1st April, 1999—Volume 68 - No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

லை ரூ. 3.00]

[Price Rs. 3.00

## 1-4-1999

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 307-350 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (ஒன்பதாவது மற்றும் பத்தாவது பட்டியல்) | 350-417 |
| 2. சிறப்பு கவன ஈர்ப்பு— | |
| (அ) நெல்லை மாநகராட்சி வரி விதிப்பை எதிர்த்து சாலை மறியல் | 418-432 |
| திரு. மு. அப்பாவு | 418-423 |
| திரு. பா. வேல்துரை | 423-426 |
| *திரு. அ.லெ. சுப்பிரமணியன் | 426-430 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 431-432 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 431,432 |
| (ஆ) மின் தடை, தவிர்க்க நடவடிக்கைகள்— | 435-439 |
| *மாண்புமிகு திரு ஆற்காடு நா. வீராசாமி | 436-439 |
| 3. புழலேரி உடைப்பு தொடர்பாக முதல்வர் எடுத்த நடவடிக்கைக்குப் பாராட்டு— | 433 |
| 4. திரு. இரா. தாமரைக்கனி, திரு. சொ. கருப்பசாமி ஆகியோரைப் பேரவைப் பணிகளினின்று நீக்கிவைத்த நாட்களைக் குறைக்கக் கோருதல்— | 433-435 |

பக்கங்கள்


5. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

| | |
|---|---|
| கோரிக்கை எண் 17—கல்வி | 439-514 |
| *திரு. வி.கே. லட்சுமணன் | 439-446 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 444, 459, 460-462 465, 467, 468, 478, 480-511 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 446-453 |
| *திரு. வெ. கோவிந்தன் | 453-456 |
| திரு. ஜி.கே. மணி | 456-463 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 464-469 |
| திரு. பி. வெங்கடசாமி | 469-472 |
| *திரு. கே. சுப்பராயன் | 472-480 |
| திரு. சி. வேலாயுதன் | 479 |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 514-515 |


221077
D V2'',31 N99
N99.683

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 18, வெகுதான்ய—திருவள்ளுவர் ஆண்டு 2030**
**1999 ஏப்ரல் 1, வியாழக்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
*மாடல்ல மற்றை யவை"*

*கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கொப்பான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை.*

## 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 221, *திரு. சி.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

**221—**

**மின் நிலையம் அமைத்தல்**

***14854-திரு. சி.வெ. கிருஷ்ணன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியத்தில் பாளையம் பகுதியில் மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், பாளையம் பகுதியில் புதிதாக ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குஜிலியம்பாறை ஒன்றியம், பாளையம் பகுதியிலுள்ள நந்தக்கோட்டை ஊராட்சி, கூடலூர் ஊராட்சி, கருங்கல் ஊராட்சி ஆகியவற்றிற்கு கரூர் வட்டம், வெள்ளியணைப் பகுதியிலுள்ள துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வருகிறது. அதுபோல, சத்திரப்பட்டி துணை மின் நிலையத்திலிருந்து ஆறுதலோடு ஊராட்சி, திருக்கோரணம் ஊராட்சி, ஆலம்பாடி ஊராட்சி ஆகியவற்றிற்கு மின்சாரம் வருகிறது. அதைப்போல, கோயிலூர் பகுதியிலிருந்து குஜிலியம்பாறைக்கு மின்சாரம் வருகிறது. குஜிலியம்பாறைப் பகுதியிலே 50,000 மக்கள் தொகை இருக்கின்ற காரணத்தாலும், தொழிற்சாலைகளும் உருவாகக்கூடிய நிலை இருக்கிற காரணத்தாலும், அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுடைய நலனைக் கருதியும அங்கு விரைவில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா? அமைச்சர் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கனிவோடு கேட்டு, விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த இந்தக் கருத்தின் அடிப்படையில்தான் ஏற்கெனவே மின்சார வாரியம் இதுபற்றி ஆய்வு செய்து பாளையத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு வாரிய நிதிநிலைமைக்கேற்ப இந்த ஆண்டு பரிசீலிக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்தனை பேர் கையைத் தூக்குகிறீர்களே, வேடசந்தூரைப்பற்றிக் கேட்கப் போகிறீர்களா? (குறுக்கீடு) இல்லை, ஆகவே அனுமதி இல்லை.

வினா எண் 222, திரு. லி. அய்யலுசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



222—

## ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவர் நியமனம்

***16650—திரு. லி. அய்யலுசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரம்ப சுகாதார நிலையம் ஒவ்வொன்றிலும் பல் மருத்துவர் நியமனம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதுபோன்ற செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கிராமப் பகுதிகள் நிறைந்த மாநிலம். இந்தத் தமிழ்நாட்டில் சாதாரண விவசாயிகளும் விவசாயக் கூலிகளும் தொழிலாளர் வர்க்கமும், மாணவர்களும்கூட பல் நோயால் கஷ்டப்படுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒவ்வோர் ஆரம்ப சுகாதார நிலையத்திலும் பல் மருத்துவர்களை நியமித்தால், அங்குள்ளவர்கள் கிராமங்களை விட்டு வெளியே செல்லாமல் அங்கேயே வைத்தியம் பார்த்துக்கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும். பல் நோய் என்பது ஒரு கொடிய நோய். இப்படிப்பட்ட நிலையில் கிராமப் பகுதியிலுள்ள ஒவ்வோர் ஆரம்ப சுகாதார நிலையத்திலும் பல் மருத்துவர்களை நியமிப்பதற்கு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அன்போடு கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள 27 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும், 122 தாலுகா மருத்துவமனைகளிலும் மட்டும்தான் பல் மருத்துவப் பிரிவு இயங்கி வருகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவப் பிரிவு தொடங்கக்கூடிய வாய்ப்பு நிச்சயமாகக் கிடையாது. ஆனால், Reorientation of Medical Education என்ற திட்டத்தில் இப்போது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவுரையின்படி ஒவ்வொரு மருத்துவமனைக்கும் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள்

இணைக்கப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவ நிபுணர்கள், பல் மருத்துவர்கள், சுழல் முறையில் சென்று கிராம மக்களுக்குச் சிகிச்சை அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அவர்கள் ஒவ்வோர் ஒன்றியத்திற்கும் வாரத்திற்கு ஒரு நாளைக்குச் ,சென்று கிராம மக்களுக்குப் பல் மருத்துவ சிகிச்சை செய்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் அன்னியில் வட்ட மருத்துவமனைகளிலும், தாலுகா மருத்துவமனைகளிலும்கூட இப்போது பல் மருத்துவ வசதி இல்லாத சூழ்நிலை இருக்கின்றது. மற்ற தேசங்களிலே பல் மருத்துவமனைதான் மிகவும் அவசியமாகக் கருதப்படுகிறது. அதுபோல தாலுகா மருத்துவமனைகளிலே பல் மருத்துவரை நியமிக்கிற சூழ்நிலையை அரசு ஏற்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தமுள்ள 156 தாலுகா மருத்துவமனைகளில், 122 தாலுகா மருத்துவமனைகளில் இப்போது பல் மருத்துவப் பிரிவு இயங்கி வருகிறது. மீதமுள்ள 34 தாலுகா மருத்துவமனைகளுக்கும் நிதிநிலையையொட்டி, இந்தப் பல் மருத்துவப் பிரிவை விஸ்தரிக்க அரசு திட்டமிட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்திலே 30 ஆயிரம் பேர்களுக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க வேண்டுமென்ற ஓர் அடிப்படை இருந்தாலுங்கூட, ஒன்றரை இலட்சம், இரண்டு இலட்சம் மக்கள் இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியங்களிலே, ஒன்று அல்லது இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள்தான் இருக்கின்றன. குறிப்பாக, வேலூர் ஒன்றியத்தை எடுத்துக்கொண்டாலும்கூட, ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள், 30 ஆயிரத்திற்கு ஒரு P.H.C. ஆரம்பித்தால்தான், பல் மருத்துவர்களையும், மற்றவர்களையும் நாம் போடமுடியும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துணை வினாவே ஆகாது.

**திரு. சி. ஞானசேகரன்:** அதற்குத்தான் வந்து கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மிகவும் சட்டம் தெரிந்தவர் என்பீர்கள்; நீங்கள் அதிக நாட்களாக இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் என்பீர்கள். ஆனால், துணை வினாவையே, மூல வினாவிற்குத் தொடர்பில்லாமல் கேட்டுக்கொண்டிருப்பீர்கள். ஆரம்ப சுகாதார நிலையத்திலே பல் வைத்தியத்திற்கு ஏற்பாடு செய்வீர்களா, இல்லையா என்கிற அது விஷயமாகக் கேளுங்கள். ஆரம்ப சுகாதார நிலையம் போதாது என்று சொல்வதற்கு நான் அனுமதி கொடுக்கமாட்டேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆகவே, பல் மருத்துவர்களானாலும் சரி, இதய நோயைப் பார்க்கக்கூடிய Cardiologist போன்ற சிறப்பு மருத்துவர்களானாலும் சரி, அவர்கள் எல்லாம் அதிகமான சேவையை ஆற்ற வேண்டுமென்று சொன்னால், 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இருந்தால்தான், நம்முடைய தமிழகத்தினுடைய தேவையை அவர்களால் பூர்த்தி செய்ய முடியும் என்கிற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தவும் அதுபோல, நிறைய Specialist-களை appoint செய்வதற்கும் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களிலே எந்தவிதமான specialist-ஐயும் நியமனம் செய்ய முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேலூர் ஒன்றியத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். வேலூர், அந்த மாவட்டத்தினுடைய தலைநகரம். அந்தத் தலைநகர மருத்துவமனையிலே எல்லா பிரிவு மருத்துவ வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, குறைந்தது 7 அல்லது 8 கிலோமீட்டர் தூரத்திலுள்ள அந்த ஒன்றியத்தைச் சார்ந்தவர்கள், மாவட்ட மருத்துவமனைக்குச் சென்று, தங்களுக்கு வரக்கூடிய அத்தனை நோய்களையும் கவனித்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. இராசமாணிக்கம்.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டு எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களும் 24 மணி நேர மருத்துவமனைகள்

[1999 ஏப்ரல் 1

இயங்கும் என்று அறிவித்தார்கள். இன்னும் கிட்டத்தட்ட 124 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேர மருத்துவமனைகளாக அறிவித்து செயல்படவில்லை. விரைவிலே அவை அவ்வாறு செயல்பட ஆவன செய்ய முன்வருவார்களா என்பதை அறிய விரும்புவதோடு, என்னுடைய ஒரத்தநாடு தொகுதியிலுள்ள தொண்டராம்பட்டு ஆரம்ப சுகாதார நிலையம் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுக்குச் சொன்னது உங்களுக்கும் பொருந்தும்; உட்காருங்கள். திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களிலே மருத்துவ வசதிகளோடு இணைத்து, பல் மருத்துவத்தையும் கவனிக்க வேண்டும். பல் மருத்துவம் என்பது முறையாக நடக்காத ஒரு சூழ்நிலையை பல பகுதிகளிலும் பார்க்கிறோம். குறிப்பாக, தாலுகா மருத்துவமனைகளிலேகூட, இந்தப் பல் மருத்துவம் என்பது ஒரு செயலற்ற முறையிலேதான் இருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், குழித்துறை அரசு மருத்துவமனையில், அப்படிப்பட்ட ஒரு நிலை தொடர்கிறது. இதனை மாற்றி, சரியான பல் மருத்துவத்தை ஆரம்ப சுகாதார நிலையங்களிலே அளிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். ஆரம்ப சுகாதார நிலையங்களிலே பல் மருத்துவப் பிரிவு தொடங்குவதற்கான வாய்ப்பே கிடையாது. இருந்தாலும், இப்போது 27 மாவட்ட மருத்துவமனைகளிலும், 122 தாலுகா மருத்துவமனைகளிலும் பல் மருத்துவப் பிரிவு இயங்கி வருகிறது. அதிலே ஏதாவது குறைபாடு இருக்குமானால், நிச்சயம் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும். ஒவ்வோர் ஒன்றியத்திலேயும் பல் மருத்துவத்தைத் தொடங்குவது என்று சொன்னால், 1414 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், பல் மருத்துவப் பிரிவு தொடங்க வேண்டும். இப்போதுள்ள நிதிநிலைமையில் அது நிச்சயம் இயலாது.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி.



1999 ஏப்ரல் 1]

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் நிதிநிலை காரணமாக அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் செயல்படுத்த முடியாவிட்டாலும்கூட, இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையங்களிலாவது பல் மருத்துவப் பிரிவினை அமைக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1414 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பல் மருத்துவப் பிரிவு ஆரம்பிக்க முடியாது. 24 மணி நேரமும் இயங்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இப்போது பல் மருத்துவப் பிரிவை ஆரம்பிக்க முடியாது. ஆனாலும்கூட, ஒவ்வோர் ஆரம்ப சுகாதார நிலையத்திலேயும், வாரத்திற்கு ஒரு நாள் தாலுகா மருத்துவமனையிலே இருக்கக்கூடிய பல் மருத்துவர் வந்து ஏழையெளியவர்களுக்கும், கிராமப்புறத்து மக்களுக்கும் பல் மருத்துவம் செய்வதற்கான ஏற்பாடு இப்போது செய்யப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல் மருத்துவப் பிரிவு தாலுகா மருத்துவமனைகளில் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எடப்பாடி தாலுகாவில் பல் மருத்துவப் பிரிவு இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? உடனடியாக அதனை ஆரம்பிக்க அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லும்போதே சொன்னேன், 156 தாலுகா மருத்துவமனைகளிலே 122-ல்தான் இப்போது பல் மருத்துவப் பிரிவு இருக்கிறது என்று. அடுத்த கட்டமாக மீதி இருக்கக்கூடிய 34 தாலுகா மருத்துவமனைகளிலேயும் பல் மருத்துவர்களை நியமிக்க வேண்டும். அதற்கே நிதிநிலை இடம் தரவில்லை. இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு பேசி, மக்கள் நல்வாழ்வுத் துறை மானியம் வருகின்ற நேரத்திலே ஏதாவது செய்ய முடியுமா என்பதை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 223, திரு. த. பூவேந்தன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 1

223—

## கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணி

***7085—திரு. த. பூவேந்தன்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திண்டுக்கல் மாவட்டம், பழனி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணியைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல் மாவட்டம், பழனி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் அனைத்து வேலைகளையும் டிசம்பர் 1999-க்குள் முடித்து, திட்டத்தை செயலுக்குக் கொண்டுவர அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. பழனி நான்காவது குடிநீர்த் திட்டம் 1989-ல் நம்முடைய தலைவர் அவர்களாலேதான் நான்கு கோடி ரூபாய் அளவிலே தயாரிக்கப்பட்டது. ஆட்சி கலைக்கப்பட்டதற்குப் பின்னால் அந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டது. மீண்டும், தலைவர் அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால் பத்து கோடியே ஐம்பது இலட்சம் ரூபாய் செலவில் இப்போது அந்தத் திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்காக அமைச்சர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்கான திறப்பு விழாவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அழைத்து அந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டு, அதனை கூட்டுக் குடிநீர்த் திட்டமாக ஆக்க வேண்டுமென்று நம்முடைய கலைஞர் அவர்களின் முந்தைய ஆட்சியில் அதற்கான பணிகள் தொடங்கப்படுகின்ற நேரத்தில், ஆய்வுப் பணிகள் முடிவடைவதற்குள்ளாகவே ஆட்சிப் பணி முடிவடைந்துவிட்டது. அதற்குப் பிறகு வந்த ஆட்சியில், பொதுப் பணித் துறை ஒரு நடவடிக்கையும், குடிநீர் வடிகால் வாரியம் ஒரு நடவடிக்கையும் எடுத்து ஒன்றுக்கொன்று இணைப்பு இல்லாத வகையில் பணிகள் செய்யப்பட்ட காரணத்தினால் 1993-ல் அனுமதிக்கப்பட்ட அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. அதற்குப் பிறகு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துகின்ற முயற்சியில் குடிநீர் வடிகால் வாரியம் செயல்பட முற்பட்டபோது, பொதுப்பணித் துறை ஒத்துழைக்காததால் அது விடுபட்டுவிட்டது. எனவே, திட்டமானது கோப்பு அளவிலே இருந்ததே தவிர, நடைமுறையில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். கலைஞர் ஆட்சி அமைந்த பிறகுதான் — 1995-ல் நிர்வாக ஒப்புதலுக்கு வைக்கப்பட்டு, அப்படியே கிடந்த அந்தத் திட்டம் — 1997-ல் திரும்பவும் உறுதிப்படுத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதனைத் துரிதப்படுத்துவதற்கு வினா எழுப்பத் தேவையேயில்லை. இதுபற்றி மூன்று முறை ஆய்வுப் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு 2000-ல்தான் இதனை முடிக்க முடியும் என்றும், இரண்டு ஆண்டு காலம் அவசியம் இதற்குத் தேவைப்படுகிறது என்றும் நான் நேரடியாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. பெரியசாமி அவர்களிடமும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடமும் தெரிவித்தேன். இருந்தாலும், அதற்குப்பிறகு 1999 டிசம்பருக்குள் இதனை முடித்துவிட வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனவே, இதுபோல பெரிய திட்டங்களை எல்லாம், அந்தப் பகுதியிலே இருப்பதையெல்லாம் ஒருங்கிணைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அழைத்து திறப்புவிழாவை நடத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1999 ஏப்ரல் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 224, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 1

**224—**

**வத்தலக்குண்டுக்குக் குடிநீர் வசதி**

***16536—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வத்தலக்குண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது உண்மையா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்?*

*(இ) வழியோர கிராமங்கள் எத்தனை இதன் மூலம் பயனடையும்?*

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தலைமையிடப் பணிகளில் நீர் ஆதாரங்களான மூன்று நீர் உறிஞ்சு கிணறுகள் உருவாக்கும் பணி தொடங்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளன. இதர பணிகளுக்கு ஒட்டுமொத்த ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டவுடன் இறுதி முடிவுகள் எடுக்கப்பட்டு, உடன் பணிகள் தொடங்கப்படும்.

(இ) இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் வழியோரக் கிராமங்களின் எண்ணிக்கை மொத்தம் 7 ஆகும்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கிணறுகள் தோண்டும்போது நானும்கூடச் சென்று பார்த்தேன். ஆனால், அதில் ஒரு கிணறு மழையின் காரணமாக விழுந்துவிட்டதாகச் சொன்னார்கள். அந்த வேலையைத் துரிதப்படுத்த வேண்டும். காரணம் என்னவென்றால், வத்தலக்குண்டு தினசரி வளர்ந்து வரக்கூடிய நகரம். மலையில் மழை பெய்யும்போது சரிவு ஏற்பட்டு, மலையிலே குடியிருக்கக்கூடியவர்கள் அத்தனைபேரும் கீழே வந்து குடியேறுகிறார்கள். அதனாலே, தினசரி மக்கள்தொகை பெருகி வருகிற காரணத்தினாலே இந்தத் திட்டத்தினை வெகு விரைவிலே தயவுசெய்து



1999 ஏப்ரல் 1]

முடித்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதோடு way side villages அதிலே ஏழுக்கும் அதிகமாக இருக்கின்றன. எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் கொடுத்தால்தான் நல்லது. இல்லாவிட்டால், தண்ணீர் வருகிறபோது, இடையே வெட்டி, தண்ணீரைக் கொண்டுபோய்விடுகிறார்கள். அதனாலே, வழியோர கிராமங்கள் அத்தனைக்கும் இந்தத் திட்டத்தினை விரிவுபடுத்தி எல்லா கிராமங்களுக்கும் தண்ணீர் கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை அமைச்சர் அவர்கள் உருவாக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அதனுடைய மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் 7 கிராமங்களுக்கு என்று நான் அறிவித்ததோடு, அதிலே இன்னும் குடியிருப்புகள் என்று வருகின்றபோது, குறுப்பம்பட்டி, வெங்கடசாஸ்திரிகோட்டை, கோமையம்பட்டி, புளியம்பட்டி, கோடிகவுண்டன்பட்டி, புள்ளிசெட்டிப்பட்டி, கொண்டம்பட்டி, ஆகியவையும் அதில் அடங்கும். கிராமங்கள் என்ற வகையில் எடுத்துக்கொண்டால், (1) புள்ளிசெட்டிப்பட்டி, (2) கோமட்டன்பட்டி, (3) போடிநாயக்கன்பட்டி, (4) புளியப்பட்டி, (5) குறுப்பம்பட்டி, (6) கொண்டம்பட்டி, (7) வெங்கடசாஸ்திரிகோட்டை ஆகியவை அடங்கும். இவற்றின் மொத்த மக்கள் தொகை 11,055. ஆனால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கிருந்து மக்கள் கீழே வருகிறார்கள்; வருகிற மக்கள் தொகை எண்ணிக்கை அதிகமாகப் போகின்ற காரணத்தினால் திட்டம் வீணாகிப் போய்விடக்கூடாது என்று சொன்னார்கள். அதை மனதிலே வைத்துக்கொண்டுதான், நம்முடைய முதல்வர் அவர்கள் ஓர் உத்தரவே எனக்குப் போட்டிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற மக்கள் தொகையை மட்டுமே கணக்கு எடுக்கக்கூடாது. திட்டம் நிறைவேற்றுவதிலிருந்து 25 ஆண்டு காலத்திற்குக் குறையாமல் என்ன மக்கள்தொகை உச்சபட்சம் வருவார்களோ அவர்களுக்குத் தகுந்தாற்போல் தலா 40 லிட்டர் குடிநீர் கொடுக்க வேண்டிய திட்டமாக உருவாக்க வேண்டுமென்று தெரிவித்து இருக்கிறார்கள். இந்தத் திட்டம் அந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் நான்

[1999 ஏப்ரல் 1

தெரிவித்துக்கொள்கிறேன். 1997-ல் அந்தத் திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிற தொகை கிட்டத்தட்ட 3 கோடியே 46 இலட்சம் ரூபாய்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 225, திரு. பெ. ஆசையன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**225—**

**திண்டுக்கல்-தேனி மாவட்டங்களுக்குப் பேருந்து வசதி**

***16536—திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டிலிருந்து விருவீடு, புள்ளிமான்கோம்பை, ஆண்டிபட்டி, ஜி. உசிலம்பட்டி வழியாக தேனி மாவட்டம், கடமலைக்குண்டு-மயிலாடும்பாறை ஒன்றியம், பொன்னன் படுகை வழியாக அரசரடி வரை பேருந்து இயக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வத்தலக்குண்டு, அரசரடி (வழி) விருவீடு, புள்ளிமான்கோம்பை, ஆண்டிபட்டி, ஜி.உசிலம்பட்டி, பொன்னன்படுகை ஒரு சுற்று வழித்தடமாகும். நேரடிப் பயணிகள் போக்குவரத்து இத்தடத்தில் இல்லை. எனவே, இத்தடத்தில் பேருந்து இயக்க சாத்தியம் இல்லை. கோரிக்கையிலுள்ள வழித்தடத்திலுள்ள ஊர்கள் அனைத்திற்கும் பகுதிவாரியாக நகர மற்றும் புறநகர்ப் பேருந்து வசதிகள் உள்ளன. வத்தலக்குண்டிலிருந்து ஆண்டிபட்டி வந்தடையும் பட்சத்தில் ஜி.உசிலம்பட்டி, கண்டமனூர், பொன்னன்படுகை மற்றும் அரசரடி ஆகிய பகுதிகளுக்குச் சென்றுவர போதிய போக்குவரத்து வசதிகள் உள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 226, திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 1]

**226—**

**காரியாபட்டியில் போக்குவரத்துப் பணிமனை**

***15589—திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டைத் தொகுதி, காரியாபட்டியில் பணிமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதியிலே இருக்கக்கூடிய காரியாப்பட்டி, திருச்சுழி, நரிக்குடி ஆகிய கிராமப்புற ஒன்றியங்களை இணைக்கக்கூடிய ஒரு மையப் பகுதி. கடந்த நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் காரியப்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு தனி வட்டத்தை அமைத்து அறிவித்த பிறகுதான், அங்கே இப்போது வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது. வரும் ஆண்டுகளிலே நிதிநிலைமையில் ஏற்படக்கூடிய முன்னேற்றத்தைக் கண்டாவது அங்கே ஒரு பணிமனை அமைப்பதற்கு முன்னுரிமை அடிப்படையில் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரியாபட்டியைச் சுற்றியிருக்கிற பல்வேறு இடங்களில் பணிமனைகள் இயங்கிக்கொண்டு இருக்கின்றன. 29 கிலோமீட்டர் தூரத்திலே உள்ள மதுரையிலேயும், 30 கிலோமீட்டர் தூரத்திலேயுள்ள திருமங்கலத்திலேயும், 30 கிலோமீட்டர் தூரத்திலேயுள்ள கல்லுப்பட்டியிலேயும், 24 கிலோமீட்டர் தூரத்திலேயுள்ள விருதுநகரிலும், 20 கிலோமீட்டர் தூரத்திலேயுள்ள

[1999 ஏப்ரல் 1

அருப்புக்கோட்டையிலும் பணிமனைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால், பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் அவரவர்களுடைய தொகுதியிலே ஒரு பணிமனை கேட்கின்ற கோரிக்கை அடிக்கடி வந்துகொண்டே இருக்கிறது. நான் அனைவருக்கும் சொல்கிற பதில் போக்குவரத்துக் கழகத்தின் நிதிநிலைக்கேற்ப அவை வருங்காலங்களில் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 227, திரு. ச. அழகிரி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

227—

**கடற்கரை வழியாகப் புறவழிச்சாலை**

***13821—திரு. ச. அழகிரி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து தேசிய நெடுஞ்சாலையில் திண்டிவனம் செல்ல தாம்பரம் வரை கடற்கரை வழியாக புறவழிச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

முற்பகல் 9-50

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து திண்டிவனம் செல்கிறபோது தாம்பரம் பகுதியில் குறைந்தபட்சம் ஒரு மணி நேரமாவது போக்குவரத்து தடைபடுகின்றது. ஒருவேளை அமைச்சர் போகிறபோது எப்படி இருக்கிறது என்று தெரியவில்லை. ஏனென்றால், போக்குவரத்துத் துறை அமைச்சர் regular ஆக அந்த வழியாகத்தான் போகிறார். ஆனால், நான் போகும்போது ஒவ்வொரு முறையும் பார்க்கிறேன், ஒரு மணி நேரமாவது தாம்பரத்தில்



1999 ஏப்ரல் 1]

நிற்க வேண்டிய ஒரு துர்பாக்கியம் இருக்கிறது. சில நேரங்களில் இறங்கிக்கூட நடந்து போய் விடலாமா என்று நினைக்க வேண்டிய அளவிற்குப் பொறுமையின்மை ஏற்படுகிறது. எனவே, அதற்கு ஒரு புறவழிச் சாலை அமைப்பதற்கு ஏன் அரசாங்கம் முயற்சிக்கக் கூடாது? அல்லது கடற்கரை ஓரமாக ஒரு சாலையைப் போட்டு, அதன் மூலமாகவாவது தாம்பரத்தைத் தொடாமல் போவதற்கு ஓர் ஏற்பாட்டைச் செய்ய அமைச்சர் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை-தாம்பரம்-திண்டிவனம் சாலை தேசிய நெடுஞ்சாலை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடற்கரை வழியாக ஒரு புறவழிச் சாலை அமைக்க முடியுமா என்றுதான் கேட்டிருக்கிறார். ஏற்கெனவே தேசிய நெடுஞ்சாலை சார்பில் சென்னை-தாம்பரம் புறவழிச் சாலை ஒன்று ஏறத்தாழ ரூ.100 கோடியில் போடப்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட இந்த நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். இன்னொரு புறவழிச் சாலை தேசிய நெடுஞ்சாலை சார்பிலே அமைக்க முன்வர மாட்டார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும் அந்தப் புறவழிச் சாலையை அமைத்த பிறகு சென்னையிலிருந்து தாம்பரத்தைக் கடந்து செல்லுவதற்கு வசதியாக அந்தப் புறவழிச்சாலை இருக்குமென்று நான் தெரிவிப்பதோடு மாநில அரசின் சார்பில் பழைய மகாபலிபுரம் சாலையை நான்கு வழிச் சாலையாக விரிவுபடுத்துவதற்கான திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அது திருவான்மியூரிலிருந்து சோளிங்கநல்லூர் வரையில் சென்று, சோளிங்கநல்லூரிலிருந்து மேடவாக்கம் வழியாக தாம்பரத்தோடு இணைக்கக்கூடிய அந்தச் சாலையையும் ஆரச்சாலை (Radial Roads) திட்டத்தில் நான்கு வழிச் சாலையாக அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் அனுப்புவதற்கான கடைசி நாள் நேற்றையதினம், 31 ஆம் தேதியோடு முடிந்திருக்கிறது. ஏப்ரல் மாத இறுதியில் பணி தொடங்கும். அந்தச் சாலை அமைக்கப்படுகின்றபோது தாம்பரத்திற்கு அது ஒரு புறவழிச் சாலையாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 228, திரு. ஆ.செ. மணிக்கண்ணன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

228—

## மேம்பாலம் அமைத்தல்

***21290—திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநாவலூர் தொகுதியிலுள்ள நெமிலி—பாச்சப்பாளையம் சாலையில் மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இனிவரும் காலங்களில் இப்பணியினை செயல்படுத்துவதற்கான வழிவகைகள் ஆய்வு செய்யப்படும்.

**திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெமிலி-பாச்சப்பாளையம் சாலை மாவட்ட இணைப்புச் சாலை. மூன்று தொகுதிகளை இணைக்கும் சாலை. அங்கு உள்ள பெரியசெவலை கரும்பு ஆலைக்கு கரும்பு வரக்கூடிய மிகவும் முக்கியமான ஒரு சாலை. அடுத்து, இது பேருந்து செல்கின்ற சாலை. இது ஆற்று வாய்க்காலில் உள்ளது. அந்த ஆற்று வாய்க்காலில்தான் அந்த மேம்பாலத்தைக் கேட்டிருக்கிறேன். மழைக் காலத்தில் அந்த ஆற்று வாய்க்கால் சாலையில் ஏறக்குறைய 3 மாத காலம் பேருந்துகளாக இருந்தாலும், விவசாயப் பொருட்களை ஏற்றிச் செல்லும் ஊர்திகளாய் இருந்தாலும் செல்ல இயலவில்லை. ஏறக்குறைய 70,000, 80,000 மக்கட்தொகை பயன்பெறக் கூடிய ஒரு முக்கியமான சாலையில் மேம்பாலம் கட்டும் பணியை இந்த ஆண்டாவது எடுத்துச் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநாவலூர் தொகுதி, நெமிலி-பாச்சப்பாளையம் சாலையில் சேஷ நதி குறுக்கிடுகிறது. அங்கேதான் பாலம் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்கிறார்கள். அந்த இடத்தில் இப்போது 30 மீட்டர் நீளத்தில் ஒரு தாம்போகி இருக்கிறது. அது அண்மையில் ஏற்பட்ட மழையின் காரணமாக



அறுத்தோடிவிட்டது. எனவே, அங்கே மேம்பாலம் அமைப்பது என்பது தேவைதான். 30 மீட்டர் அகலத்திற்கு ஓர் உயர் மட்டப் பாலம் கட்டுவதற்கு ஏறத்தாழ 60 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. அதைப்போல இரு பக்கங்களிலேயும் அணுகு சாலைகள் அமைப்பதற்கு ரூ.35 இலட்சம் தேவைப்படுகிறது. ஆகவே, ரூ.95 இலட்சத்தில்தான் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். பகுதி-2 திட்டத்திலாவது அல்லது NABARD திட்டத்திலாவது அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கான முயற்சி வருங்காலத்தில் செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 229, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

229—

## அமுதம் அங்காடி திறத்தல்

***10163—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், தும்பத்திக்கோட்டை கிராமத்தில் நடப்பு ஆண்டில் அமுதம் அங்காடி திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சை மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நியாயவிலைக் கடை எதுவும் நடத்தவில்லை. எனவே, அந்நிறுவனத்தால் தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், தும்பத்திக்கோட்டையில் நியாயவிலைக் கடை திறக்க இயலாது. ஆனால், தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், தென்னமநாடு தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கம் நடத்தும் பருத்திக்கோட்டை கிராம அங்காடியைப் பிரித்து தும்பத்திக்கோட்டை கிராமத்தில் 309 குடும்ப அட்டைகளைக்கொண்டு ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை திறக்கப்பட்டு, 9-2-1998 முதல் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 ஏப்ரல் 1

முற்பகல் 9-55

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி போடுகிறபோது அந்தச் சூழ்நிலை இருந்தது. நீண்ட நாட்களுக்குப் பின்னாலே வருகிற காரணத்தினாலே, அது நடைபெற்று முடிந்ததற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. இராசமாணிக்கம்.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 200 குடும்ப அட்டைகள் இருந்தால் பகுதி நேர அங்காடி திறக்கலாம் என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து பல இடங்களிலே பிரிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால், அதில் ஒரு நடைமுறைச் சிக்கல் இருக்கிறது. அப்படி பகுதி நேர அங்காடி திறக்கிறபோது தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருந்தால்தான் பகுதி நேர அங்காடி பிரிக்க முடியும் என்ற ஒரு நிலை இருக்கிற காரணத்தால் பல கிராமங்களில் அரசினுடைய திட்டம் முறையாகச் செயல்பட முடியவில்லை. எனவே, 500 குடும்ப அட்டைகள் என்பதை, 300 அல்லது 400 குடும்ப அட்டைகள் இருந்தால் பகுதி நேர அங்காடி திறக்கலாம் என்று விதிமுறையைத் தளர்த்தி, பல மக்கள் பயன்படுகிற ஒரு நிலையை உருவாக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 4-வது முறையாகப் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகுதான் தமிழ்நாட்டில் பகுதி நேரக் கடையோ, புதிய நியாயவிலைக் கடையோ திறப்பதற்கு பொதுமக்கள் விருப்பத்திற்கேற்ப ஒரு நடைமுறையைக் கொண்டு வந்தார்கள். கடந்த காலத்திலே ஒரு கடை திறக்க வேண்டுமென்று சொன்னால் 3 ஆண்டுகாலம், 4 ஆண்டுகாலம் அரசினுடைய செயலாளர்வரை வந்து அனுமதி பெறுவது என்பது மிகவும் சிரமமாக இருந்தது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரே அதைப் பார்த்து திறக்கலாம் என்று உத்தரவிட்ட பிறகு, தமிழ்நாட்டிலே கிட்டத்தட்ட 3499 பகுதி நேரக் கடைகள் புதிதாகத் திறக்கப்பட்டிருக்கின்றன. இதில், பெண்களாலேயே மட்டும் 181 கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து மாநகராட்சிப் பகுதிகளிலே, வார்டுக்கு ஒரு கடை இருக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள்.



1999 ஏப்ரல் 1]

அந்த வார்டிலே 800 அட்டைகளுக்கு மேல் இருந்தால் அங்கேகூட பகுதி நேரக் கடை திறக்கலாம் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி 4 நியாயவிலைக் கடைகளை நடத்துமானால் அதனுடைய வரவு-செலவுக்கேற்ப அது இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் 500 அட்டைகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மிகமிக அவசியம் என்று கருதினால் மாவட்ட ஆட்சித் தலைவரே முடிவெடுத்து, அவர் 50 அட்டைகள் இருந்தால்கூடத் திறக்கலாம் என்று அந்த அரசாணையிலே இருக்கிறது. தொடர்ந்து அதனுடைய அவசரத் தேவையை முன்னிட்டு, ஆராய்ந்து பார்த்து, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 200 குடும்ப அட்டைகள் இருந்தால் பகுதி நேரக் கடைகள் திறக்கலாம் என்பதை நெல்லையிலே நடந்த ஒரு கருத்தரங்கிலே மறைந்த மாண்புமிகு அமைச்சர் தங்கபாண்டியன் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவந்தபோது, உடனடியாக அதை ஏற்று முதல்வரிடம் சொல்லி அதற்கு ஆணை பிறப்பித்தார்கள். 200 குடும்ப அட்டைகள் என்னும்போது, 199 இருந்தால்கூட சில இடங்களில் அந்தக் கடைகளைத் திறப்பதற்கு முடியாத நிலை இருக்கின்றது. 7 கிலோமீட்டர், 8 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட நிலையை மாற்றுவதற்கு, இத்தனை குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்பதை மாற்றி, ஓரளவுக்கு இருந்தால்கூட, தூரம் அதிகமாக இருக்கின்ற இடத்தில் பகுதி நேரக் கடைகளைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் என்ன சொல்கிறார் என்று தெரியவில்லை. 200 அட்டைகள் இருந்தால் திறக்கலாம் என்று சொன்னால், 199 அட்டைகள் இருந்தால் திறக்க முடியுமா என்று கேட்டால், அதற்கு எப்படிப் பதில் சொல்வது என்று தெரியவில்லை. ஏற்கெனவே, 50 அட்டைகள் இருந்தால்கூட திறக்கலாம் என்று அரசாணையிலேயே இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கு ஒரு ஜாதிப் பிரச்சினையோ அல்லது ஏதாவது இரண்டு ஜாதியினருக்கிடையே பிரச்சினையோ ஏற்படுகின்றபோது அவசர முக்கியத்துவத்தைக் கருதி

[1999 ஏப்ரல் 1

அங்கே எந்தவிதமான நடைமுறையையும் பின்பற்றாமல் கடையைத் திறக்கலாம் என்றிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் மிகவும் தேவை என்று மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகினால் அது திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேர்வைத் தலைவர் அவர்களே, 200 குடும்ப அட்டைகள் இருந்தால் ஒரு பகுதி நேரக் கடை கொடுக்கலாம் என்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே அறிவித்தார்கள். ஆனால் தற்போதுள்ள கிராமச் சூழ்நிலையில் 180 கார்டுகள், 190 கார்டுகள் இருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின் பேரில் இங்கே சென்னைக்கு வந்து தலைமையிடத்திலேயிருந்து உத்தரவு பெற்று பின்னால்தான் அங்கே கொடுக்க முடியும் என்று சொல்கின்றார்கள். ஆகவே, அந்த உத்தரவை இரத்து செய்து, மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவே கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடர்ந்து 2 கடைகள், 3 கடைகள் நடத்துமானால், 2, 3 பணியாளர்களையும், 2, 3 உதவியாளர்களையும் வைத்துக்கொண்டு அதிலே அவர்களுக்கு வருகிற வருவாயிலே சம்பளம் தர வேண்டியிருக்கிறது. அரசு சார்பாகத் தருகின்ற மானியத்திலும் அவர்களுக்கு ஓரளவிற்கு ஈடுகட்ட முடிகிறது. தொடர்ந்து உறுப்பினர்கள் எல்லாம் பல இடங்களிலே கடைகளைத் திறக்க வேண்டும் என்றால், ஆட்களைப் போட வேண்டும். ஆட்கள் போட வேண்டுமென்றால் அங்கு வருவாய் குறையும். அதனால்தான் 200 அட்டைகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மீண்டும் மீண்டும் சொல்கிறேன், உறுப்பினர்களுக்கு மிக அவசியம் என்று தோன்றினால், அங்கு சாதிப் பிரச்சினை இருக்கிறது, திறக்க வேண்டும் என்று சொன்னால் அரசாணை இடப்பட்டிருக்கிறது, மாவட்ட ஆட்சித் தலைவரே அதைத் திறக்கலாம் என்று. 200 அட்டைகள் அல்லது 800 அட்டைகளுக்குக் குறைவு அல்லது 2 கிலோமீட்டர் தூரத்திற்குக் குறைவு என்று ஏற்கெனவே இடப்பட்டிருக்கிற அரசாணைக்கு மாறாக இருக்குமானால்தான் இங்கு, மேலே அரசுக்கு வரவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதை அப்படிப் பார்த்துத்தான் தர இயலும்; நினைத்த இடத்திலே திறக்க இயலாது.



1999 ஏப்ரல் 1]

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.எல். வெங்கடாசலம்.

**திரு. ஜி.எல். வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு குறுக்கே வந்தாலும் அல்லது மலைப் பிரதேசமாக இருந்தாலும் 200 அட்டைகளுக்குக் கீழேயிருக்கின்றபோது, புதிய கடைகள் திறக்க வேண்டுமென்றால் அரசுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பரிந்துரை செய்யப்படுகிறது. இதற்கு நேரடியாக நடவடிக்கை எடுத்து வழங்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குப் பரிந்துரை வருமானால் ஒரு வார காலத்திற்குள் அனுமதி வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எம். விஜயகுமார்.

**திரு. கே.எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழு நேர நியாய விலைக் கடையிலேயிருந்து பிரிக்கப்பட்ட பகுதி நேர நியாய விலைக் கடைகளுக்கு பக்கத்துக் கிராமங்களுக்குச் சென்று, குடிமைப்பொருட்களை விநியோகம் செய்யும்போது, முழு நேரக் கடையிலே பணிபுரியும் சிப்பந்திகள் பகுதி நேரக் கடைகளுக்குச் செல்லும் காரணத்தினால், முழு நேரக் கடைகளிலே சில நேரங்களில் விநியோகம் நிறுத்திவைக்கப்படுகிற சூழ்நிலையிலே பொது மக்கள் முழு நேரக் கடைகளையும் அனைத்து நாட்களிலும் திறந்து விநியோகம் செய்ய வேண்டும் என்று கோரிக்கை எழுப்பியிருக்கிறார்கள். எனவே, பகுதி நேர நியாயவிலைக் கடைகளை நடத்துவதற்குத் தனியாகப் பகுதி நேர ஊழியர்களை நியமனம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட ஏழு மாவட்டங்களில் நேரடியாக வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பட்டியல் பெறப்பட்டு நியாய விலைக் கடைகளிலே ஆட்கள் நிரப்பப்படுகிறார்கள். பல மாவட்டங்களிலே தடையாணை இருக்கின்ற காரணத்தினால் தொடர்ந்து புதிய ஆட்களை நியமிப்பதற்கு இடையூறாக இருந்துகொண்டிருக்கிறது. முழு நேர நியாய விலைக் கடைகள் 25 ஆம் தேதியிலே ஆரம்பித்து தொடர்ந்து 3 ஆம் தேதிக்குள்ளாக 65

[1999 ஏப்ரல் 1

சதவீதப் பொருட்களை முதலிலே எடுத்துக்கொள்கிறார்கள். மீதம் இருக்கின்ற பொருட்களை 9 ஆம் தேதிக்குள்ளாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இருக்கிறது. மாதத்தில் விடுமுறை நாட்கள் போக, அவர்கள் அதிகாரிகளைச் சந்தித்து கணக்கு வழக்குகளைக் கொடுப்பதற்காக, இரண்டு, மூன்று நாட்களைத் தவிர, மற்ற நாட்களிலே முழு நேரக் கடைகளைத் திறந்து வைக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய ஆணை. இதிலே ஏதாவது, பகுதி நேரக் கடைகளுக்குச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருந்தால், இருக்கின்ற உதவியாளரைத்தான் அனுப்ப வேண்டும் என்று சொல்லியிருக்கிறோமே தவிர, இவர்களே செல்ல வேண்டும் என்று இல்லை. குறிப்பாக, எந்தெந்தக் கடைகள் மூடப்படுகின்றன என்று உறுப்பினர்கள் குறிப்பிடுவார்களேயானால் அந்தப் பகுதியைக் கவனித்து, திறந்து வைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று ஒரு கடையிலேயிருந்து பிரித்து பகுதிநேரக் கடைகளாக நடத்தப்படுகின்றபோது, அந்தப் பகுதி நேரக் கடை இருக்கின்ற கிராமத்து மக்களே, எடுத்துச்செல்லுகின்ற அந்தப் பொருட்களுக்கான வண்டிச் சத்தம், இடத்தின் வாடகையைத் தர வேண்டும் என்று கூறுகிறார்கள். இதை அரசு அறியுமா? இதைக் களைய கடை நிர்வாகமே ஏற்று செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்று இடம் மட்டும்தான் எங்களுக்கு வாடகை இல்லாமல் தர வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அங்கே எடுத்துச் செல்கின்ற பொருட்களுக்கு வண்டிச் சத்தம் எல்லாம், கேட்பதில்லை. இதுதான் அரசாணை. அங்கு, உள்ளூரிலே நிலைமை எப்படி இருக்கிறது என்பதை நமது உறுப்பினர் அவர்கள் தெளிவுபடுத்தினால் அதையும் சரி செய்ய இயலும். கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, இப்போது தமிழ்நாட்டிலே முழு நேர நியாய விலைக் கடைகள் 22,658 இருக்கின்றன; புதியதாகத் திறக்கப்பட்டிருக்கின்ற பகுதி நேரக் கடைகள் 3,499. நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்துவது 1,076



1999 ஏப்ரல் 1]

கடைகள் மட்டும்தான். கூட்டுறவுச் சங்கங்கள் 21,283 கடைகள் நடத்துகின்றன. இதர நிறுவனங்கள் நடத்துகின்ற கடைகள் 299. இதிலே பெண்கள் மட்டும் நிர்வகிப்பது 181 கடைகள். இப்படி 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடைகள் நடத்தப்படுகின்றபோது ஒருசில இடங்களிலே அரசாணைக்கு எதிராகச் செயல்பட்டால்கூட அதைக் குறிப்பிட்டுச் சொன்னால் அதைத் திருத்திக்கொள்ள இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசிலே வாடகை தர வேண்டும் என்று அரசாணை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ. தமிழ்மணி.

முற்பகல் 10-05

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலமாக சுமார் 5 கடைகள் நடத்தும்போது இப்படி 50 அட்டைகளுக்கும் 25 அட்டைகளுக்கும் கிளைக் கடைகள் என்று பிரிப்பதால் ஒரே நபர் 3 கடைகளுக்கு மேல் பார்க்க முடியாமல், கூடுதலாக வேலையாட்களை நியமிக்க வேண்டி வருகிறது. அரசு கொடுக்கின்ற மானியம் போதாத காரணத்தால் ஒருசில ஆண்டுகளில் அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியையே மூட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. மேலும், இந்த மானியம் பல ஆண்டுக் காலமாக உயர்த்தப்படாமலே இருக்கிறது. எனவே, அந்த மானியத்தை அரசு உடனடியாக உயர்த்தி வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சார்பாக அளிக்கப்படும் மானியத் தொகையை உயர்த்துவது குறித்த அந்தக் கோப்பு இப்போது நிதித் துறையிலே இருந்துகொண்டு இருக்கிறது. விரைவிலே தமிழ்நாடு முழுவதும் அதை உயர்த்தி வழங்க ஆணையிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 230, திரு. ச. இராஜ ரெட்டி, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 1

**230—**

**பகுதி நேர நியாயவிலைக் கடைகள்**

***14085—திரு.ச. இராஜ ரெட்டி:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டத்தில் பகுதி நேர நியாயவிலைக் கடைகள் திறக்கத் தாமதமாவதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தர்மபுரி மாவட்டத்தில் 210 பகுதி நேரக் கடைகள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தற்போது 70 பகுதி நேரக் கடைகள் தொடங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் பிரேரணைகள் வரப்பெற்றவுடன் பரிசீலிக்கப்பட்டு அவற்றில் தகுதியான இனங்களில் உடனுக்குடன் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன. பகுதி நேரக் கடைகளைத் திறக்க உத்தரவிடுவதில் தாமதம் ஏதும் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**THIRU S. RAJA REDDY:** Hon. Speaker Sir, this question was put by me last year. I have brought to the notice of the Honourable Minister, the delay in opening up of part-time Fair Price Shops. In my Constituency, 20 part-time shops have already been opened. Still, there are six part-time shops pending to be opened for the last two years. I request the Hon. Minister to see that they are opened early.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் நேரடியாக என்னிடம் பார்த்துச் சொல்லி, நானே மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அதை சொல்லி அவர்கள் சொன்ன கோரிக்கை ஓரளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இன்னும் 6 கடைகள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். உரிய முறையிலே அரசு ஆணைப்படி அது சரியாக இருக்குமானால் விரைவிலே அதற்கும் உத்தரவு இடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1999 ஏப்ரல் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 231, திரு. ஏ. ராசேந்திரன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**231—**

**பால் குளிரூட்டும் நிலையம்**

***15615—திரு. ஏ. ராசேந்திரன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, போளூர் ஒன்றியத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) போளூரில் நாள் ஒன்றுக்கு 1.00 இலட்சம் லிட்டர் பாலைப் பதப்படுத்தும் திறன் கொண்ட ஒரு பால் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் உள்ளது என்று சொன்ன கலைஞருடைய அரசுக்கும், துறையினுடைய அமைச்சர் அவர்களுக்கும் போளூர் தொகுதி மக்களின் சார்பாக நன்றி தெரிவிப்பதோடு அந்தத் திட்டத்திற்கு மதிப்பீடு எவ்வளவு? மேலும் வேலூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தில் ஒரு நாளைக்கு 2 இலட்சத்து 20 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி ஆகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒரு நாளைக்கு 1 இலட்சத்து 40 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி ஆகிறது. அதனால் திருவண்ணாமலை மாவட்டத்திற்குத் தனியாக ஒரு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் திறக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை இல்லாமல், 28 மாவட்டங்களில் நிர்வாக நோக்கத்தோடு 17 ஒன்றியங்கள்தான் செயல்படுகின்றன. குறிப்பாக, திருவண்ணாமலையைப் பொறுத்தவரையில் வேலூரை மையமாக

வைத்து பால் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. திருவண்ணாமலை ஒன்றியமாக இருந்தால், இப்போது இருக்கின்ற வேலூர் பால் பண்ணை நலிந்துவிடும். நிர்வாகச் செலவு அதிகமாகும். பால் கொள்முதல் செய்ததற்கு விவசாயிகளுக்குப் பணம் கொடுக்க முடியாது. ஆகவே, திருவண்ணாமலையை தனி ஒன்றியமாக ஆக்குவதற்குச் சாத்தியக் கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண் 232, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**232—**

### விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம்

***10729—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்·பெண் விவசாயத் தொழிலாளர்களுக்கு 61 ஆம் வயது முதல் மாத ஓய்வூதியம் வழங்கிட அரசு ஏதேனும் திட்டம் வகுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆண்-பெண் விவசாயத் தொழிலாளர்களுக்கு 61 ஆம் வயது முதல் மாத ஓய்வூதியம் வழங்கிட திட்டம் ஏதும் அரசு இதுவரை வகுக்கவில்லை.

(ஆ) எழாது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்கள் என்ற முறையில் தமிழ்நாட்டிலே ஏறக்குறைய ஒரு கோடி பேர் இருக்கிறார்கள். இவர்களுடைய வாழ்க்கையை சர்வாம்சம் பொருந்திய ஒருங்கிணைந்த முறையில் ஆய்வு செய்வதற்காக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் வேளாண் தொழிலாளர்களுக்கான உயர்நிலைக் குழு அமைத்து அந்தக் குழு ஆய்வு செய்து, பரிந்துரையைப் பெற்றிருக்கிறார்கள். பல்வேறு மாநிலங்களிலே விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம்





வழங்கப்படுகிறது. இவர்களுக்கு என்று சட்ட ரீதியான பாதுகாப்பு, குறைந்த பட்ச ஊதியத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. இப்போது விவசாயத் தொழிலில் ஒப்பந்தக் கூலிமுறை, Contract Labour System, அமல் ஆகிற நிலையில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சமூக ரீதியாக எதிர்படுகிற தொல்லைகள் ஏராளம். அவற்றை கருத்திலே கொண்டு அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குகிற வழிவகைகள் குறித்து அமைச்சர் மறுபரிசீலனை செய்வாரா? அதற்கான திட்டத்தை முன்வைப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களைப் பற்றிச் சிந்தித்து, அவர்களின் நலனுக்காகப் பல திட்டங்களை அமல் நடத்துகிறவர் முதல்வர் கலைஞர் என்று கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் பாராட்டியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இலட்சோப இலட்சம் ஸ்தாபன ரீதியற்ற தொழிலாளர்களுக்காகவும், விவசாயிகளுக்காகவும் பல நலத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. அதன் அடையாளமாகத்தான், கோலப்பன் குழு போடப்பட்டு, அது தன்னுடைய அறிக்கையை அரசுக்கும் தந்திருக்கிறது. 43 பரிந்துரைகளைக் கொடுத்திருக்கிறது. குறிப்பாக, விவசாயத் தொழிலாளர்களுடைய குறைந்தபட்ச ஊதியம் எவ்வளவு என்பது குறித்தும் சொல்லியிருக்கிறது. அதைப்போலவே, அந்த அறிக்கையின் 78-வது பக்கத்திலே, 60 வயதிற்கு மேலே இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்கு, ஆண், பெண் என்கிற பாகுபாடு இல்லாமல் அவர்களுக்கு மாதம் 200 ரூபாய் ஓய்வூதியம் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறது. அரசு இதை அக்கறையோடு பரிசீலித்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 233, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**233—**

### தொழிலாளர்களுக்கு காப்புறுதித் திட்டம்

***19370—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 ஏப்ரல் 1

(அ) இராமநாதபுரம் மாவட்டத் தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் மாநிலக் காப்புறுதித் திட்டம் செயல்படுத்தாதது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் திட்டம் அறிமுகப்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நடப்பு ஆண்டில் இல்லை. இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழிலாளர்கள் மிகுந்துள்ள பகுதிகளைக் கண்டறிந்து அப்பகுதிகளில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய நல்ல பதிலுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். பரமக்குடியில் சுமார் 40,000 நெசவாளப் பெருமக்கள், அதேபோன்று அச்சன்குளம், கமுதிக்குடி போன்ற பகுதிகளில் மில் தொழிலாளர்கள், வாலிநோக்கம் உப்பு நிறுவனத்திலே இருநூறுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்கின்ற காரணத்தாலே, பரமக்குடியிலும் இராமநாதபுரத்திலும் E.S.I. மருத்துவமனை தொடங்குவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் என்ற முறையில், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த அமைச்சர் என்ற முறையில், அங்கே வாழ்கின்ற தொழிலாளர்களின் நலனுக்காக இந்தக் கேள்வியைக் கேட்டதற்காக மாண்புமிகு உறுப்பினர் திசைவீரன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பரமக்குடியிலும் இராமநாதபுரத்திலும் ஒரு மருத்துவர் கொண்ட மருந்தகம் அமைப்பதற்கான ஆய்வு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 234, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 1]

234—

### நீதிமன்றங்கள் அமைத்தல்

***15095—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது ஓமலூர் குற்றவியல் நீதிபதி அலுவலகத்தில் சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கத் தனித்தனி நீதிமன்றங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஓமலூரில் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்க, தனித்தனி நீதிமன்றங்கள் அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997 ஆம் ஆண்டு என்னுடைய தொகுதியான பள்ளிப்பட்டிலே சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்தார்கள். ஆனால் அந்த உறுதிமொழி இதுவரையிலும் காப்பாற்றப்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, அந்த சார்பு நீதிமன்றம் இந்த ஆண்டாவது பள்ளிப்பட்டில் ஆரம்பிக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லாவிட்டாலும் இந்த அவையிலே சில நீதிமன்றங்கள் தொடங்கப்படும் என்று அறிவித்தது என்பது உண்மை. நிதி நெருக்கடியின் காரணமாக நாங்கள் அறிவித்ததற்கேற்ப குறித்த காலத்திலே இந்த நீதிமன்றங்களைத் தொடங்க முடியவில்லை. என்றாலும் அறிவித்தபடி அவை தொடங்கப்படும் என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 ஏப்ரல் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பொதுவாக குற்றவியல் நீதிமன்றமும் உரிமையியல் நீதிமன்றமும் ஒரே நீதிமன்றத்தில் நடைபெறுவதால் இரண்டு வழக்குகளுமே நடைபெறுவதில்லை. குற்றவியல் வழக்குகளும் நடைபெறுவதில்லை, உரிமையியல் வழக்குகளும் நடைபெறுவதில்லை. அதனால் இரண்டாகப் பிரித்தால்தான் வழக்குகள் விரைவாக நடைபெற ஏதுவாக இருக்கும். குறிப்பாக, திருவண்ணாமலை மாவட்டத்தில் திருவண்ணாமலையிலும், ஆரணியிலும் கூடுதல் உரிமையியல் நீதிமன்றங்கள் இருக்கின்றன. அவற்றை வந்தவாசிக்கும், அதேபோல செங்கத்துக்கும் மாற்றினால் அரசுக்கு நிதிச் சுமையும் இருக்காது, அதேசமயத்திலே நீதியும் விரைவாகக் கிடைக்கும். அதை அரசு செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 149 மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் District Munsif Courts இருக்கின்றன. அதேபோன்று 176 Magistrate Courts இருக்கின்றன. அதேபோன்று 56 District Munsif-*cum*-Judicial Magistrate Courts இருக்கின்றன. இந்த மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் என்பது, எந்த வட்டங்களில் அல்லது எந்த நகரங்களில் போதுமான வழக்குகள் இல்லையோ அந்த இடங்களில்தான் இணைத்து அமைக்கப்பட்டிருக்கின்றன. அதிகமான வழக்குகள் இருக்குமேயானால், நிதி ஆதாரமும் இடம் கொடுக்குமேயானால், அதைப் பிரிப்பதில் அரசுக்கு ஆட்சேபணை இல்லை.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம்-பவானி நகரில் பவானி வட்டாட்சியர் அலுவலகத்திலே ஒரு நீதிமன்றமும் மற்ற மூன்று நீதிமன்றங்கள் வெவ்வேறு இடங்களிலே எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையில் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கிற அந்தச் சூழ்நிலையை மாற்றி அமைக்க ஒரே இடத்தில் அந்த நீதிமன்ற வளாகத்தை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கடந்த ஆண்டு விண்ணப்பத்தின் மூலமாகவும்,



1999 ஏப்ரல் 1]

நேரடியாகச் சொல்லியும் இன்னும் முழுமையாக நிறைவேற்ற முடியாத சூழ்நிலையில் வரும் நிதி ஆண்டிலாவது இதைச் செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** பேரவைத் தலைவரவர்களே, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற நீதிமன்றங்களை அரசுக்குச் சொந்தமான புதிய உரிய கட்டடங்களிலே அமைக்க வேண்டுமென்ற கொள்கைப் பிரச்சினையில் அரசுக்கு ஆட்சேபணையே இல்லை. ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் ஒரே வளாகத்திலே அமைய வேண்டுமென்ற கொள்கையிலும் வித்தியாசம் இல்லை. ஆனால் நிதி நெருக்கடியின் காரணமாக இந்தக் கொள்கைகளை எல்லாம் நாம் எதிர்பார்த்த அளவிற்கு குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்ற முடியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். நிறைய வழக்குகள் எல்லாம் தேங்கியிருக்கக்கூடிய பகுதி என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். மாவட்டத்தினுடைய தலைநகரமான தருமபுரியிலே அமர்வு நீதிமன்றம் இல்லை என்று சொல்லி வழக்கறிஞர்கள் எல்லாம் நீண்ட காலமாகப் போராடி வருகிறார்கள்; பொது மக்களும் அதற்காகக் குரல் கொடுத்து போராட்டத்திலே ஈடுபட்டு வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதையெல்லாம் கண்டறிந்து நிவர்த்தி செய்வதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அதற்கு ஒரு காரணமாகச் சொல்லப்படுவது கிருஷ்ணகிரியிலே இருக்கின்ற காரணத்தால் அங்கே வழங்க முடியாது என்ற நிலை இருந்தாலும்கூட, கிருஷ்ணகிரியில் இருக்கக்கூடிய அமர்வு நீதிமன்றத்தை இங்கே மாற்ற வேண்டும் என்று சொல்லவில்லை. ஆகவே மாவட்டத் தலைநகரமான தருமபுரியில் நடப்பு ஆண்டிலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றம் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** பேரவைத் தலைவரவர்களே, புதிதாக அமைக்கப்பட்ட மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட நீதிமன்றம் அமைப்பதில் சில இடங்களிலே எதிர்ப்பு இருக்கிறது. பொது மக்களிடத்திலேயிருந்து எதிர்ப்பு வருகிறது என்பதைவிட வழக்கறிஞர்களிடையே ஒருசாரார்தான் அப்படித் திறக்கக்கூடாது என்று

[1999 ஏப்ரல் 1

எதிர்த்துக் கொண்டு இருக்கிறார்கள். இதுசம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் இறுதி முடிவு செய்ய வேண்டும். ஏனென்றால் அவசியம் இல்லாத குழப்பத்திற்கு நாமே இடம் அளித்து விடக்கூடாது என்ற காரணத்தால்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நிதி ஒதுக்கி உயர்நீதிமன்றத்தினுடைய கிளையினை மதுரையில் ஆரம்பிப்பதற்காக சுமார் 80 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு இடம் தயார் நிலையில் இருக்கிறது என்று அறிவித்தார்கள். ஆனால் அதிலே கட்டடம் கட்டி உயர்நீதிமன்றத்தினுடைய கிளையை ஆரம்பிப்பதற்கு இப்போது எந்தவிதமான முயற்சியும் எடுக்கப்படாமல் இருப்பது மாதிரி தெரிகிறது. 16 மாவட்டங்களை உள்ளடக்கிய அனைத்து வழக்கறிஞர்களும் ஒரு போராட்டத்தில் குதிக்கப் போவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சொல்லி அங்கே உடனடியாக கட்டடம் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரத்திலே சென்னை உயர்நீதிமன்றத்தின் கிளையை அமைப்பதில் அரசைப் பொறுத்த அளவில் எந்தத் தாமதமும், தடுமாற்றமும் கிடையாது என்பதைத் திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கிளையை அமைப்பதற்காக 75 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி உயர்நீதிமன்றத்திடம் நாங்கள் ஒப்படைத்துவிட்டோம். அங்கு எத்தகைய நீதிமன்றக் கட்டடங்கள் அமைக்க வேண்டும், என்னென்ன வசதிகளோடு இருக்க வேண்டும், அதற்கு எவ்வளவு செலவாகும் என்ற விவரங்களை உயர்நீதிமன்றம்தான் எங்களுக்குத் தர வேண்டும். அதைத் தரும்படி நாங்கள் கேட்டிருக்கிறோம். அதற்கான விவரங்கள் அரசுக்கு வந்தவுடன் நிதித் துறையினுடைய ஒப்புதலோடு நிச்சயமாகப் பணிகள் துரிதமாக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வழக்கறிஞர்கள் யாரும் இதில் போராட்டம் நடத்த வேண்டிய அவசியம் இல்லை; அவர்களைவிட எங்களுக்கு இதிலே அக்கறை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1999 ஏப்ரல் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 235, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**235—**

**பயிற்சிக் கல்லூரி தொடங்குதல்**

***22393—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை மற்றும் ஆண்டிமடம் ஒன்றியங்களில் கைத்தறி வளர்ச்சிக்குப் பயிற்சிக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

*முற்பகல் 10-20*

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே முந்திரித் தொழிலுக்கு அடுத்தபடியாக மக்கள் பெரிதும் நம்பி இருப்பது கைத்தறித் தொழிலைத்தான். இப்போது அந்தத் தொழிலும் மிகவும் நலிவு அடைந்து வருகிற சூழ்நிலை இருக்கிறது. இதனால் வேலைவாய்ப்பற்ற தன்மை இருக்கின்ற காரணத்தினால், தீவிரவாதம் அதிகமாகிக் கொண்டே வருகிறது. எனவே இதனைத் தடுத்து நிறுத்துவதற்காக, பெரும்பாலும் என்னுடைய ஆண்டிமடம் தொகுதியிலுள்ள பல்லாயிரம் பேர்கள் இந்தக் கைத்தறித் தொழிலை நம்பிக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலேயே பரம்பரை பரம்பரையாக அந்தத் தொழிலை செய்து வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த மக்கள் பயன் அடையக்கூடிய வகையில் இத்தகைய கைத்தறி வளர்ச்சிக்கான பயிற்சிக் கல்லூரி ஒன்றினை வருங்காலத்திலாவது அரசு தொடங்க முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[1999 ஏப்ரல் 1

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ்நாட்டில் சேலத்தில் இந்திய கைத்தறித் தொழில் நுட்பப் பயிலகம் என்ற கல்லூரி 3 ஆண்டுகள் பயிற்சிப் பட்டயப் படிப்பை அளித்து தற்போது நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இந்த மாணவர்களுக்கு முதல் ஆண்டு மாதம் ஒன்றுக்கு 200 ரூபாயும், இரண்டாவது ஆண்டு மாதம் ஒன்றுக்கு 225 ரூபாயும், மூன்றாம் ஆண்டு, மாதம் ஒன்றுக்கு 250 ரூபாயும் மானியமாக அளிக்கப்பட்டு 3 ஆண்டுகள் பயிற்சிப் பட்டயப் படிப்பு அங்கே நடைபெற்று வருகிறது. அதையொட்டி சேலத்தில் நெசவாளர் பயிலகத்தில் நெசவு, வடிவமைப்பு, சாயமிடல் ஆகியவை 4 மாத கால பயிற்சியாக நடைபெற்று வருகிறது. அதையொட்டி நெசவாளர் சேவை மையம் சேலம், காஞ்சிபுரம், சென்னை ஆகிய பகுதிகளில் இருக்கிறது. அதுபோல Package Programme, செறிவுத் திட்டத்தில் புதிய உற்பத்திக்கு, வடிவமைப்புக்கு வழிவகை செய்ய இன்று நாம் அதிக பயிற்சி கொடுக்கின்ற பணியிலும் ஈடுபடுகிறோம். எனினும், மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து வர இருக்கின்ற மானியக் கோரிக்கையில், மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்துபேசி அப்படிப்பட்ட பயிற்சிக் கல்லூரி அமைப்பதற்கு மேலும் வாய்ப்பு இருந்தால் நிச்சயமாக அது கவனிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 236, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**236—**

**வனத் துறைப் பள்ளிகள்**

***21594—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வனத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் வனப் பள்ளிகள் எத்தனை?

(ஆ) அவை எந்தெந்த மலைகளில் செயல்பட்டு வருகின்றன?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1999 ஏப்ரல் 1]

(அ) பதினெட்டு பள்ளிகள்.

(ஆ) அனைத்துப் பள்ளிகளும் ஜவ்வாது மலையில் உள்ளன.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பள்ளிகளில் எத்தனை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன? அந்தப் பணியிடங்கள் எப்போது நிரப்பப்படும் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறை நடத்தும் 18 பள்ளிகளில் 23 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. மேற்படி காலி பணியிடங்களை நிரப்ப வேண்டி வனத் துறை அரசுக்குக் கருத்துரு அனுப்பியுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் பரிசிலனைக்குப் பின், மேல்மட்டக் குழுவின் ஒப்புதலோடு மேற்படி 23 பள்ளி ஆசிரியர்கள் முறைப்படி நியமனம் செய்யப்படுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 237, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**237—**

**தொழில்களுக்கு உற்பத்தி மூலதனம்**

***14368—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் முதலீட்டுக் கழகத்தின் நிதியுதவியால் தொடங்கப்படும் தொழில்கள் உற்பத்தி மூலதனம் கிடைக்காமையால் மூடப்பட்டு உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு அறியும்.

(ஆ) நடைமுறை மூலதன நிதியுதவி வங்கிகளிடமிருந்து கிடைக்காமல் நலிவுறும் நிலையில் இருக்கும் தொழிலகங்கள் குறித்த

[1999 ஏப்ரல் 1

முறையீடுகளை ஆராய்வதற்கும் தீர்த்து வைப்பதற்காகவும், இந்திய ரிசர்வ் வங்கி மாநில அளவிலான கூட்டமைப்பு' ஒன்றை தமிழக அரசின் சிறு தொழில் துறை செயலாளர் அவர்கள் தலைமையில் ஏற்படுத்தி மேல் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நாம் 'TIIC' மூலம் நிறைய திட்டங்களைத் தந்து, refinance என்ற முறையில் பணத்தைத் தந்து, பல தொழிற்சாலைகள் ஆங்காங்கே திறக்கப்படுகின்றன. ஆனால் உற்பத்தி மூலதனம் (Working Capital) இல்லாமல் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே அவர்கள் தங்கள் முதலீடு மற்றும் கடன் பெற்று நிறைய செலவு செய்து establish செய்த பிறகு Working Capital இல்லாமல் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அதுபோல எத்தனை தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் உற்பத்தி மூலதனச் செலவை அளிக்கும் பணியை வங்கிகளிடம் ஒப்படைத்துவிட்டதால், வங்கிகளில் பணம் கொடுக்கவே மறுக்கிறார்கள். ஆகவே அரசாங்கமே ஏதாவது Working Capital கொடுப்பதற்கான ஒரு நிறுவனத்தை அமைத்து, இதுபோன்று நலிவு அடைந்திருக்கிற, மூடப்பட்டிருக்கின்ற தொழிற்சாலைகளுக்கு உற்பத்தி மூலதனத்தை வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்றும், அதற்கான திட்டத்தை இந்த அரசு அறிவிக்குமா என்றும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல நடைமுறை மூலதனம் இல்லாமல் இதுவரை மூடப்பட்டிருக்கின்ற தொழில் நிறுவனங்கள் சுமார் 800-க்கு மேல் இருக்கின்றன. இன்றையதினத்திலே நடைமுறை மூலதனம் வங்கியிலிருந்து கிடைக்கப் பெறாமல் இருக்கின்ற நிறுவனங்களுக்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமே இயந்திரங்கள் வாங்குவதற்கும், கட்டடங்கள் கட்டுவதற்கும், நடைமுறை மூலதனத்திற்கும் சுமார் 485 நிறுவனங்களுக்கு மொத்தமாக சுமார் 31 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஒருவர் தொழில் ஆரம்பிக்க முழுக் கடனைத் தந்துவிட்டாலும்கூட,



1999 ஏப்ரல் 1]

நடைமுறை மூலதனம் வழங்கப்படாமல் இருப்பதால், முழுக் கடனையும் பெற்று கட்டடம் கட்டி, இயந்திரம் வாங்கியபின்னர், அந்தத் தொழிற்சாலை உற்பத்தி செய்வதற்காக பல வருடங்கள் காத்திருப்பதை அறிந்த காரணத்தால்தான் இரண்டு கடன்களையும் சேர்த்து வழங்கலாம் என்ற முடிவும், இன்னும் சொல்லப்போனால் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் தொழில் துறையிலே இந்தியத் திருநாட்டில் தமிழகத்தை முதல் இடத்திற்குக் கொண்டு வருகின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கின்ற இந்த நேரத்திலே தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தினுடைய சார்பாக நாங்கள் நடைமுறை மூலதனத்தை வழங்கினால் அதை வசூலிப்பதற்கு, அதை monitor செய்வதற்கு ஒரு வங்கியிருந்தால் வசதியாக இருக்கும் என்பதையும் நாங்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து மொத்தக் கடனையும், நடைமுறை மூலதனக் கடன், இயந்திரக் கடன், கட்டடக் கடன், அத்தனை கடனையுமே வழங்கி, எதிர்காலத்திலே அந்தக் கடனை வசூலிப்பதற்கு ஏதுவாக புதிய வங்கி தொடங்குவதற்கான அந்த முடிவை இந்த ஆண்டு எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மூடப்பட்டிருக்கக்கூடிய அந்த 800 தொழிற்சாலைகளுக்கு நடைமுறை மூலதனக் கடன் கொடுப்பதாக இருந்தால், அது எவ்வளவு தேறும்? அரசாங்கம் அவ்வளவு பணத்தையும் எங்கேயாவது refinance மூலமாவதுப் பெற்று அவர்களுக்குக் கொடுப்பதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடைமுறை மூலதனக் கடன் இல்லாமல் நலிந்திருக்கின்ற ஆலைகளில், மாநில அளவிலே அமைத்திருக்கின்ற குழு மூலமாக மூன்று மாத காலத்திலே கிட்டத்தட்ட நான்கு நிறுவனங்களைத்தான் முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். மற்றவை எந்த அளவிற்கு இருக்கின்றன என்பதைப் பார்த்து எதிர்காலத்திலே எங்களைப் பொறுத்த அளவில், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தைப் பொறுத்த அளவில், மிக நட்பாக, எளிமையாக, யார் யார் தொழில் தொடங்கி, நலிந்திருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் உதவி செய்வதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

[1999 ஏப்ரல் 1

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மட்டுமல்லாது, இப்போது இந்தியாவிலே தொழில்கள் நலிவுற்று பொருளாதாரம் ஒரு தேக்க நிலையில் இருப்பதற்குக் காரணம், பல தொழில்களுக்குத் தேவையான நடைமுறை மூலதனம் (Working Capital) கிடைப்பதில்லை என்பதேயாகும். ஆனால், தமிழகத்தில் தொழில் துறையை வளர்ப்பதற்கு இந்த அரசு பலவிதமான முற்போக்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அதில் Tamil Nadu Industrial Investment Corporation-ஐ Commercial வங்கியாக ஆரம்பிக்க வேண்டுமென்பது ஒரு குறிப்பாகும். இப்போது சில unit-களுக்கு நடைமுறை மூலதனம் Tamil Nadu Industrial Investment Corporation-லிருந்து கொடுக்கிறார்கள். ஆனால், இந்தப் பணத்தைப் பெறுபவர்கள், உண்மையிலேயே அதை நடைமுறை மூலதனத்திற்குத்தான் செலவழிக்கிறார்களா அல்லது வேறு உபயோகத்திற்குச் செலவழித்து விடுகிறார்களா என்பதைப் பார்ப்பதற்கு முறையான அமைப்பு இல்லை. அதற்குப் பதிலாக Commercial வங்கியாகவே ஆரம்பித்துவிட்டால், இவர்களிடமிருந்து Term Loan வாங்கக்கூடியவர்கள் அனைத்து transaction-களையும் அந்த வங்கி மூலமாகச் செய்வார்கள். ஆக, தன்னிடமிருந்து கடனைப் பெற்றவர்களுடைய தொழில் எப்படி நடக்கிறது, அந்தப் பணத்தை திரும்ப எப்போது பெற முடியும் என்பதையெல்லாம் முழுமையாக monitor செய்வதற்கு வசதியாக இருக்கும். Tamil Nadu Industrial Investment Corporation, Commercial வங்கி ஆரம்பிப்பதற்கு Reserve Bank...

**HON. SPEAKER:** The question should be short.

**திரு. ஆர். சொக்கர்:** T.I.I.C-க்கு, Reserve Bank of India அனுமதி கொடுத்திருக்கக்கூடிய நிலையில் இந்த ஒரு நல்ல திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த இந்த அரசுக்கு ஏன் காலதாமதமாகிறது? உடனடியாக ஏன் ஆரம்பிக்கக் கூடாது என்பதை அரசிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தை, கடந்த 1998 ஆம் ஆண்டிலிருந்துதான் நாங்கள் ஆலோசித்து வருகிறோம். செயலர் மற்றும் அங்கு இருக்கக்கூடிய நிர்வாக இயக்குநர் ஆகிய அத்தனைபேருடனும் கலந்து ஆலோசித்து வருகின்றோம். இந்த ஆண்டு, அவர்கள் சொன்னதைப் போல தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்



1999 ஏப்ரல் 1]

கழகமே நேரடியாக நடைமுறை மூலதனக் கடனை வழங்கினால், அதைப் பெறுவதற்கு வசதியாக வங்கிகள் அமைத்தால்தான் அது உதவியாக இருக்கும் என்பதை அறிந்து கொண்ட காரணத்தால்தான், இந்த ஆண்டு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே பேசி, அதை அறிவிப்போம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.எம். ஆருண் ரஷீத்.

**திரு. ஜே.எம். ஆருண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் அம்பத்தூர் பகுதியிலே நிறைய தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. அதற்கு அவர்கள் சொல்கின்ற காரணங்கள் எல்லாம், தங்களுக்கு Running Capital இல்லாத ஒரே காரணத்தால்தான் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன என்று சொல்கின்றார்கள். எனவே, அரசு தனிக் கவனம் செலுத்தி மூடப்பட்டு இருக்கின்ற தொழிற்சாலைகளைத் திறக்க வேண்டும். குறிப்பாக டன்லப் போன்ற பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டு இருக்கின்றன; ஏறத்தாழ 50 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சம் பேர் வேலை வாய்ப்பின்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள்; அதனால் என்னுடைய பகுதியிலே Crime Rate அதிகமாக ஏறிக்கொண்டு இருக்கிறது; எனவே, அந்தப் பகுதியிலே இருக்கின்ற தொழிற்சாலைகளை உடனடியாகத் திறப்பதற்கும், முதலீடுகளை அரசு சார்பிலே தருவதற்கும் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6 மாத காலமாக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தினுடைய நிர்வாக இயக்குநர் அவர்களைத் தமிழ்நாட்டில் இருக்கின்ற 34 தொழிற்சாலைகளுக்கும் நான் அனுப்பி வைத்து, எந்தெந்த தொழில்கள் நலிந்து இருக்கின்றன; அவர்களுக்கு என்னென்ன சிரமங்கள் இருக்கின்றன என்பதைக் கண்டறிய கூட்டத்தைக் கூட்டச் சொல்லி சிறு தொழில்கள் செய்கின்றவர்கள்; தமிழ்நாடு முதலீட்டுக் கழகத்திலே கடன் வாங்கி இருக்கின்றவர்கள் கூட்டத்தைக் கூட்டச் சொல்லி, அவர்களுக்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ, அத்தனையும் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து இப்போது அவற்றை

[1999 ஏப்ரல் 1

வழங்கி வருகின்றோம். ஆனால், உதவியே செய்ய இயலாதவர்களுக்கு அரசின் சார்பாக நடவடிக்கை எடுப்பதிலே சற்று தாமதம் இருக்கின்றது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல நலிந்து இருக்கின்ற தொழில்களுக்கு — எங்களிடத்திலே நிதி போதுமானதாக இருக்கின்றது; ஓராண்டிற்கு 320 கோடிக்கு மேல் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு நாங்கள் வசூல் செய்து இருக்கின்றோம்; கடன் 160 கோடிதான் கொடுத்து இருக்கின்றோம்; எனவே போதிய நிதி வசதி இருக்கின்றது; உதவி செய்யவும் தயாராக இருக்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 238, திரு. பி. என். வல்லரசு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**238—**

### உசிலம்பட்டியில் நூற்பாலை நிறுவுதல்

***15499— திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டியில் பட்டு நூல் நூற்பாலை நிறுவிட அரசு அறிவித்து ஓராண்டிற்கு மேல் ஆகிவிட்ட நிலையில், நூற்பாலை நிறுவிடும் பணியைத் தொடங்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உசிலம்பட்டியில் பட்டு நூல் நூற்பாலை தொடங்கும் திட்டம் தொடர்பாக பட்டு வளர்ச்சித் துறை இயக்குநரோ, செயலரோ, அமைச்சரோ அறிவிப்புகள் ஏதும் செய்யவில்லை. மேலும் உசிலம்பட்டியில் பட்டு நூற்பு ஆலை அமைப்பதற்குத் தேவைப்படும் கச்சாப் பொருட்கள் (பட்டுக்கூடு) உற்பத்தி குறைவாக உள்ளதாலும் அருகில் உள்ள தேனியில் பட்டு நூற்பு நிலையம் ஒன்று செயல்படுவதாலும் உசிலம்பட்டியில் பட்டு நூற்பு ஆலை தொடங்குவதற்கான திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.



1999 ஏப்ரல் 1]

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 239, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**239—**

### நாமக்கல்லில் குளிர்பதனக் கிடங்கு

***8728— திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முட்டை அதிகமாக உற்பத்தியாகும் காலங்களில் அவை கெட்டுப் போகாமல் சேமித்து வைக்க நாமக்கல் பகுதியில் குளிர்பதனக் கிடங்கு ஒன்றை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற கிராமப்புறங்களில் நிறைய முட்டைகள் நாசமாகி விடுகின்றன.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்டு இருப்பது நாமக்கல் பற்றி. இப்போது, என் தொகுதி என்று பேசிக்கொண்டு இருக்கிறீர்கள்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** இல்லை, ஐயா, அதை நாமக்கல்லில் மட்டும் அமைத்தால் போதாது; அம்பத்தூரிலும் அமைக்க வேண்டும் என்பதற்காக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நாமக்கல்லில் அமைப்பீர்களா என்றுதான் கேட்டு இருக்கிறீர்கள்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** நாமக்கல்லில்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி என்ன என்று பார்த்தீர்களா?

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** பார்த்தேன், ஐயா. அந்தத் தொழிலில் அங்குதான் முட்டைகள் அதிகம் உற்பத்தி செய்கின்ற கோழிப் பண்ணைகள் இருக்கின்றன.....

[1999 ஏப்ரல் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதெல்லாம்பற்றிச் சொல்லவில்லை. உங்கள் கேள்வியே, முட்டை அதிகமாக உற்பத்தியாகும் காலங்களில், அவை கெட்டுப் போகாமல் சேமித்து வைக்க நாமக்கல் பகுதியில் குளிர்பதனக் கிடங்கு ஒன்றை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதுதான்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் பகுதியில் இருந்து நிறைய முட்டைகள் சென்னை மாநகருக்கு வருகின்றன. அதேபோன்று என்னுடைய தொகுதியிலும், புறநகர்ப் பகுதிகளிலே இருக்கின்ற கிராமப்புறங்களிலே நிறைய கோழிப் பண்ணைகள் இருக்கின்றன. நாமக்கல்லில் அமைக்கிறமாதிரி, என்னுடைய தொகுதியிலும் அமைக்க வேண்டும்; முட்டைகளை சேமித்து வைக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டும். காரணம், ஒரு ரூபாய்க்கு விற்ற முட்டை இப்போது 1-1/2 ரூபாய்க்கு விற்கிறது. ஏழைகள் 10 முட்டைகள் வாங்கி வந்தால், 5 முட்டைகள் கெட்டுப் போய்விடுகின்றன. குளிர்பதனக் கிடங்கு வசதி இருந்தால் அந்த முட்டைகள் கெட்டுப் போகாமல் இருக்கும். அது ஏழைகள் பயன்படுத்தும் பொருள் என்பதால், அரசு தனிக் கவனம் செலுத்தி, சென்னைப் புறநகர்ப் பகுதியான அம்பத்தூர் பகுதியிலே, வில்லிவாக்கம் தொகுதியில் குளிர்பதனக் கிடங்கு நிலையம் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நாமக்கல்லில் அதிகமான கோழிகள் இருக்கின்றன; பண்ணைகள் இருக்கின்றன; முட்டைகளும் அதிகமாக இருக்கின்றன. எனவே, சேமிப்புக் கிடங்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் எவ்வளவு கோழிகள் இருக்கின்றன? எவ்வளவு முட்டைகள் கிடைக்கும்? (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 240, திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

முற்பகல் 10-35

**240—**

### கதர் விற்பனை நிலையங்கள் தொடங்குதல்

***22882—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 ஏப்ரல் 1]

(அ) ஐரோப்பிய நாடுகளில் கதர் விற்பனை நிலையங்களைத் தொடங்கி கதர் விற்பனையை பிரபலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஐரோப்பிய நாடுகளில் கதர் விற்பனை நிலையங்களைத் தொடங்கி கதர் விற்பனையை பிரபலப்படுத்தும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காந்தி கண்ட கனவை நனவாக்கும் முகத்தான், கிராம இராஜ்யம் எல்லாம் இராம இராஜ்யம் ஆக வேண்டுமென்ற எண்ணத்தில் காந்தி அவர்கள் தாமே கை இராட்டையிலே நூலை நூற்று, அந்த நூலிலிருந்து உற்பத்தி செய்த துணிகளை உடுத்தி, மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருந்தார். கிராமங்களில் வாழ்கிற ஏழையெளிய தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த கதர்த் துறை மென்மேலும் சிறப்பாக வளரக்கூடிய வகையில், அந்தப் பணியிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும். வெளி நாடுகளில் இருக்கக்கூடிய மக்களெல்லாம் உடுத்திக் கொண்டிருக்கக்கூடிய கதர்த் துணியை, கைத்தறித் துணியை உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்தவும், அன்னியச் செலாவணி அதிகமாக கிடைக்கக்கூடிய வகையிலும், ஐரோப்பிய நாடுகளில் வளரக்கூடிய வகையில் விளம்பரம் செய்து எதிர்காலத்திலே கதர்த் துறை வளரக்கூடிய வகையிலே தமிழக அரசு முன்னோடித் திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டும். அப்படிச் செயல்படுத்துமா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியத்தினுடைய நிதிநிலையைப் பொறுத்து எதிர்காலத்தில் ஆலோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1999 ஏப்ரல் 1

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில், குறிப்பாக ஐரோப்பா போன்ற நாடுகளில் மிகப் பெரிய பணக்காரர்கள் கதர்த் துணியை அணிவதை ஒரு கௌரவமாகக் கருதுவதாகப் பலர் சொல்கிறார்கள். ஆகவே இதில் நம்முடைய அரசு முழுக் கவனம் செலுத்துமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கதர் வாரியத்தினுடைய துணை அமைப்பான பனை வாரியத்தின் மூலம் பனை நார்களைக் கொண்டு உற்பத்தி செய்கின்ற பொருள்களைதான் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்தத் தொழிலைச் சிறப்புடன் நடத்தி வருகிறோம். எதிர்காலத்தில் இது மாதிரி கதர் வாரியத்தால் உற்பத்தி செய்யப்படுகின்ற துணிகளுக்கு ஐரோப்பா போன்ற நாடுகளிலிருந்து ஆணைகள் பெறப்படின் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் @

### ஒன்பதாவது பட்டியல்

1—

**கிராஃபைட் கனிமங்கள் விவரம்**

**வினா 11281— திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் கிராஃபைட் கனிமங்கள் எந்தெந்த பகுதிகளில் இருக்கின்றன?

(ஆ) அக்கனிமங்களைக் கொண்டு அங்கு தொழிற்சாலைகள் தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



1999 ஏப்ரல் 1]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவில் வட்டத்தில் சங்குபட்டி மற்றும் குறிஞ்சாக்குளம் கிராமங்களில் கிராஃபைட் கனிமம் கிடைக்கின்றது.

(ஆ) இப்பகுதியில் மிகவும் குறைந்த அளவிலேயே கிராஃபைட் கிடைக்கும் என ஆய்வில் கண்டறியப்பட்டதால் இங்கு கிடைக்கும் கிராபைட் கனிமத்தைக் கொண்டு தொழிற்சாலைகள் தொடங்க அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

(இ) கேள்விக்கிடமில்லை.

2—

**காவலர் குடியிருப்புக் கட்டடம் புதுப்பித்தல்**

**வினா 15092— திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் மற்றும் தாரமங்கலம் தொகுதி, மேச்சேரியிலுள்ள காவலர் குடியிருப்பு கட்டடம் பழுதடைந்துள்ளதை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது புதுப்பிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் மற்றும் தாரமங்கலம் தொகுதியிலுள்ள, மேச்சேரி காவலர் குடியிருப்பு கட்டடங்களை பழுதுபார்க்க தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3—

**காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடம்**

**வினா 15725— திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை மற்றும் பாவூர் சத்திரம் காவல் நிலையங்களுக்கு புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1998-99 ஆம் ஆண்டு மொத்தம் 40 காவல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அனுமதி அளித்து அரசு ஆணைகள் பிறப்பித்ததுடன் ரூ.160/- இலட்சம் நிதியும் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த 40 காவல் நிலையக் கட்டடங்களில் திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை மற்றும் பாவூர்சத்திரம் காவல் நிலையங்கள் இடம்பெறவில்லை. இவ்விரு காவல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

**4—**

### உதவி ஆய்வாளர்களுக்குப் பதவி உயர்வு அளித்தல்

**வினா 22573— திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவல் துறையில் 1987 ஆம் ஆண்டு நேரடித் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பல்வேறு பிரிவுகளில் பணியாற்றிவரும் உதவி ஆய்வாளர்களுக்குப் பதவி உயர்வு அளிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

காவல் துறையில் 1987 ஆம் ஆண்டில் சட்டம்-ஒழுங்கு, சேமப்படை, சிறப்புக்காவல்படை ஆகிய மூன்று பிரிவுகளுக்கு 1004 உதவி ஆய்வாளர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில், சட்டம் மற்றும் ஒழுங்கு பிரிவுக்கு என தேர்ந்தெடுக்கப்பட்ட 615 நபர்களில் தகுதியான 384 நபர்கள் ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர். மீதமுள்ள தகுதியான 43 உதவி ஆய்வாளர்கள் விரைவில் பதவி உயர்வு பெற இருக்கின்றனர்.

2. சேமப்படைக்கு என நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பதவி உயர்வு பெறுவதற்கான முறை இதுவரை வரவில்லை. ஏனெனில், 1985 ஆம் ஆண்டு தலைமைக் காவலர்கள் பதவியிலிருந்து உதவி ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற்றவர்களே இன்னமும் ஆய்வாளர் பதவி உயர்வுக்காகக் காத்திருக்கின்றனர்.



3. சிறப்புக் காவல்படைப் பிரிவுக்கு எனத் தேர்ந்தெடுக்கப்பட்ட 132 நபர்களில் 4 நபர்கள் ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர். எஞ்சியுள்ளவர்களுக்கும் அவர்களது முதுநிலையின்படியும், தகுதியின் அடிப்படையிலும் விரைவில் பதவி உயர்வு அளிக்கப்படும்.

**5—**

### நூலகங்களுக்குப் புதிய கட்டடம்

**வினா 18986— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்த நிதியாண்டில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் நூல் நிலையங்களை அரசுக் கட்டடத்தில் இயங்க வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை நூலகக் கட்டடங்கள் புதிதாக கட்டப்பட உள்ளன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) பொது நூலகத் துறையிலுள்ள மொத்தம் 1568 நூலகங்களில் 780 நூலகங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 291 நூலகங்கள் இலவசக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 497 நூலகங்கள் (32%)மட்டுமே வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் நூல் நிலையங்களை அரசு கட்டடங்களில் இயங்க வைக்க இந்த நிதியாண்டிலும் (98-99), தொடர்ந்தும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வாண்டில் 63 கிளை நூலகங்களுக்கு ஏற்கனவே கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் எட்டு கிளை நூலகங்களுக்கு கட்டடங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**6—**

### மின் இணைப்பை மாற்றிக் கொடுக்க நடவடிக்கை

**வினா 11996— திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 ஏப்ரல் 1

(அ) பெருந்துறை-ஈங்கூர் கிராமங்களில் தொழில் வளர்ச்சிக்காக 'டாசிட்'-ற்கு நிலம் கொடுத்த விவசாயிகள் தங்களின் பூமியிலிருந்து மின் இணைப்பை (பாசன கிணறு) 'டாசிட்' எல்லைக்கு வெளியிலுள்ள தங்கள் பூமிக்கு மாற்றிக் கொடுக்க அரசுக்கு முறையிட்டுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெருந்துறை-ஈங்கூர் கிராமங்களில் தொழில் வளர்ச்சிக்காக 'டாசிட்'-ற்கு நிலம் கொடுத்த விவசாயிகளிடமிருந்து, தங்களின் பூமியிலிருந்து மின் இணைப்பை (பாசன கிணறு) 'டாசிட்' எல்லைக்கு வெளியிலுள்ள தங்கள் பூமிக்கு மாற்றிக் கொடுக்க கோரி இதுவரை எந்த விண்ணப்பமும் தமிழ்நாடு மின்வாரியத்தில் பெறப்படவில்லை. மேற்கூறிய விவசாயிகளிடமிருந்து தனிப்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

7—

**புதிய மின்மாற்றி அமைத்தல்**

**வினா 14850— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையம் எஸ்.எஸ்.1-க்கு உட்பட்ட முன்சீப்வளவு, செங்கான்வளவு, கோலுக்காரன் வளவு, தென்கிழக்கு வளவு ஆகிய பகுதிகளில் மின் விளக்குகள் போதுமான அளவிற்கு மின் அழுத்தம் இல்லாததால் சரியாக எரிவதில்லை என்பது அரசிற்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அந்த பகுதிக்கு புதிய மின்மாற்றி அமைத்து மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



1999 ஏப்ரல் 1]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையம் எஸ்.எஸ்.1-க்கு உட்பட்ட முன்சீப்வளவு, கோலுக்காரன் வளவு, தென்கிழக்கு வளவு ஆகிய பகுதிகளுக்கு புதுப்பாளையம் எஸ்.எஸ்.1, 100கே.வி.ஏ./22 கே.வி மின்மாற்றியின் மூலம் மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. இம்மின்மாற்றிக்கு மின்சாரம் எடப்பாடி 110/22 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து ஏகாபுரம் 22 கே.வி. உயர் மின் அழுத்த தொடர் மூலம் மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. இம் மின்மாற்றியில் உள்ள பளு விவசாயத்திற்கு 118.5 குதி (+) தொழில்முறைக்கு 20 குதி. உள்ளது. மேற்படி மின் பளுவிற்கு முன்பு உள்ள மின்மாற்றியின் திறனே போதுமானதாக உள்ளது. எனவே, புதிய மின் மாற்றி அமைக்க வேண்டிய தேவை இல்லை. புதுப்பாளையம் எஸ்.எஸ்.-க்கு உட்பட்ட முன்சீப்வளவு, கோலுக்காரன்வளவு, தென்கிழக்குவளவு ஆகிய பகுதிகளில் குறைந்த மின் அழுத்தம் காரணமாக 3/98-லேயே கூடுதலாக ஒரு கம்பி இழுத்து இரண்டு கம்பிகளிலும் மின் இணைப்புகளை பிரித்துக் கொடுத்து மின் அழுத்தம் சரி செய்யப்பட்டது. தற்போது அப்பகுதிகளில் மின் விளக்குகள் நன்றாகவே எரிகின்றது.

8—

**வட்டாட்சியர்களுக்குப் புதிய வாகனங்கள் வழங்குதல்**

**வினா 16794— திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள வருவாய்க் கோட்ட அலுவலர்கள் மற்றும் வட்டாட்சியர்களுக்கு புதிய வாகனங்கள் வழங்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

[1999 ஏப்ரல் 1

(ஆ) ஏப்ரல் 1998 முதல் டிசம்பர் 1998 வரை, ரூ.2.6 கோடி நிதி ஒதுக்கீட்டில் 86 புதிய வாகனங்கள் வாங்கி சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

9—

**ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை**

**வினா 4532— திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை, வல்லம் சாலைகளில் ஆக்கிரமிப்பு உள்ளதால், வாகனங்கள் விபத்துக்குள்ளாவது அரசின் கவனத்திற்கு வரப்பெற்றதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை நகராட்சிப் பகுதியில் இருந்த ஆக்கிரமிப்புகள் 19-3-1998 ஆம் நாளன்று நகராட்சியால் அகற்றப்பட்டு விட்டன.

10—

**வாடகைச் சீருந்து இயக்குதல்**

**வினா 12912— திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பயணிகளின் வசதிக்காக பேருந்து நிலையம் அருகே வாடகைச் சீருந்து அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



1999 ஏப்ரல் 1]

(அ) மற்றும் (ஆ) பெரிய நகரங்களில் அமைந்திருக்கும் பேருந்து நிலையங்களில் அல்லது அவற்றின் அருகில், சீருந்து நிலையங்கள் சில இடங்களில் பராமரிக்கப்படுகின்றன. சிறிய நகராட்சிப் பகுதிகளில் அமைந்திருக்கும் பேருந்து நிலையங்களில், அதன் தேவை மற்றும் இடவசதி ஆகியவற்றைப் பொறுத்து சீருந்து நிலையம் அமைப்பது கருதிப் பார்க்கப்படும். நகராட்சிப் பகுதியில் புதிய பேருந்து நிலையம் கட்டும்போது, வரைவுத் திட்டத்திலேயே பரிசீலித்து பேருந்து நிலைய வடிவமைப்பில் சீருந்து நிலையம் சேர்க்கப்படும்.

11—

**பூங்காக்கள் ஏற்படுத்த நடவடிக்கை**

**வினா 14430— திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர், வேலப்பாடி பூந்தோட்டம் என்னுமிடத்தில் பல வீட்டுமனைப் பிரிவுகளுக்கு உள்ளூர் திட்டக்குழுமம் அனுமதி, அங்கீகாரம் வழங்கியும், பூங்காவிற்கான இடம் ஒதுக்கப்பட்டும் இதுவரை நகராட்சியிடம் மனைப்பிரிவு உரிமையாளர்கள் "பொது இடத்தினை" ஒப்படைப்பு செய்யாததால் அங்கு பூங்காக்கள் ஏற்படுத்த இயலவில்லை என்பதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர், நகராட்சி எல்லைக்குட்பட்ட வேலப்பாடி பூந்தோட்ட பகுதியில் 1981-ம் ஆண்டு முதல் 1986-ம் ஆண்டு வரை எட்டு குடியிருப்பு மனைப் பிரிவுகளுக்கு (மொத்தம் பரப்பளவு 15.65 ஏக்கர்) நகராட்சியால் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது. இம்மனைப் பிரிவுகளில் பூங்காவிற்காக இட ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. மனைப்பிரிவுகளில் எந்த உபயோகத்திற்காக ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதோ அந்த உபயோகங்களுக்காகவே அவைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆதலால் மனைப்பிரிவுதாரர்கள் பூங்காவிற்கு என இடங்கள் ஏதும் நகராட்சிக்கு ஒப்படை செய்யவில்லை. பூந்தோட்டம் பகுதியில் உள்ள அனைத்து

[1999 ஏப்ரல் 1

மனைப்பிரிவுகளும் 1986-ம் ஆண்டிற்கு முன்பே ஒப்புதல் அளிக்கப்பட்டவைகளாகும். அரசாணை (நிலை) எண் 222, ந.நி.(ம) கு.வ. துறை, நாள்: 28-8-92-ன்படி மனைப்பிரிவில் செய்யப்படும் ஒதுக்கீடுகள் மனைப்பிரிவுதாரர்களால் நகராட்சிக்கு ஒப்படைத்த பின்னரே நகராட்சியால் அங்கீகாரம் வழங்கப்படுகிறது. இவ்வரசாணைக்குப்பின் பூந்தோட்டப் பகுதியில் புதியதாக மனைப்பிரிவுகளுக்கு ஒப்புதல் ஏதும் வழங்கப்படவில்லை.

12—

**புதிய கழிப்பிடம் கட்டிக் கொடுத்தல்**

**வினா 14590— திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் கே.ஏ.கே.எம். நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் கழிப்பிடம் மிகவும் மோசமாக பாழடைந்த நிலையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனை அகற்றிவிட்டு புதிய கழிப்பிடம் கட்டிக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர், சைதாப்பேட்டை கே.ஏ.கே.எம். நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் ரூ.1,00,000/- மதிப்பீட்டில் நவீனக் கழிப்பிடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

13—

**தனி ஊராட்சியாக்குதல்**

**வினா 14682— திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி ஒன்றியம், அய்யூர்அகரம் சிந்தாமணி கிராமத்தைப் பிரித்து தனி ஊராட்சியாக்குவதற்கு அரசு முன்வருமா?



1999 ஏப்ரல் 1]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி ஒன்றியம், அய்யூர் அகரம் சிந்தாமணி கிராமத்தைப் பிரித்து தனி ஊராட்சியாக்கும் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

14—

**மதுராந்தகம் பேருந்து நிலையத்தை மேம்படுத்துதல்**

**வினா 16297— திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் பேருந்து நிலையத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுராந்தகம் பேருந்து நிலையத்தை அபிவிருத்தி செய்ய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.20.00 லட்சம் வழங்கப்பட்டு, கீழ்க்கண்ட பணிகளை நெடுஞ்சாலைத் துறை மூலம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(1) மதுராந்தகம் பேருந்து நிலையத்தினைச் சுற்றி வடிகால் கட்டுதல் ரூ.10.00 லட்சம்.

(2) மதுராந்தகம் பேருந்து நிலைய சீரமைப்புப் பணி ரூ.10.00 லட்சம்.

15—

**பேருந்து நிலையத்தை அகலப்படுத்துதல்**

**வினா 17925— திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 ஏப்ரல் 1

தேனி மாவட்டம், கம்பம் நகரப் பேருந்து நிலையத்தை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கம்பம் நகரின் மையப்பகுதியில் பேருந்து நிலையத்தை அமைக்க நகராட்சியால் முடிவெடுக்கப்பட்டிருப்பதாலும், தற்போது பேருந்து நிலையம் அமைந்துள்ள இடம் கோவிலுக்குச் சொந்தமானதாலும் இதனை அகலப்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

16—

**பேரூராட்சிகளுக்குக் கடனுதவித் திட்டம்**

**வினா 19113—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராம ஊராட்சிகளுக்கு வழங்குவதுபோல் கான்கிரீட் வீடுகள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கடனுதவித் திட்டங்கள், பேரூராட்சிகளுக்கும் நீட்டித்து வழங்கப்பட அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

31-5-1994 முதல் பேரூராட்சிகள், நகராட்சிகள் சட்டத்தின்கீழ் செயல்படுவதால் கான்கிரீட் வீடுகள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டக் கடன் உதவிகள் ஆகியவை பேரூராட்சிகளில் நிறுத்தப்பட்டுள்ளன. தற்போது அரசால் ஆணையிடப்பட்டுள்ள சுவர்ண ஜெயந்தி திட்டத்தின் மூலம் பேரூராட்சிகளில் தனி நபர்களுக்கு வறுமைக் கோட்டின் கீழ்நிலையில் வாழ்க்கை நிலை உள்ளவர்களுக்குக் கடன் உதவி அளிக்கத் திட்டம் உள்ளது. இதனைத் தவிர வேறு திட்டங்கள் ஏதும் பேரூராட்சிகளின் செயல்பாட்டில் இல்லை.



1999 ஏப்ரல் 1]

17—

**கொங்கணாபுரம் பேரூராட்சியை சிற்றூராட்சியாக மாற்றம் செய்தல்**

**வினா 20818—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் பேரூராட்சியின் ஆண்டு வருமானம் எவ்வளவு?

(ஆ) அதை சிற்றூராட்சியாக மாற்றம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கொங்கணாபுரம் பேரூராட்சியின் 1997-98-ம் ஆண்டு வருமானம் ரூ.27.83 இலட்சமாகும்.

(ஆ) கொங்கணாபுரம் பேரூராட்சியை சிற்றூராட்சியாக மாற்றம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

18—

**பூலாம்பட்டி பேரூராட்சியை சிற்றூராட்சியாக மாற்றுதல்**

**வினா 20819—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சியின் ஆண்டு வருமானம் எவ்வளவு?

(ஆ) அதை சிற்றூராட்சியாக மாற்றம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1999 ஏப்ரல் 1

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பூலாம்பட்டி பேரூராட்சியின் 1997-98ஆம் ஆண்டு வருமானம் ரூ. 22.00 இலட்சமாகும்.

(ஆ) பூலாம்பட்டி பேரூராட்சியை சிற்றூராட்சியாக மாற்றம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

19—

### ஆரம்பப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்

**வினா 21358—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலூகா, தஞ்சாவூர் ஒன்றியம், பிள்ளையார்பட்டி ஊராட்சி, மேலவஸ்தாசாவடி ஆரம்பப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலூகா, தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், பிள்ளையார்பட்டி ஊராட்சி, மேலவஸ்தாசாவடி ஊராட்சி ஒன்றிய பள்ளியில் தற்போது 102 குழந்தைகள் பதிவில் உள்ளார்கள். இப்பள்ளியில் தற்போதுள்ள இடவசதி 111 குழந்தைகளுக்குப் போதுமானது. தற்போதுள்ள நிலையில் கூடுதல் கட்டடம் கட்ட அவசியமில்லை. குழந்தைகளின் பதிவு அதிகரிக்கப்படின், கூடுதல் இடவசதி தேவைப்படின், முன்னுரிமை அடிப்படையில் ஒன்றியக் கல்வி நிதியிலிருந்து கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.



1999 ஏப்ரல் 1]

20—

### மண்வளம் சேதமடைவதைத் தடுத்தல்

**வினா 11804—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாநிலம் முழுவதும் மண்டிக் கிடக்கும் பார்த்தீனியச் செடியால் மண்வளம் சேதமடைவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

மாநிலம் முழுவதும் மண்டிக் கிடக்கும் பார்த்தீனியம் களைச் செடிகளை அழிக்க, அரசுத் திட்டம் தனியாக எதுவும் நடைமுறையில் இல்லை. ஆனால் அதனை அழிக்கத் தேவையான தொழில் நுட்பங்களை வேளாண்மைத் துறை மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் மூலம் விவசாயிகளுக்கு விளக்கி அந்த பார்த்தீனியச் செடிகளை அவ்வப்போது தக்க களைக் கொல்லிகளைப் பயன்படுத்தி அழித்திட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

21—

### பருத்தி உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை

**வினா 21330—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பருத்தி உற்பத்தியைப் பெருக்க அரசு எடுத்த நடவடிக்கை என்னென்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் பருத்தி உற்பத்தியைப் பெருக்க மாநில அரசும் மத்திய அரசும் கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

[1999 ஏப்ரல் 1

மாநில திட்டங்கள்

**1. சான்று விதை கொள்முதல் மற்றும் விநியோகம்**

இது ஒரு மாநில அரசின் திட்டமாகும். ஒவ்வோர் ஆண்டும் 3750 குவிண்டால் சான்று பெற்ற பருத்தி விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன.

**2. பருத்தி பர்டீனியா புழுவைத் தடுக்க என்.பி.வி. நச்சுயிரி தயாரித்தல்**

மாநில அரசின் திட்டத்தில் ஈரோடு, விழுப்புரம், மதுரை ஆகிய மூன்று இடங்களில் வருடத்திற்கு 10500 எக்டேர் பரப்பிற்கு தெளிப்பதற்குத் தேவையான என்.பி.வி. நச்சுயிரி தயார் செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது.

மத்திய மாநில திட்டம்

**தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டம்**

மைய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டம் எல்லா மாவட்டங்களிலும் (காஞ்சிபுரம், திருவள்ளூர், நாகர்கோவில், நீலகிரி மாவட்டங்களைத் தவிர) செயல்படுகின்றது. 1998-99 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட இனங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

| வரிசை எண் | இனம் | மானிய விவரம் | பொருள் இலக்கு | நிதி இலக்கு (இலட்சம் ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | கருவிதை உற்பத்தி | குவிண்டாலுக்கு ரூ. 2,600 வீதம் | 5 குவிண்டால் | 0.13 |
| 2. | சான்றுவிதை விநியோகம் | குவிண்டாலுக்கு ரூ. 250 முதல் ரூ. 400 வரை | 3000 குவிண்டால் | 10.50 |
| 3. | நிரூபண வயல்கள் அமைத்தல் | ஒரு எக்டருக்கு ரூ. 1500 மானியம் வழங்கப் படுகிறது. | 6000 எக்டர் | 90.00 |
| 4. | இனக்கவர்ச்சிப்பொறி நிரூபணங்கள் அமைத்தல் | ஒரு எக்டருக்கு ரூ. 250 மானியம் | 1250 எக்டர் | 3.13 |
| 5. | நியூகிளியர் பாலி—ஹைடிரோசிஸ் வைரஸ் நிரூபண வயல்கள் அமைத்தல் | ஒரு எக்டருக்கு ரூ. 750/- வீதம் மானியம் | 2000 எக்டர் | 15.00 |
| 6. | ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நிரூபணம் மற்றும் பயிற்சி | பயிற்சி ஒன்றுக்கு ரூ. 8000/- | 1200 எக்டர் | 96.00 |
| 7. | தெளிப்பு நீர்ப்பாசன கருவிகள் விநியோகம் | ஒரு எக்டருக்கு ரூ. 25,000/- மானியம் | 300 எக்டர் | 75.00 |
| 8. | விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல் | பயிற்சி ஒன்றுக்கு ரூ. 5000/- வீதம் | 100 எண்கள் | 5.00 |
| 9. | சில்லரை செலவினங்கள் | — | — | 0.75 |
| | | | மொத்தம் | 295.51 |



இதில் மைய அரசின் 75 சதவிகித பங்கு ரூ. 221.63 இலட்சமும், மாநில அரசின் 25 சதவிகித பங்கு ரூ. 73.88 இலட்சமும் ஆகும்.

22—

**பூங்காக்களைச் செப்பனிடல்**

**வினா 13873—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, சாத்தனூர் அணையில் உள்ள பூங்காக்களை செப்பனிடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் அணையில் உள்ள பூங்காவை மேம்படுத்தி அழகுபடுத்த ரூ. 45.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளித்து 25-9-98 அன்று அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

23—

## புதிய பேருந்து இயக்குதல்

**வினா 6738—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளத்திலிருந்து ஆண்டிப்பட்டி, பூலான்குளம், கோவிலூற்று, மைலப்புரம், ஆவுடையனூர், மேல அரியப்புரம், திரவிய நகர், தென்காசி, குற்றாலம் வழியாக செங்கோட்டைக்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலியிலிருந்து வினாவில் கேட்டுள்ள ஆலங்குளம், ஆண்டிப்பட்டி, பூலான்குளம், கோவிலூற்று, மைலப்புரம், ஆவுடையனூர் மேல் அரியப்புரம், திரவியநகர் ஆகிய ஊர்கள் வழியாக தென்காசிக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி-ஐச் சார்ந்த புறநகர் பேருந்து ஒன்று நாளொன்றுக்கு 4 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகிறது. மேலும், தென்காசியிலிருந்து குற்றாலம் வழியாக செங்கோட்டைக்கு ஏராளமான பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, மேற்சொன்ன பேருந்துகளைப் பயன்படுத்தி ஆலங்குளத்திலிருந்து கோரிக்கை வழித்தடத்தில் செங்கோட்டை செல்வதற்கு தற்போது பேருந்து வசதி இருக்கின்றது. தற்போது இயக்கப்படும் பேருந்திலேயே பயணிகள் விகிதாச்சாரம் மிகவும் குறைவாக உள்ளது.



(ஆ) எனவே, புதிய பேருந்து இயக்க வேண்டிய நிலைமை நிலவவில்லை.

24—

## எல்.எஸ்.எஸ். பேருந்துகளை இயக்குதல்

**வினா 14048—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசியிலிருந்து மதுரை செல்ல தமிழ்நாடு அரசு பேருந்து கோட்டம் 5-ன் மூலம் வரையறுக்கப்பட்ட (எல்.எஸ்.எஸ்.) நிறுத்தங்கள் கொண்ட பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை-தென்காசி வழித்தடத்தில் அனைத்து ஊர்களிலும் பயணிகள் பேருந்துகளில் ஏறி இறங்கி வருவதாலும், மதுரையிலிருந்து தென்காசிக்கு நேரடி பயணிகள் எண்ணிக்கை குறைவாகவே உள்ள காரணத்தினாலும் எல்.எஸ்.எஸ். பேருந்து இயக்கும் அவசியம் எழவில்லை.

25—

## புதிய பேருந்துகள் விவரம்

**வினா 14654—திரு. டி.சி. விஜயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக வரவு-செலவு திட்டத்தின் கீழ் போக்குவரத்துத் துறைக்கு 5,000 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதுவரை எத்தனை பேருந்துகள் விடப்பட்டுள்ளன?

[1999 ஏப்ரல் 1

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

1996-97-ல் 2176 புதிய பேருந்துகள் வாங்கப்படும் என்று அறிவிப்பு செய்யப்பட்டது. 1997-98 ஆம் ஆண்டில் 3600 பேருந்துகள் வாங்க வேண்டும் என்று அரசு அறிவித்திருந்தது. மேலும், 1998-99 ஆம் ஆண்டில் 3600 பேருந்துகள் வாங்கப்படும் என்று அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆக மூன்றாண்டுகளுக்குமாக சேர்த்து அறிவிக்கப்பட்டிருந்த 9376 பேருந்துகளில் இதுவரை 7174 புதிய பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன.

26—

**மோட்டார் விபத்து வழக்குகள் தீர்ப்பாயம் அமைத்தல்**

**வினா 19709—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களை உள்ளடக்கிய சேலத்தில் தனியே ஒரு மோட்டார் விபத்து வழக்குகள் தீர்ப்பாயம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இல்லை.

27—

**பேருந்துகள் செப்பனிடல்**

**வினா 20465—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தமிழ்நாடு அரசு பேருந்து பணிமனையில் உள்ள அனைத்து பேருந்துகளும் மிகவும் பழுதடைந்துள்ளதால், போர்க்கால அடிப்படையில் அவற்றைச் செப்பனிட அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1999 ஏப்ரல் 1]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மிகவும் பழுதடைந்த பேருந்துகளுக்கு பதிலாக ஓமலூர் கிளைக்கு புதிதாக நகரப் பேருந்துகள் 4-ம், மேலும் கூண்டுகள் முழுவதுமாக பழுது சீர்செய்யப்பட்ட நகரப் பேருந்துகள் 8-ம் 1998-99 ஆம் ஆண்டில் இயக்கப்பட்டுள்ளன.

28—

**அரசுப் பேருந்துகளின் 'டைமிங்' மாற்றி அமைத்தல்**

**வினா 20950—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் பேருந்துகள் ஆதாயம் பெறும் வகையில் அரசுப் பேருந்துகளின் 'டைமிங்' அமைக்கப்படுவதால், நஷ்டம் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை ஒழுங்குபடுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மோட்டார் வாகன விதி 248-ன்படி, பேருந்து உரிமையாளர் சங்கங்களுக்கும், அரசு கழகங்களுக்கும் அறிக்கை அனுப்பப்பட்டு, இருதரப்பினருடனும், வட்டாரப் போக்குவரத்து அலுவலர்/மாநிலப் போக்குவரத்து அதிகாரி ஆகியோர்களது முன்னிலையில் விவாதித்த பின்னரே, கால அட்டவணை நிர்ணயம் செய்யப்படுகிறது. எனவே, தனியார் பேருந்துகளுக்கு ஆதாயம் பெறும் வகையில் அரசு பேருந்துகளுக்கு 'டைமிங்' அமைக்கப்படுவதால் நஷ்டம் ஏற்படுகிறது என்பது பொருந்தாது.

[1999 ஏப்ரல் 1

29—

**கூடுதல் நகரப் பேருந்து இயக்குதல்**

**வினா 21055—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தர்மபுரியிலிருந்து கெட்டுஅள்ளி செல்ல கூடுதல் நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் தடம் எண் 34-ன் மூலம் தர்மபுரியிலிருந்து கெட்டுஅள்ளிக்கு 8 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இதில் பயணிகளின் கொள்ளளவு 67% இருப்பதால் மேற்படி நடைகளே கெட்டுஅள்ளி கிராமத்திற்கு போதுமானதாக கருதப்படுகிறது. எனவே தர்மபுரியிலிருந்து கெட்டுஅள்ளிக்கு கூடுதலாக நகரப் பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.

30—

**புதிய பேருந்து இயக்குதல்**

**வினா 22532—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூரிலிருந்து பூதலூர் செல்லும் நகரப் பேருந்து தடம் எண் 50 பழுதடைந்துள்ளதால் அதற்குப் பதிலாக புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர்-பூதலூர் தடத்தில் தற்போது லேலண்ட் 93 மாடல் நல்ல நிலையிலுள்ள பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய பேருந்து இயக்கும் அவசியம் எழவில்லை.



1999 ஏப்ரல் 1]

31—

**நுழைவு தோரண வாயில் அமைத்தல்**

**வினா 21232—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை திருவான்மியூரில் கிழக்கு கடற்கரைச் சாலை நுழைவு தோரண வாயில் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பசும்பொன் திரு. தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை திருவான்மியூரில் கிழக்கு கடற்கரை சாலை நுழைவு தோரண வாயில் அமைப்பதற்கான கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

32—

**பூசாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்குதல்**

**வினா 22567—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறநிலையத் துறையின்கீழ் கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெறும் பூசாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) அறநிலையத்துறை ஆளுகையின் கீழ் உள்ள திருக்கோயில்களில் தொடர்ந்து 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயது முடிந்து ஓய்வுபெற்ற ஏழ்மை நிலையில் உள்ள அர்ச்சகர்களுக்கு

(சைவம், வைணவம்) ஓய்வூதியம் வழங்க அரசாணை எண் 346, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 1-10-92-ல் நபர் ஒருவருக்கு ரூ. 300/- வீதம் 500 நபர்களுக்கு அனுமதிக்கப்பட்டது. அதன்பிறகு அரசாணை எண் 333, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 4-9-1996-ன்படி ஓய்வூதியத் தொகை ரூ. 300/-லிருந்து ரூ. 500/- ஆக உயர்த்தி வழங்க அனுமதிக்கப்பட்டது. மேலும் அரசாணை (நிலை) எண் 127, தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள் 15-5-98-ன்படி மேலும் 99 நபர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அனுமதிக்கப்பட்டது.

(ஆ) இத்திட்டத்தின் கீழ் இதுவரை 576 (சைவம் 423, வைணவம் 153) நபர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 500/- வீதம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

**33—**

## விவசாயக் கிணறுகளை ஆழப்படுத்துதல்

**வினா 20429—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் மட்டும் 1986-87 ஆம் ஆண்டில் விவசாயக் கிணறுகளை ஆழப்படுத்த கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட கடன் எவ்வளவு?

(ஆ) அதில் எடப்பாடி தொகுதிக்கு வழங்கப்பட்ட தொகை எவ்வளவு? எத்தனை கிணறுகள் எடப்பாடி தொகுதியில் ஆழப்படுத்தப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் மட்டும் 1986-87-ம் ஆண்டில் விவசாயக் கிணறுகளை ஆழப்படுத்த கூட்டுறவு நிலவள வங்கி மூலம் மொத்தம் 52 கடன் மனுக்கள் பெறப்பட்டு, அதற்கான கடன் தொகை ரூ. 5.31 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.





(ஆ) எடப்பாடி, தொகுதியில் 1986-87-ஆம் ஆண்டில் மூன்று கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. மூன்று கிணறுகள் ஆழப்படுத்த ரூ. 0.21 இலட்சமும், புதிய கிணறு வெட்டுவதற்கு, 1 கிணற்றுக்கு ரூ. 0.40 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

**34—**

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

**வினா 20486—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம், பட்டுக்கோட்டை, திருவோணம் ஆகிய ஒன்றியங்களில் உள்ள விவசாயிகளுக்கு கூட்டுறவு வேளாண்மை வங்கிகளின் மூலம் ஆழ்குழாய் கிணறு அமைக்க, கடன் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டத்தில் பேராவூரணி, சேதுபாவாசத்திரம், பட்டுக்கோட்டை மற்றும் திருவோணம் பகுதிகளில் பாசனக் குழாய்கள் அமைக்க அனைத்து தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் சாதகமாக அமைந்திருந்தும் மின் இணைப்பு கிடைப்பதில் அதிக காலதாமதம் ஏற்படுவதால் பாசனக் குழாய்கள் அமைக்கும் திட்டத்திற்கு விவசாயிகளிடமிருந்து போதிய வரவேற்பில்லை என வங்கிகள் மூலம் அறியப்பட்டுள்ளது. இருப்பினும், விவசாயிகள் நலன் கருதி இத்திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கிட 1998-99 ஆம் நிதியாண்டுக்கு ரூ. 21.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**35—**

## மண்ணெண்ணெய் பங்க்குகள் விவரம்

**வினா 21815—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 ஏப்ரல் 1

(அ) 1997-98 ஆம் ஆண்டு மண்ணெண்ணெய் பங்க்குகள் (Bunks) மூலம் விநியோகம் செய்ய சேலம் மாவட்டத்தில் எத்தனை பங்குகள் (Bunks) திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

(ஆ) 1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிய எத்தனை மண்ணெண்ணெய் பங்க்குகள் சேலம் மாவட்டத்தில் திறக்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) அரசாணை (நிலை) எண் 125, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 6-5-97-ன்படி 20 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதில் சேலம் மாவட்டத்தில் (1) சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை சத்திரம் (2) சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் பள்ளப்பட்டி ஆகிய இரு இடங்களில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

இவை தவிர முதற்கட்டமாக 1997-98 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் 100 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் திறக்க திட்டமிடப்பட்டு இதில் சேலம் மாவட்டத்தில் கீழ்க்கண்ட 5 இடங்களில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

1. கொண்டாலம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி
2. நரசிங்கபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி
3. வாழப்பாடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி
4. காரிப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி
5. பெத்தநாயக்கன்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி.

கீழ்க்கண்ட 2 இடங்களில் கட்டுமானப் பணி முடிந்து திறக்க தயார் நிலையில் உள்ளது:



1999 ஏப்ரல் 1]

1. ஆவணிப்பேரூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி
2. கருப்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி

இவை தவிர மேலும் இரண்டாம் கட்டமாக 1998-99 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் 200 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவற்றில் இதுவரை மாநிலம் முழுவதும் 123 இடங்களில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதில் சேலம் மாவட்டத்தில் கீழ்க்கண்ட 12 இடங்களில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது:

1. வெள்ளாளப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி
2. பி.என். பட்டி வீரகல் புதூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி.
3. ஓமலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி
4. அம்மாபேட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி
5. ஜாகீர் அம்மாப்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி.
6. உடையார்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி
7. மேட்டூர் அரசு ஊழியர்கள் கூட்டுறவு பண்டகசாலை
8. ஆத்தூர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை
9. பி.காளிப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி
10. மல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி
11. அய்யம்பெரும்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி
12. ஆரகளூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி

(ஆ) 1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிய சேலம் மாவட்டத்தில் 2 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

36—

## ஆவின் சார்பாக லாரிகள் ஏற்பாடு செய்தல்

**வினா 21170—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் பால் விநியோகத்திற்கு தனியார் லாரிகள் பயன்படுத்துவதை அரசு கைவிடுமா?

(ஆ) ஆவின் சார்பாக லாரிகள் ஏற்பாடு செய்ய முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) சென்னை மாநகரத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 8.00 இலட்சம் லிட்டர் பால் 504 பால் பூத்துக்கள், 35 பாலகங்கள், 207 தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள், 296 பால் தொட்டிகள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. இது தவிர அரசு நிறுவனங்கள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் சிறப்பு விழாக்கள், திருமண விழாக்கள் ஆகியவற்றுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தானியங்கி பால் வழங்கும் நிலையங்களுக்கும், பால் தொட்டிகளுக்கும் பால் டேங்கர்கள் மூலம் பால் விநியோகம் செய்யப்படுகிறது. பால் பூத்துக்கள், பாலகங்கள், நிறுவனங்கள் மற்றும் சிறப்பு வைபவங்களுக்கான பால் மாதவரம் பால் பண்ணை, அம்பத்தூர் பால் பண்ணை மற்றும் சோழிங்கநல்லூர் பால் பண்ணைகளிலிருந்து தினசரி காலையும், மாலையும் 75 பால் வழித்தடங்கள் மூலம் பால்பை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதற்காக 78 தனியார் லாரிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த பால் விநியோகம் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட பால் வண்டிகளின் மூலம் தினசரி காலையும், மாலையும் நடைபெறுகிறது. இந்த 75 பால் வழித்தடங்களுக்கு அனுப்பப்படும் வாகனங்கள் வாங்குவதற்கான நிதி, எரிபொருள் செலவுகள், வண்டி பராமரிப்பு செலவுகள் இந்த வழித்தடங்களுக்கான தனியாக வாகன ஓட்டுநர்கள் மற்றும் வாகனம் சுத்தம் செய்யும் பணியாளர்கள் நியமிக்கப்பட ஆகும் செலவுகள், இப்பணியாளர்களின் சம்பளம், வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் இதர செலவுகள், மேலும் எதிர்பாராத தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் ஆகியவற்றை கருத்தில் கொள்ளும்போது பால் விநியோகம் செய்ய தனியார் வாகனங்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவதே தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கு இலாபகரமாக உள்ளது. எனவே, சென்னை நகரில் பால் விநியோகத்திற்கு தனியார் லாரிகள் பயன்படுத்துவதை அரசு கைவிடுவதற்கான கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.



(ஆ) பால் விநியோகம் செய்ய லாரிகள் கோரி ஒப்பந்த அறிவிப்பு செய்தித் தாள்கள் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டு ஒப்பந்த புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையில் பெறப்பட்டு, நிர்வாக இயக்குநரால் நியமிக்கப்பட்ட அலுவலக உயர் அதிகாரிகளின் முன்னிலையில் பிரித்து சரிபார்க்கப்பட்டு கொள்முதல் குழு மூலம், இவ்வாகனங்கள் இரண்டு ஆண்டு கால ஒப்பந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. வாகன உரிமையாளர்களிடம் பால் வழங்குதலை ஒப்படைப்பதற்கு முன்னதாகவே சில அடிப்படை ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு பால் எந்தவித தங்கு தடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்சொன்ன காரணங்களால், சென்னை நகரில் பால் விநியோகம் செய்ய ஆவின் சார்பாக லாரிகள் ஏற்பாடு செய்யும் கருத்துரு தற்சமயம் ஏதுமில்லை.

37—

## விவசாயத் தொழிலாளர்களுக்கென தனி இயக்குநரகம் அமைத்தல்

**வினா 11783—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக விவசாயத் தொழிலாளர்களுக்கென தொழிலாளர் நலத் துறையின் கீழ் தனி இயக்குநரகம் ஒன்று உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான வழிவகைகளை அரசுக்கு பரிந்துரை செய்யும் பொருட்டு முன்னாள் நிலச்சீரமைப்பு இயக்குநர் மற்றும் ஆணையர்,

[1999 ஏப்ரல் 1

திரு. பி. கோலப்பன் அவர்கள் தலைமையின்கீழ் [அரசாணை (நிலை) எண் 126, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 27-8-97] ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழு தனது அறிக்கையை 17-2-98-ல் அரசுக்கு சமர்ப்பித்துள்ளது. அக்குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. அக்குழு தெரிவித்துள்ள 43 கொள்கை பரிந்துரைகளில் விவசாயத் தொழிலாளர்களுக்கென தனித்துறை/வாரியம் அமைக்கலாம் என்ற பரிந்துரையும் ஒன்றாகும்.

**38—**

### புதிய சாலையாக மாற்றுதல்

**வினா 20902—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியத்திற்குட்பட்ட பழைய இண்டூர் முதல் நாகர்கூடல் வரையிலான வனத்தில் செல்லும் இணைப்புச் சாலையை வனத் துறையின் மூலம் புதிய சாலையாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

பழைய இண்டூர் முதல் நாகர்கூடல் வரை செல்லும் பாதையின் மொத்த தூரம் 6.5 கி.மீ. ஆகும். இதில் நாகர்கூடல் காப்புக் காட்டினுள், சுமார் 1.0 கி.மீ. நீளத்திற்கு குதிரைப் பாதையாக (Briddle Path) கற்களால் படிகள் போன்று சுமார் 4'-0" முதல் 5'-0" அகலத்தில் அமைந்துள்ளது.

நாகர்கூடல் கிராமத்திலிருந்து தர்மபுரி மற்றும் சேலம் செல்ல கிழக்கே பாலஜங்கமனஹள்ளி வழியாகவும், தர்மபுரி செல்ல மேற்கே புதூர் வழியாகவும், பெண்ணாகரம் செல்ல பழைய இண்டூர் அகரம் வழியாகவும் தார்ச்சாலை உள்ளது. பழைய இண்டூரிலிருந்து தர்மபுரி மற்றும் பெண்ணாகரம் செல்ல அகரம் வழியாகவும் தார்ச்சாலைகள் உள்ளன. மேற்கூறிய காரணங்களால் பழைய இண்டூர் முதல் நாகர்கூடல் வரை நாகர்கூடல் காப்புக் காட்டினூடே இணைப்புச் சாலையை வனத் துறை மூலம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.



1999 ஏப்ரல் 1]

**39—**

### புதிய சாலை அமைத்தல்

**வினா 20906—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியத்திற்குட்பட்ட பரிகம் எல்லை முதல் மலையூர் காடு செல்லும் சாலை வரை வனத் துறையின் மூலம் புதிய சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) பரிகம் எல்லை முதல் மலையூர் காடு வரை செல்லும் பாதை — பரிகம் 'பி' காப்புக்காடு உரிமைப்பாதையாக அறிவிக்கப்பட்டுள்ளது. காப்புக்காட்டினூடே 3 கி.மீ. நீளத்திற்கும், ஒரு மீட்டர் அகலத்திற்கும் செல்லும் இப்பாதையின் இருபுறமும் வனவளர்ப்புத் திட்டத்தின் மூலம் தோட்டம் எழுப்பப்பட்டுள்ளது இப்பாதையை மக்கள் யாரும் அதிகமாக பயன்படுத்துவதில்லை. மேற்காணும் பாதையை விரிவுபடுத்தி அமைக்க மத்திய அரசின் முன் அனுமதி பெறவேண்டும். இருந்தபோதிலும் மலையூர் காடு மக்கள், அவர்கள் விளைபொருட்களை தர்மபுரிக்கு கொண்டு செல்ல தற்போது மூலக்காடு-சோழியானூர் (தார்ச்சாலை) வழியாக மேச்சேரி மற்றும் பெண்ணாகரம் செல்ல பாதை உள்ளது. அங்கிருந்து அவர்கள் தர்மபுரி செல்லலாம். எனவே புதிய சாலை அமைக்க அவசியம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**40—**

### புதிய மண் சாலை அமைத்தல்

**வினா 21165—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, எற்றபையனஹள்ளி ஊராட்சி, கெட்டுஅள்ளி முதல் ஏர்ரப்பட்டி

[1999 ஏப்ரல் 1

(நான்காவது அணை) வரை வனத் துறை மூலம் புதிய மண்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட எற்றபையனஹள்ளி ஊராட்சியில் அமைந்துள்ள கெட்டுஹள்ளி முதல் எர்ரப்பட்டி (நான்காவது அணை) வரை உள்ள சாலைக்கு காப்புக் காட்டிற்குள், உரிமைப்பாதை அனுமதி ஏதும் அளிக்கப்படவில்லை. எனினும் காப்புக் காட்டினுள் கால்நடை தடம் ஒன்று உள்ளது. இக்கால்நடை பாதையினை யாரும் உபயோகிப்பதில்லை. கெட்டுஹள்ளி கிராம மக்கள் தர்மபுரி மற்றும் பெண்ணாகரம் செல்ல பழைய இண்டூர் வழியாகவும் சேலம் செல்ல நாகர்கூடல்-பாலஜங்கமனஹள்ளி வழியாகவும் சாலைகள் உள்ளது. எர்ரப்பட்டி மக்கள் தர்மபுரி மற்றும் சேலம் செல்ல நாகர்கூடல்-பாலஜங்கமனஹள்ளி வழியாக சாலை உள்ளது. சாலை அமைக்க வேண்டியிருப்பின் வனப்பாதுகாப்பு சட்டத்தின்படி மத்திய அரசின் முன் அனுமதி பெறவேண்டும். மேற்கூறிய காரணங்களால் பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட ஏற்றபையனஹள்ளி ஊராட்சியில் உள்ள கெட்டுஹள்ளி முதல் எர்ரப்பட்டி (நான்காவது அணை) வரை வனத் துறை மூலம் புதிய மண்சாலை அமைக்க அவசியம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

41—

### புதியதாக மலைச்சாலை அமைத்தல்

**வினா 21473—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தொகுதி, சிறுமலை-தென்மலை-தென்குறிஞ்சி மலைச்சாலை புதியதாக போடப்படுமா?

(ஆ) ஆம் எனில், ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?



1999 ஏப்ரல் 1]

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிறுமலை-தென்மலைச் சாலையின் மேம்பாட்டு பணிக்காக, திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரால் மாவட்ட பரவலாக்க திட்டத்தின்கீழ் 1997 மார்ச் மாதத்தில் ரூ. 5.57 இலட்சங்களும், ஆகஸ்ட் 1997-ல் ரூ. 2.0 இலட்சங்களும் வழங்கப்பட்டு, 1997-98-ல் 1.60 கி.மீ. நீள சாலையின் இருபுறமும் முட்புதர்கள் வெட்டுதல், மழை நீர் ஓடை அமைத்தல், சாலையின் குறுக்கே மழை நீரினால் மண் அரிப்பை தடுக்க பேவிங் (Paving) செய்தல் மற்றும் சாலை சரிவுகளில் ஏற்படும் அரிப்பினை தடுக்க பாதுகாப்பு பணிகள் போன்ற மேம்பாட்டு பணிகள், வனப்பொறியியல் கோட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1997-98-ம் ஆண்டில் இச்சாலைக்கு 1.0 கி.மீ. நீளத்திற்கு கருங்கல் கப்பி அமைத்து தார்ச்சாலை அமைக்கும் பணிக்கும், தரைப்பாலம் ஒன்று அமைக்கவும் ரூ. 3.45 இலட்சத்திற்கு மதிப்பீடு ஒப்பளிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகள் தொடங்கப்பெற்று முடிவுறும் தருவாயில் உள்ளது.

42—

### சத்துணவு மையம் அமைத்தல்

**வினா 14290—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், சிவநாடாலூர் ஊராட்சி, ஐயதூரில் சத்துணவு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1999 ஏப்ரல் 1

43—

### கால்நடை மருத்துவமனை கட்டுதல்

**வினா 20339—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளம் மேல்பாதி ஊராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனை கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இல்லை.

44—

### கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம்

**வினா 20353—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியம், மானத்தாள் ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்குப் புதியதாக கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நிலம் மாறுதல் செய்யப்பட்டு ஆணை பெறப்பட்டதும் கட்டடம் கட்ட அரசு நிதி அல்லது மாவட்ட நிதியிலிருந்து பெற்ற பின்பு நடவடிக்கை எடுக்கப்படும்.



1999 ஏப்ரல் 1]

45—

### கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா 20980—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம், ஒன்றியம், நெருப்பூர் கிராமம் மற்றும் பக்கத்து கிராமங்களில் அதிகமாக கால்நடைகள் வளர்ப்பதால் நெருப்பூரில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது அரசிடம் எவ்வித செயற்குறிப்புமில்லை.

46—

### கால்நடை மருந்தகங்களில் இரவு நேரக் காவலர்களை நியமித்தல்

**வினா 20985—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கால்நடை மருந்தகங்களில் இரவு நேரக் காவலர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[1999 ஏப்ரல் 1

47—

**ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் கழிப்பறை வசதி செய்தல்**

**வினா 4465—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மீனம்பாக்கம், நாகல்கேணி ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் கழிப்பறை வசதி இல்லாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னை, மீனம்பாக்கம் ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியில் இரண்டு அறைகள் கொண்ட கழிப்பறைக் கட்டடம் ஒன்று உள்ளது. மாணவிகளுக்கு தனியாக கழிப்பறை வசதி இந்த ஆண்டு கட்டிக் கொடுக்கப்படும். நாகல்கேணி ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிக்கு கழிப்பிட வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

48—

**ஆதிதிராவிடர் நலப் பள்ளிக்கு வசதிகள் செய்தல்**

**வினா 12583—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, எட்டிகுட்டபட்டி ஊராட்சியிலுள்ள ஆதிதிராவிடர் நலப் பள்ளிக்கு கூடுதல் கட்டடமும், சுற்றுச்சுவரும் கட்டிக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா?



1999 ஏப்ரல் 1]

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, எட்டிகுட்டபட்டி ஊராட்சியிலுள்ள ஆதிதிராவிடர் நலப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம், சுற்றுச்சுவர் கட்டிக் கொடுப்பது நிதிநிலையின் காரணமாக நடப்பு ஆண்டில் இயலவில்லை.

49—

**இலவச விட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா 13084—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெள்ளக்கோவில் தொகுதி, காங்கேயம் வட்டம் தீர்த்தாம்பாளையம் மற்றும் அகலாப்பாளையம் புதூரிலுள்ள மந்தை புறம்போக்கை நத்தமாக மாற்றி ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

காங்கேயம் வட்டம், வெள்ளக்கோவில் கிராம மஜரா தீர்த்தாம்பாளையம் ரீ.ச. 551/4 நத்தம் புறம்போக்கு ஆகும். இதில் நெடுங்காலமாக வீடு கட்டி வசித்து வந்த 85 ஆதிதிராவிடர்களுக்கு தாராபுரம் வருவாய்க் கோட்ட அலுவலர் 12-01-1998-ல் வழங்கப்பட்ட அனுமதியின் பேரில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும், மந்தை புறம்போக்கிலுள்ள ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க, இப்புலம், முதல் நோக்கில் ஆட்சேபனை உள்ளது என்பதால், இது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

50—

**பட்டா வழங்க நடவடிக்கை**

**வினா 18519—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், குருக்கப்பட்டி ஊராட்சியிலுள்ள அருந்ததியர் காலனிக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாராமங்கலம் தொகுதி. குருக்கபட்டி கிராம அருந்ததியர் காலனியில் 40 பயனாளிகளுக்கு 13-4-1998-ல் ஓமலூர் ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் மூலம் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு விட்டன.

## பத்தாவது பட்டியல்

1—

**நபார்டு திட்ட ஒதுக்கீடு விவரம்**

**வினா 9098—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் நபார்டு திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தேசிய வேளாண்மை வங்கியில் செயல்படுத்தப்படும் அடிப்படை ஊரக வசதி வளர்ச்சி நிதித் திட்டம் 1996-97-ம் ஆண்டு



முதல் தமிழக அரசால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் ஊரகச் சாலைகள், மாவட்டச் சாலைப் பணிகள் மற்றும் நீர்ப்பாசன திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. 1997-98 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்திற்கு நபார்டு திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 2 கோடியே 19 இலட்சத்து 46 ஆயிரமாகும்.

2—

**மாணவ மாணவியருக்கு இட ஒதுக்கீடு**

**வினா 12921—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமப்புற மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் 15 சதவிகிதம் இட ஒதுக்கீடு அளித்துள்ளது போன்று பேரூராட்சி பகுதிகளில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அவ்வாறு செய்ய இயலுமா என்பது ஆய்வில் உள்ளது.

3—

**ஏமாற்றப்பட்ட மாணவர்களுக்கு அரசு உதவி**

**வினா 14713—திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆசிரியர் பயிற்சி என்ற பெயரால் ஏமாற்றப்பட்ட 2800-க்கு மேற்பட்ட மாணவர்கட்கு அரசு உதவி செய்ய முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

உயர்நீதிமன்ற தீர்ப்புப்படி இவ்வகை மாணவர்களுக்கு எந்தவித பரிகாரமும் செய்ய இயலாதபடியால், இவ்வகை மாணவர்களுக்கு

நிவாரணம் அளிக்கும்வகையில், முதற்படியாக அங்கீகாரம் இரத்து செய்யப்பட்ட தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்று, இறுதித்தேர்வு எழுதி, சான்றிதழ் பெறாதவர்களுக்கு அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் ஆசிரியர் பயிற்சிக்கான மொத்த இடங்களில் 30 விழுக்காடு 1998-99 ஆம் ஆண்டு முதல் ஒதுக்கீடு செய்யப்பட்டு மாணவர் சேர்க்கை செய்யப்பட்டுள்ளது.

4—

## ஆசிரியர் பயிற்சிப் பள்ளி அமைத்தல்

**வினா 17842—திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் மாவட்டத்தில் அரியலூரில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

பெரம்பலூர் மாவட்டம், கீழப்பழூவூரில் புதிதாக ஒரு மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனம் தொடங்க அரசு அனுமதித்துள்ளது. எனவே, அரியலூரில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

5—

## கிராமப்புற மாணவ, மாணவியருக்கு இட ஒதுக்கீடு

**வினா 16042—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொறியியல் கல்லூரிகளில் கிராமப்புற மாணவ, மாணவியருக்கு 15 சதவீத இடங்கள் ஒதுக்கீடு என்பதில் உள்ள சிரமங்களை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனை மாற்றி அமைக்க அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

பொறியியல் கல்லூரிகளில் கிராமப்புற மாணவ, மாணவியருக்கு 15 சதவீத இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதில் சிரமங்கள் ஏதுமில்லை. கிராமப்புற மாணவ, மாணவியரின் பயன் கருதியே செய்யப்பட்டுள்ளது. எனினும், சிரமங்கள் எதுவும் இருப்பதாக யாரும் அரசுக்குத் தெரிவிக்கவில்லை.

6—

## ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்குதல்

**வினா 17873—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, நடுவூர் ஊராட்சியில் உள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்றித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசாணை நிலை எண் 225, பள்ளிக் கல்வித் துறை, நாள் 11-6-1998-ன்படி தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, நடுவூர் ஊராட்சியில் உள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

7—

## பல்தொழில்நுட்பப் பயிலகம் அமைத்தல்

**வினா 19271—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியிலும் மற்றும் மகுடஞ்சாவடியிலும் ஒரு அரசினர் பல்தொழில்நுட்பப் பயிலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

எடப்பாடி தொகுதியை உள்ளடக்கிய சேலம் மாவட்டத்தில் தற்போது ஓர் அரசு மானியம் பெறும் பாலிடெக்னிக்கும் ஆறு சுயநிதி பாலிடெக்னிக்குகளும் (மொத்தம் ஏழு பாலிடெக்னிக்குகள்) இயங்கி வருகின்றன. அரசின் நிதி நெருக்கடி காரணமாக புதிய பயிலகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

8—

**பிற்பட்ட வகுப்பிற்கு விதிவிலக்கு அளித்தல்**

**வினா 20678—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1998 ஆம் நிதியாண்டில் தொழிற் கல்விக்கான நுழைவுத் தேர்வு எழுதுவதன் மூலம் விண்ணப்பக் கட்டணம், பதிவுக் கட்டணம் செலுத்துவதில் மிகமிக பிற்பட்ட வகுப்பினருக்கு விதிவிலக்கு அளிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1998 ஆம் நிதி ஆண்டில் தொழில் கல்விக்கான நுழைவுத் தேர்வு எழுதிய மிகமிக பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு விண்ணப்பக் கட்டணம், பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படவில்லை.

9—

**சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல் விவரம்**

**வினா 21990—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களைக் குறைக்க வழி செய்து வேட்பாளர்களின் தேர்தல் செலவை அரசு ஏற்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, இந்தியக் குடிமக்கள் அனைவரும் நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிட தகுதியுடையவராவர். முன்பு, வேட்பாளர் செலுத்த வேண்டிய தேர்தல் வைப்புத் தொகை மக்களவைக்கு ரூ. 500-ம், சட்டப் பேரவைக்கு ரூ. 250-மாக, இருந்தது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த வேட்பாளர்கள் இதில் பாதித் தொகையை வைப்புத் தொகையாகச் செலுத்த வேண்டும். போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் பொருட்டு தேர்தல் வைப்புத் தொகை கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| மக்களவைத் தொகுதியிலிருந்து போட்டியிட | — | ரூ. 10,000 |
| சட்டமன்றத் தொகுதியிலிருந்து போட்டியிட | — | ரூ. 5,000 |

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பினர்:

| | | |
|---|---|---|
| மக்களவைத் தொகுதியிலிருந்து போட்டியிட | — | ரூ. 5,000 |
| சட்டமன்றத் தொகுதியிலிருந்து போட்டியிட | — | ரூ. 2,500 |

அங்கீகரிக்கப்பட்ட கட்சியின் வேட்பாளர் தவிர, பிறர் தேர்தலில் போட்டியிட வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கு அந்தத் தொகுதியைச் சார்ந்த 10 வாக்காளர்கள் முன்மொழிய வேண்டுமென்றும் வரையறுக்கப்பட்டுள்ளது.

(2) வேட்பாளர்கள் தேர்தல் செலவினங்களை அரசு ஏற்றுக் கொள்ளலாமா என்ற கருத்து குறித்து கொள்கையளவில் முடிவு எடுக்க வேண்டி, மத்திய அரசு, முன்னாள் மத்திய உள்துறை அமைச்சர் திரு. இந்திரஜித் குப்தா அவர்கள் தலைமையில் 7 உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை நியமித்தது. இந்தக் குழு தனது அறிக்கையை 14-01-1999 அன்று மத்திய அரசிடம் சமர்ப்பித்துள்ளதாக பத்திரிகைச் செய்தி வெளியாகியுள்ளது. இதுகுறித்து கொள்கையளவில் மத்திய அரசு முடிவு எடுக்க வேண்டும். தமிழக அரசு தனியே எந்த முடிவும் எடுக்க இயலாது.

[1999 ஏப்ரல் 1

10—

**மூலிகைப் பண்ணைகள் விவரம்**

**வினா 22068—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தமிழகத்தில் எந்தெந்த இடங்களில் அரசு மூலிகைப் பண்ணைகளை அமைத்துள்ளது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்திற்கு, நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையிலும், சென்னையில் அரும்பாக்கத்திலும் மூலிகைப் பண்ணைகள் உள்ளன.

11—

**அரியலூரைத் தனி வட்டமாக அறிவித்தல்**

**வினா 17553—திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதிக்குட்பட்ட திருமானூர், கீழப்பழுவூர், ஏலக்குறிச்சி ஆகிய மூன்று வருவாய்த் தலைமையிடங்களையும் இணைத்து, திருமானூரைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டமாக அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.



1999 ஏப்ரல் 1]

12—

**சாக்கடை கட்ட நடவடிக்கை**

**வினா 15104—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி மெயின் ரோடில் விரைவில் சாக்கடை கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி பேரூராட்சி எல்லையில் செல்லும் தேசிய நெடுஞ்சாலை எண் 7 சுமார் 4 அடி உயரத்திற்கு சாலை உயர்த்தப்பட்டுள்ளதால், சாலையில் உள்ள கடைகள் மற்றும் வீடுகள் பள்ளத்தில் இருப்பதால், மழைநீர் வெள்ளம் பெருக்கெடுத்து கடைகள் மற்றும் வீடுகளில் வெள்ள நீர் சென்று தேக்கம் ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்க அங்கு தடுப்புச் சுவர் 1 கி.மீ. நீளத்திற்குக் கட்ட வேண்டும். அதற்கு 15 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. அச்சாலை தேசிய நெடுஞ்சாலை துறையைச் சார்ந்தது என்பதால் தடுப்புச் சுவர் கட்ட மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்த பின்னர்தான் பணிகள் செய்ய இயலும்.

13—

**மருத்துவமனைக்குப் பாதை அமைத்தல்**

**வினா 15840—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோமவந்தான் தொகுதி, வாடிப்பட்டி அரசு பொது

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி பேரூராட்சியில் உள்ள அரசு மருத்துவமனைக்குச் சாலை அமைக்க வேண்டி இப்பொருள் பேரூராட்சி மன்றத்தில் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளது. 31-3-1999-க்குள் உரிய நெறிமுறைகள் கடைபிடிக்கப்பட்டு அரசு மருத்துவமனைக்குச் சாலை அமைக்கப்படும்.

14—

### பள்ளிகளைப் பராமரித்தல்

**வினா 16305—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கோட்டை நகராட்சியின் பராமரிப்பில் உள்ள பள்ளிகளைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செங்கோட்டை நகராட்சியின் கட்டுப்பாட்டில் நகராட்சிப் பள்ளிகள் எதுவும் இல்லை. அதனால் கேள்விக்கு இடமில்லை.

15—

### தொலைக்காட்சி அறைக்கு மின் இணைப்பு

**வினா 16343—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, புக்கம்பட்டி காலனியிலுள்ள தொலைக்காட்சிப் பெட்டி அறைக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?





(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, புக்கம்பட்டி காலனியிலுள்ள தொலைக்காட்சிப் பெட்டி அறையானது ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1995-96-ல் கட்டப்பட்டு தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளது. அவ்வறையினைப் பழுது நீக்கம் செய்து மின் இணைப்பு வழங்குவதற்கு மாநில ஒதுக்கீடு வரப்பெற்றதும் எடுத்துச்செய்ய மேச்சேரி ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

16—

### பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறை கட்டுதல்

**வினா 20975—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், குலும்பிலாபேரி கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்குக் கூடுதலாக வகுப்பறை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், குலும்பிலாபேரி கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடம் ரூ. 2.33 இலட்சம் மதிப்பீட்டில் 1998-99-ம் ஆண்டுக்கான சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்து வேலை மேற்கொள்ளப்பட உள்ளது.

17—

### எண்ணெய், சாராயம் தயாரித்தல்

**வினா 19336—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முந்திரிப் பகுதியின் தாய்ப் பகுதியான வண்ணப் பழங்களிலிருந்து எண்ணெய் மற்றும் சாராயம் தயாரிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

முந்திரி விதைகளிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் திட்டம் மற்றும் பழங்களிலிருந்து சாராயம் காய்ச்சும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

18—

### நெல்விதை பண்படுத்தும் நிலையம் தொடங்குதல்

**வினா 21314—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி கிராமத்தில் நெல்விதை பண்படுத்தும் நிலையத்தைத் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி கிராமத்தில் நெல்விதை பண்படுத்தும் நிலையத்தினைத் தொடங்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை. சேலம் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல் விதைகளைச் சுத்திகரிப்பு செய்யும் பணி மேட்டூர்டேம், டேனிஷ்பேட்டை மற்றும் ஆத்தூர் ஆகிய மூன்று இடங்களிலுள்ள விதைச் சுத்திகரிப்பு நிலையங்களில்



மேற்கொள்ளப்படுகிறது. இந்த விதைச் சுத்திகரிப்பு நிலையங்கள் சேலம் மாவட்டத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவில் உள்ளன. இந்நிலையங்கள் எடப்பாடி பகுதி உட்பட தேவையைப் பூர்த்தி செய்கின்றன.

19—

### வேளாண்மைப் பொறியியல் பணிமனை

**வினா 22072—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பொறியியல் பணிமனைக்குரிய பணிகளைத் தனியாரிடம் கொடுத்து செய்யப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பொறியியல் பணிமனைக்குரிய பணிகளைத் தனியாரிடம் கொடுத்து செய்யப்படுவதில்லை.

(ஆ) வினா எழவில்லை.

20—

### புது வாய்க்கால் அமைத்தல்

**வினா 17248—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி பெரிய ஏரிக்கு 3 கி.மீ. தொலைவிலுள்ள குள்ளம்பட்டி கிழக்குக்கரை வாய்க்காலிலிருந்து உபரி நீர் உள்ள காலத்தில் தண்ணீர் விட்டு நிரப்ப, புது வாய்க்கால் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

[1999 ஏப்ரல் 1

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி பெரிய ஏரிக்கு 3 கி.மீ. தொலைவிலுள்ள குள்ளம்பட்டி கிழக்குக்கரை வாய்க்காலிலிருந்து உபரி நீர் உள்ள காலத்தில் தண்ணீர் விட்டு நிரப்ப புது வாய்க்கால் அமைத்துத் தர இயலாது. ஏனெனில், நில மட்டம் மேற்கண்ட திட்டத்திற்குச் சாதகமாக இல்லை.

**21—**

**ஏரி தூரெடுத்தல்**

**வினா 17260—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், வேம்பனேரியில் உள்ள ஏரியைத் தூர் எடுத்து, கல் கட்டுமானங்களைக் கட்டி பலப்படுத்தி கரையை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் செயல்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேம்பனேரி ஏரி 1998-99 ஆம் நிதி ஆண்டில் எடுத்துக் கொள்ள இயலாத நிலையில் உள்ளது. எனவே, வருகின்ற நிதியாண்டுகளில் சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரையின்பேரில் மேற்கண்ட ஏரியைத் தூர் வார எடுத்துக்கொள்வது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**22—**

**சிறு அணைகள் பற்றிய விவரம்**

**வினா 19575—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் 1997-98 ஆம் ஆண்டில் கட்டப்பட்டு வரும் சிறு அணைகள் எத்தனை?



1999 ஏப்ரல் 1]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**23—**

**நபார்டு திட்ட ஒதுக்கீடு விவரம்**

**வினா 19577—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டு எடப்பாடி, சங்ககிரி வட்டங்களில் நபார்டு திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டு எடப்பாடி, சங்ககிரி வட்டங்களில் நபார்டு திட்டத்தின்கீழ் தொகை ஏதும் ஒதுக்கப்படவில்லை.

**24—**

**பேருந்துகளுக்கு உதிரி பாகங்கள் வழங்க நடவடிக்கை**

**வினா 11891—திரு. டி. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குத் தேவையான உதிரிபாகங்களை அந்தந்தப் பகுதிகளில் உள்ள கடைகளிலிருந்து வாங்குவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதனைத் தவிர்த்து தரம் வாய்ந்த பொருட்களை குறிப்பிட்ட நிறுவனங்களில் இருந்து அரசு வாங்கி இப்பேருந்துகளுக்கு வழங்க என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான தரமான உதிரி பாகங்கள் வாங்குவதற்கு 4-7-1996 தேதியிட்ட அரசு ஆணை எண் எம்.எஸ். 126-இன்படி ஒரு துணைமட்டக் குழுவும், உயர்மட்டக் குழுவும் அரசால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்கள் தரமான உதிரி பாகங்களை சரியான நேரத்தில், சரியான விலையில் சரியான உற்பத்தியாளர்களிடமிருந்து சரியான அளவில் வாங்குவதற்கு கொள்முதல் விதிமுறைகள் தயாரித்து அவை உயர்மட்டக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு எல்லா போக்குவரத்துக் கழகங்களிலும் பின்பற்றப்பட்டு வருகின்றன. அதன்படி எல்லா போக்குவரத்துக் கழகங்களும் தங்களுக்குத் தேவையான உதிரி பாகங்களைக் கீழே தரப்பட்டுள்ளவர்களிடம் கொள்முதல் செய்ய வேண்டும்:

1. வாகன உற்பத்தியாளர்கள்
2. வாகன உற்பத்தியாளர்களுக்குப் பொருள்கள் வழங்குபவர்கள்
3. அகில இந்திய மாநில போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள்
4. மற்ற உற்பத்தியாளர்கள்
5. சிறுதொழில் நிறுவனங்கள்
6. அரசு நிறுவனங்கள்
7. சான்று வழங்கப்பட்ட விற்பனையாளர்கள்

கன்னியாகுமரி மாவட்ட அரசுப் போக்குவரத்துக் கழகமும், இந்தக் கொள்முதல் விதியில் குறிப்பிட்டவாறு உதிரி பாகங்கள் வாங்கி வருகின்றது. மேலே குறிப்பிட்டவர்களிடமிருந்து உதிரி பாகங்கள் கிடைக்கவில்லை என்றால் மட்டுமே அப்போக்குவரத்துக் கழகம் அவசரத் தேவைக்காக அப்பகுதியில் உள்ள கடைகளிலிருந்து ரூ. 2,000 வரை வாங்க முடியும். 1996-97 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 17.15 கோடிக்கு உதிரி பாகங்கள் வாங்கப்பட்டன. அதில் ரூ. 16.80 இலட்சத்துக்கு மட்டுமே அவசரத் தேவைகளுக்காக அப்பகுதிக் கடைகளில் வாங்கப்பட்டுள்ளன. இது மொத்தக் கொள்முதலில் 0.98 விழுக்காடு மட்டுமே. அதேபோல 1997-98 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 19.11 கோடிக்கு உதிரி பாகங்கள் வாங்கப்பட்டதில் ரூ. 3.33 இலட்சத்திற்கு மட்டுமே அவசரத் தேவைகளுக்காக அப்பகுதி கடைகளில் வாங்கப்பட்டுள்ளன. இது மொத்தக் கொள்முதலில் 0.17 விழுக்காடு மட்டுமே. இவ்வாறு வாங்கப்பட்ட பொருட்களும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுத்தான் வாங்கப்பட்டுள்ளன. மேலும் வாங்கப்படும் பொருட்களின் தரம் அலுவலர்களால் சோதித்து உறுதி அளிக்கப்பட்ட பின்தான் இருப்பில் எடுக்கப்பட்டு வருகின்றன.



25—

## நகரப் பேருந்து வழித்தடம் மாற்றி இயக்குதல்

**வினா 15841—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் முதலிபாளையம் செல்லும் 12, 12ஏ நகரப் பேருந்துகள் சிட்கோ, வட்டக்காட்டுப்புதூர், செம்மாண்டம்பாளையம் வழியாக மாற்றி இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை-

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருப்பூர் நகரத் தடம் எண் 12, 12ஏ பேருந்துகளை வழித்தடம் மாற்றம் செய்து இயக்குவதற்குப் பதிலாக கடந்த 19-12-1998 முதல் திருப்பூர் நகரத் தடம் எண் 4பி/16ஏ பேருந்து, சிட்கோ, வட்டக்காட்டுப்புதூர் மற்றும் செம்மாண்டம்பாளையம் வழியாக தினசரி 4 நடைகள் அப்பகுதிவாழ் பொதுமக்களது நலன் கருதி இயக்கப்பட்டு வருகிறது.

26—

## நகரப் பேருந்து இயக்குதல்

**வினா 17857—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 ஏப்ரல் 1

குஜிலியம்பாறையிலிருந்து எரியோடு, வெள்ளியணை, அரவக்குறிச்சி ஆகிய ஊர்களுக்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

குஜிலியம்பாறை-அரவக்குறிச்சி வழித்தடத்தின் நீளம் 30 கி.மீ.க்கு மேல் இருப்பதால் இத்தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாது. குஜிலியம்பாறையிலிருந்து எரியோடு, வெள்ளியணை மற்றும் அரவக்குறிச்சி ஆகிய இடங்களுக்கு தற்பொழுது உள்ள போக்குவரத்து வசதிகளே போதுமானதாகும்.

27—

**புதிய பேருந்து இயக்குதல்**

**வினா 20464—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், தமிழ்நாடு அரசுப் பேருந்து பணிமனையில் இருந்து மேச்சேரி வரும் நகரப் பேருந்து மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதால் அதற்குப் பதிலாக புதிய பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலத்தில் நடப்பாண்டில் இதுவரை 151 பழைய பேருந்துகள் மாற்றப்பட்டன. நடப்பாண்டின் இறுதிக்குள் (31-3-1999) சுமார் 30 பேருந்துகள் மாற்றம் செய்யப்படும். மேச்சேரி வரும் நகரப் பேருந்து 1-8-1995 முதல் சுமார் 3½ ஆண்டுகள் ஓடியது. இந்நிதியாண்டிற்குள் இப்பேருந்து மாற்றப்பட்டு வேறு புதிய பேருந்து இயக்கப்படும்.



1999 ஏப்ரல் 1]

28—

**கடலூர் பழைய டவுன் வரை பேருந்து இயக்குதல்**

**வினா 21610—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து கடலூர் செல்லும் அரசு விரைவுப் பேருந்துகள் மற்றும் அனைத்துப் பேருந்துகளும் கடலூர் பழைய டவுன் வரை செல்ல அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சென்னையிலிருந்து கடலூர் செல்லும் அரசு விரைவுப் பேருந்துகள் அனைத்தும் கடலூர் பழைய டவுன் பேருந்து நிலையத்தில் நிறுத்தி, பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்லும் பணி நடைமுறையில் ஏற்கெனவே இருந்து வருகின்றது. கடலூர் பழைய டவுன் பேருந்து நிலையம் வழியாக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் 96 நடைகளும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம் கோட்டம்-1) இயக்கும் பேருந்துகள் 33 நடைகளும் சென்று வருகின்றன. போதிய அளவு பேருந்து வசதி இருப்பதால் சென்னையிலிருந்து செல்லும் அனைத்துப் பேருந்துகளும் கடலூர் பழைய டவுன் வரை செல்லுமாறு இயக்க சாத்தியக்கூறு இல்லை.

29—

**நகரப் பேருந்து இயக்குதல்**

**வினா 21624—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பெண்ணாகரத்திலிருந்து களப்பம்பாடி, சின்னம்பள்ளி, அரகாசனஅள்ளி வழியாக நாகாவதி அணை வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[1999 ஏப்ரல் 1

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குறிப்பிட்ட தடத்தில் சின்னம்பள்ளிக்கும் அரகாசன அள்ளிக்கும் இடையில் 2 ஆறுகள் ஓடுகின்றன. இந்த ஆறுகளில் மேலே பாலம் எதுவும் கட்டப்படாத காரணத்தினாலும் சின்னம்பள்ளி முதல் நாகாவதி அணை வரை சாலைகள் சரியில்லாததாலும், கோரப்பட்ட தடத்தில் தற்சமயம் நகரப் பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.

30—

## பேருந்து வேகத்தை அதிகரித்தல்

**வினா 21625—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஊராட்சி, நகராட்சிகளில், நகரப் பேருந்துகள் தற்சமயம் 30 கி.மீ. வரை ஓடிக் கொண்டிருப்பதை 40 கி.மீ. ஆக அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இல்லை.

31—

## எல்லையை அதிகரித்து பேருந்துகள் இயக்குதல்

**வினா 21627—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள மாநகரப் போக்குவரத்து எல்லையை மேலும் 5 கி.மீ. அதிகரித்து பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



1999 ஏப்ரல் 1]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வரிச் சட்டம் பிரிவு 2(4)-ன் கீழ் சென்னை மாநகர எல்லை எதுவரை வரையறுக்கப்பட்டுள்ளதோ அந்த எல்லைக்குள் மட்டும் பெருநகரப் பேருந்துகள் இயக்க இயலும். இருப்பினும், பொது மக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு, மாநகரப் போக்குவரத்துக் கழகம் (சென்னை பிரிவு 1) சென்னைப் பெருநகரை ஒட்டியுள்ள புறநகர் பகுதிகளுக்கு, அதாவது சென்னைப் பெருநகருக்கு அப்பால் 10 கி.மீ. தூரத்திற்கு மிகாமல் மொத்தம் 22 வழித்தடங்களில் 95 சர்வீஸ்களை 19-2-1975 முதல் பல்வேறு தேதிகளில் இயக்கி வருகிறது.

32—

## அரசுப் பேருந்து விடுதல்

**வினா 21633—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரிலிருந்து திருச்செங்கோடு பரமத்தி வேலூர் வழியாக மதுரை வரை ஒரு அரசு கழகப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வினாவில் கேட்கப்பட்டுள்ள வழித்தடத்தில் பகுதி வாரியாக போதுமான பேருந்து வசதியுள்ளது. மேற்படி வழித்தடம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் கோட்டம்-2 மற்றும் மதுரை கோட்டம்-1 மற்றும் 4-ன் இயக்கப் பகுதியைச் சார்ந்து வருகிறது. எனவே, இவ்வழித் தடத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம், ஒரு பேருந்து இயக்கினால் ஏனைய சகோதர போக்குவரத்துக் கழகங்களும் தலா ஒரு பேருந்து வீதம் இயக்குவார்கள். ஒரே சமயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பேருந்து இயக்கப்படுமளவிற்குப் பயணிகள் போக்குவரத்து இல்லை. எனவே, இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்கும் சாத்தியக்கூறு இல்லை.

33— [1999 ஏப்ரல் 1

**பேருந்து வழித்தடம் மாற்றுதல்**

**வினா 22043—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி முதல் போடிநாயக்கன்பட்டி, வாலக்குட்டப்பட்டி, நாச்சனூர், கோரணம்பட்டி வழியாக கொங்கணாபுரம் சென்று வந்த பேருந்து வேறு வழித்தடத்தில் செல்லுவதால், அதை மீண்டும் நாச்சனூர், கோரணம்பட்டி வழியாக இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சாலை பழுதுபார்க்கும் பணி நடந்துகொண்டிருந்ததால் பேருந்து தடம் மாற்றி எடப்பாடி, தாதாபுரம், கோரணம்பட்டி வழியாக கொங்கணாபுரம் வரை இயக்கப்பட்டு வந்தது. தற்போது வாலக்குட்டப்பட்டி, நாச்சனூர், கோரணம்பட்டி வழியாக பழைய தடத்திலேயே பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

34—

**பேருந்து மீண்டும் இயக்குதல்**

**வினா 22524—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரிலிருந்து ராயவேலூர் சென்றுகொண்டிருந்த அரசு போக்குவரத்துப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பேருந்தை மீண்டும் ராயவேலூருக்கு இயக்க அரசு போக்குவரத்துக் கழகம் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடியிலிருந்து ராயவேலூருக்கு இயக்கப்பட்ட பேருந்தில் பயணிகள் போக்குவரத்து மிகவும் குறைவாகவும், வருவாய் குறைவாகவும் இருந்ததினால் நிறுத்தப்பட்டுள்ளது. எடப்பாடியிலிருந்து சேலம் வந்து வேலூர் செல்ல பகுதி வாரியாகப் போதுமான பேருந்து வசதியுள்ளது. எனவே, மீண்டும் அந்தத் தடத்தில் பேருந்து இயக்கும் சாத்தியக்கூறு இல்லை.



35—

**புராதன சிற்பக் காட்சியினைப் பாதுகாத்தல்**

**வினா 21994—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரம் புராதன சிற்பக் காட்சிகளைப் பாதுகாக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

1958 ஆம் ஆண்டு, பழங்கால நினைவுச் சின்னங்கள், தொல்வியல் சிறப்பிடங்கள், எஞ்சிய சின்னங்கள் சட்டத்தின் கீழ் இந்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையால் மாமல்லபுரத்தில் 32 நினைவுச் சின்னங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பொதுப் பராமரிப்பின் ஒரு பகுதியாக சிற்பங்கள்/நினைவுச் சின்னங்கள் வாலாய முறையில் ஆய்வு செய்யப்படுகின்றன. இவைகளின் பாதுகாப்பிற்காக காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கடலின் உப்பு நீர் அலைகளினால் கடற்கரைக் கோவில்கள் பாதிக்கப்படாமல் இருக்க, நீண்ட கால நடவடிக்கையாக கடற்கரையில் மரத்தாலான கடலரிப்பு தடுப்பு அரண், பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்டுள்ளது. கல்வடிவமைப்புகளிலிருந்து உப்பினை நீக்க, காகிதக் கூழினால் நினைவுச் சின்னங்கள் அவ்வப்போது சுத்தம் செய்யப்படுகின்றன. அத்துமீறி நுழைவதைத் தடுக்க, நினைவுச் சின்னங்களைச் சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழலை மேம்படுத்த தொல்பொருள் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படுவதன் மூலம் நினைவுச் சின்னத்தில் அத்துமீறி நுழைவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

36— [1999 ஏப்ரல் 1

### நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தை ஊக்கப்படுத்துதல்

**வினா 20448—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தை ஊக்கப்படுத்துவதற்காக அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில், மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை, மத்திய சங்கமாகவும், எட்டு பிரதம கூட்டுறவுப் பண்டகசாலைகளும், 17 பணியாளர் கூட்டுறவுப் பண்டகசாலைகளும் செயல்படுகின்றன. பிரதம கூட்டுறவுப் பண்டகசாலைகளின் வாணிபத் திறனை அதிகரிக்க பண்டகசாலைகளுக்கு அரசு பங்கு மூலதன நிதியுதவி அளித்து வந்துள்ளது. நவீன சில்லறை விற்பனை நிலையம் அமைக்க கடனுதவி வழங்கியுள்ளது. சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, பொன்னி கூட்டு சிறப்பு அங்காடியினைச் செயல்படுத்தி சுயசேவைப் பிரிவுடன் நல்லமுறையில் இயங்கி வருகிறது. மாவட்ட அளவில் மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின் கிளைகளில் விற்பனையை மேம்படுத்தியுள்ளது. இவற்றின் செயல்பாடுகள் நிர்வாகத்தால் கண்காணிக்கப்பட்டு நடைமுறை சிக்கல்களைக் களைந்து செம்மையான நிர்வாகம் நடைபெற அரசு உரிய நடவடிக்கை எடுத்துச் செயல்படுத்தி வருகிறது.

37—

### டீசல் பங்க் ஆரம்பித்தல்

**வினா 20565—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 ஏப்ரல் 1]

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மூங்கில்மருவு மற்றும் மஞ்சாரஹள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் மூலம் விவசாயிகளுக்கு டீசல் வழங்க, டீசல் பங்க் ஆரம்பிக்கப்பட அரசு ஆவன செய்யுமா?

221077.

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட மூங்கில்மருவு மற்றும் மஞ்சாரஹள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் அவைகளின் விவகார எல்லையில் டீசல் பங்க் ஆரம்பிப்பது தொடர்பாக இந்தியன் ஆயில் கம்பெனி, கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிர்ணயித்துள்ள நிபந்தனைகளை மூங்கில்மருவு மற்றும் மஞ்சாரஹள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நிறைவு செய்யவில்லை. இந்நிலையில், மூங்கில்மருவு மற்றும் மஞ்சாரஹள்ளி ஆகிய இவ்விரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் டீசல் பங்க் ஆரம்பிக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

38—

### கூட்டுறவுப் பண்டகசாலை சங்கத்தை இணைத்தல்

**வினா 20711—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் இயங்கிவரும் கொங்கணாபுரம் கூட்டுறவுப் பண்டகசாலை சங்கத்தை, திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்துடன் இணைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

D V 211, 31 N99 N99.683

[1999 ஏப்ரல் 1

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கொங்கணாபுரம் கூட்டுறவுப் பண்டகசாலை சேலம் மண்டலத்தில் ஓமலூர் சரக துணைப்பதிவாளர் கட்டுப்பாட்டில் இயங்கும் ஒரு பிரதம கூட்டுறவுப் பண்டகசாலை. திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் நாமக்கல் மண்டலத்தில் திருச்செங்கோடு சரகத்தில், செயல்படும் ஒரு பிரதம கூட்டுறவுச் சங்கமாகும். கொங்கணாபுரம் கூட்டுறவுப் பண்டகசாலையை திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கத்துடன் இணைப்பது குறித்து கருத்துரு ஏதும் நிலுவையிலில்லை. அதற்கான நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

39—

### ஸ்பின்னிங் மில்ஸ் விவரம்

**வினா 22325—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை வட்டம், கோமுகி ஸ்பின்னிங் மில்ஸ் என்ற நிறுவனம் எவ்வளவு நூற்புக் கதிர்களுக்கு அனுமதி பெற்றுள்ளது?

(ஆ) இதன்மூலம் எத்தனை தொழிலாளர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) பெருந்துறை வட்டம், பள்ளக்கவுண்டன்பாளையத்தில் உள்ள கோமுகி ஸ்பின்னிங் மில்ஸ் 25,000 நூற்புக் கதிர்கள் நிறுவ அனுமதி பெற்று, 18,000 நூற்புக் கதிர்கள் நிறுவப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

(ஆ) இந்த நூற்பாலையில் 7 பெண்கள் உட்பட 93 தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.



1999 ஏப்ரல் 1]

40—

### விசைத்தறிக்குக் குழு அமைத்தல்

**வினா 22556—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறிக்குக் குழு அமைத்து நிவாரண உதவி செய்தது போல் விசைத்தறிக்கும் குழு அமைத்து நிவாரண உதவி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) கைத்தறி நிவாரணத்திற்குக் குழு அமைத்ததுபோல் விசைத்தறிக்குக் குழு அமைப்பது பற்றிய திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

41—

### வீட்டுமனை இடம் வாங்க ஒதுக்கீடு பற்றிய விவரம்

**வினா 16248—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்திற்கு, 1996-97-ல் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமூகப்பிரிவினருக்கு வீட்டுமனை இடம் வாங்க ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி முழுமையாக செலவிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1999 ஏப்ரல் 1

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டத்திற்கு 1996-97 ஆம் ஆண்டில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமூகப் பிரிவினருக்கு வீட்டுமனை வழங்க ரூ. 55,10,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் 1996-97-ல் ரூ. 55,00,000 செலவு செய்யப்பட்டது. இதன்மூலம் 49.99 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 902 நபர்கள் பயன் பெற்றனர். பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இலவச வீட்டுமனை வழங்கும் திட்டம் 1997-98 ஆம் ஆண்டிலிருந்துதான் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

42—

## பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் அமைத்தல்

**வினா 19822—திரு. ஜ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சித்தூர், கோனேரிப்பட்டி, பூலாம்பட்டி, செட்டிமாங்குறிச்சி, சமுத்திரம் ஆகிய ஊர்களிலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் படிக்கும் மாணவ/மாணவிகளுக்காக பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சித்தூர், கோனேரிப்பட்டி, பூலாம்பட்டி, செட்டிமாங்குறிச்சி, சமுத்திரம் ஆகிய ஊர்களில் உள்ள உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவ/மாணவிகளுக்காக புதிதாக விடுதிகள் திறப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.



1999 ஏப்ரல் 1]

43—

## விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்குதல்

**வினா 14086—திரு. ச. இராஜு ரெட்டி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, காட்டோர கிராமங்களில் யானைகளால் சேதப்படுத்தப்பட்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்ட ஈடு கொடுக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

ஓசூர் வனக்கோட்டத்திற்குட்பட்ட தளி தொகுதியில் காட்டு யானைகளால் ஏற்படும் பயிர்ச் சேதத்திற்கு இழப்புத் தொகையினை வழங்க உரிய விதிகளின்படி அவ்வப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஒப்பளிப்பு ஆணைகள் கிடைக்கப் பெற்றவுடன் உரியவர்களுக்கு இழப்புத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி 1997-98 ஆம் ஆண்டில் இழப்புத் தொகையாக ரூ. 46,000, 33 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் அவ்வப்போது வரக்கூடிய இனங்களுக்கு சம்பந்தப்பட்ட சான்றுகள், ஆணைகள் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்வது போன்றவைகளால் இழப்புத் தொகை வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. நிலுவையில் உள்ள இனங்களுக்கும் இழப்புத் தொகை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

44—

## வனத் துறையின் மூலம் சாலை அமைத்தல்

**வினா 18184—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 ஏப்ரல் 1

(அ) தர்மபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியத்திற்குட்பட்ட மலையப்பநகர், தொப்பூர் தணிக்கைச் சாவடி வரையிலான சாலையை வனத் துறையின் மூலம் சுமார் 2.6. கி.மீ. தூரம் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) தொப்பூர் தணிக்கைச் சாவடியிலிருந்து மலையப்பநகர் காலனி 5 கி.மீ. தொலைவில் உள்ளது. 3 கி.மீ. தூரம் பரிகம் 'பி' காப்புக்காட்டிலூடேயும், 2 கி.மீ. தூரம் வெளியேயும் பாதை செல்கிறது. காப்புக்காட்டிலூடே சுமார் நான்கு அடி அகலத்தில் அனுமதிக்கப்பட்ட பாதையாக அனுமதி உரிமை வழங்கப்பட்டுள்ளது. இப்பாதையில் ஆள் நடமாட்டம் அதிகம் இல்லை. மலையப்பநகரில் சுமார் 20 வீடுகள் உள்ளன சுமார் 150 மக்கள் உள்ளனர். மலையப்ப காலனி மக்கள் தொப்பூர் வருவதற்கு பரிகம் கசல்பட்டி வழியே சேலம் - தர்மபுரி நெடுஞ்சாலையில் சேர்ந்து அங்கிருந்து தொப்பூர் வரை தார்ச்சாலை உள்ளது. மலையப்ப காலனி மக்கள் போக்குவரத்திற்கு வேறு பாதையும் உள்ளது. புதிதாக சாலை அமைக்க வனப்பாதுகாப்புச் சட்டத்தின்படி மத்திய அரசின் முன் அனுமதி பெற வேண்டும். மேற்கூறிய காரணங்களால் மலையப்பநகர் காலனியிலிருந்து தொப்பூர் தணிக்கைச் சாவடிக்குப் பாதை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

45—

### ஊராட்சிகளுக்கு முத்திரைத்தாள் கட்டண விவரம்

**வினா 19664—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டு முத்திரைத்தாள் கட்டணமாக சேலம் மாவட்டத்திலுள்ள ஊராட்சிகளுக்கு எவ்வளவு தொகை கிடைக்கப் பெற்றது?



1999 ஏப்ரல் 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்திலுள்ள 19 ஊராட்சி ஒன்றியங்களுக்கு 1-4-1997 முதல் 31-3-1998 வரையிலான காலத்தில் மிகுவரியாக ரூ. 3,01,39,297/- ஒதுக்கப்பட்டுள்ளது.

46—

### அரசு அச்சகம் அமைத்தல்

**வினா 15938—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஓர் எடப்பாடியில் அரசு அச்சகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் அரசு அச்சகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

47—

### கால்நடை மருத்துவமனைக்கு மருத்துவர்கள் நியமனம்

**வினா 20018—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாடு தொகுதி, எடமேலையூர் (திருவாரூர் மாவட்டம்), பாப்பாநாடு (தஞ்சாவூர் மாவட்டம்) ஆகிய ஊர்களிலுள்ள கால்நடை மருத்துவமனைகளுக்கு நிரந்தரமாக மருத்துவர்கள் நியமனம் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் :**

[1999 ஏப்ரல் 1

எடமேலையூர் கால்நடை மருத்துவமனைக்கு டாக்டர் பி. பரமசிவம் அவர்களும், பாப்பாநாடு கால்நடை மருத்துவமனைக்கு டாக்டர் எஸ். அப்பாஸ் அலி அவர்களும் கால்நடை மருத்துவர்களாக 6-2-1999 அன்று நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

48—

**கால்நடை மருத்துவமனை செப்பனிடல்**

**வினா 20615—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், நல்லூரில் கால்நடை மருத்துவமனையை விரிவுபடுத்தி செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், நல்லூரிலுள்ள கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக (கால்நடை மருந்தகம் இங்கு இல்லை) தரம் உயர்த்த உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

49—

**வீட்டுமனைப் பட்டா வழங்கல்**

**வினா 15821—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், டேனிஷ்பேட்டை ஊராட்சி, ராமகவுடண்டனூரிலிருக்கும் மலைவாழ் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**



1999 ஏப்ரல் 1]

ஓமலூர் வட்டம், டேனிஷ்பேட்டை கிராமம், புல எண் 270/1ஏ2 271 மற்றும் 272 ஆகியவற்றில் 2.00 ஏக்கர் நிலம் ராமகவுண்டனூர் பழங்குடியின மக்கள் இலவச வீட்டு மனைக்காக தமிழ்நாடு சட்டம் 31/78-ன்கீழ் நிலமெடுப்புக்கு புலம் தேர்வு செய்யப்பட்டு நிலமெடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரைவில் நிலமெடுப்பு நடவடிக்கை முற்றுப் பெற்றபின் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

50—

**மீன் விற்பனை நிலையம் அமைத்தல்**

**வினா 20990—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணகரம் தொகுதி, பாப்பாரப்பட்டியில் ஒரு மீன் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவுச் சங்கம் மூலம், பெண்ணகரம் வட்டத்தில், ஓகேனக்கல் பகுதியைத் தவிர மற்றப் பகுதிகளில் மீன் சேகரிப்பு மற்றும் மீன் விற்பனைப் பணியினை மேற்கொள்ளவில்லை என்பதால், பாப்பாரப்பட்டியில் அரசு தற்போது மீன் விற்பனை அங்காடி அமைக்க வாய்ப்பு இல்லை.

(ஆ) எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்)

## 2 சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) நெல்லை மாநகராட்சி வரி விதிப்பை எதிர்த்து சாலை மறியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு (குறுக்கீடு) திரு. சி. வேலாயுதன், உட்காருங்கள். நான் இந்த அலுவலை எடுத்த பிறகுதான் நீங்கள் என்னிடம் தெரிவித்ததை எடுப்பேன். நீங்கள் உட்காருங்கள். பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் திரு. மு. அப்பாவு, திரு. பா. வேல்துரை மற்றும் 46 நபர்களையும், பணகுடி அருகே 100-க்கும் மேற்பட்டவர்களையும் காவல் துறையினர் தாக்கியது குறித்து உறுப்பினர்கள் திரு. மு. அப்பாவு, திரு. பா. வேல்துரை மற்றும் ஏராளமான உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்டு அறிவிப்புக் கொடுத்து இருக்கிறார்கள், அப்பாவுவின் செல்வாக்கு காரணமாக. அதைப் போலவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல். சுப்பிரமணியன் ஓர் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். 26-2-1999 அன்று நெல்லை மாநகராட்சியின் வரி விதிப்பை எதிர்த்து பேருந்து மறியல் செய்த சிலர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டது குறித்து கொடுத்திருக்கிறார். ஆகவே, இவை இரண்டையும் ஒன்றாக இணைத்து, திரு. அப்பாவு அவர்களையும், திரு. வேல்துரை அவர்களையும், ஒவ்வொருவரும் 2 நிமிடங்களிலே தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. மு. அப்பாவு கையை உயர்த்திக் கொண்டு எழுந்தார்.)

திரு. அப்பாவு, நான் கூப்பிடுவதற்கு முன்னால் நீங்கள் கையை உயர்த்திக் கொண்டு எழுந்திருக்கக்கூடாது.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 22-2-1999 அன்று நெல்லை மாமன்றக் கூட்டம் நடைபெற்று, சதுர அடி வரி விதிப்பு முறையை ஒழித்து சதவீத அடிப்படையிலே வரி விதிக்க வேண்டுமென்று மாமன்றம் தீர்மானம் நிறைவேற்றிய பின்பு, 24-2-1999 அன்று மாநகராட்சியினுடைய ஆணையாளர் சதுர அடி வரி விதிப்பு முறையை இரத்துச் செய்ய இயலாது என அனைத்துப் பத்திரிகைகளிலும் செய்தியாக வெளியிட்டு, செய்தி வெளிவந்தவுடன் வியாபாரிகள், பொது மக்கள் எல்லோரும் கொதித்தெழுந்தார்கள்.

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக தெற்கு பஜார் வியாபாரிகள் சங்கத்தோடு இணைந்து பாளையங்கோட்டை ஜவஹர் மைதானத்தின் அருகே சதுரஅடி வரி விதிப்பை எதிர்த்து சாலை



மறியல் செய்வதாக அறிவித்திருந்தோம். அதன்படி சென்னையிலிருந்து 25 ஆம் தேதி மாலை புறப்பட்டு மறுநாள் காலை நெல்லைக்குச் சென்றேன். உடனே மறியலில் ஈடுபட வேண்டுமென்ற எண்ணம் இல்லாமல் மாநகராட்சி ஆணையரை, அவருடைய இல்லத்திலேயும், அலுவலகத்திலேயும் பலமுறை காலை 11.00 மணிவரை தொடர்பு கொண்டபோதும், அவரோடு தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள முடியாத ஒரு நிலை ஏற்பட்டதால் நாங்கள் மறியலுக்குச் சென்றோம். தெற்கு பஜார் முழுமையும் கடையடைத்து, 500 பேர் என்னுடைய தலைமையிலே சாலை மறியலுக்காக அங்கே அமர்ந்தோம்.

*முற்பகல் 10-40*

இரண்டு நிமிடங்களில் பாளையங்கோட்டை உதவி ஆணையாளர், மரியாதைக்குரிய கிருஷ்ணன் அவர்கள், உங்களைக் கைது செய்கிறோம் என்று சொன்னார்கள். சொன்ன அடுத்த நிமிடமே, இரண்டே நிமிடங்களில் அங்கிருந்து நடந்தே பாளையங்கோட்டை காவல் நிலையத்திற்கு அனைவரும் சென்றோம். சென்றவுடன், இருங்கள், இரண்டு மணிக்கெல்லாம் போய்விடலாம்' என்று சொன்னார். அந்த அடிப்படையிலே அப்படியே அங்கே இருந்தோம். மூன்று மணிக்கு, மேலேயிருந்து உத்தரவு வந்திருக்கிறது. உங்கள் யாரையும் வெளியே விடுவதாக இல்லை, remand பண்ணப் போகிறோம் என்று சொன்னார். ஏற்கெனவே, வெளியே விட்டுவிடுவார்கள் என்று சொல்லி எல்லோரும் பேசிக் கொண்டு இருந்தார்களோ என்று சொல்லிவிட்டு எல்லோரும் போய்விட்டார்கள். ஆனால், 3 மணிக்கு வந்து remand பண்ணப் போகிறோம் என்று சொன்னவுடனே, 40, 50 பேர் remand என்றால், தயார் என்று சொல்லி அங்கேயே இருந்தோம் remand பண்ணப் போகிறார்கள் என்று பத்திரிகைகள் வாயிலாகத் தெரிந்ததும், திரு. ஆர்.எம்.எஸ். ஜேம்ஸ் தலைமையிலே கிட்டத்தட்ட 500 பேர் அங்கேயே சாலையில் அமர்ந்திருக்கிறார்கள். M.L.A. வை விடுதலை செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். உடனே Dy.S.P. அங்கு வந்து எல்லோரும் கலைந்து போய்விடுங்கள், இல்லையென்றால் உங்களைக் கைது செய்வோம் என்று சொல்லியிருக்கிறார். நாங்கள் கைதுக்குத் தயார் என்று சொன்னதும், பேருந்து கொண்டு வருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். 10 நிமிடங்கள் கழித்தும் பேருந்து வரவில்லை. நம்முடைய S.P. கரன்சிங் வந்து ஒன்றுமே சொல்லவில்லை 40, 50, 60, 70 வயதுள்ள பெண்களையெல்லாம் அடித்திருக்கிறார்கள். அடித்த அடி தாறுமாறான அடி, அடிக்கத் தகாத இடத்திலே கடுமையான அடி. வட இந்தியாவைச் சேர்ந்த S.P. அவர்களுக்கு, தமிழ் மக்கள்மீது கொஞ்சமாவது பாசம் இருந்தால் ஏன் என்றுகூடக் கேட்காமல், பெண்களை

அடித்திருப்பார்களா? அடித்திருக்கிற அடி, அவ்வளவு அடி, அடித்திருக்கிறார்கள். ஆண்களையும் அதேமாதிரி அடித்ததோடு அந்த வழியாகப் பள்ளிக்குப் போய்விட்டு வந்த 3 ஆசிரியர்களுக்கும் அடி. ஆர்.எம்.எஸ். ஜேம்ஸ் தலைமையிலே இருந்த மொத்தம் 24 பேர்களை ஒரு வண்டியில் ஏற்றினார்கள். அந்த வண்டியிலிருந்து மற்றொரு வண்டிக்கு மாற்றும்போது அங்கேயும் அடி. என்னய்யா கொடுமை, ஒரு ஜனநாயக நாட்டில், இந்த அளவுக்கு அடிப்பதற்கு அங்கே என்ன நடந்தது? ஏதாவது நடந்திருந்தால் பரவாயில்லை, எதுவுமே இல்லை. இந்தத் தகவல் தெரிந்ததும், நான் பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆணையாளரிடம் சொல்லி, இப்படி நடந்து கொண்டு இருக்கிறீர்களே, பொய் வழக்குப் போட்டிருக்கிறீர்களே, தயவுசெய்து அவ்வளவு பேரையும் விடுதலை செய்துவிடுங்கள் என்று சொல்லி, உதவி ஆணையாளரிடம் தொலைபேசி தருமாறு கேட்டேன். ஆனால் தொலைபேசி தரவில்லை. D.I.G.-யிடமோ அல்லது Collector இடமோ பேச வேண்டுமென்று சொன்னோம். போராட்டம் என்று அறிவித்திருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவரோ அல்லது மாநகராட்சி ஆணையாளரோ வந்து, நீங்கள் யார்? எதற்காக மறியல் செய்யப் போகிறீர்கள் என்று கேட்கவில்லை. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் எங்களை விடுதலை செய்துவிட்டு, அறிக்கை விட்டிருந்தார்கள். 22 ஆம் தேதியே சதுர அடி வரி விதிப்பை இரத்து செய்த பின்பும், தேவையிருந்தால் நாங்கள் போராட்டம் செய்வதாகச் சொல்லியிருந்தோம். இதில் மிகப் பெரிய வேதனை என்னவென்றால், அந்த மாநகராட்சி செய்த அந்த வரி விதிப்பைப் பற்றி நம் முதலமைச்சருக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சருக்கும் சொல்வதற்கு யாருமே இல்லை என்பது வேதனையானது. இதைச் சொல்லியிருந்தால், நம்முடைய முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருந்தால், மாமன்ற ஆணை செயல்படுத்தப்படும் என்று மாமன்றத்தையும், ஜனநாயகத்தையும் மதிக்கின்ற நம்முடைய முதல்வர் அவர்கள் நிச்சயமாகச் சொல்லியிருப்பார்கள். யாருமே சொல்லவில்லை என்பதுதான் வேதனை. ஆக, பாளையங்கோட்டை காவல் நிலையத்திலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு இரண்டு நிமிடங்கள் கொடுத்தேன். நீங்கள் ¼ மணி நேரம் பேசியிருக்கிறீர்கள், திரு. வேல்துரை. (குறுக்கிடு)



**திரு. மு. அப்பாவு:** இப்பொழுதுதான் விஷயத்திற்கே வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, இப்பொழுதுதான் விஷயத்திற்கே வருகிறீர்களா? இவ்வளவு நேரம் என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள்? நீங்கள் நடந்ததைச் சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அறிக்கையில் சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

**திரு. மு. அப்பாவு:** அடித்து இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனால்தான் உங்களுக்கு அனுமதி கொடுத்தேன். இல்லையென்றால் உங்களுக்கு அனுமதி கொடுத்திருக்க மாட்டேன், உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** ஒரே ஒரு தகவல் சொல்லி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன புதிதாகச் சொல்லப் போகிறீர்கள்?

**திரு. மு. அப்பாவு:** காவல் நிலையத்தில் வழக்கறிஞர்கள் மீனாட்சிசுந்தரம், சுந்தரராஜப்பெருமாள், பெருமாள் மற்றும் வேல்துரை M.L.A., ஆகியோர், அவர்களைப் பேச விடவில்லை, எங்களையாவது பேசவிடுங்கள் என்று சொன்னபோது, Collector இல்லை, யாரும் பேசக் கூடாது என்று சொல்லி விட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனால்தான் உங்களுக்குச் சொல்கிறேன். இதுவரைக்கும் உங்களுடைய நாடகத்தை நடத்தி முடித்துவிட்டீர்கள். அடுத்து வேல்துரை வந்துவிட்டார் என்றால், அவரைப் பேச விடுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** நாடகம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நடந்ததை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஒரே ஒரு வார்த்தையில் சொல்லி முடியுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** நான் விளக்கமாகச் சொல்லவில்லை. நீங்கள் தவறாக நினைக்கக் கூடாது. நான் என்ன சொல்கிறேன் என்றால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், தோழமைக் கட்சிகள் மூச்சுத் திணறலாக இருக்கக்கூடாது என்றார்கள். நாங்கள் ஒருபோதும் மூச்சுத் திணறலாக இருக்கமாட்டோம். உங்களுக்கு மூச்சுத் திணறல் வந்தால், Oxygen ஆக இருக்கிறோம். இந்த ஆட்சி அமைக்கும்போதுகூட

[திரு. மு. அப்பாவு] [1999 ஏப்ரல் 1

Oxygen ஆகத்தான் இருந்தோம். எங்களைக் கைது செய்து, திருநெல்வேலியில் இடம் இருந்தும், திருச்சிக்குக் கொண்டு போனார்கள். அப்பொழுது டெல்லியில் இருந்த எங்கள் ஐயா மூப்பனார் அவர்கள் தொலைபேசி செய்து நம்முடைய வேல்துரை அவர்களிடம் சொல்லி, யாரும் எந்தப் போராட்டமும் பண்ணக் கூடாது. நான் பேசிக்கொள்கிறேன் என்று சொல்லுகிறார்கள் என்றால் எந்த அளவுக்கு உங்களுக்கு Oxygen-ஆக நாங்கள் இருக்கிறோம் என்பதற்காக நான் சொல்கிறேன். இந்த ஆட்சிக்கு சோதனை வரக்கூடிய நேரங்களில் எல்லாம் மூச்சுத் திணறல் ஏற்படுத்துவதாக இந்தத் தோழமைக் கட்சி ஒருபோதும் இருந்ததில்லை. நாங்கள் Oxygen-ஆக இருந்திருக்கிறோம். தோழமைக் கட்சியாக இருந்துகொண்டு முதுகில் குத்தும் ஜோலி எங்கள் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு ஒருபோதும் இருந்ததில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

14-2-1999 அன்று நானும், உறுப்பினர் அ.லெ. சுப்பிரமணியன் மற்றும் நம்முடைய கோதர் மைதீன் எல்லோரும் இரயில் மறியல் செய்தோம். மாமன்ற மேயர், மரியாதைக்குரிய உமா மகேஸ்வரி போன்றவர்கள் எல்லாம் 14 ஆம் தேதி மறியல் செய்தோம். எங்களைக் கைது செய்ததுபோல 26-2-1999 அன்று அவர்களையும் கைது செய்திருக்கலாம் அல்லவா....

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இந்தப் பிரச்சினையை விட்டு அடுத்ததற்குப் போகிறீர்கள்.

**திரு. மு. அப்பாவு:** அந்த மறியல் செய்ததற்காக எங்களைக் கைது செய்து உள்ளே வைத்திருந்தால் நாங்கள் இந்த மறியல் செய்திருக்க மாட்டோம் அல்லவா? மறியல் செய்தால் உள்ளே வைத்து விடுவார்களோ என்று நினைத்திருப்போம். அந்த இரயில் மறியல் செய்தபோது உள்ளே வைத்திருந்தால் இந்த மறியலுக்குச் சென்றிருக்க மாட்டோம். அது ஒன்றும் பெரிய விஷயம் அல்ல. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது வேறு ஒன்றும் அல்ல, வழக்கறிஞர்கள் இப்போது போராட்டம் அறிவித்து யாரும் நீதிமன்றங்களுக்குச் செல்லவில்லை. அவர்கள் 13 ஆம் தேதி எங்களது தலைவரிடம் கேட்டார்கள். அப்போது தலைவர் 'நீங்கள் போராட்டத்தைக் கைவிடுங்கள், எல்லோரும் வேலைக்குச் செல்லுங்கள்' என்று சொன்னார். ஒரு மாதம் ஆகிறது, மூத்த வழக்கறிஞர்களை



1999 ஏப்ரல் 1] [திரு. மு. அப்பாவு]

எல்லாம் மரியாதைக் குறைவாக. சசிவண்ணன் A.C., அவர்களும், கிருஷ்ணன் அவர்களும் நடத்தியிருக்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்கள் மீது சரியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருந்தால்கூட அவர்கள் withdraw செய்திருப்பார்கள்.

பணகுடியில் ஆர்.எம்.எஸ். ஜேம்ஸ் தலைமையில் இருந்த 24 பேர் மீது தவறான வழக்குப் பதிவு செய்திருப்பதை இரத்துச் செய்வதோடு, வழக்கறிஞர்களுடைய கோரிக்கையை ஏற்று, குறைந்தபட்சம் அவர்களை transfer செய்யலாம் அல்லவா? நாங்கள் சொல்கிறோம் அல்லவா? பெண்களை அடித்திருக்கின்ற அந்த S.P. மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் மக்கள் இந்த அரசைப் பற்றி என்ன நினைப்பார்கள்? இப்படி அடிக்கிறார்களே, என்ன தவறு செய்தோம் என்று நினைப்பார்கள் அல்லவா? ஆகவே இதை மனதில் கொண்டு ஆவன செய்ய வேண்டும். அதிகாரிகள் இப்போது ஒரு பதிலைத் தயார் செய்து தந்திருப்பார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த அதிகாரிகளின் பதிலை மட்டும் எடுத்துக்கொள்ளாமல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல்வர் என்ன சொல்லப் போகிறார் என்று நீங்கள் பேச வேண்டாம், உட்காருங்கள். திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26-2-1999 அன்று சதுர அடி வரி விதிப்பை மாற்றி சதவிகித வரி விதிப்பாக அறிவிக்க வேண்டுமென்று சொல்லி மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் தலைமையில் பாளையங்கோட்டையில் ஒரு போராட்டம் நடைபெற்று, அவர் கைது செய்யப்பட்டு, அங்கே பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் வைத்திருந்தார்கள். அவருடைய சொந்த கிராமத்தைச் சேர்ந்த ஏழை மக்கள் அவரை விடுதலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து சாலை மறியல் செய்திருக்கிறார்கள். அந்த நேரத்தில் காவல் துறையினர் அத்துமீறி அநாகரீகமான முறையில் 70 வயது, 80 வயது கிழவிகளை எல்லாம் அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். நான் நேரடியாகச் சென்று பார்த்தேன். மிகவும் பரிதாபமாக இருந்தது. அது ஒரு பக்கம் இருக்கட்டும். இரவு 7.30 அல்லது 8.00 மணி இருக்கும், நான் காவல் நிலையம் சென்றேன். அழைத்துச் சென்றவரை இன்னும் விடவில்லை என்று கேள்விப்பட்டு அங்கு சென்றிருந்தேன். மீனாட்சிசுந்தரம், சுந்தரராஜப் பெருமாள், பெருமாள் ஆகிய 3 வழக்கறிஞர்களை

அழைத்துக்கொண்டு அவரை ஜாமீனில் எடுப்பதற்கு முயற்சி செய்யலாம் என்று நான் சென்றிருந்தேன். அங்கே அப்பாவு அவர்களிடத்தில் D.C. சிதம்பரநாதன் அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். வண்டியிலே ஏறுங்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். என்னிடத்திலே சொல்லி அப்பாவு அவர்களிடம் எடுத்துச் சொல்லுமாறு கேட்டுக்கொண்டார்கள். அவரிடம் என்ன விஷயம் என்று கேட்டபோது, பயங்கரமாக ஏழை எளிய மக்களைத் தாக்கியிருக்கிறார்கள், அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்பதைச் சொல்லுங்கள், நான் வண்டியில் ஏறுகிறேன் என்று அப்பாவு சொன்னார். வேறு ஒன்றும் பேசவில்லை. அப்போது R.D.O. இருந்தார், தாசில்தார் இருந்தார். R.D.O.விடம் நான் கேட்டேன், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வேண்டுமானால் நான் பேசுகிறேன் அல்லது D.I.G.-யிடம் பேசுகிறேன் என்று சொன்னேன். அதற்கு R.D.O., மாவட்ட ஆட்சித் தலைவர் ஊரில் இல்லை என்று சொல்லிவிட்டார். மாவட்ட ஆட்சித் தலைவர் ஊரில் இருந்தார். ஆனால் அவர் பேசுவதற்கு விரும்பவில்லை என்று நினைக்கின்றேன். D.I.G. அவர்களிடம் தொலைபேசியில் பேசுகிறேன் என்று சொன்னபோது இங்கே இருந்து தொலைபேசியில் பேசக்கூடாது என்று சொன்னார்கள். அவர்தான் கைதாகி வந்திருக்கிறார்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கோரிக்கையை மட்டும் சொல்லுங்கள். முழு விவரங்களையும் அவர் பேசிவிட்டார். நான் அதிக நேரம் கொடுக்க முடியாது.

**திரு. பா. வேல்துரை:** நான் அவ்வாறு சொன்னவுடன்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் திரும்ப அதையே பேசுகிறீர்கள். முதலமைச்சருக்கு என்ன கோரிக்கை வைக்கிறீர்கள் என்பதைச் சொல்லுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** உறுப்பினரை அடித்ததைக் கேட்கவில்லை என்றால் எப்படி? நீங்கள் சொன்னவுடன் உட்கார்ந்து விடுவோம். பேசவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் திரும்பப் பேசுவதா? உட்காருங்கள்.

முற்பகல் 10-50

**திரு. பா. வேல்துரை:** அங்கே பேசிக்கொண்டிருந்தபோது, திடீரென்று சசிவண்ணன், A.C அங்கே வந்தார். அங்கே கிருஷ்ணன் இருந்தார்.





அவர் வந்த உடனே, ஒருமையிலே பேசி, "இவர்களுக்கு Chair கொடுத்தது யார்" என்று கேட்டு, மரியாதையில்லாமல் பேசி, திடீரென்று சூழ்நிலையை tension ஆக்கிவிட்டார். உடனடியாக நான் சொன்னேன், "நீங்கள் மிகவும் மரியாதையில்லாமல் பேசாதீர்கள். நாங்களெல்லாம் M.L.A.-க்கள்தான். பொதுமக்கள் பிரச்சினைக்காகத்தான் வந்திருக்கிறோம். தேவையில்லாமல் ஏன் இப்படி எங்களை மரியாதையில்லாமல் பேசுகிறீர்கள். மிகவும் சத்தம்போட்டுப் பேசி சூழ்நிலையை மோசமாக்காதீர்கள். இப்பொழுது நான் வண்டியிலே ஏறச் சொல்கிறேன். அந்தப் பொதுமக்களை காவல் துறையினர் அடித்ததற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்ற விவரத்தையாவது தெரிந்துகொள்கிறோம். ஐயா; அதையாவது சொல்லக்கூடாதா" என்று நான் கேட்டேன். "சொல்லவே மாட்டோம்" என்று சொல்லிவிட்டார்கள். கடைசியாக வேறு வழியில்லாமல், ஒரு second-லே அடி, பிடி என்று சொல்லி ரகளையாக்கிவிட்டார்கள். அப்பொழுது நானும் அங்கே நின்றுகொண்டிருக்கிறேன். "தயவு செய்து அடிக்காதீர்கள். நாங்கள் வண்டியிலே ஏறுகிறோம்; அப்பாவு M.L.A. ஏறினால் எல்லோரும் ஏறுகிறோம்; வேறொன்றும் பண்ணப்போவது இல்லை. நானும், மற்ற எல்லோரையும் ஏறச் சொல்கிறேன்; பொறுங்கள்; அடிக்காதீர்கள்" என்று சொன்னேன். உடனே, அதையும் மீறி கடுமையாக அடிக்க ஆரம்பித்த உடனே, நான் அவர்களுக்கு இடையில்போய் உட்கார்ந்து விட்டேன். உடனே, சசிவண்ணன், A.C. என்னை அடித்தார். என் கையிலே அடித்தார். அடித்தபிறகு அவர்கள் எல்லோரையும் வண்டியிலே ஏற்றிக்கொண்டு போய்விட்டார்கள். நான் நேராக ஹைகிரவுண்ட் மருத்துவமனைக்குச் சென்று, காயத்தை மருத்துவமனையில் உள்ள மருத்துவரிடம் காண்பித்தேன். அப்பொழுது காவல் துறையைச் சேர்ந்தவர்கள் அங்கே வந்து, "M.L.A. பொய்ப் புகார் கொடுக்கிறார்; அங்கே சென்று பொய்ப்புகார் கொடுக்கிறார்" என்று சொன்னவுடன், நான் எழுந்து வந்து, சட்டையைப் பிடித்து தூக்கி, "இதோ பாருங்க ஐயா, என் கையைப் பாருங்க" என்றேன். கை வீங்கியிருந்தது. அதன்பின் அவர்கள் ஒன்றுமே சொல்லவில்லை. வெளியிலே போய்விட்டார்கள். அதற்குப் பிறகு நேரடியாக நீதிமன்றத்திற்குப் போனேன். அங்கே என்னைப் பிடித்து வெளியிலே தள்ளிவிட்டார்கள். "எங்களுக்குத் தண்ணீராவது குடிப்பதற்குக் கொடுங்கள்; இரண்டு மணி நேரம், மூன்று மணி நேரம் Court-லே போராடிக் கொண்டிருக்கிறோம்; வண்டியிலேயே அடைத்து வைத்திருக்கிறீர்களே" என்று கேட்டதற்கும் கொடுக்கவில்லை. அந்தநேரத்திலே, அங்கே வக்கீல்களெல்லாம் Judge-இடம்

[திரு. பா. வேல்துரை] [1999 ஏப்ரல் 1

பேசிக்கொண்டிருக்கிறார்கள்; ஜாமீனில் வெளியே கொண்டு வருவதற்கு அதற்கிடையிலே 1½ மணி நேரம், 2 மணி நேரம் எங்களை நீதிமன்றத்திற்கு வெளியிலேவிட்டு, ஒரு F.I.R. போட்டு, என் மேலேயும், அந்த வக்கீல்கள் மீனாட்சிசுந்தரம், பெருமாள் ஆகிய இரண்டு பேர் மேலேயும், எல்லோரையும் கடத்திக்கொண்டு செல்ல முயற்சி செய்ததாகவும், வன்முறையைத் தூண்டியதாகவும், இப்படி ஒரு வழக்கைப் போட்டிருக்கிறார்கள்; பாருங்கள். ஆக, மரியாதை இல்லாமல் காவல் துறையினர், பொதுத்தொண்டு செய்கின்ற ஒரு சட்டமன்ற உறுப்பினரை, எப்படி நடத்த வேண்டும் என்று ஒரு வரைமுறை இல்லாமல் அநியாயமாகத் தாக்கியவர்கள்மீது நீங்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு கோரிக்கையை இந்தச் சட்டமன்றத்தில் எழுப்புவது உண்மையிலே மிகவும் கேவலமான ஒரு நிகழ்ச்சி. இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி இந்த ஆட்சியிலே வரக்கூடாது. முதல்வர் அவர்களுக்குத் தெரியும். இதுபோன்ற தப்பு நடைபெறுவதற்கு நிச்சயமாகச் சம்மதிக்க மாட்டார்கள். இந்த மன்றத்திலே இருப்பவர்களுக்கு நீங்கள்தான் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். நீங்கள் அவர்கள்மீது நல்ல நடவடிக்கை எடுத்து, சரியான நடவடிக்கை எடுத்து, அந்த மக்கள் திருப்தி அடைகின்ற வகையிலே நல்லதொரு முடிவைத் தரவேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

***திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் இருவர் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். நான் அவர்களுக்கு எதிரான கருத்து ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. ஆனால், நானும் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. கோதர் மைதீன் அவர்களும் அந்த மாநகராட்சிக்கு உட்பட்ட தொகுதியைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில், தன்னிலை விளக்கமாக மட்டும் ஒருசில கருத்துக்களை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் Tamil Nadu Urban Bodies Act என்று புதிதாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தோம். அதன் அடிப்படையிலே அமைக்கப்பட்ட பொறுக்குக் குழுவிலே நானும் ஓர் உறுப்பினர். நண்பர், தமிழ் மாநிலக் காங்கிரஸ் உறுப்பினர் ரங்கநாதன் அவர்களும் அதிலே உறுப்பினர். இந்தச் சட்டம், சதுர அடி அடிப்படையில் வரி விதிக்க வேண்டுமென்று ஏகமனதாக



1999 ஏப்ரல் 1] [திரு. அ.லெ. சுப்பிரமணியன்]

நிறைவேற்றப்பட்டது. ஆனால், அதற்கு மக்களிடத்தில் எதிர்ப்பு இருந்த காரணத்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளோடு கலந்துபேசி, முன்பு இருந்த வரி விதிப்பை விட, சொந்த வீடாக இருந்தால், அதைவிட 25 சதவீகிதத்திற்கு மேல் போகாமலும், அதை வாடகைக்கு விட்டால் 50 சதவிகிதத்திற்கு மேல் போகாமலும், கடை போன்று non-residential building ஆக இருந்தால், 100 சதவிகிதத்திற்கு மேல் போகாமலும், தொழிற்கூடமாக இருந்தால், முன்பு இருந்த வரியைவிட 150 சதவிகிதத்திற்கு மேல் போகாமலும் புதிய வரி விதிப்பு இருக்கும் என்று அறிவிப்புச் செய்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிற்குப் பின்னால், 22-2-1999 அன்று, ஏற்கெனவே மாநகராட்சியில் முன்பு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இரத்துச் செய்துவிட்டு. சதவிகித அடிப்படையிலான தீர்வை விதிக்கத் தீர்மானிக்கப்பட்டது என்று, 22-2-1999 அன்றே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள், நானும், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் இருவரும் 25-ஆம் தேதி நெல்லை போனவுடன், 26 ஆம் தேதி திரு. அப்பாவு போராடுவதாகப் பத்திரிகையிலே பார்த்து, 'இப்படிப் போராடத் தேவையில்லை; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்மீது நம்பிக்கை வையுங்கள்; அவர்கள் ஏற்கெனவே அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள்; எனவே, போராட்டம் தேவையில்லை, என்று பொதுமக்களுக்குப் பத்திரிகை வாயிலாக அறிவிப்புக் கொடுத்தோம். 26 ஆம் தேதி காலை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.அப்பாவு அவர்களை நானே நேரில் சந்தித்து "மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிக்கை தந்திருக்கிறார்கள். ஏற்கெனவே அவர்களுடைய முந்தைய மாநகராட்சித் தீர்மானத்தை ரத்துச் செய்து புதிய தீர்மானம் போட்டு இருக்கிறார்கள். ஆகவே, தயவு செய்து நீங்கள் போராட வேண்டாம்" என்று கேட்டுக்கொண்டேன். அந்த நேரத்தில் உறுப்பினர்—(குறுக்கீடு)

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு, நீங்கள் இடையிலே பேசக்கூடாது.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாமன்ற உறுப்பினர் சிந்தா சுப்பிரமணியன் அவருடைய கட்சியைச் சேர்ந்தவர், அவரும் உடனிருந்தார். ஆகவே அவரைக் கேட்டுக்கொண்டேன். அவரும் அதைப் பரிசீலிப்பதாகச் சொன்னார். இருந்தாலும் துரதிருஷ்டவசமாக

அன்று அவர்கள் போராடி இருக்கிறார்கள். அன்றைக்கும் நாங்கள் ஓர் அறிக்கையின் மூலம் "இந்தப் போராட்டம் தேவையில்லை, மக்கள் ஆதரவு தர வேண்டாம்" என்று திரும்பவும் கேட்டுக்கொண்டோம்.

இன்னொன்று, அவர் இந்த மாநகராட்சித் தீர்மானத்தை முதல்வருடைய கவனத்திற்குக் கொண்டு போகவில்லையே என்று ஒரு கேள்வியைக் கேட்டார். 23 ஆம் தேதியும், 24 ஆம் தேதியும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களை வேறு விஷயமாகச் சந்தித்திருந்தார்கள் அப்போது அவரே அதை விளக்கி முதல்வரிடம் நிலைமை என்ன என்று கேட்டிருக்கலாம், அல்லது உள்ளாட்சித் துறை அமைச்சரிடத்திலே விளக்கம் கேட்டு இதற்காக ஓர் அறிவிப்புத் தாருங்கள் என்று கேட்டிருக்கலாம், கேட்கவில்லை. கேட்டிருந்தால் நல்ல விளக்கம் கிடைத்திருக்கும். ஆகவே, நான் குறிப்பிட விரும்புவது எல்லாம், ஒரு மசோதா ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதிலே சில குறைபாடுகள் இருக்கின்றன என்றவுடன் முதல்வர் அவர்கள் உடனடியாக வரிக்குறைப்பு செய்து புதிய வரி விதிப்புபற்றி அறிவிப்புத் தந்திருக்கிறார்கள். அதோடு அறிவாலயத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சந்தித்திருக்கிறார். அப்போது விளக்கம் கேட்டிருக்கலாம். சம்பந்தப்பட்ட இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் அறிக்கை தருகிறோம். நானே அவரிடத்தில் நேரில் கேட்டுக்கொண்டதற்குப் பிறகும் இந்த துரதிருஷ்டவசமான போராட்டம் நடந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் மிக்க வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு இன்னொன்று சொன்னார்கள். இரயில் மறியல் போராட்டத்திற்கு, நாங்கள் திரு. ஏ.எல். சுப்பிரமணியன் தலைமையிலே போனோம், அப்போது கைது செய்யவில்லை என்றார்கள். அப்போது நாங்கள், இரயில் திருநெல்வேலியிலிருந்து புறப்பட வேண்டும். Terminus வேண்டும் என்று 3000 பேர் சேர்ந்து போராடினோம். அவர்களும் வந்தார்கள். போராட்டத்திற்கு முன்னாலேயே மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறை அதிகாரிகள் எல்லோரையும் சந்தித்து 5 நிமிடம், 10 நிமிடம் நாங்கள் ஒரு token strike ஆக இரயிலை மறிக்கப் போகிறோம் என்று அவர்களுக்குச் சொல்லிவிட்டுத்தான் வந்தோம். அதன் பிறகுதான் போராட்டம் நடத்தினோம். இன்னொன்றை





அவர்கள் சொன்னார்கள். அதோடு மட்டுமல்லாமல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னோடும் மாவட்ட ஆட்சித் தலைவரோடும் மேயரோடும் 2, 3 முறை தொலைபேசியில் பேசி, இதற்கு உடனடியாகத் தீர்வு காணவேண்டும் என்று பேசினார்கள். ஒரு நீர்த்தேக்கம் உடைப்பு என்றால், புழல் ஏரி உடைப்பு என்றால்.....

**திரு. பா. வேல்துரை:** இதற்கும், அவர் பேசுவதற்கும் சம்பந்தமே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாவற்றிற்கும் சேர்த்துத்தான் பதில் சொல்லச் சொல்லியிருக்கிறேன். நீங்கள் இடையிலே பேசக்கூடாது. (குறுக்கீடு) யார் சொன்னார்கள்? நீங்கள் இருங்கள். நீங்கள் உட்காருங்கள். இது எல்லாம் சம்பந்தப்பட்டதுதான். வரி விதிப்பிலே தானே ஆரம்பித்தது?

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** புழல் ஏரியில் உடைப்பு என்றால் 3 மணிக்கே எழுந்து மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று உடனடியாக நடவடிக்கை எடுத்த முதல்வர் இந்தியாவிலேயே உண்டு என்றால் அது நம்முடைய முதல்வர் ஒருவர்தான். இந்தப் பிரச்சினைக்கும் தீர்வு கண்டிருப்பார்.

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு"

என்று வள்ளுவர் சொல்லியிருக்கிற மூன்று குணங்கள், தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம்மூன்றையும் பெற்றவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, நம்முடைய நண்பர் திரு. அப்பாவு அவர்கள்.....

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்பாவு. நீங்கள் கொஞ்சம் இருங்கள். அவர் பேசிய பிறகு நீங்கள் எழுந்திருங்கள். இப்போது நீங்கள் உட்காருங்கள்.

[1999 ஏப்ரல் 1

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** Oxygen ஆக அவருடைய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்காகச் செயல்படும் என்றார். மிக்க மகிழ்ச்சி. முதல்வர் வரி விதிப்புக் குறைவு பற்றி நடவடிக்கை எடுத்ததற்குப் பிறகு இந்தப் போராட்டம் தேவையில்லாமல் நடந்துவிட்டது. துரதிருஷ்டவசமான போராட்டம் இது என்பதைக்கூறி விடைபெறுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு, நான் ஒன்று சொல்கிறேன். நீங்கள் அவசரப்படக்கூடாது. எந்தெந்தத் தீர்மானத்தை எப்படி எடுப்பது என்பது பேரவைத் தலைவருடைய உரிமை. நீங்கள் போராட்டம் நடத்தியது இந்த வரி விதிப்பிற்காக. இந்த வரி விதிப்பிலே என்ன நடந்தது என்பதை திரு. அ.லெ. சுப்பிரமணியன் அவர்கள் சொல்லிவிட்டார்கள். நீங்கள் இரண்டு பேருமே, காவல் துறையினர் உங்களை அடித்ததாகச் சொல்லிவிட்டீர்கள். அதற்கு முதலமைச்சர் பதில் சொல்லப் போகிறார். அதனால், இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. தொடர்பு இல்லை என்று நீங்கள் பேசக்கூடாது. இது முறை இல்லை.

**திரு. மு. அப்பாவு:** நான் அதைச் சொல்லவில்லை. எங்களை அடித்ததற்கு நாங்கள் தீர்மானம் தந்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் முறை இல்லை. நீங்கள் பேசுவது முறை இல்லை. நான் நடவடிக்கை எடுப்பேன். நீங்கள் உட்காருங்கள்.

முற்பகல் 11-00

**திரு. மு. அப்பாவு:** அன்றைக்கே அவர்கள் தீர்மானம் கொடுத்து....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் சொன்னார்கள் உங்களுக்கு? என்றைக்கு அதைக் கொடுத்தார்கள் என்று சொல்லட்டுமா? கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) அதை நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. உங்களுடைய தீர்மானத்திலே அவரும் கையெழுத்துப் போட்டிருக்கிறார். (குறுக்கீடு) உங்களுடைய தீர்மானத்திலே அவர் கையெழுத்துப் போட்டிருக்கிறார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அப்பாவு, நீங்கள் பேசக்கூடாது. உங்களுடைய தீர்மானத்திலே, திரு. ஏ.எல். சுப்பிரமணியன் அவர்களும் கையெழுத்துப் போட்டிருக்கிறார். உங்களுக்கு அவர் ஒன்றும் விரோதமானவர் அல்ல. உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



1999 ஏப்ரல் 1]

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை மறியல் யார் செய்தாலும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்குமாறு போலீஸாருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. வால்பாறையிலே, ஆளுங்கட்சியைச் சேர்ந்த M.L.A. சாலை மறியல் செய்து, அவரும் கைது செய்யப்பட்டு, அவர்மீதும் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போது, திரு. அப்பாவு அவர்களும், திரு. வேல்துரை அவர்களும் எழுப்பிய பிரச்சினை, நெல்லையில் நடைபெற்ற சாலை மறியலைப் பற்றியது. அதற்கான காரணம் என்ன என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி திரு. ஏ.எல். சுப்பிரமணியன் அவர்கள் இங்கே விளக்கி இருக்கிறார்கள். கோரிக்கை நிறைவேறிய பிறகு, தேவையற்ற போராட்டம் நடைபெற்றிருக்கிறது. அந்தப் போராட்டத்தின் தொடர்பாக, சில தேவையற்ற சம்பவங்கள் நடைபெற்றதாக திரு. அப்பாவு அவர்களும், திரு. வேல்துரை அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தச் சம்பவங்களைப்பற்றி D.G.P. அவர்கள் மூலமாக விசாரித்து, ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறி, உடைப்பு ஏற்பட்டதை அடைப்பதற்காகச் சென்றதைச் சிலாகித்து திரு. ஏ.எல்.எஸ். பேசினார். சில பேர் உடைப்பு எடுக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அதையும் சேர்த்து நாம் அடைப்போம் என்ற உறுதியைக் கூறி, இந்த அளவிலே என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை மறியலில் அவர்கள் ஈடுபட்டபோது, கைது செய்து, சிறையில் அடைப்பதை நான் வரவேற்கிறேன். அதற்காக அவர்களை அடித்து, துன்புறுத்துவதற்கு நீங்கள் உத்தரவு போட்டிருக்கிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அப்படியெல்லாம் நான் உத்தரவு போட்டால், நான் முதலமைச்சராக இருக்கவே இலாயக்கற்றவன். பெண்களை அடியுங்கள், உதையுங்கள் என்று போலீஸாருக்கு உத்தரவு போட்டேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்னால் பொறுப்பு ஏற்று இப்போதே நான் போலீஸ் அமைச்சர் என்ற முறையில் என் பதவியை இராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களை நான் வருத்தப்படுகின்ற

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1999 ஏப்ரல் 1

அளவுக்குப் பேசியிருப்பதாக அவர்கள் நினைக்க . தேவையில்லை என்று கேட்டுக்கொள்கிறேன். நடந்தது என்ன என்று சொன்னால், இங்கே இருந்து நம்முடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் பொறுப்பானவர்களை அனுப்பி விசாரித்திருக்கிறோம். அன்று போலீஸ் அதிகாரிகள் நடந்து கொண்ட முறை மிகமிகக் கண்டிக்கத்தக்கது என்று உங்களுக்குத் தகவல் வந்திருக்கும்; அதன்மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மேலும் மேலும் இதை வளர்த்துக்கொண்டு போகக் கூடாது என்பதற்காகத் தான் நான் மிகச் சுருக்கமாக, இரத்தினச் சுருக்கமாக நான்கே வார்த்தைகளில் சொன்னேன். கோரிக்கையை நிறைவேற்றிய பிறகு, தேவையற்ற போராட்டம்; அதை யாரும் மறுக்க முடியாது. சாலை மறியல்; அது அரசுக்கோ, மற்ற கட்சிகளுக்கோ உடன்பாடான ஒன்று அல்ல. அது நடைபெற்றிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் குறிப்பிட்டதைப்போல, தேவையற்ற சில சம்பவங்கள் அங்கே நடைபெற்றிருக்கின்றன. அதுபற்றி D.G.P.யைக் கொண்டு விசாரிப்பதாகவும் நான் சொல்லியிருக்கிறேன். எனக்கும் சில தகவல்கள் வந்திருக்கின்றன. போலீஸாரையும் த.மா.கா. உறுப்பினர்கள் தாக்கினார்கள்; த.மா.கா. தொண்டர்கள் தாக்கினார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. அதையெல்லாம் நான் இங்கே சொல்லவில்லை; சொல்லும்படியாக இப்போது வைத்துவிட்டீர்கள். எனவேதான், D.G.P. மூலமாக விசாரித்து நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறேன். இதை ஏற்றுக் கொண்டால் சரி; இல்லாவிட்டால் நீங்கள் என்ன கருத்து சொல்கிறீர்களோ, அதற்கு நான் பதில் கூறத் தயாராக இருக்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** இன்னொன்று.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை. உட்காருங்கள்.



1999 ஏப்ரல் 1]

## 3. புழலேரி உடைப்பு தொடர்பாக முதல்வர் எடுத்த நடவடிக்கைக்குப் பாராட்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புழல் பிரச்சினை என்பது நிச்சயமாக ஒரு பெரிய பிரச்சினை. சென்னைக்கு வரக்கூடிய ஒரு பெரிய சேதம்பற்றி, பெரிய அளவுக்கு வரக்கூடிய குடிநீர்ப் பிரச்சினைபற்றி சாதாரணமாக, முதலமைச்சர் அவர்களுடைய தகவலுக்கு காலை 4 மணிக்கு வந்தவுடனே முதலமைச்சர், அதைச் சரி செய்துவிடுங்கள் என்று அதிகாரிகளிடம் சொல்லியிருந்திருக்க முடியும். ஆனாலும்கூட, அதை அதிகாரிகள் செய்வார்கள் என்ற நம்பிக்கை இருந்தாலும்கூட, முதலமைச்சர் அவர்களுடைய மனது கேட்காமல், அவராகவே சென்று அதைப் பார்த்து, ஆவன செய்திருக்கிறார். அந்தச் சேதம் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற அளவில், அதிகாலை 4 மணிக்கே எழுந்திருந்து, தலைமைச் செயலகத்திற்கு வந்து, தொடர்புடைய அனைத்து அதிகாரிகளையும் அழைத்து வைத்துப் பேசி, அதனால் சட்டமன்றத்திற்குக்கூடக் காலதாமதமாக வரக்கூடிய நிலை அன்று ஏற்பட்டாலும்கூட, அந்த இடத்திற்குத் தானே நேரில் சென்று, ஆலோசனை வழங்கி அந்த அளவுக்கு ஒரு பெரிய சாதனையைச் செய்ததை, மனசாட்சி உள்ள எதிர்க்கட்சி என்ற அளவில் உண்மையிலேயே பாராட்ட வேண்டும். பாராட்ட வேண்டும் என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை; மனசாட்சி உள்ள ஓர் எதிர்க்கட்சி என்ற அளவில் (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாகப் பாராட்டாமல் இருக்க முடியாது என்ற அடிப்படையில், பாரதிய ஜனதாக் கட்சியின் சார்பில் மிக மகிழ்ச்சியோடு எனது பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

## 4. திரு. இரா. தாமரைக்கனி, திரு. சொ. கருப்பசாமி ஆகியோரைப் பேரவைப் பணிகளினின்று நீக்கி வைத்த நாட்களைக் குறைக்கக் கோருதல்

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய அ.இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர் திரு. தாமரைக்கனி அவர்களும், கொறடா திரு. கருப்பசாமி அவர்களும் இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் கலந்துகொள்ளக் கூடாது என்ற உத்தரவைப் பிறப்பித்திருக்கிறீர்கள். அன்றைக்கு சட்டமன்றத்திலே நடந்த நிகழ்ச்சியிலே தாமரைக்கனிக்கு 15 நாட்கள் சிறைத் தண்டனையைக் கொடுத்த உங்களுடைய உத்தரவை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றம் தாமரைக்கனியை ஜாமீனில் விடுதலை செய்ய வேண்டும் என்று உத்தரவு கொடுத்திருக்கிறது. அவரும் ஜாமீனிலே வெளியே வந்திருக்கின்றார். மேலும் அவரைப் பற்றிய வழக்கு தாவாவிலே இருப்பதால் நான் அதைப்பற்றி அதிகமாகப் பேச விரும்பவில்லை. எது எப்படியிருந்தாலும் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களையும் தாங்கள் இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் நீக்கி வைத்ததை மறுபரிசீலனை செய்து, அவர்கள் இந்தக் கூட்டத் தொடரில் கலந்துகொள்ள அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அன்றைக்கு கருப்பசாமியைப் பொறுத்தவரையில் அரசினுடைய செயல்பாடுகளைக் குறை கூறியதற்குப் பிறகு, தாமரைக்கனி அதற்கு விளக்கம் கூறியதற்குப் பிறகு, ஏற்பட்ட தகராறிலே, அவர் தாமரைக்கனியை .... (மணியடிக்கப்பெற்றது).... ஒன்றே ஒன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மறுபரிசீலனை செய்யச் சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள். சம்பவத்தன்று நீங்கள் இல்லை. அதனால் நீங்கள் அதுபற்றிப் பேசக்கூடாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** கருப்பசாமியைப் பொறுத்தவரையில் அவர் எந்தத் தவறுமே செய்யவில்லை. அவரும் அடித்திருக்கிறார் என்று செய்திகள் வந்திருக்கின்றன. ஆகவே, மறுபரிசீலனை செய்து இரண்டு பேர் மீதுள்ள தண்டனையைக் (குறைக்க வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.

**திரு. ஆர். சொக்கர்:** அவைக்கு ஒரு தவறான தகவலைக் கொடுத்துவிடக்கூடாது என்ற காரணத்திற்காக இதை மட்டும் சொல்ல விரும்புகின்றேன். அன்று தாமரைக்கனி, அமைச்சர் அவர்களைத் தாக்கிய பிறகு, நான் இங்கிருந்து திரும்பிப் பார்த்தேன். கருப்பசாமி அவர்கள் தன்னுடைய இருக்கையிலே இருந்து எழுந்து ஓடி வந்து அமைச்சரைத் தாக்குவதற்கு எத்தனித்தார். அருகிலேயிருந்த



உறுப்பினர் திரு. மணியும் மற்ற உறுப்பினர்களும் தடுத்த காரணத்தினாலேதான் அவரால் தாக்க முடியவில்லை. ஆகவே, அவருடைய இடத்திலிருந்து எழுந்து வந்து அவரும் தாக்குதலில் ஈடுபட்டார் என்ற குறிப்பு இடம் பெறவில்லையென்றால் மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் அன்று இல்லை—அவர் சொன்ன தவறான கருத்து மட்டும் குறிப்பிலே இடம்பெற்றுவிடும் என்பதற்காக இந்த விளக்கத்தை நான் சொல்ல விரும்புகின்றேன். (குறுக்கீடுகள்)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இனிமேல் அனுமதி கொடுக்க முடியாது. சுந்தரம் நீங்கள் அன்றைக்கு அவையிலே இல்லை. ஆகையினாலே நீங்கள் உட்காருங்கள். நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்லிவிட்டீர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒரு விளக்கத்தை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்ன விளக்கம் சொல்ல முடியும்? நீங்கள் அன்றைக்கு அவையில் இல்லை. (குறுக்கீடு) நீங்கள் அன்றைக்கு அவையில் இல்லை, உங்களுக்கு அனுமதி கொடுக்க முடியாது.

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (ஆ) மின்தடை, தவிர்க்க நடவடிக்கைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாட்டிலே பல இடங்களில் அடிக்கடி மின்தடை ஏற்படுவது குறித்து ஏராளமான உறுப்பினர்கள்—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. ஜி. பழனிசாமி, திரு. ஜி. நிஜாமுதீன், திரு. அ. அசோகன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. கே. ரவி அருணன், திரு. கே.ஆர். இராமசாமி, திரு. ரா. ஈஸ்வரன், திரு. மு. அப்பாவு, திரு. எஸ்.எஸ். மணி நாடார், டாக்டர் தே. குமாரதாஸ், திரு. செ. இராமலிங்கம், திரு. அ. வெங்கடாசலம், திரு. சி. ஞானசேகரன், திரு. ச. அழகிரி, திரு. ஐ. கணேசன், திரு. சி. வேலாயுதன், திரு. பி.ஆர். சுந்தரம், டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்புக்கு அறிவிப்பு கொடுத்திருக்கின்றார்கள். இதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களை ஒட்டுமொத்தமான பதிலைச் சொல்ல அழைக்கின்றேன்.

**திரு.ச. அழகிரி:** நாங்கள் என்ன குறை என்று தெரிவித்தால்தானே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மின்தடை அடிக்கடி ஏற்படுகிறது அதுதான். இத்தனை பேரையும் பேச அனுமதித்தால் இன்றைக்குக் கல்வித் துறை மானியத்தை எடுத்துக்கொள்ள முடியாது. அதனாலேதான் உங்களுடைய பெயரை எல்லாம் அறிவித்து விட்டேன். நீங்கள் எல்லாம், அமைச்சர் விளக்கம் கொடுத்த பிறகு ஏதாவது கேட்பதாக இருந்தால் கேளுங்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் அடிக்கடி தமிழ்நாட்டிலே மின்சாரத் தடை ஏற்படுகிறது என்பது குறித்து, தங்களிடம் தெரிவித்த தகவலையொட்டி, மின்சார இலாகா அதிகாரிகளிடம் கலந்து பேசிய சிலவற்றை இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகின்றேன். இந்த ஆண்டு புதிதாக தமிழகத்தில் சில தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டிருப்பதாலும், ஒவ்வோர் ஆண்டும் 40,000 மின் இணைப்புகள் விவசாயத்திற்காக புதியதாக வழங்குவதாலும், 500 மெகாவாட் மின்சாரம் நமக்கு ஆண்டுதோறும் கூடுதலாகத் தேவைப்படுகிறது. இதை முன்கூட்டியே முதல்வர் அவர்கள் திட்டமிட்ட காரணத்தினாலே, கடந்த ஆண்டு அக்டோபர் மாதமே, இந்த ஆண்டு தமிழகத்திலே மின்சாரப் பற்றாக்குறை வராமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுங்கள் என்று சொன்னதன்பேரில் — இரண்டு தினங்களுக்கு முன்னாலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த G.M.R. Vasavi நிறுவனம் 200 மெகாவாட் மின்சாரத்தை நமக்கு வழங்கிக் கொண்டு இருக்கிறது. இன்னமும் 300 மெகாவாட் மின்சாரம் இருந்தால்தான், இந்தக் கோடைகாலத்திலே நாம் மின்சாரம் பற்றாக்குறையைச் சமாளிக்க முடியும் என்று திட்டமிட்டு, அக்டோபர் மாதமே நானும், மின் வாரியத் தலைவர் அவர்களும், உறுப்பினர்களும் மகாராஷ்டிரம் சென்று, 2 நாட்கள் தங்கி இருந்து துணை முதலமைச்சரைச் சந்தித்து, பேச்சுவார்த்தை நடத்தி 200 மெகாவாட் மின்சாரம் தமிழகத்திற்குத் தொடர்ந்து பெறுவதற்கான ஒப்பந்தத்திலே கையெழுத்துப் போட்டுவிட்டு வந்தோம்.

முற்பகல் 11-10

அதைபோலவே, மேலும் 100 மெகாவாட் மின்சாரம் நமக்குத் தேவைப்படுகிறது என்பதால், பஞ்சாப் மாநிலத்தோடு தொடர்பு



கொண்டு, அந்த மாநிலத்திலிருந்தும் 100 மெகாவாட் மின்சாரத்தை நாம் இப்போது தொடர்ந்து பெற்றுக் கொண்டிருக்கின்றோம்.

தமிழகத்திலே, எந்தப் பிரச்சினையும் இல்லை என்று சொன்னால், நமக்கு இருக்கின்ற மின்சாரம் போதும். எந்தவிதமான இடையூறும் இல்லாமல் மின்சாரத்தை வழங்க முடியும். ஆனால், கர்நாடகம், ஆந்திரா ஆகிய மாநிலங்களிலே மின்சாரப் பற்றாக்குறை அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, அவர்கள் சில நேரங்களில் overdraw செய்துவிடுகிறார்கள். அதிக மின்சாரத்தை உறிஞ்சிவிடுகிறார்கள். இதுக் குறித்து Southern Grid-க்கும் நம்முடைய மின்சார வாரியம் புகார் செய்திருக்கிறது. Indian Electricity Act என்ன சொல்கிறது என்றால் மின் அலைகள், அதாவது Frequency 49.5-லிருந்து 50.5-க்குக் குறையாமல் இந்தியாவில் இருக்கக்கூடிய எல்லா மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என்று சொல்கிறது. ஆனால், இதை ஒரு மாநிலம்கூடப் பின்பற்றுவதில்லை. ஏனென்றால், இந்தியாவிலே மராட்டிய மாநிலத்தைத் தவிர, பஞ்சாப் மாநிலத்தைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் surplus இல்லை. ஆகவே, கர்நாடகம், ஆந்திரா ஆகிய மாநிலங்களிலே அவர்கள், frequency-யை எந்த அளவிலே வைக்கப் போகிறார்கள் என்பதைச் சொல்ல மறுக்கிறார்கள். அதற்காக, மின்சார வாரியம் மறுபடியும் இறங்கி வந்து, குறைந்தது 48.5 என்ற அளவிலே உங்களுடைய frequency-யை வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னது. அவர்கள் அதையும் கேட்கவில்லை. அதனுடைய விளைவு கடந்த வாரம் இரண்டு மணி நேரம் மின்சாரத் தடங்கல் தமிழகம் முழுவதையும் பாதிக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து 4 மாநில மின் வாரியத் தலைவர்களும் கலந்து பேசி, குறைந்தபட்சம் 47.9 என்ற அளவிலே அந்த frequency-யை நாம் வைத்துக்கொள்ளலாம் என்று திட்டமிட்டோம். ஆனால், கேரளம், தமிழகத்தை தவிர, ஆந்திரம், கர்நாடகம் இதையும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையிலேதான் 47.9-க்கும் கீழே நாம் frequency வைத்தால் அடிக்கடி மின்சாரத் தடங்கல் ஏற்படும். எனவே, நாம் குறைந்தபட்சம் frequency maintain செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதனால்தான் பல இடங்களிலே அடிக்கடி மின் கோளாறு ஏற்படுகிறது. இதையெல்லாம் சரிசெய்வதற்காக என்ன செய்யலாம் என்று ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள், அதிகாரிகள் கொண்ட ஒரு குழுவை அமைத்து, வாரந்தோறும் இதைப் பரிசீலிக்கச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களும் நம்முடைய தலைமைச் செயலாளர் தலைமையிலே அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதனால்தான், நேற்றையதினம்கூட இந்த அவையிலே நான் ஓர் அறிவிப்புச் செய்தேன். கோடைகாலத்திலே எப்போதும்போல, தமிழகத்திலே, விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற மின்சாரம் பகல் நேரத்திலே 6 மணி நேரத்திற்குப் பதிலாக 4 மணி நேரம் என்று அறிவித்தால், அதன்மூலம் 150 மெகாவாட் மின்சாரம் நமக்கு மிச்சமாகும், அதை வைத்துக்கொண்டு தமிழகத்திலே ஏற்படுகின்ற மின் தடங்கல்களைச் சரி செய்துகொள்ளலாம் என்று மின்சார வாரியம் கருதியது. அதையும் நாங்கள் இப்போது அமல்படுத்தியிருக்கின்றோம்.

இதற்கிடையிலே எதிர்பாராதவிதமாக ஏதாவது தடை, ஒரு நாளைக்கு ஒரு தடங்கல் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். இன்று காலையிலே 5.55 மணிக்கெல்லாம் மின்வாரிய உறுப்பினர் (பகிர்மானம்) -- Distribution -- அவர்கள் தொலைபேசியிலே சொல்கிறார்கள், நெய்வேலியில் ஒரு யூனிட் Sudden break-down ஆகிவிட்டது என்று. அப்படி break-down ஆகிவிட்டால் உடனே 210 மெகாவாட் மின்சாரம் நமக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுவிடுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே நாம் இருந்து கொண்டிருக்கிறோம்.

இந்தியாவிலேயே பல மாநிலங்களில் 6 மணி நேரம், 8 மணி நேரம் மின்சாரம் இல்லாமல் இருக்கிறார்கள். இருந்தாலும்கூட, தமிழ்நாட்டிலே அப்படிப்பட்ட நிலைமை இருக்கக்கூடாது என்று நாங்கள் எவ்வளவோ திட்டமிட்டிருந்தும் இப்படித் தடங்கல்கள் சில இடங்களில் ஏற்படுகின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்திருக்கின்ற இந்தப் பிரச்சினையை மனதிலேகொண்டு நாளை முதல் தமிழகத்திலே எந்த இடத்திலேயும் மின்சாரத் தடை இல்லாமல் பார்த்துக்கொள்வதற்கு உரிய அறிவுரைகளை மின்சார வாரியத்திற்கு வழங்கியிருக்கின்றோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் 2, 3 நாட்கள் கழித்து மறுபடியும் மின் தடங்கல்கள் ஏற்படுமானால், அதைப்பற்றி அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். ஆனால், அதிலும் ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். காலையிலே, மாலையிலே ஒவ்வொரு மணி நேரம் நாம் மின்சாரத்தை அந்தந்தப் பகுதிகளிலே நிறுத்தி வைப்பதற்கான உத்தரவும் போட்டிருக்கின்றோம். வேறு எங்கேயாவது தடங்கல்கள் இருக்குமானால், அதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், நிச்சயமாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, பொதுவாக தமிழகத்தில் மின் தடை இல்லாமல் இருப்பதற்கு வேண்டிய





உரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதற்கு மின்சார வாரியமும் மின்சார வாரியத்தினுடைய அதிகாரிகளும் இரவுபகலாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

*(திரு ச. அழகிரி மற்றும் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் எழுந்து நின்றனர்)*

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி எழுந்து நின்றால் இந்த விவாதம் எப்போது முடியும்? இப்போதே மணி 11.15 மணி ஆகிறது. கல்வி அமைச்சர் ஒரு மணி நேரமாவது பதில் அளிக்க வேண்டும் என்கிறார். நான் வாய்ப்புக் கொடுத்தால் எல்லோருக்கும் கொடுக்க வேண்டும். நீங்கள் நேரடியாக அமைச்சரைப் போய்ப் பாருங்கள். கல்வி மானியத்தின்மீது விவாதம் தொடர்ச்சியாக நடக்கின்றது.

## 5. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

### கோரிக்கை எண் 17—கல்வி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டினுடைய மொத்தச் செலவு ரூ.18,500 கோடியிலே ரூ. 4,144 கோடி, அதாவது மொத்தச் செலவிலே 23 சதவிகிதம் கல்விக்காக இந்த அரசு ஒதுக்கி இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அதே சமயத்தில் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற இந்தத் தொகையானது முழுவதுமாக கல்வி வளர்ச்சிக்காக மட்டும்தான் பயன்படுகிறதா, இல்லை ஆசிரியர்களுக்கு ஊதியமாகப் போகிறதா என்று பார்த்தால் இதிலே பெரும் பகுதி ஆசிரியர்களுக்கு ஊதியமாகப் போகிறது என்புதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எனவே அடுத்த ஆண்டு கல்விக்காக ஒதுக்குகிற தொகையை 30 சதவிகிதமாக ஒதுக்கினால் சிறப்பாக இருக்குமென்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்கலைக்கழகங்களுக்கு நாம் ஆண்டுதோறும் கொடுக்கக்கூடிய உதவித் தொகை பற்றிய விவரங்கள் இங்கே இருக்கின்றன. இதற்கு முந்தைய ஆண்டுகளிலே பல்கலைக்கழகங்களுக்கு ரூ.138 கோடி, ரூ.140 கோடி என்ற அளவிற்குத்தான் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த ஆண்டு அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை ரூ.375 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இது ஏனென்று தெரிந்துகொள்வதற்காகப் பக்கங்களைப் புரட்டியபோது, அதற்கு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. என்னவென்று சொன்னால், பல்கலைக்கழகங்களையும், பொறியியல் கல்லூரிகள், பல் தொழில்நுட்பப் பயிற்சிப் பள்ளிகளையும் சேர்த்து, ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கும், பள்ளி ஆசிரியர்களுக்கும் புதிய சம்பள விகிதம் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தியதால் மதிப்பீடு உயர்ந்துள்ளது என்று விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆக, நாம் எவ்வளவு உயர்த்தினாலும் அது சம்பளத்திற்காகப் போய்ச் சேர்கிறதேயொழிய, வளர்ச்சிக்குப் போய் சேர்வது குறைவாக இருக்கிறது என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அரசினுடைய மொத்தச் செலவில் குறிப்பாக உயர் கல்விக்காக 2.57 சதவிகிதம் சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு 4.8 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதாவது சுமார் 90 சதவிகிதம் உயர் கல்விக்காக உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று பொதுமக்கள் எந்தப் போராட்டம் நடத்தினாலும் — ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதுபோல் எங்களுக்கும் கொடுங்கள் என்று பேசிக்கொள்கிறார்கள். அந்த அளவிற்கு ஆசிரியர்களுக்கு நல்ல ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நேரத்தில் ஆசிரியர்கள் தங்களுடைய கடமையைச் செவ்வனே செய்ய வேண்டுமென்பதைப்பற்றி இந்தக் கொள்கைக் குறிப்பிலே நம்முடைய கல்வி அமைச்சரவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். கொள்கை விளக்கக் குறிப்பினுடைய 2 ஆம் பக்கத்தில் 'Introducing shift system in colleges will enable optimisation/maximisation of the infrastructure facilities like buildings and equipments. Grants-in-aid will be linked to performance criteria to improve quality and instil a sense of accountability.' என்று சொல்லியிருக்கிறார்கள். முதன்முறையாக ஆசிரியர்களிடமிருந்து இதுபோன்ற accountability-ஐ எதிர்பார்க்கிற



இந்தக் கருத்து வரவேற்கத்தக்க கருத்து என்று நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

தமிழகத்திலுள்ள பல கல்லூரிகளிலே இப்போது காலியிடங்கள் நிறைய இருக்கின்றன. அதாவது ஆசிரியர் பணியிடங்கள். அவற்றை நிரப்புவதற்கு அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்குகூட சென்னைப் பல்கலைக்கழகத்தைப்பற்றி டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்கள் 42.5 சதவிகிதம் சென்னைப் பல்கலைக்கழகத்திலே காலியிடங்கள் இருக்கின்றன அவை நிரப்பப்படாமல் இருக்கின்றன என்ற ஒரு கருத்தை இன்றைய தினமணி பத்திரிகையிலே அவர் எழுதிய கட்டுரையிலே வெளியிட்டிருக்கிறார்கள்.

தமிழகத்திலே 409 கலை அறிவியல் கல்லூரிகள் இருக்கின்றன. அதிலே உதவி பெறாத கல்லூரிகள் 161. அரசுக் கல்லூரிகள் 61. ஆக, ஒட்டுமொத்தமாக அரசினுடைய உதவியில்லாமல் நடக்கிற கல்லூரிகளுக்கு, அதனுடைய தாளாளர்களுக்கு பல்கலைக்கழகத்திலே அவர்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பில்லை. இந்த 409 கல்லூரிகளிலே 342 கல்லூரிகளைச் சார்ந்த தாளாளர்களுக்கு அவர்களுடைய கோரிக்கைகளைப் பல்கலைக்கழகத்திலே சொல்வதற்கு இன்றைக்கு வாய்ப்பில்லாத நிலை இருப்பதை நாம் பார்க்கிறோம். இதன் விளைவாகத்தான் அண்மையிலே சென்னைப் பல்கலைக்கழகத்திலே ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அதனுடைய துணை வேந்தர் அவர்கள் இரவு 11.00 மணிவரை இருந்து 50 பேருக்கு ஒரே நேரத்திலே பதவி உயர்வுக்காகக் கையெழுத்துப் போட வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது என்று நான் கேள்விப்படுகிறேன். அது எவ்வளவு தூரத்திற்கு உண்மை என்பதை அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய Pro-Chancellor ஆக இருக்கிற கல்வி அமைச்சர் அவர்கள்தான் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதற்கடுத்து, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த துணை வேந்தர் அவர்கள் பல்கலைக்கழகத்தைப் பற்றி இன்றையதினம் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். பல்கலைக்கழக ஆட்சிமன்றக் கூட்டத்திற்குச் செல்லும்போது சர்க்கஸ் கூடாரத்திற்குள் செல்வதுபோன்ற பிரமை ஏற்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டும் அல்ல, துணை வேந்தரைப் பார்த்து ‘முட்டாள்’ என்று உறுப்பினர்கள் தரக்குறைவாகக் கூறுகின்றனர். இந்த நிலையில் துணை

வேந்தரோ யாரும் இல்லாத அனாதைபோலச் செயல்படுகிறார். அராஜகம் செய்யும் உறுப்பினர்களைத் தண்டிக்க என்ன ஆயுதம் உள்ளது? துணை வேந்தர், பேருக்குத்தான் துணை வேந்தர் என்ற நிலைமையில் செயல்பட வேண்டியிருக்கிறது. ஆட்சிமன்றக் கூட்டத்தை நடத்தி முடிப்பது என்பது, துணை வேந்தருக்குப் பெரும் பணியாக இருக்கிறது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தமட்டிலே இதற்கு என்ன காரணம் என்று சொன்னால், இந்த ஆட்சிமன்றக் குழுவிலே தனியார் கல்லூரிகளைச் சேர்ந்த தாளாளர்களுக்கும் அதிக இடம் ஒதுக்கப்படும் என்று சொன்னால் அவர்கள் இந்த நிலைமை வராமல் பார்த்துக்கொள்வார்கள். ஆக, இந்த ஏற்பாட்டை அரசு செய்ய முன்வர வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, கல்லூரி ஆசிரியர்களுக்கு ஏறத்தாழ 20,000 ரூபாய், 25,000 ரூபாய்வரை நாம் சம்பளமாகக் கொடுக்கிறோம். பல்கலைக்கழக மானியக் குழு 180 நாள் அவர்கள் பணியாற்ற வேண்டுமென்று சொல்கிறது. ஆனால், கல்வி இலாகா என்பது, குறிப்பாக கல்லூரிக் கல்வி இலாகா என்பது Vacation Department. இந்த Vacation Department-லே உள்ள கல்லூரியிலே பணியாற்றுகிற ஆசிரியர்கள் சட்டப்படி, உரிமைப்படி விடுமுறை எடுத்துக்கொள்வது என்று வைத்துக் கொண்டால் Vacation 90 நாள், வார விடுமுறை 80 நாள், அங்கீகரிக்கப்பட்ட அரசு விடுமுறை 20 நாள், On duty 15 நாள், மருத்துவ விடுப்பு 20 நாள், E.L. 11 நாள் Un-earned leave 10 நாள், Casual Leave 14 நாள், வேலை நிறுத்தத்திற்கு ஈடு செய்வதாகச் சொல்லி அதற்காக எடுக்கிற விடுப்பு 15 நாள்; ஆக ஓர் ஆண்டிலே மொத்தம் 275 நாட்கள் அவர்கள் உரிமையோடு, யாருடைய தயவும் இல்லாமல் விடுப்பு எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆக, 365-லே 275-ஐக் கழித்துவிட்டால் 90 நாட்கள்தான் ஆசிரியர்கள் தற்போது கல்லூரியிலே வேலை செய்கிறார்கள், இந்தச் சம்பளத்திற்கு. ஆகையினாலே, இதையும் நீங்கள் கருத்திலே கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிற அதே நேரத்திலே, இந்தக் கல்லூரி நாட்களைக் கொஞ்சம் அதிகப்படுத்த வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் பலமுறை, இந்த மன்றத்திலே shift முறையை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். இந்த மானியக் கோரிக்கையிலே நீங்கள் அதை ஏற்றுக்கொண்டு அமல்படுத்தியிருப்பது என்னுடைய



கோரிக்கையை ஏற்றுக்கொண்டதாகவே எண்ணி நான் மகிழ்ச்சியடைகிறேன்.

முற்பகல் 11-25

நேற்றையதினம் இங்கே பேசிய ஒருவர் கல்லூரிக் கல்வித் துறைக்கு I.A.S. அதிகாரிகள் வரக்கூடாது என்ற ஒரு கருத்தைத் தெரிவித்தார். ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலைமையிலே யார் கல்லூரிக் கல்வி இயக்குநராக வரமுடியும் என்று சொன்னால் 67 அரசுக் கல்லூரிகளிலே இருக்கிற முதல்வர்கள் பதவி உயர்வு பெற்று அவர்கள்தான் இயக்குநராக வரமுடியுமேயொழிய மீதமிருக்கிற உதவி பெறும் கல்லூரிகளிலேயிருந்து யாரும் இந்தப் பதவிக்கு வர முடியாது. ஆகையினாலே அவர்களும் இந்தப் பதவிக்கு வர முடியும் என்று... (மணியடிக்கப்பெற்றது) இன்னும் 10 நிமிடங்கள் வேண்டும்; இப்போதுதான் பேச ஆரம்பித்திருக்கிறேன். இன்னும் 10 நிமிடங்கள் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 10 நிமிடங்கள் கொடுக்க முடியாது; 5 நிமிடத்திலே பேசி முடிக்க வேண்டும்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** ஆக, அந்த உதவி பெறும் கல்லூரிகளிலே இருக்கின்ற முதல்வர்களுக்கும் இந்த வாய்ப்பினை நீங்கள் அளிக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பல்கலைக்கழகங்களுடைய நிலைமையைப் பரிசீலிப்பதற்காக State Council for Higher Education—மாநில உயர் கல்விக் குழு நிறுவ வேண்டும் என்று கேட்டு, அது ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறுவப்பட்டிருக்கிறது. ஆனால், மாநில உயர் கல்விக் குழு என்ன பணியாற்றுகிறது என்ற விவரங்கள் இந்த மானியக் கோரிக்கை கொள்கைக் குறிப்பிலே இல்லை. அவர்கள் பல்கலைக்கழகங்களை நெறிப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். அண்மையிலே சென்னைக்கு வந்த Union Secretary திரு. தாஸ் குப்தா அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பல்கலைக்கழகங்கள் எல்லாம் ரொம்ப பழையகாலச் சட்டங்களை வைத்துக்கொண்டு செயல்படுகின்றன. அதை முழுமையாக மாற்றியமைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். எனவே, அந்தப் பணிகளை இந்த State Council for Higher Education செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர் கல்வி ஆய்வு மன்றம் குறித்து அதிகமாக விவரித்துப் பேச வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்போதே நான் தெரிவிக்க விரும்புகிறேன். அந்தக் குழு மாதந்தோறும் கூடிப் பல்கலைக்கழகங்களுக்குக் கல்வி முறைகளிலே என்னென்ன மாற்றங்கள் வேண்டும் என்பதையும், கல்லூரிக் கல்வித் திட்டத்தின்படி மாற்றங்களையும், மாணவர்கள் சேர்க்கையில் முறை வைக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும், அண்மையிலே பொறியியல் கல்லூரி மாணவர்கள் எல்லாம் Single Window System-ல் சேர்க்கப்படுவதற்கான அந்த முறையையும், இப்படிப்பட்ட பல்வேறு ஆலோசனைகளை மாதந்தோறும் வழங்கிக்கொண்டிருக்கிறது. துணை வேந்தர்களோடு கலந்து பல்கலைக்கழகத்திலே ஏற்பட்டிருக்கிற பல்வேறு பிரச்சினைகள் குறித்து, தேர்வுகள் நடத்துவதைக் குறித்து, பாடத் திட்டத்தைக் குறித்து, பல்வேறு ஆலோசனைகளை அடிக்கடி அவர்கள் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதன் மூலமாகக் கல்வித் தரம் உயருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசுப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் zero per cent தேர்வு பெற்ற பள்ளியோ, கல்லூரியோ ஏதேனும் இருக்கும் என்று சொன்னால் அதை ஆராய்ந்து, ஏன் அவ்வாறு ஏற்பட்டது என்பதை ஆராய்ந்து, அதற்குத் தக்க முடிவுகளை எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, நாணய ஆராய்ச்சிக்குச் செல்கிற மாணவர்களிடம் அருங்காட்சியகங்களிலே 500 ரூபாய் பணம் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அது கட்டணமாக இல்லாமல், deposit ஆக இருந்தால் திரும்பப்பெற்றுக்கொள்ள முடியும் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன் (மணியடிக்கப்பெற்றது). 5 நிமிடத்திலே பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே 5 நிமிடங்களாயிற்று. 2 நிமிடத்திலே பேசி முடியுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** அதுமட்டுமல்லாமல், அரசுக் கல்லூரிகளில் கணினிப் பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்கள் நிரந்தரம் ஆக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களைத் தொகுப்பூதியப் பணியாளர்களாக மாற்றுவதற்கு அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நடத்தும் திறந்தவெளிப் பல்கலைக்கழகத்திலே B.Ed. பட்டம் பெற்றவர்களுக்கு, மற்ற பல்கலைக்கழகங்களைப்போல சலுகைகள், வாய்ப்புகள், பதவி உயர்வு அளிக்கப்படுவதில்லை. ஒரு வேளை இந்தப் பட்டம் இந்த அரசாலோ அல்லது மத்திய அரசாலோ அங்கீகரிக்கப்படவில்லையோ என்ற சந்தேகம்கூட எழுகிறது. அதையும் நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

பேரவைத் துணைத் தலைவரவர்களே, நேற்றையதினம் இங்கே காமராஜ் சத்துணவு பற்றிய பேச்சு வந்தபொழுது அந்தப் பெயரோடு பல பெயர்களையும் சேர்க்க வேண்டிய ஒரு நிலை ஏற்படுமென்று கல்வியமைச்சரவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். அது உண்மைதான். அப்படிச் சேர்க்காமல், அதற்கு காமராஜ் பெயரை மட்டுமே வைத்துக் கொள்ள முடியுமென்று சொன்னால், அதை ஏற்றுக் கொள்ளலாம். இல்லையென்று சொன்னால், மற்ற பெயர்களைச் சேர்ப்பது, அவருக்குக் கீழே பணியாற்றியவர்கள் பெயர்களையெல்லாம் சேர்ப்பது பொருத்தமாக இருக்காது என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

பள்ளிகளிலே தமிழ் சொல்லிக் கொடுப்பதற்குத் தமிழ்ப் புலவர்களெல்லாம் இருக்கிறார்கள். ஆனால், கணக்கு, வாத்தியார்தான் ஆங்கிலம் சொல்லிக் கொடுக்க வேண்டும், அல்லது வேறு பாடம் சொல்லிக் கொடுக்கிற வாத்தியார்தான் ஆங்கிலம் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. இதை மாற்றி ஆங்கிலத்தை மொழிப் பாடமாக எடுத்துப் படித்தவர்தான் ஆங்கிலம் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற நிலைமை இருக்குமென்று சொன்னால், கண்டிப்பாக ஆங்கிலத்திலே நல்ல புலமையேற்படும் என்று கூறிக்கொள்கிறேன் (மணியடிக்கப்பெற்றது).

அண்மையிலே, நம்முடைய பேரவைத் தலைவரவர்கள், கிண்டி ஜிம்கானாவிலே பேசுகின்றபொழுது, நம்முடைய மொழிக் கொள்கை பற்றி ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். நமது மொழிக் கொள்கை காரணமாக ஆங்கிலக் கல்வி பின்தங்கிப் போய்விட்டது, வேறு மொழிகளைப் படிக்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது என்றுகூட அவர்கள் மும்மொழிக் கொள்கையை ஆதரிப்பதுபோல, ஒரு கருத்தை

[திரு. வி.கே. லட்சுமணன்] [1999 ஏப்ரல் 1

வெளியிட்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, ஆங்கிலத்தைப் பயில்வதற்கு இது சரியான முறையாக இருக்குமென்று நான் உங்கள் மத்தியிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. உட்காருங்கள். திரு. தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின்மீது எனது கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். கல்வியினுடைய சிறப்பியல்புகளைப்பற்றிப் பேச வந்த நாலடியார்,

"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு."

என்று சொல்லி, புற அழகுகளைவிட அறிவை மேம்படுத்தக்கூடிய கல்வியே பேரழகு வாய்ந்தது என்று மிகச் சிறப்பித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நாலடியார் கருத்துக்கிணங்க கல்வித் துறையில் தமிழக அரசானது பல்வேறு சிறப்பான திட்டங்களைத் திட்டி, குழந்தைக் கல்வி, குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கின்ற தொடக்கக் கல்வி, விழிப்புணர்ச்சி முகாம் திட்டங்கள், அதேபோல, படிக்கின்ற மாணவர்களிடையே நிலவுகின்ற சிலபல நோய்களை அகற்றக்கூடிய வாழ்வொளித் திட்டம், அதேபோல மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி இடங்கள் முழுமையாக கிராமப்புறங்களிலே படிக்கின்ற மாணவர்களுக்கு மட்டுமே கிடைத்திடல் வேண்டுமென்று திட்டமிடல் இவையெல்லாம் பாராட்டத்தக்க பல்வேறு அம்சங்களைப் பெற்றிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிக்கிறேன்.

அதேநேரத்திலே, சில பிரச்சினைகளையும் தமிழக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் ஆசைப்படுகிறேன். கடந்த 50 ஆண்டு காலமாகத் தமிழகத்தினுடைய பல்கலைக்கழகங்களுடைய செயல்பாடுகள் குறித்தும், நிலை குறித்தும் எந்தவிதமான ஆய்வும் செய்யப்படவில்லை என்ற ஒரு கருத்து நிலவுகிறது. இன்றைக்கு டாக்டர் வா.செ. குழந்தைசாமி அவர்கள்கூட, இந்தக் கருத்தினை வலியுறுத்தி ஓர் உயர்மட்டக் குழு அமைத்து அவற்றையெல்லாம் சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். காரணம்



1999 ஏப்ரல் 1] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

என்னவென்று சொன்னால், இப்போது பல பல்கலைக்கழகங்களில், குறிப்பாக சென்னைப் பல்கலைக்கழகத்திலே, இட ஒதுக்கீடு முறை சரியாக அமலாக்கப்படுவது இல்லை. ஏறக்குறைய அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 205 என்றால், அந்த 205 இடங்களும் காலியாகவே இருக்கின்றன. அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் 42½ சதவிகிதம் பூர்த்தி செய்யப்படாமலே இருக்கின்றது என்ற ஒரு நிலைமையையும் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். எனவே, ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட வேண்டும்.

தமிழகத்திலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் இப்போது ஒரேமாதிரியான சட்டம் இல்லை. அப்படி ஒரே மாதிரியான சட்டம் இயற்றப்படுகின்றபொழுதுதான் அந்த இட ஒதுக்கீடு போன்ற பல பிரச்சினைகளைச் சரி செய்ய வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே அரசினுடைய கவனத்திற்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னைப் பல்கலைக்கழகத்திலே நிர்வாக வசதிக்காக Academic Council Senate என்று இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. இவை இரண்டும் கிட்டத்தட்ட ஒரேவிதமான பணிகளையே செய்கின்றன. கல்விக் குழுவிலே இருப்பவர்கள்தான் பெரும்பாலும் பேரவையிலேயும் இடம் பெற்றிருக்கிறார்கள் ஆக, இப்படி இருக்கின்ற இந்த அமைப்பானது நிர்வாக வசதிக்காக என்று அமைக்கப்பட்ட ஒரு நிலைமை இருக்கிறது. மிக அதிகமான உறுப்பினர்கள் அதாவது Academic Council-ல் சுமார் 300 பேர்களும், Senate-ல் சுமார் 240 பேர்களும் இருக்கின்ற காரணத்தினாலே, சில நேரங்களில் நிர்வாகத்தை இடியாப்பச் சிக்கலுக்கு இழுத்துச் சென்றுவிடுகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அந்த உறுப்பினர்களுடைய எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

முற்பகல் 11-35

அதேபோன்று ஆட்சிமன்றக் குழுவாக இருக்கின்ற Syndicate-ல் இருவேறு முறைகளில், அதாவது Disproportionate representation என்று சொல்வார்களே, சமச்சீரற்ற பிரதிநிதித்துவம், அப்படிச் சமச்சீரற்ற பிரதிநிதித்துவம் நிலவுகிற காரணத்தாலே, அந்த ஆட்சிமன்றக் குழுவிற்கு, ஒன்று தேர்தல் மூலமாக உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும், இல்லையென்று சொன்னால், வேந்தர் நியமன முறையின் மூலமாகத்

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1999 ஏப்ரல் 1

தேர்வு செய்யப்பட வேண்டும். இந்த இரண்டின் மூலமாகவும் தேர்வு செய்யப்படுகின்ற ஒரு முறை இருக்கின்ற காரணத்தாலே பல்கலைக்கழகத்திலே இருக்கின்ற பேராசிரியர்களே அதில் நிரம்ப இருக்கின்ற வாய்ப்பைப் பெறுகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, சில நேரங்களிலே, இங்கே அரசியலில் கூட்டணி அமைப்பதைப்போல, அங்கே ஆசிரியர்களுக்குள்ளே சில வேண்டத்தகாத கூட்டணியை அமைத்துக்கொண்டு, நிர்வாகத்திற்குச் சிக்கல்களை ஏற்படுத்துகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அதேபோல, புற்றீசல்களைப் போலப் பெருகிவருகின்ற சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளைப் பற்றியும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். இப்போது அந்த சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் மூலமாக நிறைய மாணவர்களுக்குப் படிக்கின்ற வாய்ப்புக் கிடைக்கிறது என்று சொன்னாலும்கூட, அந்த சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் இலாப நோக்கத்தை வைத்துச் செயல்படுகின்ற காரணத்தாலே, அதை வரைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. அவர்கள் அரசு நிர்ணயித்த மாணவர் கட்டணத்தையும் வசூலிப்பதில்லை; ஆசிரியர்களுக்குப் போதுமான ஊதியத்தையும் வழங்குவதில்லை. அண்மையில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் மூலமாக நியமனம் செய்யப்பட்ட குழுவானது, இந்த சுயநிதிக் கல்லூரிகளையெல்லாம் ஆய்வு செய்தபோது, அதிர்ச்சிதரத்தக்க பல்வேறு செய்திகள் அம்பலமாகியிருக்கின்றன. அவர்கள் கட்டணம் வசூலிக்கிறபோது - உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்கிறேன் - இருவிதமான முறைகளில் கட்டணம் வசூலிக்கிறார்கள். Medical Fees என்று வாங்குகிறார்கள். இது இல்லாமல் Health Fees என்றும் வாங்குகிறார்கள். Medical Fees, Health Fees என்கிற இரண்டும் ஒன்றுதான். இருந்தாலும், இரண்டையும் வசூலிக்கிறார்கள். இப்படி ஏதோ ஒரு வகையில், கட்டணத்தை மாணவர்களிடமிருந்து கறக்க வேண்டும் என்பதற்காக, வேடிக்கையான கட்டணங்களையெல்லாம் அரசு நிர்ணயித்த கட்டணத்தை விடக் கொஞ்சம் கூடுதலாக அவர்கள் வசூலித்துக்கொண்டு கொள்ளை இலாபம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் செயல்பட்டு, Minority நிறுவனங்களாக இருந்தால் ஆண்டுக்கு சுமார் 5 கோடியும், ஏனைய நிறுவனங்களாக இருந்தால் சுமார் 2 கோடிக்கு



1999 ஏப்ரல் 1] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

மேலும் தற்போது லாபத்தை ஈட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அரசினுடைய இட ஒதுக்கீட்டை அவர்கள் கடைப்பிடிப்பதே கிடையாது. அந்த இட ஒதுக்கீட்டு முறை கடைப்பிடிக்கப்படாதது மட்டுமல்லாமல், அனுமதிக்கப்படாத இடங்களில் எல்லாம்—இன்றைக்கு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஓர் அறிவிப்புச் செய்திருக்கிறது - அறிவிக்கப்படாத இடங்களில் எல்லாம், அனுமதிக்கப்படாத இடங்களில் எல்லாம் அந்தக் கல்லூரிகளைக் கட்டிக்கொண்டு, முறையற்ற வகையில் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அவற்றை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட இடங்களில் அனுமதி பெற்றுவிட்டு, சிறிது காலம் பொறுத்து, அதைக் கொண்டுவந்து நகர்ப்புறங்களில் மாற்றிவிடுகிறார்கள். உதாரணத்திற்கு, உத்திரமேரூர் பகுதியில் தொடங்கப்பட்ட ஒரு கல்லூரி, இப்போது மாங்காடு பகுதிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இதற்கு AICTE-யினுடைய அனுமதி பெறப்பட்டிருக்கிறதா என்பது தெரியவில்லை. ஆகவே, இதையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது ஒற்றைச் சாளர முறையை அறிமுகப்படுத்தியதன் மூலமாக B.E. போன்ற படிப்புகளிலும், B.Ed. போன்ற படிப்புகளிலும், Polytechnic-களிலும் பல்லாயிரக்கணக்கான பேர் இட ஒதுக்கீட்டு முறையின் மூலமாக, 50 சதவிகித இட ஒதுக்கீட்டை நுகர்வதற்கு, பயன்படுத்துவதற்கு அனுமதி அளித்திருக்கிற இந்த ஆட்சியை மக்கள் மனதாரப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதேபோல், M.C.A., M.B.A. போன்ற மேற்பட்டப் படிப்புகளுக்கும் அத்தகைய ஒற்றைச் சாளர முறையைக் கொண்டு வரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், ஆவடி அருகில் 'வேல்டெக்' என்று சொல்லக்கூடிய ஒரு கல்வி நிறுவனத்திலே 60 மாணவர்களில் 53 மாணவர்கள் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் படிக்கிறார்கள். அங்கே பல்கலைக்கழகக் குழு ஆய்வுக்குச் சென்றபோது அதில் பல பேர் போலிச் சான்றிதழ்களைக் கொடுத்து சேர்ந்திருப்பதாகக் கூட அவர்கள் ஆய்ந்து கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகவே, இதை அரசு கவனித்து, M.C.A., M.B.A. போன்ற படிப்புகளுக்கும் ஒற்றைச் சாளர முறையைக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1999 ஏப்ரல் 1

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மையத்திலும் மருத்துவப் படிப்புக்குத் தனியாக நுழைவுத் தேர்வு வைக்கப்படுகிறது. இவற்றிலும் தமிழக அரசினுடைய ஒற்றைச் சாளர முறை அடிப்படை (Single Window System) கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அண்ணா பல்கலைக்கழகத்தின் நுழைவுத் தேர்வு இங்கேயும் இருக்க வேண்டும். தனி நுழைவுத் தேர்வுக்கு அனுமதிக்கக்கூடாது என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பெங்களூரில் வள்ளுவர் சிலை முடக்கப்பட்டிருப்பதைப்போல, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், திருக்குறள் ஆய்வு இருக்கைப் பிரிவானது இன்னமும் இயங்காமலேயே இருக்கிறது என்று நான் பலமுறை இந்த அவையில் சுட்டிக்காட்டியிருக்கிறேன். இன்றுவரையில் அந்தத் திருக்குறள் ஆய்வு இருக்கை தொடங்கப்படவில்லை. அது யாரோ தீட்சிதருக்காக காலியாக இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டு இருக்கிறது. அந்தத் திருக்குறள் ஆய்வு இருக்கையை உடனடியாக தொடங்க அரசு அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

இப்போது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தர் பதவி நிரப்பப்படுவதில், ஏனைய துணை வேந்தர் பதவிகள் நியமனம் செய்யப்படுவதுபோல, ஒரு முறை கடைபிடிக்கப்படுகிறதா என்றால், இல்லை. ஏனைய துணை வேந்தர் பதவிகள் நியமனம் செய்யப்படுவதற்கு Searching Committee அமைக்கப்படுகிறது. மூன்று பேர் கொண்ட Searching Committee பரிந்துரைப்பதன் பேரிலே மூன்று பேரிலே ஒருவரைத் துணை வேந்தராகத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே மட்டும் இணை வேந்தர் அவர்கள் தருகின்ற மூன்று பேரிலே ஒருவரைப் பரிந்துரை செய்தால், அவரை மட்டுமே தேர்வு செய்து கொள்கிறார்கள். ஏனைய பல்கலைக்கழகங்களில் துணை வேந்தரைத் தேர்ந்தெடுக்கும் முறையைப்போல அங்கேயும் கையாள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அரசினுடைய உதவி பெறும் தனியார் கலை, அறிவியல் கல்லூரிகளிலே இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றுவதே கிடையாது.



1999 ஏப்ரல் 1] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

குறிப்பாக, சென்னையில் உள்ள மீனாட்சி கல்லூரி, விவேகானந்தா கல்லூரிகளிலேகூட இப்படிப்பட்ட புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அதை அரசு களைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர்கல்வியை மேம்படுத்துவதற்காகப் போடப்பட்டதாகக் கூறப்படுகின்ற அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகமானாலும் சரி, அனைத்திந்திய மருத்துவக் கழகமானாலும் சரி, அவை சாதாரணமான இடங்களிலே கல்வி நிறுவனங்களைத் தொடங்குவதற்கு அனுமதிக்கிறார்கள். ஆனால், பாரதிதாசன் பல்கலைக்கழகத்திலே ஒரு படிப்பைத் தொடங்குவதற்கு அனுமதி மறுத்திருக்கிறார்கள். இதையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அதனை அரசு களைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவானது ஒரு கண்ணில் வெண்ணையையும் ஒரு கண்ணில் சுண்ணாம்பையும் தடவுவதுபோல, 10 சதவிகிதம்கூட இல்லாத மத்திய பல்கலைக்கழகங்களுக்கு 60 சதவிகித நிதியுதவியும், ஏறத்தாழ 90 சதவிகிதம் உள்ள மாநில பல்கலைக்கழகங்களுக்குக் குறைந்த நிதியுதவியும் வழங்குகின்ற காரணத்தாலே இப்போது சரியான முறையில் செயல்பட முடியாத சூழ்நிலையில் பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. அக்குறையையும் களைய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்களுக்காக நடத்தப்படுகின்ற கல்வி ஒலிபரப்பை மாலை நேரங்களிலே முழுநேரக் கல்வி ஒலிபரப்பாகச் செய்திட அரசு வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பழங்குடியினருடைய வசதிக்காக பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளி என்ற பெயரில் தொடங்கப்பட்டிருக்கிற அந்தப் பள்ளிகளிலே, சமவெளிப் பகுதிகளிலே உள்ள ஆசிரியர்களை நியமனம் செய்யாமல் அந்த மலைவாழ் பகுதிகளிலே உள்ள 12 ஆம் வகுப்பு படித்த மாணவனுக்காவது சிறப்பான கல்விப் பயிற்சி அளித்து, அவர்களை அங்கே நியமனம் செய்தால்தான் உண்மையிலே அந்தப் பகுதிகளிலே உள்ள பள்ளிகளிலே மாணவர்கள் சீரான பயன்பெற முடியும். பல பள்ளிகளிலே 5 மாணவர்களுக்கு மேலே அங்கே வருகைப் பதிவு இருப்பது இல்லை. இப்படிப்பட்ட குறைகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல Para Medical Training என்று சொல்லக்கூடிய அத்தகைய பயிற்சிகளை, அந்தப் பழங்குடியின மக்கள் பயன்பெறுகின்ற வகையிலே, அங்கேயுள்ள மாணவர்களிலே 10 ஆம் வகுப்பு

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1999 ஏப்ரல் 1

படித்திருப்பவர்களுக்கு வழங்கினால் மிகச் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரேயொரு கோரிக்கை. ஆசிரியர்கள் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். சுமார் 7,000-க்கும் மேற்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அதேபோல, +2 முடித்து ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களை வயது வரம்பை நீக்கி நியமனம் செய்ய வேண்டுமென்று, 10 அம்சக் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் அரசு நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்களிலே, பணியில் சேர்ந்த நாளை அடிப்படையாகக் கொண்டு, தமிழ் ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டதைப் போன்றே, பட்டதாரி ஆசிரியர்களுக்கும் பணியில் சேர்ந்த நாளை அடிப்படையாகக் கொண்டு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பதவிக்குச் சமமாக ஒரு கூடுதல் தலைமை ஆசிரியர் பதவி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வீடு, கட்டுவதற்கான கடன் உதவி, விடுப்புடன் கூடிய பயணச் சலுகைகள் எல்லாம், தனியார் பள்ளிகளிலே பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளிலே ஆங்கில ஆசிரியர் பணியிடம் காலியாக இருக்கின்றது. அது நிரப்பப்படுவதே இல்லை. இதனாலே மாணவர்கள் தேர்ச்சி குறைவாக இருக்கிற காரணத்தால் ஆங்கில ஆசிரியர்களையும் தனியாக நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாவரவியல், விலங்கியல் போன்ற பாடங்களுக்குத் தனித்தனியாக முதுகலை ஆசிரியர்கள் நியமனம் செய்திடல் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அறிவொளி திட்டத்தின் கீழே சுமார் 3,000 பேர் பல மாவட்டங்களிலே, குறிப்பாக பெரம்பலூர் போன்ற மாவட்டங்களிலே, அந்தத் திட்டங்கள் நிறுத்தப்பட்டிருக்கிற காரணத்தாலே 8 ஆண்டுகாலமாக பணியின்றி இருக்கிறார்கள். அதையும் அரசு கவனித்து அவர்களுக்கும் இந்தப் பணியைத் தந்து 1½ கோடி பேர் படிக்காமல் இருக்கக்கூடிய இந்தத் தமிழ்நாட்டினுடைய சூழ்நிலையை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1999 ஏப்ரல் 1] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

விளையாட்டுத் துறையிலே இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு 12 ஆண்டுகாலமாக ஊதிய உயர்வு கிடைக்காமல், வேதனைப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொங்கல் விளையாட்டுப் போட்டிகளை முன்பு நடத்தியதைப்போல தமிழர் திருநாளிலே மாவட்ட, மாநில அளவிலே நடத்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு தொழில்நுட்பத் தேர்வு பட்டயப் பயிற்சியை முந்தைய அரசு நிறுத்திவிட்டது. அதை மீண்டும் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மருத்துவ...

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வெ. கோவிந்தன்.

*** திரு. வெ. கோவிந்தன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டிற்கான கல்வி மானியத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வி கண் போன்றது; மனிதன் மனிதாக வாழ, கல்வியை ஒவ்வொரு குடிமகனுக்கும் வழங்க வேண்டுமென்று நம்முடைய தமிழக முதல்வர், மாண்புமிகு கலைஞர் அவர்கள் கல்வித் துறைக்கு அதிகப்படியாக 4,092 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதை கல்வியில் சிறந்த ஆன்றோர்கள் எல்லாம் தமிழகத்திலே பாராட்டுகின்றனர்.

தமிழகத்திலே அரசமைப்புச் சட்டத்தைச் செயற்படுத்திய நாளிலிருந்து 10 ஆண்டுகளுக்குள் அனைவருக்கும் இலவச ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக வழங்க, பள்ளிசெல்லும் வயதுடைய 6 முதல் 14 வயதுடைய குழந்தைகள் அனைவரும் பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு, நமது கழக அரசு மூலம் தொடக்கக் கல்வி இயக்கம் வரும் நிதியாண்டில் தொடங்கப்பட்டு கல்வியின் அவசியத்தை மக்களிடையே பரப்புவதற்கு, விழிப்புணர்ச்சி முகாம்கள் மே மாதம் நடத்தப்படும் என்ற அரசின் அறிவிப்பை கிராமங்கள்தோறும் மக்கள் பாராட்டுகின்றனர். ஆகவே, கல்வித் திட்டத்தில் அரசின் முழு முயற்சியும், நிதி ஆதாரங்களும் முழுமையாக வெற்றியடைய, நாட்டின் பொருளாதார, சமுதாய வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும், கல்வி ஒன்றே அடிப்படையானது என்பதை உணர்ந்து, அதிக வேகமாக முன்னேறிவரும், இந்த விஞ்ஞான உலகில், கல்விதான் மிகப்பெரிய வித்தாக அமைகிறது.

[திரு. வெ. கோவிந்தன்] [1999 ஏப்ரல் 1

நாம் இன்றைய உலகின் புதுமையாக விளங்கும் தொழில் நுட்ப அறிவு பெற்றிடவும், தகவல் தொழில் நுட்பம் பெற்றிடவும், தொடக்கக் கல்வியிலிருந்தே மாணவர்கள் அனைவரையும் கணினி அறிவு பெற்றவர்களாக உருவாக்கிட வேண்டும் என்பதும் நம் அரசின் விருப்பம். ஆகவே, தொழில்நுட்ப நிபுணர்களின் கருத்துக்களின் அடிப்படையில் பாடமுறைகளை உருவாக்கி, கணினியியல் கற்பிப்பதில் தேர்ச்சிபெற்ற பல நிறுவனங்கள்மூலம், மாநிலம் முழுவதுமுள்ள சுமார் 1200 மேல்நிலைப் பள்ளிகளிலும், 11-12 வகுப்புகளில் விருப்பப் பாடமாக வழங்கும் திட்டம் வரும் கல்வி ஆண்டில் தொடங்கி சுமார் 40 விழுக்காடு என்ற முறையில் 48,000 மாணவர்களை ஆண்டுதோறும் மென்பொருள் துறைகளில் வேலைவாய்ப்பினைப் பெறத் தகுதியுடைவர்களாக்க அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது.

கல்வியின் மேன்மைக்கு எடுத்துக்காட்டாக, அண்மையில் தமிழக அரசு வெளியிட்ட தமிழ் மென்பொருள் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படவில்லை. எனவே, இதைக் கருத்தில்கொண்டு 'தமிழ்நெட் - 99' என்ற உலகத் தமிழ் இணையக் கருத்தரங்கு மாநாடு பிப்ரவரி 7, 8 தேதிகளில் சென்னையில் நடைபெற்றது. இதில் ஏழு நாடுகளைச் சேர்ந்த 150 வல்லுநர்கள் கலந்துகொண்டு, ஒருமித்த முடிவுகளை எடுத்துள்ளனர். தமிழின்மூலம் விரிவான கணினி அறிவு, மக்கள் பயன்பெறும் வகையில் உலகத் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் அமைக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் கணினி சொந்தமாகப் பெற்றிராத, தமிழ்மொழியை மட்டுமே அறிந்த மக்கள், தங்கள் இல்லங்களுக்கு அருகில், தங்கள் அன்றாடத் தேவைக்காக, நியாயமான கட்டணத்தில் இணையக வசதி பெற இயலும். மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு, தொலைத் தொடர்பு வழி மருத்துவ வசதி நமது மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது.

இவ்வளவு மேன்மைபெற்ற கல்வியின் அவசியத்தை விழிப்புணர்வு முகாம்கள்மூலம் மக்களிடையே பரப்பவும், நம் தமிழகத்தில் தொடக்கப் பள்ளிகளே இல்லாத குக்கிராமங்களே இல்லை என்ற நிலையினை உருவாக்கவும், ஆரோக்கியமான உள்ளமும், உடலும் இருந்தால்தான் திறன்மிகுந்த கல்வியையும், சிறந்த விளையாட்டு வீரர்களையும், கட்டுப்பாடு, குழு உணர்வு, தலைமைப் பண்பு ஆகியவற்றைப்பெற்ற மாணவர்களை உருவாக்கிடவும், கால்பந்து, கூடைப்பந்து, கிரிக்கெட், கபடி, ஹாக்கி மற்றும் ஓட்டப்பந்தய வீரர்களை உருவாக்கிடவும் அரசு நடவடிக்கை எடுக்கிறது. தொழில்நுட்ப, மருத்துவக் கல்லூரிகளின்



1999 ஏப்ரல் 1] [திரு. வெ. கோவிந்தன்]

தரத்தினை உயர்த்தி, பல்வேறு தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனங்களிலும் மாணவர்களைச் சேர்க்க ஒற்றைச் சாளர முறை பயன்படுத்தப்படுகிறது. இந்தத் தொழில்நுட்பக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வரும் நிதியாண்டில் ரூ.19.7 கோடி ஒதுக்கியுள்ளது மிகவும் பாராட்டுக்குரியது.

தொழிற் கல்வியின் வளர்ச்சியிலும், மேலும் 15 விழுக்காடு இடங்களை கிராமப்புற மாணவர்களுக்காக ஒதுக்கீடு செய்துள்ளது. கல்வியின் அவசியத்தை உணர்ந்து அறக்கட்டளைகளின்மூலம், உதவிபெற ரூ.7 கோடி வரை நிதி வழங்கியுள்ளது. படிப்பு உதவித் தொகை வழங்கும் அடிப்படையை நம் அரசு மாற்றியுள்ளது. ஆண்டு வருமானம் ரூ.44,500 என்ற உச்சவரம்பை நீக்கிடவும், ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் அனைவரும் பயன்பெறவும், தகுதி, திறமையின்மூலம் ஆண்டுதோறும் 1,500 பேர்கள் பயனடைய அரசு வகை செய்துள்ளது.

முற்பகல் 11-50

தமிழ் ஆட்சிமொழி மற்றும் பண்பாடு இவற்றைக் கருத்திற்கொண்டு மழலையர் பள்ளிகளில் தமிழ் தவிர ஏனைய பாடங்களை தமிழ் வழியில் கற்பித்தல் வேண்டும் என்னும் அறிவிப்புக் கொள்கை மிகவும் சிறப்புடையதாக அமைந்துள்ளது. அவ்வாறிருப்பின் கல்விக் கட்டணங்களையும் பாதியாகக் குறைத்து, இலவசப் புத்தகங்கள் வழங்கவும் முடிவெடுத்ததைக்கண்டு

"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

என்னும் பாவேந்தரின் பாடலுக்கேற்ப, தமிழ் முழங்க தமிழகத்தை வழிநடத்திச் செல்லும் நம் தமிழக அரசு, தமிழ் நலனுக்குத் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு, பெண் கல்வி சிறக்க ஆண்டுதோறும் நம் கழக அரசு நிதி ஒதுக்கி நன்கு செயல்படுவது மிகவும் பாராட்டுக்குரியது.

அடுத்து, பேரணாம்பட்டுத் தொகுதியில் பெண்கள் தங்கள் மேல்நிலைக் கல்வியை முடித்துவிட்டு கல்லூரிக்குச் செல்ல வேண்டுமானால் சென்னை, வேலூர் போன்ற நகரங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. எனவே, அப்பகுதி மாணவியர் நலன் கருதி பேரணாம்பட்டில் ஒரு பெண்கள் கல்லூரியை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், என்னுடைய தொகுதியிலுள்ள மேல்பட்டி என்னும் கிராமத்தில் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. இந்த உயர்நிலைப் பள்ளியில் படித்த மாணவர்கள் மேல்நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டுமானால், குடியாத்தம், ஆம்பூர் போன்ற ஊர்களுக்குச் செல்ல வேண்டிய நிலையிருக்கிறது. ஆகவே, அப்பகுதி மாணவர்களுடைய நலன் கருதி, மேல்பட்டி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் அரவட்லா, மாதகடப்பா போன்ற மலைப் பகுதிகள் இருக்கின்றன. அங்கேயிருக்கின்ற பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் எல்லாம் கிழேயிருந்துதான் போக வேண்டும். அவர்களுக்கு Hill allowance கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியில் ராஜக்கல், மேல்கொத்தமாரிகுப்பம், ஓணாங்குட்டை, கோட்டையூர் ஆகிய பகுதிகளுக்குத் தொடக்கப் பள்ளி அமைத்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், கைலாசகிரி, மோர்தனா, அலவட்லா ஆகிய ஊர்களில் உள்ள தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரனாம்பட்டுப் பகுதி பெரும்பாலும் தோல் ஆடை தயாரிக்கும் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி. இப்போது அந்தத் தொழிற்சாலைகள் நடைபெறாமல் இருக்கின்ற காரணத்தினால், பேரணாம்பட்டில் அரசின் சார்பில் தோல் ஆடை தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடப்பாண்டினுடைய கல்வி மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய அன்புகலந்த வணக்கத்தைச் சொல்லிக்கொள்கிறேன்.

ஏரி உடைப்புச் சம்பவத்திலே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தன்னுடைய வயதான காலத்திலேயும்கூட நாட்டு நலன் கருதி, மக்கள் நலன் கருதி, அதிகாலையிலே எழுந்து, அதிகாரிகளை



முடுக்கிவிட்டு, அளப்பரிய காரியங்கள் செய்ததை இதயம் உள்ள யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது என்ற காரணத்தினாலே,

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

என்று சொன்னார் வள்ளுவர். அதைப்போல, அவர்களுடைய பணியைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இதயம் உள்ள நாங்கள் பாராட்டுகிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப் பணிவோடு இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையிலே,

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்று வள்ளுவர் சொன்னதைப்போல, ஒரு தனி நபர் முன்னேற வேண்டுமென்று சொன்னாலும், ஒரு குடும்பம் முன்னேற வேண்டுமென்று சொன்னாலும், நாடு முன்னேற வேண்டுமானாலும் கல்வி மிகவும் இன்றியமையாதது என்பதைக் கருத்திற்கொண்டு நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் கல்வி நலனுக்கு நிதியினை ஒதுக்கி, நல்ல காரியங்களைச் செய்ய இந்த நிதிநிலை அறிக்கையிலே கண்ட சில அம்சங்களை நான் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய சூழ்நிலையைப் பொறுத்தவரையில், ஒருசிலர் சொல்வதெல்லாம், கல்வி என்பது வருவாய் இல்லாத துறை, வருவாய்; இல்லாத துறைக்குக் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தாலும், எல்லா துறைகளையும் உருவாக்குவதற்கு, ஆட்சியாளர்களை உருவாக்குவதற்கு, நிர்வாகப் பொறுப்பிலே இருக்கக்கூடிய அதிகாரிகளை உருவாக்குவதற்கு, நாடு முன்னேறுவதற்கு எல்லாவகையிலும் கல்வி இன்றியமையாதது என்ற காரணத்தினாலே தான், நடப்பு ஆண்டு கல்விக்காக நிதி ஒதுக்கியிருப்பது போதாது, பற்றாக்குறையாக இருக்கிறது, இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டுமென்று நான் முதலிலே சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேநேரத்திலே, தரமான கல்வி வேண்டுமென்று எல்லாவகையிலும் சொல்லி கொண்டிருக்கிறோம். ஆனால், கல்வியினுடைய தரம் தாழ்ந்து கொண்டிருப்பது குறித்து நாம் மிகவும் வேதனைப்படுகிறோம்.

*முற்பகல் 11-55*

இப்போதைய சூழ்நிலையிலே, தனியார் நிறுவனங்களிலே பயிலக்கூடிய மாணவர்கள், அதிலும் L.K.G., Pre K.G.—இந்தக் கீழ்நிலைகளில் இருக்கக்கூடிய மாணவர்கள் கல்வித் தரத்தையும், துவக்கப் பள்ளிகளிலே 5ஆம் வகுப்பு படிக்கக்கூடிய மாணவர்களுடைய கல்வித் தரத்தையும் ஒப்பிடுகின்றபோது வேதனையாக இருக்கிறது. ஒரு பட்டப் படிப்பு அல்லது M.A. படித்த மாணவன் ஆங்கிலத்திலே இரண்டு வாக்கியங்கள் எழுத முடியுமா, பேச முடியுமா என்று கேட்டால், அது கேள்விக்குறியாக இருக்கிறது. அப்படி அவர் ஆங்கிலத்திலே பேசவும் முடியவில்லை; எழுதவும் முடியவில்லை என்று சொன்னாலும்கூட, அவன் தன்னுடைய தாய்மொழியாம் தமிழ் மொழியிலே புலமை பெற்று இருக்கிறானா என்று சொன்னால், அதுவும் கிடையாது. ஆக, இப்படி மாணவர்களுடைய கல்வித் தரம் மிகவும் மோசமாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டுவதோடு, வசதி வாய்ப்பு இல்லாத ஏழை மாணவர்களுடைய கல்வித் தரம் மிகவும் சீரழிந்த நிலையிலே இருக்கிறது; ஆனால், வசதி படைத்த பணக்காரர்களுடைய குழந்தைகளின் கல்வித் தரம் மேலோங்கி இருக்கிறது என்பதை எல்லா வகைகளிலேயும் பார்க்கிறோம். ஆகவே, கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய குப்பனுடைய மகனுக்கும் சுப்பனுடைய மகனுக்கும் தரமான கல்வியைத் தர வேண்டும்; அதற்கு நம்முடைய அரசு எல்லா வகைகளிலும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமத்திலே படித்தவன் ஏர் உழுவதற்குச் செல்கிறான்: ஆனால், நகரத்திலே படித்தவன் விமானம் ஓட்டுவதற்குச் செல்கிறான். கிராமத்திலே படித்தவன் கல் உடைக்கச் செல்கிறான்; நகரத்திலே படித்தவன் Collector-ஆக போகிறான். கிராமத்திலே படித்தவன் மாடு மேய்க்க போகிறான்; நகரத்திலே படித்தவன் மருத்துவனாகப் போகிறான். இப்படிப்பட்ட நிலை இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதற்கு, நம்முடைய அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது; இட ஒதுக்கீடு வழங்கி இருக்கின்றது. இருந்தாலும்கூட, இந்தக் கல்வித் தரம் பாதிக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தினாலே, இதற்கு மேலும் கூடுதலாக நிதி ஒதுக்கம் செய்து கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எல்லா



வகைகளிலேயும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது தனியார் கல்வி நிறுவனங்கள், சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் என்ற பெயராலே ஏராளமாகத் துவங்கிக் கொண்டு இருக்கின்றன. ஆனால் இவற்றிலே ஏழை மாணவர்கள் படிக்க முடியாத நிலை இருக்கின்றது. ஏழை மாணவன் குறைந்த கட்டணத்தைச் செலுத்திப் படிப்பதற்கு முன்வரக்கூடிய நிலை இல்லை. ஆகவே, இந்தக் கால கட்டத்திலே—இட ஒதுக்கீடு, எங்கும் இட ஒதுக்கீடு; எல்லா வகைகளிலும் இட ஒதுக்கீடு என்று சொல்லக்கூடிய நம்முடைய அரசு தனியார் கல்லூரிகளிலே எல்லா நிலைகளிலேயும் இட ஒதுக்கீட்டைப் பின்பற்றுவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போதுகூட M.B.A., M.C.A., போன்ற படிப்புகளுக்கு, தனியார் கல்லூரிகளில் அவர்களாகவே மாணவர்கள் தேர்வை வைத்துக்கொள்கிறார்கள்; அவர்களுக்கு வேண்டியவர்களைத் தேர்வு செய்துகொள்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை எல்லாம் கூடாது என்பதற்காக, எல்லாக் கல்வி நிலையங்களிலும்...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில கருத்துக்கள் இங்கே சொல்லப்படுகிற காரணத்தினாலே, அவை முற்றிலும் உண்மை போலவே ஒரு தோற்றம் பெறும்; ஆகவே, நான் ஒன்றிரண்டு விளக்கங்களைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். தனியார் கல்லூரிகளில்கூட இட ஒதுக்கீட்டுக் கொள்கை பின்பற்றப்பட வேண்டும். எந்த அளவுக்கு தனியார் கல்லூரிகளின் இடங்கள் அரசினுடைய முறையில் வருகின்றனவோ, அந்த அளவுக்கு இட ஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும். தனி உரிமை பெற்ற சில பகுதிகள் இருக்கின்றன. அவை U.G.C., நீதிமன்றம்—தலையிடால் சிறுபான்மை என்ற பெயராலே அவர்கள் பெற்ற இடங்கள், அதிலே தலையிட நமக்கு உரிமை இல்லை. நாம் தலையிட எந்த அளவு இடம் இருக்கிறதோ, அந்த அளவு இடம் வரையில் நாம் இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்றும்படியாக நாம் நடைமுறைப்படுத்தி வருகிறோம்; அதிலும் குறிப்பாகப் பொறியியல் கல்லூரி போன்றவற்றில் ஒற்றைச் சாளரமுறை செயல்படுத்தப்படுகிறது.

M.B.A., M.C.A., போன்ற படிப்புகள்—பல்வேறு நிலைகளில் வெவ்வேறு அமைப்புகளில், பல்கலைக்கழகங்கள், அரசுக் கல்லூரி, தனியார் கல்லூரி, சுயநிதிக் கல்லூரி என்ற பல்வேறு மட்டங்களில்,

சற்று வேறுபாடு உடைய படிப்புகளாக இருக்கின்றன. அப்படிப்பட்ட படிப்புகளிலேயும், அரசுக் கல்லூரியைப் பொறுத்தவரையில், முறை வைத்து மாணவர்களை எடுக்கிற முறை இருக்கிறது. மற்ற இடங்களிலே அதை வலியுறுத்துவதற்கு அதிக வாய்ப்பு இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆகவே, இப்படி, சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் என்று சொல்லக்கூடிய கல்வி நிலயங்களிலே இன்று தமிழ்நாடு முழுவதும், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் இருக்கின்றன. அவை கொள்ளையடிக்கக்கூடிய நிறுவனங்களாக இருக்கின்றன. அரசு பல்வேறு முன்னுரிமைகள் வழங்கினாலும்கூட, அவை கிடைக்கப்பெறவில்லை. அமைச்சருடைய விளக்கத்தை நான் மனப்பூர்வாக ஏற்றுக்கொள்கிறேன். இருந்தாலும்கூட, அதில் சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு வேறு ஏதாவது வகையிலேயாவது வழிமுறைகளைக் காண வேண்டும் என்றுதான் நான் பணிவுடன் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இப்போது நுழைவுத் தேர்வு முறை இருக்கிறது. பிளஸ் 2 வகுப்பிலே மாணவன் கஷ்டப்பட்டுப் படிக்கிறான்; மதிப்பெண்களைப் பெறுகிறான். மீண்டும் ஒரு நுழைவுத் தேர்வு என்பது தேவையில்லாத ஒன்று என்று நான் கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம்கூட எதிர்க்கட்சியாக இருந்த நேரத்திலே நாம் எல்லோரும் இங்கு நுழைவுத் தேர்வு கூடாது; இரத்து செய்ய வேண்டுமென்று சொல்லிக்கூட அதை வலியுறுத்தினோம்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிகளிலே தரப்படுகிற கல்வியிலே, வெவ்வேறுவிதமான தர வேறுபாடுகள் இருக்கின்றன. அந்தத் தர வேறுபாடுகளுக்கு இடையில், மாணவர்களுடைய அறிவுத் திறனை, பொது அறிவுத் திறனைக் கண்டறியக்கூடிய ஒரு முறையாக இந்தத் தேர்வு முறை அமைந்து இருக்கிறது. மேல்நிலைப் பள்ளித் தேர்வு முறையிலே இந்த நுழைவுத் தேர்வு அமையவில்லை. இது பிள்ளைகளுக்கு எந்த அளவுக்குப் பொது அறிவு, அடிப்படை உண்மைகள் தெரிந்திருக்கின்றன என்பதை, வினாடி-வினா போல் கேள்வி கேட்டு, குறிப்பு விடைபெறும் காரணத்தால், இதுதான் மாணவர்களுடைய உண்மையான அறிவுத் திறனைக் காண்பதற்கான





வழி. அதிலே கிராமத்து மாணவர்களும் தகுதி உள்ளவர்களாக ஏராளமானவர்கள் வருகிறார்கள்.

நண்பகல் *12-00*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமத்திலே இருக்கக்கூடிய பிளஸ் 2 படித்த மாணவர்களுக்கு, நுழைவுத் தேர்விலே நீங்கள் 15 விழுக்காடு சலுகை காட்டுகிறீர்கள். ஆனால், மேல்நிலைப் பள்ளி என்பது குக்கிராமத்திலே இருப்பதில்லை. பேரூராட்சிக்குட்பட்ட எல்லையில் இருக்கிறது. ஆகவே, பேரூராட்சிக்குட்பட்ட எல்லையிலுள்ள மேல்நிலைப் பள்ளியில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு இந்த வசதி கிடைக்காத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, எந்தப் பேரூராட்சி எல்லையிலே மேல்நிலைப் பள்ளியிருந்தாலும்கூட, கிராமத்திலிருந்து வரக்கூடிய மாணவர்கள் என்ற அடிப்படையிலே இந்தச் சலுகையை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது, பிளஸ் 2 வரை படிக்கின்ற மாணவர்களுக்கு இலவச Bus Pass வழங்கப்படுகின்றது. அதை நாங்கள் வரவேற்கிறோம். நாடு முழுவதும் பாராட்டியிருக்கிறது. ஆனாலும்கூட, கிராமத்து மாணவர்கள், ஏழை மாணவர்கள் பட்டணத்திற்குச் சென்று, தொலை தூரத்திற்குச் சென்று அங்கே தங்கிப் படிக்க முடியாத நிலையிலே, கிராமத்திலிருந்து சென்று பட்டப் படிப்பு படிக்கின்ற மாணவர்களும் பயன்பெறுகின்ற வகையிலே, பட்டப் படிப்புவரை படிக்கின்ற மாணவர்களுக்கு இலவச Bus pass வழங்க அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசுக்கு இதனால் இழப்பிருந்தாலும்கூட, தனியார் பேருந்துகளுக்கு உரிமங்களை, அனுமதியைத் தருகிறோம். 1 பேருந்து வைத்திருப்பவர், அடுத்த ஆண்டு 2 பேருந்துகளுக்குச் சொந்தக்காரர் ஆகிறார். நிறைய வருமானம் வருகிறது. அரசு அந்தப் பேருந்துகளுக்கு அங்கீகாரம், அனுமதி வழங்குகிறது. ஆகவே, தனியார் பேருந்துகளிலும், இந்த இலவச Bus pass வழங்கும் முறையை உடனடியாகக் கொண்டு வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கல்வியின் தரம் மிகவும் மோசமாக இருக்கிறது. நேற்றைக்குக்கூட தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் 10,000-க்கும் மேற்பட்டவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். ஓர் ஆசிரியருக்கு 20 மாணவர்கள் என்று விகிதாச்சாரம் குறைக்கப்பட்டிருக்கிறது.

[1999 ஏப்ரல் 1

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் பொறுப்பான சட்டமன்ற உறுப்பினர். எந்தக் காலத்திலேயும் 1:20 என்பது, தமிழ்நாட்டிலே நடைமுறைப்படுத்தப்பட்டதே கிடையாது. 1957-லேயிருந்து இந்த மாநிலத்தினுடைய ஆசிரியர் நிலைமை எனக்குத் தெரியும். 1:50 என்ற அளவிலே நடைமுறையில் இருந்தது. நாங்கள் 1:40 என்ற அளவிற்குக் கொண்டு வருவதற்குப் பெரிய முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்பது நடைமுறைப்படுத்தப்பட்டதல்ல. ஒப்புக்குச் சொல்லப்பட்டு, மூடிவைக்கப்பட்டு, உண்மைக்கு மாறாகச் சொல்லப்பட்டு வந்த நிலைதான் நீண்ட காலம் இருந்தது. இப்போது அதிக ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதைப் பார்த்தாலே தெரியும். இந்த அளவுக்கு அதிகமாக ஆசிரியர்களை நியமிக்காமல் மாணவர்கள் ஆசிரியர்கள் விகிதாச்சாரம் எப்படிக் குறையும்? ஆகவே, நான் அந்த விவரத்தை என்னுடைய பதிலில் இன்னும்கூட விளக்கமாகச் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** துணைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளிலே, மேல்நிலைப் பள்ளிகளிலே 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதாச்சாரம் நிச்சயமாகப் பொருந்தும். அதை வரவேற்கிறேன். ஆனால், துவக்கப் பள்ளிகளிலே, 5 ஆம் வகுப்பு வரை இருக்கக்கூடிய பள்ளிகளிலே, 2 ஆசிரியர்கள், ஓர் ஆசிரியர் என்று இருக்கிறார்கள். 5 ஆம் வகுப்புவரை, அங்கே அந்தப் பாடங்களை நடத்துவது என்றால் சிரமமாக இருக்கும். ஆகவே, 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதாச்சாரத்தை நிச்சயமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசு ஒரு கிலோமீட்டர் தூரத்திலே ஒரு பள்ளி இருக்கக்கூடிய அளவிற்கு 700 பள்ளிகளைத் தொடங்குவதை உள்ளபடியே நாங்கள் வரவேற்கிறோம், (மணியடிக்கப்பெற்றது) பாராட்டுகிறோம். அதைப் பாராட்டக்கூடிய அதேநேரத்திலே, இப்போது கணினி முறை பயிற்சி கொண்டு வரப்பட்டுள்ளது. அதையும் நாங்கள் மனதார வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம். இந்த வகுப்பில் 40 மாணவர்களைத் தேர்வு செய்கின்றபோது, அதிலும் இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்பட வேண்டும். அப்போதுதான், தாழ்த்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் இந்தக் கணினி படிப்பைப் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படும். ஆகவே, இதிலேயும் இட



1999 ஏப்ரல் 1] [திரு. ஜி.கே. மணி]

ஒதுக்கீட்டு முறையைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரிகளைப் பொறுத்தவரையில், மாணவர்களுடைய நிலைமை ஒழுக்கக்கேடாக இருக்கிறது. முத்தையா முதலியாரிலிருந்து, நம்முடைய பேரறிஞர் அண்ணா, பெரியார், நம்முடைய முதலமைச்சர், எங்களுடைய டாக்டர் ஐயா போன்றவர்களெல்லாம் போராடிப் பெற்றுத் தந்த இட ஒதுக்கீட்டு முறையிலே படிக்கக்கூடிய மாணவர்கள் எதையும் நினைத்துப் பார்ப்பதில்லை. படிக்கின்ற காலங்களிலே ஒழுக்கக்கேட்டுடன் நடந்து கொள்கிறார்கள். ஆகவே, இவையெல்லாம் மாறக்கூடிய வகையிலே கல்லூரிகளிலே நீதி போதனை வகுப்பைக் கொண்டு வர வேண்டும். கல்லூரிகளுக்கு மாணவர்கள் குடித்துவிட்டுச் செல்கிறார்கள். இப்போது மாணவர்கள் தேர்தல் கல்லூரிகளில் நடைபெறுகிறது. அந்தத் தேர்தல்களில் பல்வேறு முறைகேடுகளெல்லாம் நடைபெறுகின்றன. ஆகவே, அந்தத் தேர்தலை முறைப்படுத்திட வேண்டும். இல்லையென்று சொன்னால் அதை இரத்துகூடச் செய்யலாம். அதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன் (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன்.

பிற்பகல் 12-05

பிறகு, தொழிற்கல்வி ஆசிரியர்கள். 7 வகையான தொழிற்கல்வி ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அந்த ஆசிரியர்களை நிச்சயமாக நியமனம் செய்ய வேண்டும். இன்னும்கூட நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் 6, 7, 8 வகுப்புகளில் பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதையும் நாங்கள் வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம்.

இடைநிலை ஆசிரியர்களுக்குள்ள வயது வரம்பைத் தளர்த்த வேண்டும். படித்துவிட்டு, seniority என்று சொன்னால், 10 ஆண்டு காலம் காத்திருந்தாலும்கூட, வயது வரம்பு கடந்துவிடுகிறது. ஆகவே, அவர்களையும் கருத்திலேகொண்டு, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்கள் பிரச்சினை, ரொம்ப சிக்கலான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. ஜி.கே. மணி:** ஒன்றே ஒன்று சொல்லி முடித்துவிடுகிறேன்.

[1999 ஏப்ரல் 1

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். கல்விக்காக 1999-2000 ஆண்டுக்கு மொத்த ஒதுக்கீடு ரூ. 4,144 கோடி. இது அரசினுடைய மொத்தச் செலவுக் கணக்கான 18,500 கோடி ரூபாயில் 22.40 விழுக்காடு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இவ்வளவு பெருந்தொகை எல்லாம் செலவிட்டும், கல்வியிலே நாம் வியத்தகு சாதனையை அடைந்திருக்கிறோமா என்றால், இல்லை என்றே சொல்லலாம். ஒவ்வோர் உறுப்பினரும் பேசும்போது, கல்வியினுடைய தரம் குறைந்துவிட்டது; குறைந்துவிட்டது என்று கூறினார்கள் கடந்தகாலங்களில் பார்த்தோமானால், இந்தக் கல்வியின் தரம் குறைவதற்கு அரசை மட்டும், கல்வி அமைச்சரை மட்டும் குறை சொல்வதில் பயனில்லை என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை நாம் அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆசிரியர்கள், பெற்றோர்கள், மேல்நிலையிலே இருக்கிற அதிகாரிகள் என்று நாம் அனைவரும் சேர்ந்து ஒரு புதிய யுகத்தை உருவாக்கினால்தான் கல்வியிலே நாம் நினைக்கின்ற குறியீட்டை அடைய முடியும். அப்பொழுதுதான் தமிழகம் கல்வித் துறையிலே சிறப்பான முன்னேற்றம் அடையும் என்ற கருத்தினைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் இப்போது தொடக்கப் பள்ளிகளில், 100-க்கு 30 பள்ளிகளில் கட்டடங்கள் இல்லை, கூரைகளே இருக்கின்றன. அவையும் சரியாக இல்லை என்று நம்முடைய கல்வி அமைச்சர் 1996 ஆம் ஆண்டு பதிலுரையில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அவையெல்லாம் மாறக்கூடிய சூழ்நிலை இருக்க வேண்டுமென்றால், கல்விக்கான ஒதுக்கீட்டை கிட்டத்தட்ட 25 விழுக்காடாக உயர்த்தினால்தான் நாம் நினைத்ததைச் சாதிக்க முடியும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, முதலில் என்னுடைய தொகுதியைப் பற்றிப் பேச விரும்புகிறேன். இராசிபுரம் கலைக் கல்லூரி தொடங்கப்பட்டு இன்றைக்கு 25 ஆண்டுகள் ஆகின்றன. இந்தக் கல்லூரியில் இளங்கலைப் பட்டப் படிப்பு மட்டுமே இருக்கின்றது. முதுகலைப் பட்டப் படிப்பு தொடங்க ஆவன செய்ய வேண்டுமென்று, 1996 ஆம் ஆண்டே என்னுடைய கோரிக்கையை இந்த மாமன்றத்தில் வைத்து, அமைச்சர் அவர்களும் ஆவன செய்யப்படும் என்று சொன்னார்கள். இன்னும்



1999 ஏப்ரல் 1] [திரு. பி.ஆர். சுந்தரம்]

M.A., M.Sc., போன்ற முதுகலைப் பட்டப் படிப்புகள் ஆரம்பிக்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நாமகிரிப்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளியைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 2200 ஆண்களும், பெண்களும் படித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் இந்தச் சட்டமன்றத்திற்குள் நுழைந்தபோது, 1996 ஆம் ஆண்டு, முதன் முதலாக வைத்த கோரிக்கை, அந்தப் பள்ளியை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்பது ஆகும். ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பெண்கள் மேல்நிலைப் பள்ளி என்று பிரிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். அப்பொழுது நிதி வசதி இல்லாத காரணத்தால், அது முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து பணத்தை ஒதுக்கலாம் என்று கூறியதற்குப் பிறகும், நான் பலமுறை இந்தப் பள்ளியினுடைய தலைமை ஆசிரியரிடம் எடுத்துக் கூறியும், C.E.O.-விடம் எடுத்துக் கூறியும், அதற்கான செயற்குறிப்புகளை அனுப்புங்கள் என்று நான் கிட்டத்தட்ட 4, 5 முறை சொல்லிவிட்டேன். ஆனால் அனுப்பினார்களா, இல்லையா என்று தெரியவில்லை. அதற்கு வேண்டிய இடம் கண்டிப்பாக இருக்கிறது. பணத்தைக் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தோ அல்லது பொதுமக்களிடமிருந்து அதை வசூல் செய்தோ கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். ஆகவே, அமைச்சர் அவர்கள் இதை கவனத்தில் கொண்டு, நாமகிரிப்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோள் ஏற்கப்படுவதாக இருந்தாலும்கூட, இடம் கட்டடம் எல்லாம் கொடுத்தாலும்கூட, சட்டமன்ற உறுப்பினர் நிதியை அதற்குத் தர முடியாது. ஏனென்றால், நிதித் துறையிலிருந்து, சட்டமன்ற உறுப்பினர் நிதியை பொதுமக்கள் பங்குத் தொகையாகத் தருவதற்குப் பயன்படுத்தக் கூடாது என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பங்குத் தொகையைக் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியைப் பயன்படுத்தாமல், பொதுமக்களிடம் வசூலித்த நிதியாகச் செலுத்தும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து இல்லாமல், பொதுமக்களிடமிருந்து வசூல் செய்து கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறேன். பொதுமக்களிடமிருந்து நிதி வசூல் செய்து கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றேன்.

அடுத்தபடியாக, இராசிபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சேடர்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளி தேர்வு மையமாக இல்லாத காரணத்தால், தேர்வுக் காலங்களில் வேறு பள்ளிகளுக்குச் சென்று தேர்வு எழுத வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து சேடர்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியைத் தேர்வு மையமாக ஆக்குவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்களிடத்திலே நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய இராசிபுரம் தொகுதியிலே அவர்கள் சுற்றுப்பயணம் செய்தபோது வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். எங்களுடைய புரட்சித் தலைவியினுடைய ஆலோசனையின்படி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ராஜ்ய சபா உறுப்பினருக்கு வழங்கப்பட்ட பணத்தைப் பெற்று, அதை வைத்து அங்கே இருக்கின்ற கிட்டத்தட்ட நான்கு, ஐந்து பள்ளிக்கூடங்களுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டு, முடிக்கப்பட்டிருக்கின்றன. அங்கே கணினி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். நீங்கள் வேறு சட்டமன்றத் தொகுதிகளுக்குக் கொடுப்பதற்கும் மேலாக, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற பள்ளிகளுக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டும். என்னுடைய தொகுதியிலே பள்ளிகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, நீங்கள் அதற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'கொடுக்கிறேன்' என்று அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இந்தக் காலகட்டத்தில், இந்த நடப்புத் தொடரில் என்னுடைய இராசிபுரம் தொகுதிக்கு அதிகப்படியான பள்ளிகளில் கணினி வகுப்புகள் தொடங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அடுத்தபடியாக, என்னுடைய நாமக்கல் மாவட்டத்தில் 7-1-1999 அன்று புதிதாக நியமனம் செய்யப்பட இருக்கின்ற இடைநிலை ஆசிரியர்களுக்கான பணியிடங்களைத் தேர்வு செய்ய counselling நடைபெற்றது. அந்த counselling-இல் மாபெரும் தவறு நடந்துவிட்டது என்று நான் பத்திரிகையிலே தெரிவித்திருக்கிறேன். நம்முடைய உயர் அதிகாரிகளிடம்கூட நான் தெரிவித்திருக்கின்றேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, counselling நடத்துவது முறையல்ல என்று அரசு அவர்களுக்கு அறிவித்துள்ளது. இனி எந்தக் காலத்திலேயும் ஆசிரியர் நியமனத்தில் counselling நடைபெறாது. எந்தெந்த இடங்களுக்கு அதிக ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டுமோ அல்லது காலியிடம் இருக்கிறதோ, அங்கே அனுப்பப்பட வேண்டுமே தவிர, ஆசிரியர்களது வசதியை நியமன நேரத்தில் கேட்கக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இனி அந்தத் தவறு நடைபெறாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

அடுத்தபடியாக, தற்போது, பாதிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்ற மாணவர்கள், பெற்றோர்கள் எல்லாம் சென்னையிலே குறளகம் முன்பாக கிட்டத்தட்ட 5 நாட்கள் தொடர் உண்ணாவிரதம் இருந்தார்கள். அதற்கென ஒரு குழுவை நியமித்திருக்கிறீர்கள். ஐந்து நாட்கள் கழித்து நீங்கள் அந்தக் குழுவை நியமித்திருக்கிறீர்கள். அதை முன்பே செய்து இருந்தால், அவர்கள் மயக்கமுற்று மருத்துவமனையிலே சேர்க்கப்படும் நிலை அவர்களுக்கு ஏற்பட்டு இருக்காது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** அவர்களுக்கு அதற்கு முன்பே பல தடவை நான் சொல்லியிருக்கிறேன். அதன் பின்னரும், உண்ணாவிரதம் இருக்க வேண்டுமென்று சொல்லி அதை அரசியலாக்க சில பேர் நினைத்தார்களென்றால், அதற்கு நான் என்ன செய்ய முடியும்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அடுத்தபடியாக, தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறை, தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்களைக் கொடுக்கிறது. இந்தப் பாடப் புத்தகங்கள் கல்வி ஆண்டின் ஆரம்பத்திலேயே, அதாவது, ஜூன் மாதத்திலேயே கொடுக்கப்பட்டால்தான் அவர்களுக்கு வசதியாக இருக்கும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மூன்று ஆண்டுகளாக ஜூன் மாதத்திற்குள் புத்தகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றிரண்டு இடங்களிலே மட்டும், கொடுப்பதிலே சில சிக்கல்கள் ஏற்பட்டு, ஜூலையிலே தரப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு, மூன்று ஆண்டுகளில் எந்த இடத்திலாவது, இந்தக் காலகட்டத்தில் கிடைக்கவில்லையென்றால், தனிப்பட்ட முறையில் விவரம் தெரிவிக்க வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** என்னுடைய தொகுதியில் என்னிடம் புகார் செய்த காரணத்தினால்தான், நான் இதைத் தங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தக் கல்வி மானியக் கோரிக்கையிலே நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். கிட்டத்தட்ட இரண்டு நாட்கள் கல்வி மானியத்திலே விவாதம் நடைபெறுகிறது. குறைந்தது 20 உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். அதிலே கிட்டத்தட்ட 10 உறுப்பினர்களாவது, I.A.S., I.P.S. பற்றிப் பேசியிருப்பார்கள். நானும் பேசியிருக்கிறேன். நம்முடைய தமிழ்நாட்டில் I.A.S., I.P.S. தேர்ச்சி விகிதம் குறைந்திருப்பதற்குக் காரணம், கல்வித் தரம் குறைந்திருக்கிறது; இதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பேசிக்கொண்டேதான் இருக்கின்றோமேயொழிய, அரசு இதில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் அமைச்சர் அவர்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட நலத் துறையின் மூலமாக ஒரேயொரு இடத்தில்தான் பயிற்சி மையம் இருப்பதாக அறிகின்றேன். ஆகவே, அந்தப் பயிற்சி மையத்தை ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலுமோ அல்லது நான்கு, ஐந்து மாவட்டத் தலைநகரங்களுக்கு ஒன்றோ நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். I.A.S., I.P.S. பற்றி நாம் பேசிக்கொண்டே இருக்கின்றோம். எனக்குத் தெரிந்தே மூன்று ஆண்டுகளாகிவிட்டன. இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்? இதற்குத் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, I.T.I. எப்படி, Polytechnic மற்றும் பொறியியற் கல்லூரிகளில் வியாபாரமாக இருந்ததோ, அதேபோன்று I.T.I.-யிலும் தற்போது வியாபாரமாகிவிட்டது. I.T.I.-ஐப் பொறுத்தவரையில், வேறு மாநிலங்களில் இருப்பதைப்போல, ப்ளஸ் 2 வகுப்பிலேயே I.T.I. வகுப்புகளைச் சேர்த்துப் படிப்பதற்கு நீங்கள் ஓர் ஆணை பிறப்பிக்க வேண்டும். இந்த I.T.I. கல்விக்குத் தனியார் நிறுவனங்கள் தேவையில்லை. நீங்கள் ப்ளஸ் 2 வகுப்பிலேயே இதைச் சேர்த்துக்கொள்ளலாம் என்று



ஓர் ஆணையைப் பிறப்பித்தீர்களென்றால், தனியாக I.T.I. தொடங்குவதற்கு எந்த முகாந்திரமும் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

பள்ளி மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற உதவித் தொகையானது மிகக் குறைவாக இருக்கிறது என்று பலர் கூறி இருக்கின்றார்கள். ஆகவே, அந்த உதவித் தொகையை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகள்—L.K.G., U.K.G., போன்ற வகுப்புகளை வைத்திருக்கும் தனியார் பள்ளிகள், அந்தப் பள்ளிகளின் தொடக்க நேரத்தை காலை 8 மணி என்று வைத்திருக்கிறார்கள். காலை 8 மணி என்றால், அந்தப் பிள்ளைகளின் மூளை சுறுசுறுப்பாக இயங்கும் என்ற காரணத்திற்காக அப்படி வைத்திருக்கிறார்களோ, என்னவோ, எனக்குத் தெரியாது. ஆகவே, அமைச்சர் அவர்களும் யோசனை செய்து, அரசுப் பள்ளிகளில் 10 மணி என்றிருப்பதை, 9 மணி என்றாவது மாற்றியமைத்தால் நலமாக இருக்குமா என்பதை ஆலோசித்து மாற்றியமைக்க வேண்டும் என்று கூறி, விடைபெறுகின்றேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker, Sir, I thank you very much for giving me this opportunity to say a few words on the Demands for Grants relating to Education, presented by the Hon. Minister for Education.

Teaching profession is one of the noblest professions. Hon. Minister for Education was kind enough to introduce Compulsory Education to the children belonging to the age group of 6-14, to improve the educational system in the State of Tamil Nadu. You must see that this scheme is properly implemented to make Tamil Nadu to stand first in the nation in respect of education. I understand that about 700 Hamlets are getting new schools. It has been written in the Constitution that within 10 years of Independence, all the people should be educated. But, even after 50 years, this has not been done. At least hereafter, you must take stern steps to see that all the people are educated.

The total outlay for Education in 1999-2000 towards Demand No.17 is Rs. 4,144.01 crores and this works out to 22.40% of the State's total budget of Revenue Account of Rs. 18,500.32 crores. I requst the Hon. Minister for Education that the amount allotted to education should be properly spent. Now-a-days we see competition between the Government Schools and the private schools. But the private schools are facing lot of difficulties. You have created the Parent-Teacher Association in each school. I requst that you may involve public men like Panchayat Presidents, Councillors of Panchayats, Chairmen of Panchayat Unions and Members belonging to Social Welfare Organisations also in this Association. I am very happy to say here that the Director of School Education has come to Hosur for inauguration of a school, for which Rs. 2.25 lakhs has been donated by the public and the Headmaster of the school has taken a lot of interest. Likewise, you must involve public for the development of education. Then only, you will be able to impart good education in all the schools.

It has been mentioned in the Policy Note that—the scheme of supplying free text books to all students studying in I to V Standards will be continued during this year also; construction of class room buildings for 3060 Primary Schools has been taken up; 541 Middle Schools have been provided with toilet facilities; 80 Middle Schools are going to be upgraded as High Schools; 50 High Schools are to be upgraded as Higher Secondary Schools during this year. It has also been mentioned that during 1999-2000, 420 P.G. Teachers, 295 B.T. Assistants and 217 Tamil Teachers are going to be appointed. I think it is not sufficient.

I welcome the scheme of opening Libraries in all the schools with the matching grant to the extent of 50% of the cost of books by the Government and the remaining 50% by public participation.

The Parent-Teacher Associations have collected Rs.39.60 crores during 1997-98 and Rs. 46.57 crores during 1998-99 for the development of schools in the State.

I request that the amount of Rs. 5 lakhs allotted to Scouts should be enhanced to Rs. 25 lakhs, because they are the people who are well disciplined. More importance should be given to Physical Education.



Regarding Minority Language Schools, I am sorry to state that about 250 posts of Telugu Secondary Grade Teacher are vacant and nearly 25 Telugu Pandit posts are vacant. We are in the backward area. We cannot compete with others. You must see that these posts are filled up. I also requst you to see that new schools are opened. No Telugu Pandit post has been filled up for nearly 2 years. How can the students read Telugu? Tamil Pandits are posted in Middle Schools. Likewise, Telugu Pandits should also be posted in Middle Schools. Lot of vacancies are there. In DIET—not even a single teacher is posted to teach Telugu language. I request you to see that Telugu teachers are posted in the Training Schools at Krishnagiri, Chinnatharapuram and Kangapalli. I request that Physical Education and Drawing Teachers should also be posted.

As Hosur is an industrial area, I request that a Stadium, Arts and Science College and a Polytechnic may be sanctioned for Hosur. A D.E.O.'s office may be opened shortly at Hosur and Denkanikotta Taluks in order to give good education. Last time also I requested. Mr. Latheef was also mentioning that in Karnataka and Andhra Pradesh, they have created Special Directorate for Minorities. As lot of minority people are in Tamil Nadu, why can't it be created here? I request the Hon. Minister to attend to all these things.

Teacher-Pupil ratio is now maintained at 1:40. Tamil Nadu Unemployed Secondary Grade Teachers Association has given a Memorandum stating that lot of Secondary Grade Teachers are unemployed. I request the Hon. Minister to see that this ratio is reduced to some extent so that Secondary Grade Teachers could get employment. VI, VII and VIII standards all over Tamil Nadu should be reoriented and I request you to consider creating posts of Physical Education Teachers and Post Graduate Teachers in Secondary Schools also. If this is done, unemployed Post Graduates can get employment.

For those who pass M.A., M.Ed., in Mysore Open University, incentives are given. But, for those who pass from Annamalai University no such incentive is given. I request you to examine this matter.

In Tamil Nadu, Primary School Headmasters posted after 1-6-1988 are not treated on par with those who were posted earlier, eventhough they are doing the same work. They are deprived of the facilities. I request you to see that this anomaly is rectified. Tamil Nadu Non-Aided Higher Secondary School Teachers and Non-Teaching Staff Federation have given a Memorandum. Those who are taking classes for VI to VIII standard are paid salaries. But, teachers taking classes for IX, X and XI standards are not paid salaries by the Government. There are about 140 posts like this. I request you to consider this matter, Sir.

Regarding Non-Formal Education, I request that orders issued previously should be continued. Some more Supervisors, Teachers and Junior Assistants may be posted.

Nearly 1363 people were working for about 8 years under the Central Scheme in the field of Non-Formal Education. The scheme is already over. I request you to see that these people are once again given employment.

Thank you for giving me this opportunity to speak on this Demand.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பாராட்டுக்குரிய பல்வேறு அம்சங்கள் உள்ளடக்கப்பட்ட கொள்கைக் குறிப்பைப் பரிசீலித்துப் பார்த்தேன். உண்மையிலேயே ஆக்கபூர்வமான, அக்கறைபூர்வமான சில முயற்சிகள், குறிப்பாகத் தொடக்கக் கல்வியிலே மேற்கொள்ளப்பட்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன். மாநில அரசு, எவ்வளவு அக்கறையோடு கல்வித் துறையில் தன்னுடைய சிந்தனையைச் செலுத்தியிருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரியதுதான். ஆனால், மாநிலத்தினுடைய தேவைகளை—கல்வித் தேவைகளைப் பூர்த்தியாக்குவதற்கு உரிய வகையில் நிதி ஒதுக்கீடு இல்லை என்கிற காரணத்தினால், கல்வித் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் உணர்வுகளை முழுமையாக வடிக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கலாம் என்று நான் கருதுகிறேன்.



பிற்பகல் 12-25

அதேபோல, இன்றைக்கு மத்தியிலே ஆட்சியைச் செலுத்தக்கூடிய பா.ஜ.க. அரசாங்கம் பல நூற்றாண்டுகளுக்கு இந்தியாவினுடைய எதிர்காலச் சந்ததியினரைப் பாதிக்க வைக்கின்ற முறையில், கல்விக் கொள்கையில் அணுகுமுறைகளை மேற்கொண்டு வருகிற விஷயங்களையெல்லாம் விரிவாகச் சொல்ல வேண்டிய அவசியமிருந்தாலும், அதற்குரிய கால நேரம் இப்போது இல்லையென்பதால், ஒரே ஒரு விஷயத்தை நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும், இன்றைக்குத் தகவல் தொழில் நுட்ப யுகம் என்று நாம் சொல்கிறோம். விஞ்ஞானத் தொழில்நுட்பப் புரட்சி மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காலம். இந்த விஞ்ஞானத் தொழில்நுட்பப் புரட்சியிலும், தகவல் தொழில்நுட்ப யுகத்திலும், கல்விக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துகின்றபோது நாம் கவனத்திலே கொள்ள வேண்டிய ஒரு விஷயமாக நான் நினைவுபடுத்த விரும்புவது, உலகம் முழுவதும் கணினி பயன்படுத்தப்படுகிறது. பல்வேறு கணக்குகள் எல்லாம் அதிலே போடப்பட்டு காப்பாற்றப்படுகிறது. ஆனால், தமிழ்நாட்டிலே கணினி எதற்குப் பயன்படுத்தப்படுகிறது என்றால், ஜாதகத்தைக் கணிப்பதற்காகத்தான் அது பயன்படுத்தப்படுகிறது. எனவே, தொழில் நுட்பப் புரட்சியிலும், தகவல் தொழில்நுட்ப யுகத்திலும் ஏற்பட்டிருக்கின்ற விளைவுகளை முன்னேற்றத் திசையிலே பாய வைப்பதற்குரிய பக்குவப்பட்ட அறிவு இப்போது இல்லை என்பதைத்தான் நடைமுறை அனுபவம் நிரூபிக்கிறது. எனவே, தமிழகத்தில் எத்தகைய மனநிலை கொண்ட மனிதர்களுக்கிடையில் நாம் இந்தக் கல்விச் செயல்பாட்டை செய்ய வேண்டியிருக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டுமென்பதை மட்டும்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மராட்டிய எழுத்தாளர் காண்டேகர் அவர்கள் ஆசிரியர்களைப்பற்றிக் குறிப்பிடுகிறபோது, ஒரு செக்கை எப்படி மாடுகள் சுற்றிக்கொண்டிருக்கின்றனவோ, அதாவது எந்த மாற்றமும் இல்லாமல், ஆசிரியர்கள், செக்கை சுற்றுகிற மாடுகளைப் போல, சொல்லப்பட்ட விஷயங்களையே சொல்லிக்கொண்டிருக்கின்ற ஒரு நிலை தொடர்வது நல்லது அல்ல என்று குறிப்பிட்டார். அதாவது, நான் குறிப்பிட விரும்புவது, வெறும் அட்சரங்களைக்

கூட்டிக் கழிக்கக் கற்றுக் கொடுப்பது கல்வி என்பது போல, வெறும் எழுத்துக்களை மனப்பாடம் செய்து எழுதக் கற்றுக்கொடுப்பது என்பதுபோலப் புரிந்துகொள்வது சரியல்ல. கல்லுதல் என்பது தோண்டியெடுத்தல், மனித மனதுக்குள் புதைந்து கிடக்கின்ற ஆற்றல்களைத் தோண்டி எடுப்பதுதான் கல்வியாக இருக்க முடியும். எனவே, அத்தகைய முயற்சிகளுக்கு ஒரு பக்குவப்பட்ட நிலை நம்முடைய தமிழகத்திலே இருக்கிறது என்ற மனநிலையிலிருந்துதான் இதை நான் குறிப்பிட விரும்புகிறேன். நான் இதை ஏன் குறிப்பிட விரும்புகிறேன் என்றால், கல்வியாளர்கள்—கல்வியைச் சொல்லிக் கொடுக்கக்கூடிய ஆசிரியர்கள், புத்தகங்களுக்குள் நின்று கொண்டிருக்கின்றார்களே தவிர, அறிவைத் தேடிச் சென்று, அவற்றைக் கற்று, மாணவர்களைத் தங்கள் நிலைக்கு உயர்த்துகின்ற முயற்சியைச் செய்வதில்லை. ஆசிரியர்கள் வேலை என்னவென்றால், ஆசிரியர்கள் மாணவர்களின் நிலைக்குத் தங்களைத் தாழ்த்திக்கொள்ள வேண்டும். தங்கள் நிலைக்குத் மாணவர்களை உயர்த்த வேண்டுமென்பதுதான் ஆசிரியர்களின் பணி. அப்படிப்பட்ட கண்ணோட்டத்தோடுதான் ஆசிரியர்கள் செயல்பட வேண்டும். அப்படிச் செயல்பட்டால்தான் எதிர்காலச் சமூகம் நல்லமுறையிலே இருக்கும். அத்தகைய விஷயங்களை எல்லாம் விரிவாகப் பேசுவதற்கு நேரம் இல்லை, ஆனால், இந்த மாதிரி விஷயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டுமென்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஜாதகத்தைப் பற்றி நான் இங்கே குறிப்பிட்டேன். அதுபோல நிறைய விஷயங்களை நான் சொல்ல முடியும். தமிழகத்திலே சமூக முன்னேற்றத்தைப் பின்னுக்குத் தள்ளுகின்ற கருத்துக்கள் பத்திரிகைகளாலும் இன்றைக்கு பரப்பப்படுகின்றன, சில அரசியல் கட்சிகளாலும் பரப்பப்படுகின்றன. இவற்றையெல்லாம் எதிர்கொள்ள வேண்டிய தவிர்க்க முடியாத நிர்பந்தமான பொறுப்பு மாநில அரசுக்கு இருக்கிறது. நான் மாநில அரசுக்கு மிகுந்த நம்பிக்கையோடு தெரிவிக்க விரும்புவது—நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களும், நம்முடைய கல்வித் துறைக்குப் பொறுப்பு ஏற்றிருக்கக்கூடிய பேராசிரியர் அவர்களும்— தமிழகத்தில் பல நூற்றாண்டுகளானாலும் மறக்க முடியாத ஒரு மகத்தான வரலாற்றைப் பதிய வைத்துவிட்டுச் சென்ற தந்தை பெரியார் அவர்களை, 'தோழர் பெரியார்' என்று அழைத்த பரம்பரையினர்—நமது பெரியாரை 'தோழர் பெரியார்' என்று அழைத்த விரல்விட்டு எண்ணுகின்ற ஒரு சிலரில் நம்முடைய முதலமைச்சர் அவர்களும், அதேபோல கல்வி அமைச்சரவர்களும் இருக்கிறார்கள். அப்படி,



பகுத்தறிவுப் பகலவனோடு மிக நெருங்கி இருந்து பயின்ற அத்தகைய புகழ்மிக்க தலைவர்கள் தலைமை ஏற்றுக்கொண்டிருக்கின்ற இன்றைய நிலையில் தமிழ்நாட்டு மக்களை மீண்டும் எழமுடியாமல் மண்ணுக்குள்ளே புதைத்து அழிக்கின்ற ஒரு முயற்சி கொண்ட தத்துவார்த்தங்கள், தத்துவக் கருத்துக்கள் மேலோங்கி விடுவதைக் கவனித்து பரிசீலிக்க வேண்டுமென்பதை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, தமிழ் வழி என்பது உண்மையிலே பாராட்டப்பட வேண்டிய விஷயம். இதிலே பல சிக்கல்கள் இருந்தாலும் சில நடவடிக்கைகளை எடுத்து இருக்கின்றார்கள். தாய்மொழி மூலம் கற்றால்தான் நல்லது என்பதை எல்லாம் நான் விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை. அதையெல்லாம் ஏற்றுக்கொண்டவர்கள்தான் நம்முடைய கல்வி அமைச்சர் அவாகள். அதற்காகப் பணியாற்றக்கூடியவர்கள்தான். எனவே, நல்ல அம்சம் செய்யப்பட்டிருப்பதைப் பாராட்டுவதற்காகதான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, தமிழ்நாட்டிலே இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால், மையமான பிரச்சினை, ஒரு வரியில் சொல்லப்போனால், வருடந்தோறும், ஒவ்வொரு வருடமும் ஆரம்பக் கல்வியில் பயிலுகின்ற தகுதியுள்ள வயதை அடைந்த குழந்தைகள் கல்விக்காக காத்திருக்கின்ற ஒரு நிலை ஒருபுறம். பிறிதொருபுறம். ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி முடிந்து பணி கிடைக்காமல் வேலைக்காகக் காத்துக் கொண்டிருக்கின்ற ஒரு பிரச்சினை. ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படித்து, ஆசிரியர் ஆவதற்குரிய தகுதிகளைச் சட்ட ரீதியாகப் பெற்றும், தங்கள் தகுதிகளைப் பயன்படுத்திக்கொள்ள வழியில்லாத ஒரு சிக்கலும், அதேநேரத்தில், அவர்களைப் பயன்படுத்த வேண்டிய நிலையில், குழந்தைகள் வளர்ந்து வருவதும் ஒரு சிக்கலான பிரச்சினையாக இருக்கிறது. இந்த முரண்பாட்டை மாநில அரசு எப்படித் தீர்க்க வேண்டும் என்பது பற்றியும் பரிசீலிக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-30

இப்படியே பேசிக்கொண்டிருந்தால், கோரிக்கைகளைச் சொல்ல முடியாது. ஆகவே, நான் இரண்டு, மூன்று பிரச்சினைகளை கோரிக்கைகளாகச் சொல்லி, என்னுடைய கருத்துகளை முடித்துக் கொள்ளலாம் என்று விரும்புகின்றேன். இந்தக் கல்வித் துறையிலே சொல்வதற்கு நிறைய விஷயங்கள் இருந்தாலும்கூட, அவற்றையெல்லாம்

பேச ஆரம்பித்தால் பிரச்சினைகள் வேறு திசைக்குச் சென்றுவிடக்கூடும் என்பதால், கோரிக்கைகளை மட்டும் ஒவ்வொன்றாகச் சொல்கிறேன். ஒன்று, இப்போது கல்வி அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, மைசூர் திறந்தவெளிப் பல்கலைக்கழகத்திலே M.A. முடித்த இடைநிலை ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்கலாம் என அரசு உத்தரவு உள்ளது. அண்ணாமலை திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் M.A. பட்டம் பெற்ற இடைநிலை ஆசிரியர்களுக்கு அது பொருந்தவில்லை என்ற ஒரு நடைமுறைச் சிக்கல் இருக்கிறது. மைசூர் பல்கலைக்கழகத்திற்குப் பொருந்துகின்ற ஒன்று, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கும் பொருந்த வேண்டும், பொருந்துகிற முறையில் ஓர் ஆணையை வெளியிட வேண்டும். அதேபோல, பள்ளிசாரா கல்வித் திட்டத்தில் 8 ஆண்டுகள் பணியாற்றியதைக் கணக்கில் கொண்டு, கருணை அடிப்படையில் பரிசீலித்து, கல்வித் தகுதிக்கேற்ப மாற்றுப் பணி வழங்க அரசு தொடர் கல்வி நிலையத் தொடர்பாளர்களையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல B.Ed. மற்றும் முதுகலைப் பட்டம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் நிறையப் பேர் பயிற்சி முடித்திருக்கிறார்கள். அந்தப் பயிற்சியை முடித்தவர்களைப் பயன்படுத்த முடியாத ஒரு நிலை இருக்கிறது. அவர்களைப் பயன்படுத்துகிற வழிவகைகளையும் செய்ய வேண்டும், அவர்களுடைய வயது வரம்பைக் கட்டாயம் நீக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நான் மாநில அரசைக் குற்றம் சொல்வதற்காகச் சொல்லவில்லை. நெருக்கடிகளை எங்கே வடிப்பது? நெருக்கடிகளை வடிக்க வேண்டிய பொறுப்பு நமக்கிருப்பதால், அவற்றை வடிக்க வேண்டிய நிர்ப்பந்தம். நாங்கள் வடிப்பதில்லை, பிரச்சினைகளின் நிர்ப்பந்தம் எங்களை வடிக்க விடுகிறது. பிரச்சினை என்னவென்றால், பயிற்சிப் பள்ளியில் பயிற்சி முடித்தவர்களுக்கு வேலை கிடைக்காமல் வயது ஏறிக்கொண்டே இருக்கிறது. வேலை கிடைக்கவில்லை என்றால், வயது ஏறுகிறது, நின்றுவிடுவதில்லை, வயது ஏறிக்கொண்டே இருக்கிறது.சமூக நீதியில் அக்கறை கொண்டிருக்கிற நாம் அவர்களுக்கு வயது வரம்பை கட்டாயம் தளர்த்த வேண்டும். தளர்த்துகிற ஒரு கொள்கை நிலையை மாநில அரசு மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் வரலாற்றால் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் மாநில அரசுக்குத் தெரிவித்துக்கொண்டு, அத்தகைய நிலையைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, இங்கே திரு. சுந்தரம் பேசுகிறபோது, தேவலோகத்தில் இருந்து வந்த புனிதரைப்போல, கல்வி வியாபாரம் ஆகிவிட்டது என்று சொன்னார்கள். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் கேட்க விரும்புகிறேன்; கல்வியைத் தமிழ்நாட்டில்....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** Point of order, Sir. சுப்பராயன், அவர்களுடைய கருத்துக்களைச் சொல்வதில் தனிப்பட்ட விதத்திலே ஆட்சேபணை இல்லை. 'ஏதோ தேவலோகத்தில் இருந்து வந்த' என்று தேவையில்லாததை எல்லாம் பேச வேண்டிய அவசியம் கிடையாது. நீங்கள் அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கருத்தையே சொல்லவில்லை. இப்போதுதான் பீடிகை போட்டேன். கருத்திற்கு வருவதற்குள்ளே அவர் சொல்கிறார். நான் என்ன கருத்துச் சொல்கிறேன் என்றால், இந்தியாவிலேயே கல்விக்கு — குறித்துக் கொள்ளுங்கள் — உங்கள் தலைவி இருந்தாலும் பதில் சொல்லச் சொல்லுங்கள் - இந்தியாவிலேயே கல்வித் துறையை வியாபாரம் ஆக்கிய முதல் குற்றவாளி ஜெயலலிதா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஜெயலலிதா அவர்களின் ஆட்சியிலேதான் தமிழ்நாட்டில் எந்த மாநிலத்திலும் இல்லாமல், தனியாருக்கு licence கொடுக்கப்பட்டது என்பதை நாடாளுமன்றக் குழு அம்பலப்படுத்தியிருக்கிறது என்பதை மறந்துவிட வேண்டாம். நான் ஏன் இதைக் குறிப்பிட விரும்புகிறேன் என்றால், ஏதோ தொழிற்கல்வி பாதிக்கப்பட்டு, வியாபாரம் ஆகிவிட்டது என்று சொன்னார்கள். உண்மையிலேயே, வியாபாரத்தைக் கற்றுக்கொடுத்த குருபீடமே அண்ணா தி.மு.க. தானே; அவர்களுடைய ஆட்சியிலேதான் இத்தகைய நிலைகளைக் கற்றுக்கொடுத்தார்கள் என்பதை மறந்து விட வேண்டாம் என்று நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல, சுயநிதிப் பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு முறையான ஊதியம் இல்லை. சுமார் 140 சுயநிதிப் பள்ளிகளில் ஆசிரியர்களின் நிலை வேதனை அளிப்பதாக இருக்கிறது. அதைக் கவனிக்க வேண்டும்.

அதேபோல், அறிவொளி இயக்கத்திலே கிட்டத்தட்ட 5 ஆயிரம் பேர் பணியாற்றியிருக்கிறார்கள். வயது வந்தவர்களுக்கெல்லாம் கல்வி அளிப்பதில் முக்கியப் பங்காற்றியவர்கள். அவர்களைக் கருணை அடிப்படையிலே பரிசீலித்து, அவர்களிலும் தகுதியுள்ளவர்களுக்கு ஒரு—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சுப்பராயன் அவர்களே ஒரு விளக்கம் சொல்லலாம். Secondary Grade ஆசிரியர்கள் 30,000 பேர் காத்துக்கொண்டிருக்கின்றபோது, அவர்களுக்கே வேலை தர 4 ஆண்டு காலம் ஆகும் என்றால், இவர்களுக்கு எப்படி அந்த இடங்களில் வேலை தர முடியும்? அவர்களுக்குக் கொடுத்து முடித்த பிறகுதான், இவர்களுக்குத் தரக்கூடிய வாய்ப்பு உள்ளது. எனவே, சுப்பராயன் அவர்களே இதில் ஆலோசனை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களுக்கு நான் விளக்கம் சொல்லத் தேவையில்லை. குற்றம் சொல்வதற்காகச் சொல்லவில்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** கல்வியை வியாபாரமாக்கியது ஜெயலலிதா ஆட்சி என்று சொல்லியிருக்கிறார் சுப்பராயன் அவர்கள். எந்த ஆதாரத்தில் சொல்லியிருக்கிறார்கள்? என்ன குற்றச்சாட்டு? ஆதாரம் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னது ஒரு வகையில் தவறு. கல்வியை வியாபாரமாக்கவில்லை. கல்வியை மொத்த லஞ்ச லாவண்யமாக ஆக்கிக் கொள்ளையடித்து, (மேசையைத் தட்டும் ஒலி) ரூ. 10 கோடிக்கு மேல் லஞ்சம் வாங்கிக்கொண்டு, அரசு அறிவித்த கொள்கைக்கு மாறாக...... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள், அவர் முடிக்கட்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** 172 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கி, தமிழ்நாட்டிலே விதை தூவுவதைப்போல தூவி, நீதிமன்றத்திலே அந்தக் குற்றம் காரணமாக அத்தனை பள்ளிக்கூடங்களும் அடிபட்டு, 25,000-க்கும் மேற்பட்டவர்கள், படித்தோ, படிக்காமலோ, பாதிக்கப்பட்ட மாணவர்கள் இன்றையதினமும் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த வாதத்திற்குள் போக விரும்பவில்லை.



கைத்தொழில், நெசவு, விவசாயம், தையல் ஆசிரியர் பணியிடங்கள் தமிழ்நாட்டில் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அவற்றை நிரப்ப வேண்டும். அதேபோல் B.T. ஆசிரியர்களுக்கு பணிப் பாதுகாப்பு, அவர்கள் இடையில் நிறுத்தப்படாத வகையில் வேலைவாய்ப்பில் அவர்களுக்கு முன்னுரிமை போன்றவை வழங்கப்பட வேண்டும்.

தொகுதி பற்றிய இரண்டு விஷயங்களைப் பேசி, முடித்துக்கொள்கிறேன். கோவை மாவட்டத்தில் ஒரே ஓர் அரசு மகளிர் கல்லூரிதான் இருக்கிறது. என்.ஆர்.ஜி. அரசு மகளிர் கல்லூரி. அங்கே கூடுதல் வகுப்பறைகள் இல்லை. சுற்றுச் சுவர் பாழ்பட்டுக் கிடக்கிறது, கிணறு பாழ்பட்டுக் கிடக்கிறது. அங்கே சுற்றிலும் புதர் மண்டிக் கிடப்பதால், சமூக விரோதிகள் உள்ளே வந்து, ஏதாவது ஒரு விபரீதம் நிகழ்ந்து விடுகிற அபாயம் இருக்கிறது. ஆகவே, என்.ஆர்.ஜி. மகளிர் கலைக் கல்லூரிக்கு ஏற்பாடு செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல் சிக்கண்ண அரசு கலைக் கல்லூரியிலே B.A. (Literature) English Medium, B.A. (History) English Medium எல்லாம் எடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆக, எடுக்கப்பட்டவற்றை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூரில் சின்னசாமி அம்மாள் உயர்நிலைப் பள்ளி மைதானம் R.S.S. இந்து முன்னணி போன்ற அமைப்புகளின் விளையாட்டு மைதானமாக நடைமுறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அது பற்றி நான் எழுத்துபூர்வமாக புகார் கொடுத்திருக்கிறேன். ஓர் அரசுப் பள்ளியினுடைய மைதானம் மத வெறியைத் தூண்டுகின்ற தீய சக்திகளின் விளையாட்டு அரங்கமாக மாறியிருப்பதை கல்வித் துறை கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, காலத்தின் அருமை கருதி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரையிலேயும் R.S.S. தடைசெய்யப்பட்ட போதெல்லாம் தேச விரோத ஸ்தாபனம் என்று எந்த இடத்திலேயும், எந்த வழக்கறிஞரும் அதை விளக்கவில்லை. தேச பக்த ஸ்தாபனம் என்பதைப் பல தடவை, பல சந்தர்ப்பங்களில் எடுத்துரைத்து, அதை நீதிமன்றங்கள் அறிவித்து, அந்த வழக்குகளை dismiss செய்திருக்கின்றன என்று சொன்னால், அது மிகையாகாது.

[1999 ஏப்ரல் 1

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மண்ணும், மலையும், மரமும், மட்டையும் அல்ல தேசம் என்பது. வெறும் தார் சாலைகள் அல்ல தேசம் என்பது. தேசம் என்பது மனிதர்கள். மனிதர்கள் மதங்களாக இருக்கிறார்கள். ஜாதிகளாக இருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட மதத்தை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துவது தேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவது ஆகாது. எனவே, தேசத்தை மதத்தால் சிதைக்கிற R.S.S. ஒரு தீய சக்தி என்பதை நான் வலியுறுத்திச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியம் குறித்த விவாதத்தின் இறுதிப் பகுதியில், கல்வி நிலையங்களில் R.S.S. பயிற்சி போன்ற பயிற்சிகள் வழங்கப்படுவதாக திரு. சுப்பராயன் அவர்கள் எடுத்துக்கூறி, அப்படி நடைபெறுமானால் உடனே நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றார்கள். கல்வி நிலையத்தில் ஒரு மதச் சார்பு உணர்வை ஏற்படுத்துவதும் தவறு. அது நியாயமாக இருக்கலாம் அல்லது நியாயமாக இல்லை என்று மற்றவர்கள் கருதலாம். ஆனால், கல்வி நிலையத்திலே அப்படி நடைபெறுமானால், அது நிறுத்தப்பட வேண்டுமென்று அரசு நிச்சயமாக அறிவுறுத்தும். ஒருவேளை அது தனியார் கல்வி நிலையமாக இருக்குமானால், அப்படிப் பயிற்சி வழங்குவதைப்பற்றி விசாரித்து, அதற்குப் பின்னர்தான் நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கல்வி மானியம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள், பல்வேறு கட்சிகளின் சார்பில் ஏராளமான கருத்துக்களை எடுத்துப் பேசியிருக்கிறார்கள். அவர்கள் பேசுகிறபோது, அவர்கள் பேச விரும்பிய அனைத்தையும் பேச நேரம் இல்லாத காரணத்தால், ஒவ்வோர் உறுப்பினரும்கூட, தங்களுடைய கருத்துக்களில் சிலவற்றை ஓரளவிற்குத்தான் எடுத்துச் சொன்னார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் லட்சுமணன் அவர்கள்கூட முழு அளவிற்குப் பேச முடியாத நிலைமை ஏற்பட்டது. குறிப்பாக மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்களுக்கு நான் தனியாகவே நன்றி செலுத்த வேண்டும். நேரமில்லாத காரணத்தால் நான் பேசவில்லை என்று சொல்லி, அவருக்கு வந்திருக்கிற ஏராளமான கோரிக்கைகளிலே, பல்வேறு அமைப்புகளினுடைய 10, 12 கோரிக்கைகளை எல்லாம் என்னிடத்திலே கொடுத்து, நான் பேசவில்லை, நீங்களே இவற்றைப் பேசி விடுங்கள்



1999 ஏப்ரல் 1] [பேராசிரியர் க. அன்பழகன்]

என்று என்னிடத்திலே கொடுத்தார். அப்படிக் கொடுத்த உடனேதான் நான் தெரிந்துகொண்டேன், அவரே பேசி இருக்கலாம் என்று சொல்ல வேண்டிய நிலைமைகூட எனக்கு ஏற்பட்டது. இருந்தாலும்கூட, கல்வித் துறை என்பது, ஒரே நாளில், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எடுக்கப்படுகிற முடிவுகளைப் பொறுத்து, தொடர்ந்து இயங்கக்கூடிய ஒன்றல்ல. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு காலகட்டத்திலேயும் ஏற்படுகிற பிரச்சினைகள், தேவைகள், நிறைவு செய்ய இருக்கிற வாய்ப்பு, துறைக்குக் கிடைக்கிற நிதி வசதிகள், ஆகியவற்றைப் பொறுத்து அவ்வப்போது தொடர்ந்து செயல்பட வேண்டிய ஒன்றாகத்தான் கல்வித் துறை இருக்கிறது என்ற காரணத்தால், இன்று பேசிய பேச்சோடு மாண்புமிகு உறுப்பினர்களுடைய பேச்சும் முடியப்போவதில்லை, நான் சொல்கிற விடையும் இன்றோடு முடியாது, இன்னும் பல முறை நான் விடை சொல்ல வேண்டிய அவசியம் இருக்கத்தான் செய்யும் என்பதை முதலில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-40

மற்றும் ஒன்று, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய கருத்துக்கள், வெட்டுத் தீர்மானங்களின் மூலமாகத் தந்திருக்கிற பல்வேறு செய்திகள், பள்ளிகள் தேவை, பள்ளிகளினுடைய நிலை உயர்த்தப்பட வேண்டும், பள்ளிகளிலேயும், கல்லூரிகளிலேயும் இன்னின்ன புதிய பாடங்கள் இடம் பெற வேண்டும், பள்ளிகளுக்கான கட்டடங்கள் தேவை, ஆய்வுக்கூடங்கள் தேவை என்று இப்படித் தரப்பட்டிருக்கின்ற அத்தனை வேண்டுகோள்களையும் நிச்சயமாக அரசு, அந்தந்தத் துறைகள் மூலமாக முழு அளவு கருதிப் பார்த்து, முடிந்த அளவிற்கு அந்தக் குறைபாடுகளை எல்லாம் நீக்கவும், வேண்டுகோள்களை நிறைவேற்றவும் முயற்சிக்கும் என்று நான் முதலிலேயே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இருந்தாலும், அதிக நேரம் இருக்குமானால், வெட்டுத் தீர்மானங்களின் வரிசையிலேகூட என்னுடைய பேச்சை நான் வரிசைப்படுத்திப் பேச முடியும். அப்படிப் பேசுவதற்கு நேரம் இல்லாவிட்டாலும்கூட, வெட்டுத் தீர்மானங்கள் எவையும் புறக்கணிக்கப்படமாட்டாது, நிச்சயமாகத் துறை மூலமாக உரிய முறையில் ஆய்வு செய்யப்படும், நிறைவேற்றக்கூடியவை எல்லாம் நிறைவேற்றப்படும் என்று பொதுவாக ஒரு கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

[திரு. பேராசிரியர் க. அன்பழகன்] [1999 ஏப்ரல் 1

மற்றும் ஒன்று, கல்வி என்று சொன்னவுடன் ஒழுக்கம்தான் கல்வியினுடைய பயன் என்ற அடிப்படையில்—கல்வி ஒழுக்கத்திற்கே அடிப்படையாக அமைந்து, மாணவர்களுடைய ஒழுக்கம் சிறக்க வேண்டும், அதன் மூலமாக நாடும் ஒழுக்கத்தில் உயர வேண்டும் என்ற கருத்தைத் திரும்பத் திரும்ப திரு. வேலாயுதன் அவர்கள், திரு. லத்தீப் அவர்கள் மற்றும் பல நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள். நான் சில அடிப்படைக் கருத்துக்களைச் சொன்னால், மாண்புமிகு உறுப்பினர்கள் அவை குறித்துச் சிந்திப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

ஒரு காலத்திலே கல்வி என்பது சமயக் கல்வியாக மட்டும்தான் இருந்தது. அதற்கடுத்த ஒரு காலகட்டத்திலே, கல்வி என்பது சமயம் சார்ந்த கல்வியாக, ஆனால், சமயம் குறிப்பிட்டவர்களுக்கு மட்டும்தான் கல்வி, ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கோ, ஒரு குறிப்பிட்ட துறையினருக்கோ அல்லது மடாதிபதியினுடைய சீடருக்கோ அல்லது சமூகத்திலே மேல் ஜாதி எனப்பட்டவர்களுக்கோ மட்டும்தான் கல்வி என்ற நிலை இருந்தது. இன்னொரு காலகட்டத்தில் ஒரு மொழியிலே மட்டும்தான் கல்வி, சமஸ்கிருதத்திலே மட்டும்தான் கல்வி என்னும் நிலை இருந்தது. அவற்றிலேயிருந்தெல்லாம் மெல்ல வெளியே வந்திருக்கிறோம். அதுமட்டும் அல்ல, கல்வி என்பது உழைப்பாளிகளுக்குத் தேவையில்லை என்ற ஓர் அழுத்தமான கருத்து இந்த நாட்டில் போதிக்கப்பட்டு, நீண்டகாலமாக, கல்வி வேண்டாம், தேவையில்லை என்று திரு. மணியைச் சார்ந்தவர்கள் இருந்தார்கள். இப்போதுதான் எங்களிடத்திலே தகராறுக்கே வருகிறார்களே தவிர, நீண்டகாலமாகவே அவர்களின் பாட்டனார் காலத்திலேயும், அவர்களின் தகப்பனார் காலத்திலேயும் பள்ளிக்கூடத்திற்குப் பிள்ளைகள் போக வேண்டுமென்று விரும்பினால்கூட, நமக்கு ஏண்டா படிப்பு என்று சொல்கிற அந்த மனப்பான்மையிலேயே நம்முடைய காலம், நீண்டகாலம் ஓடிவிட்டது. எனவே, உழைப்பவன், தொழிலாளி, ஏழை, கிராமத்திலே உள்ளவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியவர்களுக்கும் கல்விக்கும் சம்பந்தமே இல்லாத ஒரு சமூகமாக இருந்து, இப்போதுதான் வெளியிலே வருகிறோம். அதேபோல, மகளிருக்குக் கல்வி தேவையில்லை என்பதும், அதுவும் நீண்டகாலமாக உரம் ஏறிப்போன ஒரு கருத்தாக இருந்து, பாரதியார் காலத்திலேயிருந்துதான் மெல்ல, மெல்ல அந்த எண்ணத்திலிருந்து விடுவிக்கப்பட்டு வெளியிலே வருகிறோம்.



1999 ஏப்ரல் 1] [பேராசிரியர் க. அன்பழகன்]

அதே நேரத்தில், சமூகத்திலே ஏராளமான புரட்சி, ஏராளமான மாற்றங்கள், தெரிந்தோ, தெரியாமலோ பல்வேறு மாற்றங்கள். அந்த மாற்றங்கள் காரணமாகக் கல்வியினுடைய மதிப்பீடுகள் மாறிப் போய்விட்டன. கல்விக்குத் தொடக்ககாலத்திலே சமயம், அதனுடைய பயன், அடுத்த காலகட்டத்திலே ஒழுக்கம்—Morality, அதற்கடுத்த காலகட்டத்திலே அறிவாற்றல், அதற்கடுத்த கால கட்டத்திலே பதவி வாய்ப்பு, அதற்கடுத்த காலகட்டத்திலே சமூக மதிப்பு என்று மெல்ல மாறிக்கொண்டே வந்து, இப்போது கல்வி என்பது, அதுகூட, பொருள் சம்பாதிக்க ஒரு வாய்ப்பாக இருப்பதைப் பொறுத்து மட்டும்தான் மதிக்கப்படுகிறது. வேலைவாய்ப்பு என்று கருதுவதுகூடத் தாழ்ந்துபோய், ஊதியம் பெற யார் அதிகம் ஏமாற்ற முடியும் என்ற எண்ணத்தில், அதற்கு இந்தக் கல்வி பயன்பட வேண்டும் என்ற ஒரு நோக்கம் வந்து, மற்றவர்கள் இந்தக் கல்வியைப் பெற்று நம்மை ஏமாற்றி விடுவார்கள், ஆகவே அவர்களிடம் போட்டியிட நமக்குக் கல்வி தேவை என்று அப்படியொரு சிந்தனையின் சூழ்நிலைத் தாக்கம் இப்போது ஏற்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12-45

அதனாலேதான் தாய்மொழிக் கல்வி எவ்வளவு உயர்ந்த கல்வியாக இருந்தாலும்கூட, அதைப் பெற முடியும் என்று சொன்னாலும்கூட, நம்முடைய ஏழைப் பெற்றோர்களேகூட தங்களுடைய பிள்ளைகளுக்கு ஆங்கிலத்திலேதான் முதலில் அறிவு தேவை; தமிழ் என்ன, நம்முடைய வீட்டிலேயே தாயாரே பிள்ளைக்குச் சொன்னால் போதும், யார் வேண்டுமானாலும் சொல்லித் தரலாம் என்று எண்ணுகிற மனப்போக்கு ஏற்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் சமூகத்திலே ஆதிக்க சக்திகளாக மாறுகிறார்கள். எனவே அவர்களோடு போட்டியிட வேண்டும் எனில், போட்டியிடுவதற்கு என்னுடைய பிள்ளைகள் ஆங்கிலத்தில் கல்வி பெற நாங்கள் மாதம் 20, 30 ரூபாய்கூடக் கட்டணம் செலுத்தத் தயார் என்று முன் வருகிற ஒரு நிலை ஒரு பக்கம். இன்னொரு பக்கம் ஆங்கிலத்தினுடைய ஆதிக்க சக்தி இந்த நாட்டில் தொடரக்கூடாது, தாய்மொழி உணர்வு கொள்ள எல்லோரும் தமிழைப் படிக்க வேண்டும் என்று வலியுறுத்திப் போராடுகிற ஒரு சக்தி. இவற்றை எண்ணிப் பார்க்க வேண்டிய ஒரு காலகட்டத்தில் நாம் இருக்கிறோம்.

தாய்மொழிக் கல்வியைவிட, சிறு குழந்தைகளுக்குச் சிறந்த கல்வி வேறு கிடையாது. கல்வி என்பதேகூட, அது ஒரு பயிற்சி

என்ற எண்ணம் இல்லாமல், குழந்தைகள் கருத்தை உணருவதற்கு வாய்ப்பாக இருப்பதற்குப் பெயர்தான் குழந்தைகளுக்கான கல்வி. மேல்நாடுகளிலே எல்லாம் ஐந்து வயது வரையில் பாடப் புத்தகமே இல்லாமல் Kinder-Garten முறையில், ஏதோ விளையாட்டோடு சேர்ந்த கல்வி வழங்குகிற முறையில்தான் மழலையர் பள்ளியில் வழங்குகிறார்கள். அந்த நிலையை நம்முடைய நாட்டிலே ஏற்படுத்துவதற்கு ஏற்ற அந்தப் பொருளாதார நிலை எளிதாக வராது. வராததையெல்லாம் விரும்புகிற பழக்கமும் எனக்கு இல்லை. ஆகவே, அப்படி வராத ஒன்றைத் தமிழ்நாட்டிலே செய்ய முடியும் என்ற ஓர் எண்ணத்தை ஏற்படுத்த நான் தயாராக இல்லை.

ஐந்து வயதுக்கு மேற்பட்டு பதினான்கு வயது வரையில், அந்த வயதிலேயுள்ள ஆண், பெண் அனைவரும் கட்டாயமாகக் கல்வி கற்க ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதும், அவர்களை அந்தக் கல்வியை விட்டு விலகாமல் பாதுகாத்திட வேண்டும் என்பதும் அரசமைப்புச் சட்டத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படைக் கொள்கை. அதைத்தான் கட்டாயக் கல்வி என்று நாம் சொல்கிறோம். ஜனநாயகம் அடியோடு கெட்டுப் போகாமல் இருக்கவும் இந்தக் கட்டாயக் கல்வி தேவை. அதே நேரத்தில் நாட்டு மக்கள் தங்களுடைய உரிமையைக் காத்துக்கொள்ளவும் இந்தக் கட்டாயக் கல்வி தேவை. அதை வழங்குவதிலேகூட 100-க்கு 95 பங்கு தமிழ்நாட்டிலே நாம் இப்போது வெற்றி பெற்றிருக்கிறோம். மகளிர் இன்னும் சற்று அதிகமான அளவிற்குக் கல்வி கற்க முன் வருகிற ஒரு சூழ்நிலை உருவாகிறபோது, இன்னும் 2, 3 ஆண்டுகளில் 100-க்கு 100 பேர் கல்வி வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லக்கூடிய நிலைமையை நாம் உருவாக்க முடியும். அந்த வகையிலேதான் தொடக்கக் கல்வியில் இந்த ஆண்டு மேலும் 400 பள்ளிக்கூடங்களைத் தொடங்கிடவும், கடந்த ஆண்டு 300-ம், ஏற்கெனவே 30 ஆயிரமும், மொத்தத்திலே ஏறத்தாழ 31 ஆயிரம் தொடக்கப் பள்ளிக்கூடங்கள் இயங்கக்கூடிய நிலைமை மூலமாக, எல்லா கிராமப்புறங்களிலேயுள்ள மிக, மிகத் தாழ்ந்த, பின்தங்கிய நிலையிலே வாழ்கிற ஏழைகள் தங்கள் வீட்டு ஆண் குழந்தைகள், பெண் குழந்தைகள் அனைவரையும் பள்ளிக்கூடங்களிலே சேர்க்கப்படுவதற்கு ஒரு வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும் என்று அரசு செயல்படுகிறது. ஒரு கிலோமீட்டர் தொலைவில் தங்களுடைய பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்ப முடியும் என்ற நிலையைப் பெற்றோர்களுக்கு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று அரசு கருதி, அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது. இந்த ஆண்டு ஜூன், ஜூலை-யிலே தொடக்கப் பள்ளிக்கூடங்கள், மிச்சமுள்ள கிராமங்களிலே





தொடங்கப்படும். சமத்துவபுரத்திலேயும் பள்ளிக்கூடங்கள் தொடங்குவதை ஏற்றுக்கொண்டு அதற்கும் சில பள்ளிக்கூடங்கள் ஒதுக்கப்பட்டு, நடைமுறைக்கு வருகின்றன. ஆனால், பள்ளிக்கூடங்களைத் தொடங்குவதற்குத் தேவையான இடம், பள்ளிக்கூடத்தை நடத்துவதற்கு ஒரு சின்ன இடம், ஒரு கொட்டகை இந்த வசதியை அந்தக் கிராமத்து மக்கள் செய்து கொடுத்தால்தான் உடனடியாகத் தொடங்க முடியும். யாரும் செய்யாதபோது அரசு தானே நினைத்தவுடன் ஒரு பள்ளிக்கூடத்தைத் தொடங்க முடியாது.

இன்னும் ஒன்று. வருகிற மே திங்களில் குழந்தைகளைப் பள்ளிகளிலே சேர்க்க வேண்டும் என்பதற்காக இப்படிப்பட்ட கிராமப் பகுதிகளில் ஓர் இயக்கம் நடத்த வேண்டும். உள்ளாட்சி மன்றத் தலைவர்கள், மக்கள் நலப் பணியாளர்கள், அரசு அலுவலர்கள், பள்ளியாசிரியர்கள், பெற்றோர்-ஆசிரியர் கழகத்தைச் சேர்ந்தவர்கள், கூடுமானால் அந்தந்த வட்டாரத்திலேயுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருமாக ஓர் இயக்கம், பிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்கும் உணர்வை ஏற்படுத்துவதற்கு நடத்த வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். அது இந்த நாட்டுக்காக, சமூகத்திற்காக, அடித்தட்டு மக்களுக்காக நாம் ஆற்ற வேண்டிய பணி என்ற உணர்வோடு சட்டமன்ற உறுப்பினர்கள் ஆங்காங்கே கலந்து கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கட்டாயக் கல்வி என்ற காரணத்தால், அந்தக் கட்டாயக் கல்வியை மக்களிடத்திலே நிலைநிறுத்த அல்லது செயல்படுத்த தங்களுடைய பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பாத பெற்றோர்களைத் தண்டிக்க வேண்டும் என்றுகூடச் சிலர் கூறினார்கள். அது விரும்பத்தக்க முறையல்ல. அறியாமைக்குக்கூட தண்டனை என்ற நிலைமை இருக்கக் கூடாது. குற்றங்களுக்கே தண்டனை இன்னும் வழங்க முடியவில்லை. நீதிமன்றங்கள் மாறிக்கொண்டிருக்கின்றனவே தவிர பெரும் குற்றங்களெல்லாம்கூட, ஊர் அறிந்திடத் திட்டமிட்டு நடைபெற்ற குற்றங்களெல்லாம்கூடத் தண்டிக்கப்பட முடியாத நிலைமையில் இருப்பதைக் காண வேண்டும். இன்னும் ஒரு பெரிய தத்துவம், தவறு செய்துவிடுகிற, வழுக்கி விழுந்த பெண்மணிக்குக்கூட தண்டனை அல்ல, பரிகாரம், மறுவாழ்வுதான் பரிகாரம் என்பது ஒரு தத்துவம். ஆகவே, அந்த அடிப்படையிலே எண்ணிப் பார்ப்போமேயானால்,

[பேராசிரியர் க. அன்பழகன்] [1999 ஏப்ரல் 1

இந்தக் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திலே சேர்த்திட, எந்தக் குழந்தையையும் விட்டு விடாமல் சேர்த்திட ஒரு பெரிய ஆர்வத்தை உண்டாக்க வேண்டும்; அந்த இயக்கத்திலே அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்; மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கேகூட அந்த வேண்டுகோள் அளிக்கப்படும். அந்த அடிப்படையிலே செயல்படுவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அதிலே ஆர்வம் காட்ட வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

இன்னும் ஒன்று, எல்லாக் குழந்தைகளையும் பள்ளிக்கூடங்களிலே கொண்டு வந்து சேர்ப்பதற்கு, அவர்களை ஊக்கப்படுத்துவதற்கு குழந்தை ஒன்றுக்கு ஒரு நாளைக்கு 2 ரூபாய் கொடுக்கலாம் என்று டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொன்னார்கள். ஒருவேளை கிருஷ்ணசாமி கொண்டு வந்து சேர்க்கிற குழந்தைகளுக்கு, அவர் அப்படித்தான் கொடுக்கிறாரோ என்னவோ, எனக்குத் தெரியாது. ஆனால் முடியுமா என்று கேட்டால் மிகவும் கடினம். ஏனென்றால் 60 இலட்சம் பிள்ளைகள் இப்பொழுது தொடக்கப் பள்ளிக்கூடங்களிலே படிக்கிறார்கள். சேராத குழந்தைகள் 3 இலட்சம், 2 இலட்சம் இருக்கக்கூடும். இன்னும்கூடக் குறைவாக இருக்கலாம். ஆனால் அந்தப் பிள்ளைகளுக்கு 2 ரூபாய் கொடுத்தால், இப்பொழுது பள்ளிக்கு வரும் இந்தப் பிள்ளைகளும் உடனே கேட்பார்கள். இல்லையென்றால் அப்புறம் இவன் வரமாட்டான். அந்த வராத 2 லட்சம் பேருக்கு 2 ரூபாய் வீதம் கொடுக்கப்போய் இன்று வந்து கொண்டிருக்கிறவன், 2 ரூபாய் கொண்டு வந்து கொடுத்துவிட்டு என்னையும் கூப்பிட்டுப் போ என்று சொல்கிற நிலைமை, அவர்களின் பெற்றோர்கள் மூலமாக வரும். ஆகவே, 60 இலட்சம் பேரா அல்லது போனால் போகிறது, அதிலே 15 இலட்சம் பேருக்கு ஒரு நாளைக்கு 2 ரூபாய் கொடுக்க ஆரம்பித்தால்கூட ஒருநாளைக்கு 30 இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும். ஒரு வருஷத்திற்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பது நான் சொல்லத் தேவையில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மேலும் மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் பேசுகிறபொழுது சொன்னார்கள், மற்றவர்களும் சொன்னார்கள். தொடக்கப் பள்ளிக்கூடங்களெல்லாம் இன்னும் கூரைகளில்தான் இருக்கின்றன என்று சொன்னார்கள். அந்தக் கூரைக் கட்டடத்தையே மாற்ற நாம் இன்னும் நிதி ஒதுக்க வேண்டிய நிலைமையிலே இருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்வது, கூரை இருக்கிறது என்று சொன்னால் உங்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியை அதற்கு ஒதுக்க வேண்டுமென்றுதான் அர்த்தம். கூரை அதிகமாக இருக்கிற இடத்திலே முதலிலே நிதி ஒதுக்குங்கள், கூரையே இல்லாத கட்டடம் உள்ள இடத்திற்கு அப்புறம் ஒதுக்குங்கள். ஏனென்றால் அரசாங்கம் மொத்தம் ஆயிரம் பள்ளிக்கூடங்களுக்கு நாங்கள் ஒரு பள்ளிக்கூடத்திற்கு 1½ இலட்சம் 2 இலட்சம் என்று ஒதுக்குவதாக வைத்துக் கொள்ளுங்கள். 30 ஆயிரம் பள்ளிக்கூடங்களிலே எந்த ஆயிரம் பள்ளிக்கூடங்களுக்கு என்று சொன்னால்கூட எனக்கே தெரியாது. எந்த ஊரிலே இருக்கிற, எங்கே இருக்கிற பள்ளிக்கூடம் என்று இயக்குநரேகூட கீழேயிருக்கிற அலுவலரைக் கேட்டுத்தான் அந்தப் பெயர்ப் பட்டியலைத் தயாரிப்பார். மாவட்டக் கல்வி அலுவலர்தான் தயாரித்துக் கொடுப்பார். அந்தப் பள்ளிக்கூடத்தினுடைய உண்மையான நிலை எங்களுக்கும் தெரியாது. இப்பொழுதோ மாவட்டக் கல்வி அலுவலருக்கே தெரியாது. அங்கேயிருக்கிற ஒரு எழுத்தர் எழுதி வைப்பதிலேதான் அவர் கையெழுத்துப் போடுகிறார். ஏனென்றால் அவர் இந்த வேலைக்கு வந்து ஆறு மாதம், ஒரு வருஷம், மறுபடியும் அதை விட்டு மாறிப் போவதற்கு 6 மாதம். அதனாலே இந்த ஓர் ஆண்டிலே என்ன செய்ய முடியும் என்று அவர் ஓய்வு பெறும் கணக்குப் போட்டுக் கொண்டுதான் இருக்கிறார். ஆகவே, யாருக்கும் இந்தப் பணியிலே ஒரு தொடர்ச்சி இல்லை.



1999 ஏப்ரல் 1] [பேராசிரியர் க. அன்பழகன்]

இப்பொழுது நான் ஏற்றுள்ள இந்த அமைச்சர் பதவிக்காகச் சொல்லவில்லை. நான் 1989-90-லே கல்வியமைச்சராக இருந்துவிட்டு, 1996-லே வந்து பார்க்கிறபொழுது அதைவிடக் கொஞ்சம் முன்னேறியிருக்கும் என்று நினைத்துக்கொண்டுதான் நான் இந்தப் பொறுப்பை எடுத்துக் கொண்டேன். ஆனால் 1991-லே இருந்ததைவிடவும் கெட்டுப் போய் இருக்கிற நிலைமையிலேதான் நான் இந்தப் பொறுப்புக்கு வந்தேன். இப்பொழுதும் நான் ஏதாவது ஒரு சமூகப் பணி, தொண்டு என்று ஏதாவது செய்ய வேண்டுமென்றால் இந்தக் கெட்டுப்போன நிலைமையை மாற்றி, என்னால் முடிந்தவரைக்கும் இந்த ஒரு வேலையைத்தான் செய்ய வேண்டுமென்று நினைக்கிறேனே தவிர வேறு எந்த வேலையிலேயும் எனக்கு ஆர்வம் இல்லை. ஏனென்றால், கல்விப் பணியைக்கூட ஒழுங்குபடுத்த முடியாத ஒரு சிக்கல் தொடர்ந்து நீடிப்பது நாட்டுக்கு நல்லதல்ல; சமூகத்திற்கும் நல்லதல்ல. கல்வி மட்டும் முறையாக வழங்கப்படுமானால் திரு. சுப்பராயன் அவர்கள்

[பேராசிரியர் க. அன்பழகன்] [1999 ஏப்ரல் 1

பேசுகிறபொழுது சொன்னதுபோல, மக்கள் தானாகவே சிந்திக்கிற ஆற்றலை அது உருவாக்கும். கல்வி முறையாக வழங்கப்படவில்லையென்று சொன்னால் குழந்தைகளுக்குச் சிந்திக்கிற ஆற்றல் வராது. பாடத்தைக்கூட, எழுத்தை மட்டும் காட்டி, ப ட ம்— படம் என்று படித்தால் அந்தப் பிள்ளைக்கு அதிலேயிருந்து ஓர் எண்ணம் வராது. ஏதோ படம், அவ்வளவுதான் தெரியும். ஓர் எண்ணம் வர வேண்டுமானால் அந்த ஆசிரியர் தானே ஆர்வத்தோடு, ஊக்கத்தோடு அந்தக் கருத்தை விளக்க வேண்டும். இந்தக் கல்வித் துறையிலே ஆசிரியர் எப்படியெல்லாம் பாடம் நடத்த வேண்டுமென்பதற்கும் அவ்வப்பொழுது பல ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. ஆசிரியர்களுக்காக குறுகிய கால மறுபயிற்சி நடைபெற்று, in-service training நடைபெற்று, ஏறத்தாழ 100-க்கு 20, 30 பேருக்கு, அவ்வப்பொழுது இருக்கின்ற நிலைமைக்கேற்ப அந்தந்தப் பாடத்தை நடத்துவதற்கென பல்வேறு வகையில் in-service training வழங்கப்படுகிறது. அதிலேயும் இந்த ஆசிரியர்களில் 100-க்கு 50, அல்லது 60 பேர் தங்களுடைய கடமையை உணர்ந்து ஆர்வத்தோடு பணியாற்றுவது உண்மை. ஆனாலும்கூட ஒரு தனி மனிதனாக இருக்கிற ஆசிரியருடைய உள்ளக் கிளர்ச்சியைப் பொறுத்துத்தான் அந்தக் கடமையிலே ஆர்வம் கொள்கிறார்கள். அவருடைய ஈடுபாட்டைப் பொறுத்துத்தான் வெற்றி பெறுகிறாரே தவிர வெறும் சம்பளத்திற்காக வேலை செய்வதாக எண்ணுகிறவர்களோ அல்லது ஏதோ ஊதியத்துக்காக இன்றைக்குப் பள்ளிக்கூடம் போகிறோம் என்று நினைத்துக்கொண்டு போகிறவர்களோ அதிலே முழு வெற்றி பெறுவதில்லை. அப்படிப்பட்ட கடமை உணர்வை ஏற்படுத்த முயற்சிக்கிறோம்.

பிற்பகல் 12-55

அண்மையிலே தொடக்கப் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குக் கல்வி வழங்குவது குறித்து, பிள்ளைகள், சுமையாக எண்ணிப் பள்ளிக்கூடத்திற்கு வருவதை விரும்பாத ஒரு மனப்போக்குக்கு ஆளாகாமல் இருக்க வேண்டுமானால், அந்தக் குழந்தைகளுக்கு ஒரு விளையாட்டுப் போல கல்வி தர வேண்டும். இன்னும் சொல்லப்போனால், படிப்பதில் அவர்கள் மகிழ வேண்டும், enjoyment இருக்க வேண்டும். அது joyous reading என்ற முறையில் அவர்களுக்குப் பாடம் சொல்ல வேண்டும். கதை சொல்வதைப் போல பாடம்



1999 ஏப்ரல் 1] [பேராசிரியர் க. அன்பழகன்]

நடத்த வேண்டும். உள்ளூரில் கிடைக்கிற பொருள்களையெல்லாம் கொண்டு வந்து வைத்துக் கொண்டு அந்தப் பொருள்களைப்பற்றிப் பேசுவதைப் போல அறிவூட்ட வேண்டும் என்றெல்லாம்கூட ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது எல்லாமே சுற்றுப்புறச் சூழலைப் பொறுத்துத்தான். இந்தச் சட்டமன்றத்திலேயே நாம் பார்த்தோமே. சூழல் நன்றாக இருக்கும்போது பேசுவோர் கருத்து எவ்வளவு நன்றாக இருக்கிறது. சூழல் கெட்டுப்போனபோது யார் யார் எந்தெந்தப் பக்கமோ ஓடிக்கொண்டு இருந்தார்கள்! ஆகவே சூழல் நன்றாக இருப்பது என்பது, நம்முடைய ஒட்டுமொத்த அறிவாற்றலை வளர்ப்பதைப்போல, குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடத்தில் ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தியாக வேண்டும். பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகிறபோது மகிழ்ச்சியோடு உள்ளே போய் அமரக்கூடிய நிலை, ஆசிரியர்களைப் பார்க்கிறபோது ஒரு நட்புணர்வு, அன்புணர்வு பிறக்கக்கூடிய நிலை இவற்றையெல்லாம் வளர்த்தாக வேண்டியிருக்கிறது. அதை இந்த அவையிலேயிருந்துகூட நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது கல்வித் துறையில் செலவாகிற பணத்தில் 100-க்கு 75 பங்கு கிராமப் பகுதிகளில்தான் செலவாகிறது. அது கிராமப் பகுதிகளில் செலவாகிறது என்று சொன்னால், அதிகம் என்று சொல்லவில்லை. அவசியம் தேவை, செலவாகிறது. அந்தப் பணத்தால் பயன்பெறக்கூடியவர்களாக இருப்பவர்கள், ஆசிரியர்களிலும் நூற்றுக்கு எண்பது பேர் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மிக மிகப் பின்தங்கிய சமுதாயத்தைச் சார்ந்தவர்கள்தான். நான் இதைச் சொல்வதற்காக யாரும் என்னைக் குற்றமாகக் கருதமாட்டீர்கள் என்று நம்புகிறேன். மேல் ஜாதிக்காரர்கள் மட்டும்தான் ஆசிரியர்களாக இருக்க முடியும் என்று எண்ணிய எண்ணத்திலே எனக்கு கருத்து மாறுபாடு இருந்தது. அடித்தட்டு மக்கள் ஆசிரியர்களாக வர வேண்டுமென்ற எண்ணத்திலே எனக்கு ஆர்வம் இருந்தது. ஆனால் நடைமுறையிலே பார்க்கிறபோது, மேல்ஜாதிக்காரர்கள் எங்களுக்கு நடத்திய பாடத்தைக்கூட இப்போது தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய ஆசிரியர்கள், பின்தங்கிய குழந்தைகளுக்கு நடத்தவில்லை என்ற ஒரு குறை இருப்பதை இப்போது நாட்டுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சமூகம் முன்னேற வேண்டுமானால், அடித்தட்டு மக்களைக் கைதூக்கிவிட வேண்டுமென்ற உணர்வு, அவர்களுடைய குருதியிலே கலந்திருக்கவில்லை. டாக்டர் ராமதாஸ் அவர்கள் என்னோடு ஒரு

[பேராசிரியர் க. அன்பழகன்] [1999 ஏப்ரல் 1

விழாவில் கலந்துகொண்டபோது, அவரும் அதையே சொன்னார். கிராமங்களில் உள்ள பள்ளிக்கூடங்களில் உள்ள ஆசிரியர்கள் மட்டும் மனது வைப்பார்களேயானால், இந்தச் சமூகத்தில் பெரிய மாற்றமும் முன்னேற்றமும் ஏற்படும், அவர்கள் மனம் வைத்துச் செயல்படவில்லை என்றார் அவர். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், என்னுடைய கருத்து மட்டுமல்ல. கிராம மக்களிடத்திலே அக்கறை உள்ளவர்களாக இருக்கிற யாரும் எண்ணிப் பார்க்க வேண்டியதும், பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்தைப் பற்றிக் கருதுகிற, எல்லோரும் எண்ணிப் பார்க்க வேண்டியதும் இது. அந்த உணர்வோடு, தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள். அடுத்த நிலையிலே உள்ள நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் கடமை உணர்வோடு செயல்படுவார்களானால் நாம் செலவழிக்கிற இந்த 4,000 கோடி ரூபாயில் ஏறத்தாழ பள்ளிக் கல்விக்காக 3,000 கோடி ரூபாய் அளவுக்குச் செலவழிக்கப்படுகிறதே, அது பெரும் நன்மையை இந்த நாட்டுக்கு விளைவிக்கும் என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ஒன்று. சமுதாய ஒழுக்கம் என்பது, கல்வியினாலே மட்டும் வருவது இல்லை. கல்வி என்பது ஒரு தூண்டுகோல். கல்வி ஒழுக்கத்திற்கு மாறாக இருக்கக் கூடாது. கடுமையான வறுமையினாலே பாதிக்கப்பட்டிருப்பவர்களை இந்தக் கல்வியானது ஒழுக்கத்திலே நிறுத்தாது. இன்னும் சொல்லப்போனால், சமூகத்தில் தாம் புறக்கணிக்கப்பட்டதாக, வஞ்சிக்கப்பட்டதாக ஓர் உணர்வு ஒருவனுக்கு இருக்குமேயானால் இந்தக் கல்வி அவனை அமைதியான வாழ்க்கையில் நிலை நிறுத்தாது. எனவே இந்தச் சமூக நீதி உணர்வின் அடிப்படையில் நீதி கேட்கும் அந்தப் பிள்ளைகளிடம் ஒழுக்க உணர்வை ஏற்படுத்துவதும் கடினம். எல்லாவற்றையும் அமைதியான பார்வையில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாத நிலையே உள்ளது. எல்லாவற்றையும்விட ஜனநாயகம் வளர வளர பிள்ளைகள் எண்ணிப் பார்க்கிற, புரிந்து கொள்கிற, அறிந்துகொள்கிற பல்வேறு செய்திகள் அவர்களுடைய மனதிலே பல்வேறு தாக்கங்களை உண்டாக்குகின்றன. எனவே, ஒழுக்கம் என்ற ஒன்றை மட்டுமே கல்வி மூலமாகப் பிள்ளைகளிடத்திலே ஏற்படுத்த முடியும் என எதிர்பார்க்க முடியாது. ஆனால் நல்ல கட்டுப்பாடான வாழ்க்கை முறைகளைப் பிள்ளைகளிடத்திலே பயிற்றுவிப்பதன் மூலமாக, அவர்களாகத் தெளிந்து, அவர்களாகத் தங்களுக்கு எது நன்மை என்று உணரக்கூடிய சூழ்நிலையை



1999 ஏப்ரல் 1] [பேராசிரியர் க. அன்பழகன்]

உருவாக்குவதை பள்ளிக்கூடப் படிப்பு முறை உண்டாக்க வேண்டும், உண்டாக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன். Convent பள்ளிக்கூடங்கள் அல்லது வேறு சில பள்ளிக்கூடங்கள், நம்முடைய பள்ளிக்கூடங்களிலேயே சில பள்ளிக்கூடங்களில், பிள்ளைகளிடத்தில் சில உடுப்பு முறைகளையெல்லாம் ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். நமது நாட்டுச் சூழலில் அந்த உடுப்பு முறை தேவையில்லை என்னும் கருத்திலும் ஒரு நியாயம் உண்டு.

பிற்பகல் 1-00

காலில் Boots போட வேண்டும், டை கட்ட வேண்டும், கால்சட்டை போட வேண்டும் என்றெல்லாம் குழந்தைகளை கட்டாயப்படுத்தக் கூடாது என்பது என்னுடைய சொந்தக் கருத்து. ஆனால் போட்ட குழந்தைதான் ஒழுங்காக இருக்கிறது என்கின்றனர். ஏனென்று கேட்டால் அவனுக்கு அதிலே ஒரு ஒழுக்கம் வந்து விடுகிறது. அவனை அறியாமலேயே பள்ளிக்கூடம் என்றால், உடுப்பு உடுத்துவதிலிருந்து, புத்தகப் பையை எடுத்துக் கொண்டு போவதிலிருந்து, சரியான நேரத்திற்குப் போவதுவரை ஒரு conscientious behaviour ஏற்பட்டு அவன் மனதார விரும்பி அதிலே ஈடுபட்டு விடுகிறான். இந்த உடுப்பைப்பற்றியே கவலைப்படாத பிள்ளை பள்ளிக்கூடத்தைப் பற்றியும் கவலைப்படமாட்டேன் என்கிறான்; புத்தகத்தை எங்கே வைத்தோம் என்பது அவனுக்குத் தெரியவில்லை; அவனது பெற்றோருக்கும் அது தெரியவில்லை.

இன்னும்கூட ஓர் உண்மையை நான் சொல்ல விரும்புகிறேன். அது தவறாக இருந்தாலும் அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. மாதம் 25 ரூபாய் பிள்ளைக்காகச் சம்பளம் கட்டுகிற பெற்றோர்கள் பிள்ளையைக் கொண்டுபோய் பள்ளிக்கூடத்திலே விட்டுவிட்டு வருகிறார்கள். இலவசப் பள்ளிக்கூடம், அரசாங்கப் பள்ளிக்கூடம் என்றால் பிள்ளையை வந்து கூப்பிட்டுப்போக ஏன் வாத்தியார் வரவில்லை என்று கேட்கிறான். (சிரிப்பு) இந்த மனப்பான்மை பணம் கட்டுகிற பள்ளியைப்பற்றி வேறு விதமாக உள்ளது. தான் கட்டுகிற பணம் வீணாகி விடுமே என்று பிள்ளையைக் கொண்டுபோய் விடுவதில், தாயாருக்கும் தகப்பனாருக்கும் அக்கறையிருக்கிறது; வண்டி வைத்துக் கொண்டுபோய் விடுகிறார்கள். மாநகராட்சிப் பள்ளிக்கூடம், நகராட்சிப் பள்ளிக்கூடம், இலவசப் பள்ளிக்கூடம், முதலானவற்றில் ஆசிரியர் நேரத்திற்குக்கூட வருகிறார் என்றாலும் பெற்றோர்கள் பிள்ளைகள் நேரம் தவறிப் போவது பற்றிக் கவலைப்படுவது இல்லை.

இலவசம் என்பது எவ்வளவு நம்மை ஏமாற்றி வருகிறது என்பதையும், அடித்தட்டு மக்கள் இதனால் எவ்வளவு பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் மெல்ல மெல்ல நாம் எண்ணிப்பார்த்தாக வேண்டும். நான் இன்றைக்கு அமைச்சர் என்பதால் சொல்லவில்லை. நானே என்றைக்கும் இந்த அரசிலே இருப்பேன் என்பதால் அல்ல. அதைப்பற்றி நான் கவலைப்படுகிறவனும் அல்ல. எந்த வழியில் போகிறேனோ அந்த வழியில் போய்க்கொண்டிருப்பேன். இது என்னுடைய பிரச்சினை அல்ல. இந்த நாடு, சமூகம், அடித்தட்டு மக்கள், அவர்தம் கல்வி, தொழில், மொத்த வளர்ச்சி, அத்துடன் ஜனநாயகத்திலே நடக்கிற திருவிளையாடல்களை எல்லாம் நிறுத்துகிற வாய்ப்பு நம் நாட்டிலே ஏற்பட வேண்டுமானால் மொத்தத்தில் இந்த இலவசத்தைப்பற்றி அவர்களே உணர்ந்து பார்க்கக்கூடிய ஒரு காலம் வர வேண்டும்.

குழந்தைகள் கல்விக்காகப் பெற்றோர் செலவிடுவது தவறல்ல. கல்விக்காக இலஞ்சம் கொடுப்பது தவறு, கல்விக்காக கட்டணத்திற்கு மேற்பட்ட தொகை—இங்கே மணி அவர்கள் பேசுகிறபோது சொன்னார்களே, ஏதோ Health Fund, அதேமாதிரி Medical Fund என்று இரண்டு கட்டணம் வாங்குவதாகச் சொன்னார்களே, அப்படி யார் வாங்கினாலும் சரி, அது தவறு. அப்படி வாங்கப்படுமானால் நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் கல்விக்கு உரிய கட்டணம் செலுத்துவதே தவறு என்று எண்ணக்கூடாது. ஏனென்றால் அரசாங்கமே கல்விக்காக இப்போது செலவிடுகிற தொகையை வைத்துப் பார்ப்பதற்கு 2,3 விவரங்களைச் சொல்லி விளக்கலாம் என்று கருதுகிறேன்.

இன்றைக்கு கல்விக்கான மானியக் கோரிக்கையில் 4144.01 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதைத்தவிர ஆதி திராவிடர் கல்விக்காக ரூ.179 கோடியே 74 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. பழங்குடியினர் கல்விக்காக ரூ.17 கோடியே 8 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் கல்விக்காக ரூ. 54.53 கோடி செலவிடப்படுகிறது. சமூக நலத் துறை பள்ளிகளுக்காக—அந்தத் துறையிலே நடக்கிற பள்ளிகளுக்கு மட்டும்—ரூ.9.83 கோடி செலவிடப்படுகிறது. வனத் துறையிலே கல்விக்காக ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவிடப்படுகிறது. இதைத்தவிர, பள்ளிகளில் சத்துணவிற்காக—பள்ளிகளில் கொடுக்கிற சத்துணவுக்கு மட்டும், குழந்தைகளுக்குத் தருகிற சத்துணவு வேறு இருக்கிறது—ரூ. 274.26 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் வழங்க ரூ. 305 கோடி வழங்கப்படுகிறது. இவை அனைத்தையும் ஒன்று சேர்த்து அரசின்



வருவாய்க் கணக்கில் செலவிடப்படும் தொகையாகிய ரூ.18,500 கோடியுடன் ஒப்பிடும்போது கல்விக்கான செலவு 26.94 சதவிகிதமாகும். 27 சதவிகிதம் கல்விக்கே செலவிடப்படுகிறது. இந்த விகிதம் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் ஒதுக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எந்த முற்போக்கான மாநிலமாயினும் இந்த விகித அளவிற்குச் சமூகத்தினுடைய அடித்தட்டு மக்களுக்குப் பலன் கிடைக்கக்கூடிய முறையில் நிதியைப் பங்கிட்டுத் தருகிற நிலை இந்தியாவில் கிடையாது. கணக்கு எழுதுகின்றவர்கள் வேண்டுமானால் இருக்கலாம். பல மாநிலங்களைப்பற்றி எனக்குத் தெரியும்.

அடுத்து, இதில் கால்நடை மருத்துவக் கல்வி, Veterinary University, Veterinary College கல்விக்காக செலவிடப்படும் பணமோ, சட்டப் பல்கலைக்கழகம், சட்டக் கல்லூரிகளுக்கு ஆகின்ற செலவோ, வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண்மைக் கல்லூரிகளுககு ஆகின்ற செலவோ மருத்துவம்—Medical Education—அதனுடைய பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்கான செலவோ இந்தச் செலவில் சேர்க்கப்படவில்லை. அதைச் சேர்த்தால்—நான் உத்தேசமாகத்தான் சொல்கிறேன்—அதைச் சேர்த்து நாம் கணக்கிட்டுப் பார்ப்போமேயானால் ஏறத்தாழ 30 விழுக்காடு கல்வி தொடர்பான பணிகளுக்குத் தமிழ்நாட்டில் செலவிடப்படுகிறது.

பிற்பகல் 1-05 மணி

இது ஒரு முற்போக்குக் கொள்கைக்கு அடிப்படையான சான்று. கல்விதான் முற்போக்குக்கு வித்து. கல்வி வழியிலேதான் தொழில் வளர்ச்சி. இந்தக் கல்வி பரவலாக எல்லா சமூகத்து மக்களுக்கும் கிடைக்கச் செய்வதிலேதான் கல்விக்கு வெற்றி. இந்த மூன்றும் பல்வேறு நிலைகளில் தமிழ்நாட்டில்தான் உயர்ந்திருக்கிறது என்பதை நான் நினைவூட்டிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ஒன்று, மாணவர்களுடைய சேர்க்கையில் பின்தங்கிய கிராமங்களில் உள்ள எல்லா மாணவர்களையும் பள்ளிக்கூடங்களில் சேர்க்க முயற்சி எடுத்துக்கொள்கிறோம்.

மாணவர்களுக்குத் தரமான கல்வி வழங்க வேண்டுமென்ற நோக்கத்தில் ஆசிரியர்கள் போதுமான அளவு நியமிக்கப்பட வேண்டும் என்பதை ஒரு குறிக்கோளாக இந்த அரசு ஏற்றுக் கொண்டு செயல்படுகிறது. ஆனால் ஆசிரியர் விகிதத்தில் ஏதோ 1 : 20, 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற ஒரு கொள்கை ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டது போலவும், அது நடைமுறையில்

[பேராசிரியர் க. அன்பழகன்] [1999 ஏப்ரல் 1

இருந்தபோது 1 : 40 என்ற ஒரு கொள்கையை இந்த அரசு மேற்கொண்ட காரணத்தால் பலபேர் பாதிக்கப்பட்டது போலவும் புள்ளிவிவரங்கள் எல்லாம் தெரிந்தும்கூடச் சிலபேர் போராடிக்கொண்டிருக்கிறார்கள். 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்கிற விகிதாச்சாரத்தை நடைமுறைப்படுத்துவதால் யாரேனும் பாதிக்கப்படுவார்களானால், பாதிக்கப்படுவதற்கு இடமே இல்லாத அளவுக்கு அதை நிறுத்தி வையுங்கள் என்று முதல்வர் அவர்கள் ஆணையிட்டபடி, இந்தத் துறை அதை நடைமுறைப்படுத்தவில்லை. அதாவது 1 : 40 என்கிற முறையிலே யாராவது பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படுமானால் அவர்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் இருக்க அதை நடைமுறைப்படுத்தவில்லை. ஆனால், 1 : 60 இருக்கிறது; 1 : 55 இருக்கிறது. அதாவது ஒரு ஆசிரியருக்கு 50 பிள்ளைகள், 60 பிள்ளைகள், 75 பிள்ளைகள், 80 பிள்ளைகள் இருக்கின்ற பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அப்படி இருக்கின்ற பள்ளிக்கூடங்களில் இந்த 40 பேருக்கு ஓர் ஆசிரியர் என்பதைக்கூட இன்னும் எங்களால் செயல்படுத்த முடியவில்லை. ஆனால் வெளியிலே 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதாச்சாரத்தை இந்த அரசு ஏதோ கைவிட்டுவிட்டதுபோல, மாற்றிவிட்டதுபோல தவறாகப் பேசப்படுகிறது. அந்த வரலாற்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1957-வது ஆண்டு சட்டமன்றத்திற்கு கலைஞரும், நானும் வந்தோம். 1958-வது ஆண்டு தொடக்கப் பள்ளிகளுக்கு 35 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதத்தில் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு வந்தன. அப்போது 35தான், சாதாரணமாக சட்டமன்றத்திலே பேசுகிறபோதெல்லாம் 35 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற அடிப்படையிலேதான் பேச்சே நடக்கும். அது ஒரு Common Formula அப்போது. ஆனால் அதை நடைமுறையில் செயல்படுத்தவில்லை, அது நடைமுறையில் இல்லை. அப்போது அரசு ஆணை எண் 250-ல் ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிப்பதற்கான நெறிமுறைகள் அறிவிக்கப்பட்டன. நான் சொல்லுவது 1958-லிருந்து 1 : 35 விகிதம் இருந்தது. நடைமுறையில் அதைச் செயல்படுத்த முடியவில்லை. சில இடங்களிலே 45 பேர் இருப்பார்கள்; சில இடங்களில் 27 பேர் இருப்பார்கள். வரையறுத்து 35 பேருக்கு ஓர் ஆசிரியர் என்று எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி செயல்படுத்த இயலவில்லை. இல்லாவிட்டாலும்கூட சற்றேறக்குறைய ஓர் இடத்திலே 1 : 40 இருக்கும், ஓர் இடத்திலே 1 : 30 இருக்கும், எப்படியோ அதை



1999 ஏப்ரல் 1] [பேராசிரியர் க. அன்பழகன்]

நடைமுறைப்படுத்தினார்கள். அரசு ஆணை 250-ல் ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிப்பதற்கான நெறிமுறைகள் 1964-ல் மாற்றியமைக்கப்பட்டன. அப்போது திரு. பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சர். 30 மாணவர்களுக்கு மேல் 2 ஆசிரியர்கள், 55 மாணவர்களுக்கு மேல் 3 ஆசிரியர்கள், 75 மாணவர்களுக்கு மேல் 4 ஆசிரியர்கள், 95 மாணவர்களுக்கு மேல் 5 ஆசிரியர்கள், இது பெரும்பாலும் தொடக்கப் பள்ளிக்கூடங்களுக்கு இப்படிச் சொல்லி அனுமதிக்கலாம் என அந்த ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டது. இது சொல்லப்பட்டதுதான். நான் படிப்பது நடந்தது என்று நினைத்துக்கொள்ளாதீர்கள், நடக்கவில்லை என்பதற்காகச் சொல்கிறேன். மேலும் இதற்கான போதிய பணியிடங்கள் வழங்கப்படாமல் இருந்து வந்தது. அந்த ஆணை போட்டவுடனே, பின்னாலேயே ஓர் ஆணை பிறந்தது. .அரசாங்கம் ஏற்கெனவே ஒதுக்கியிருக்கிற நிதி அடிப்படையில் மட்டும்தான் பணியிடங்களை வழங்கலாம் என்று. அந்தப் புதிய பணியிடங்கள் வழங்குவதற்காக நிதி ஒதுக்கவில்லை. அவர்கள் காலத்திலேயே நிதியில்லை. ஆகவே நிதி வழங்கப்படாத காரணத்தால் இதை நடைமுறைப்படுத்தவில்லை. என்ன ஆயிற்று என்று கேட்டால், ஏறத்தாழ 30, 32 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்பது நடைமுறையில் தொடக்கப் பள்ளிகூடங்களில் செயல்பட்டு வந்தது.

பிற்பகல் 1-10

அதற்குப் பிறகு 1992-93 ஆம் ஆண்டில் 47 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலையிலும், 1993-94 ஆம் ஆண்டில் 49 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலையிலும், 1994-95 ஆம் ஆண்டில் 50 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலையிலும் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டிருந்தன. இவ்வளவுதான் நடந்தது. 50 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்கிற அளவுக்குத்தான் Aided School-களுக்கும் ஆசிரியர்கள் கொடுத்தோம், அரசாங்கப் பள்ளிக்கூடத்திற்கு அதுகூடப் போடவில்லை, 60 விகிதம் வருகிறபோதுதான் அரசாங்கப் பள்ளிக்கூடத்தில் விழித்துக்கொள்வார்கள். 60 பேருக்கு ஒரு வாத்தியார் கொடுக்கிற அளவுக்குத்தான் அரசுப் பள்ளிக்கூடங்கள் நடைபெற்றன. உதவிபெறும் தனியார் பள்ளிக்கூடத்தில்தான் கேட்பார்கள், எங்களுக்கு ஆசிரியர் தர வேண்டுமென்று. அதுவே 50 பேருக்கு ஓர் ஆசிரியர் என்ற அளவுக்குத்தான் கொடுக்கக்கூடிய நிலையிருந்தது. இக்காலகட்டத்தில் வழங்கப்பட்ட பணியிடங்களில் ஆசிரியர்களின்

[பேராசிரியர் க. அன்பழகன்] [1999 ஏப்ரல் 1

ஓய்வு, பதவி உயர்வு போன்ற நிகழ்வுகளில் ஏற்படும் காலியிடங்கள் முழுமையாக நிரப்பப்படாத நிலையிருந்தது. இப்போது எப்படி கடந்த 5 ஆண்டுகளில் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. இந்த ஆட்சி வந்துதான் நியமித்தோம் என்று சொன்னோமோ, அதுமாதிரி இது நீண்டகாலமாகத் தொடர்ந்து இருந்து வந்து, அந்தக் குறைகள் வளர்ந்தன.

1992 ஆம் ஆண்டு ஆசிரியர்கள் பணியிடங்கள் வழங்குவது குறித்து புதிய ஆணை வெளியிடப்பட்டது, இந்த ஆணையில் 50 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர், நூறுக்கும் அதற்கு மேலும் உள்ள மாணவர் எண்ணிக்கைக்கு இரண்டு ஆசிரியர் என்ற அடிப்படையில் பணியிடங்கள் வழங்கப்பட வேண்டுமென்ற ஆணையும் வெளியிடப்பட்டது. இதனால், பல பள்ளிகளில் ஏற்படும் காலியிடங்கள் நிரப்பப்படாத சூழ்நிலையிருந்தது. புதிய தொடக்கப் பள்ளிகளிலும் ஓர் ஆசிரியர் பணியிடம் மட்டுமே வழங்கப்பட்ட நிலை இருந்தது. ஓர் ஆசிரியர் கொடுப்பது ஒரு வகுப்பு தொடங்கும்போது. மாணவர்கள் அதிகமாக இருந்தாலும் பிறகு அடுத்த ஆண்டு கொடுப்பதில்லை. அதனால், மொத்தமாக கல்வித் துறைக்கு எவ்வளவு நிதி கொடுத்தாலும் அது காணாத காரணத்தால் ஒவ்வொரு காலகட்டத்திலேயும் சுணக்கம் ஏற்பட்டு முறையாகச் செயல்படாத ஒரு நிலை தொடர்ந்தது.

பல்வேறு தரப்புகளிலிருந்து எழுந்த முறையீடுகளின் அடிப்படையில் இடைக்காலத்திலே ஏற்படுகின்ற காலியிடங்களை நிரப்புவதற்கு 1995 ஆம் ஆண்டு விளக்கங்கள் வழங்கப்பட்டன. அதனடிப்படையில் சராசரியாக 50 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற அடிப்படையில் ஆசிரியர் நியமனம் ஏற்கப்பட்டது. இது 1995-லே. 1996-ல் நாம் ஆட்சிக்கு வந்தோம். இதை எதிர்த்து ஒரு போராட்டம். சிறுபான்மை சமூகத்தின் சார்பாக அந்தப் பள்ளி நிர்வாகிகள் சார்பில் இந்த 50 பேருக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதம் எங்களையெல்லாம் அதிகம் பாதிக்கிறது, இதை மாற்ற வேண்டும் என்று திரும்பத் திரும்பக் கேட்டார்கள். இதையே நான் எவ்வளவு நேரம் கிடைத்தாலும்கூட பேசலாம்—சுருக்கமாகப் பேச்சு அமைவது நல்லது என்று நான் கருதுகிறேன். விளக்கம் என்னிடத்திலே உள்ளது, எப்போது வேண்டுமானாலும் சொல்கிறேன். அந்தச் சிறுபான்மை சமூகப் பள்ளிக்கூடங்களுக்கு 50 பேருக்கு ஓர் ஆசிரியர் கொடுத்தால், பள்ளிகள் அதனால் பாதிக்கப்படுகிறது என்று கேட்டு, அதற்குப் பின்னர் எல்லோருக்கும் சேர்த்து ஒரு முடிவு எடுத்து 40 பேருக்கு ஓர் ஆசிரியர் வழங்கலாம் என்று ஒரு முடிவுக்கு வந்தபோதிலும் அது இன்னும் not yet implemented—செயற்படுத்தப்படவில்லை. 50 பேருக்கு ஓர் ஆசிரியர் வழங்கலாம் என்பதை சிறுபான்மையினர் சமூகச் சார்பில் முதலில் குறைபட்டாலும், அதையாவது உடனடியாகக் கொடுங்கள் என்று கேட்டார்கள். ஏனென்றால் 50 பேருக்கு ஓர் ஆசிரியர் என்றால், ஒரு பள்ளிக்கூடத்திற்கு இரண்டு பேர், மூன்று பேர் வழங்கினால் போதும். 40 பேருக்கு ஓர் ஆசிரியர் என்றால் 7 பேர், 8 பேர் வழங்க வேண்டும். அப்படி வழங்குவதற்கான நிதி ஒதுக்கப்படக்கூடிய நிலையில்லை. ஆகவே எதிர்காலத்தில் 40 பேருக்கு ஓர் ஆசிரியர் என்ற குறிக்கோளை நோக்கி நாம் நடைபோட்டாலும், இப்போது 50 பேருக்கு ஓர் ஆசிரியருக்கு நிதி வழங்குங்கள் என்று கேட்டு, அப்படி வழங்குவதுதான் இப்போது நடைபெறுகிறது. இருந்தாலும்கூட, இந்த 1:40, 1:50 என்னும் விகிதமெல்லாம் உயர்நிலைப் பள்ளிக்கூடங்களிலே ஒரு வகுப்பிலே பல பிரிவுகள் 3, 4 பிரிவுகள் இருக்கின்ற இடத்திலேதான் இதை முழு அளவு பயன்படுத்த வேண்டுமென்று நான் துறையினுடைய செயலாளருக்கும் மற்றவர்களுக்கும் தெரிவித்திருக்கிறேன்.



தொடக்கப் பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரையில் இந்த எண்ணிக்கையை அப்படியே கண்மூடிப் பின்பற்றக் கூடாது, இந்த எண்ணிக்கை விகிதத்தைக் கைவிட்டுவிட்டு, இரண்டு வகுப்புகளுக்கு ஓர் ஆசிரியர், 5 வகுப்புகள் இருக்குமானால் குறைந்தது இரண்டு ஆசிரியர்கள், மாணவர்கள் எண்ணிக்கை 80-க்கு மேல் இருக்குமானால் 3 ஆசிரியர்கள், 100க்கு மேல் 120 மாணவர்கள் இருப்பார்களேயானால், 5 வகுப்புகள் இருக்குமானால், 5 ஆசிரியர்கள் இருக்கக்கூடிய வழியைத் தேட வேண்டும் என்று தெரிவித்துள்ளேன். வகுப்புக்கு ஓர் ஆசிரியர் என்பதுதான் ideal. அதுதான் பிள்ளைகளுக்குப் பாடம் நடத்துகிற ஆசிரியர் 4 மணி நேரத்தில் அந்த வகுப்புக்கான பல்வேறு பாடங்களை நடத்த முடியும். ஆனால், இப்போது நிலைமை எப்படியிருக்கிறது என்று கேட்டால், 5 வகுப்புகளுக்கும் இரண்டு ஆசிரியர்கள்தான் பல பள்ளிக்கூடங்களிலே இருக்கிறார்கள். சில இடங்களில் மூன்று ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அதை மாற்றுவதற்கு வழி என்ன என்று இன்று தெரிவித்திருக்கிறோம். பிள்ளைகளுடைய எண்ணிக்கையை வைத்து அதை முறைப்படுத்தக் கூறியுள்ளோம். மொத்தம் 30 பிள்ளைகள் இருக்கிறார்கள் எனில் அவர்கள் மூன்று வகுப்புகளிலே படிக்கிறார்கள் என்றால், 4, 5, வகுப்புகளை அங்கே நடத்தாமல், அடுத்த பள்ளிக்கூடத்திற்கு அந்தப் பிள்ளைகளை அனுப்புங்கள். முதல் வகுப்பிலே 9 பேர், இரண்டாம் வகுப்பிலே 12 பேர், மூன்றாம் வகுப்பிலே 7 பேர், நான்காவது

வகுப்பிலே 10 பேர் என்று இப்படி மாணவர்களை வைத்துக்கொள்ளாதீர்கள்; பக்கத்திலே இருக்கக்கூடிய பள்ளிக்கூடத்திற்கு, அந்தப் பிள்ளைக்கு 8 வயதாகியிருந்தால் செல்ல முடியும். வகுப்புகள் தனி ஆசிரியர் மூலம் ஒழுங்காக நடக்கின்ற பள்ளிக்கூடத்திற்கு அவனை அனுப்புங்கள்; இங்கே மூன்று வகுப்புக்களை வைத்துக்கொண்டு, இரண்டு ஆசிரியர்களை வைத்துக்கொண்டு நடத்துங்கள்; மாணவர்கள் அதிகமாவதற்கு ஏற்ப நான்கு வகுப்புகளுக்குமேல் நடத்துங்கள் என்று நடைமுறையில் செய்யப்படக்கூடிய காரியங்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன. நாங்கள் சொல்லிக்கொண்டே இருக்கிறோம். கடந்த ஆண்டு ஆரம்பித்தபோதிருந்தே சொல்லிக்கொண்டே இருக்கிறோம். ஏதோ ஓரளவிற்குச் செய்கிறார்கள். இருந்தாலும்கூட, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆங்காங்கே இருக்கின்ற பள்ளிக்கூடங்களிலே இருக்கின்ற பல குறைபாடுகளைச் சொல்கிறபோது, அவற்றையும் துறையினருக்கு அனுப்பி வைத்துப் பரிகாரம் காணுகிற முயற்சியிலே நான் ஈடுபட்டு இருக்கிறேன். அந்த முறையிலே தொடக்கப் பள்ளிக்கூடங்களுக்கு உரிய அளவில் ஆசிரியர்களை அதிகரிக்க வேண்டும் என்றும் முயற்சித்துக் கொண்டு இருக்கிறோம்.

பிற்பகல் 1-15

மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் மூலமாக 7 மாவட்டங்களில் ஓரளவுக்கு ஆசிரியர்கள் நிரப்பப்பட்டார்கள். கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, தருமபுரி, இப்பொழுது பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம்—இவையெல்லாம் மகளிர் கல்வியிலே சற்றுப் பின்தங்கி இருக்கிற வட்டாரங்கள் என்று கருதப்படும், அந்த புள்ளிவிவர அடிப்படையில், மத்திய அரசு மூலமாகக் கிடைக்கின்ற நிதி உதவி கொண்டு ஏறத்தாழ ஒரு திட்டத்திற்கு 100 கோடி ரூபாய் அளவுக்கு செலவாகக்கூடிய அளவுக்கு, 3 மாவட்டத்திற்கே ஒரு திட்டத்தில் 110 கோடி செலவிடக்கூடிய அளவுக்கு பள்ளிக்கூடங்களில் 10-க்கு 3 பள்ளிக்கூடங்களில் கட்டடங்கள் கட்டித் தரப்படுகின்றன. ஒன்றியத்திலே ஓர் ஆசிரியர் மறுபயிற்சி மையம் கட்டப்படுகிறது. இருக்கிற ஆசிரியர்களுக்கு; புதிய ஆசிரியர் பயிற்சிக்கு அல்ல, பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு மறுபயிற்சி மையம் ஏற்படுத்தப்படுகிறது. புதிய முறையில் பிள்ளைகளுக்குப் பாடம் நடத்துவதற்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு மாவட்டத் தொடக்கக்



கல்வித் திட்டம் மூலமாக ஒரு முயற்சி இந்த 7 மாவட்டங்களிலே நடைபெறுகிறது. மற்ற மாவட்டங்களிலே உள்ள தொடக்கப் பள்ளி ஆசிரியர்களும்கூட தங்களுடைய கல்வியை தரமாக வழங்குவதற்காக மாவட்ட ஆசிரியர் பயிற்சி மையம், DIET என்று பெயர், அதன் மூலம் ஏறத்தாழ மாதத்திற்கு 100, 120 ஆசிரியர்கள் அழைக்கப்பட்டு ஒவ்வொரு பாடத்திலேயும் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படுகிறார்கள். அந்த மாவட்ட ஆசிரியர் பயிற்சி மையம் - DIET ஏற்கெனவே உள்ள மாவட்டங்களைத் தவிர, இப்போது புதிதாக உருவான மாவட்டங்களில்—திருவாரூர் மாவட்டம், நாகை மாவட்டம், பெரம்பலூர் மாவட்டம்—முதலான 8 மாவட்டங்களில் இந்த ஆண்டு புதிய DIET-க்கான ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. அதன் மூலமாக ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் அளவுக்கு அங்கே கட்டடங்கள் கட்டப்படும். அதிலே ஏறத்தாழ ஓராண்டுக்கு 50 பேர்களுக்கு-25 ஆண்கள் 25 பெண்கள், ஆண்-பெண் இரு சாராருக்கும் பயிற்சி வழங்கப்படும். அதன் மூலமாகக் கல்வித் தரம் உயருவதற்கும் ஒரு நடவடிக்கை இருக்கிறது.

மேலும் ஒன்று, மேல்நிலைக் கல்வியிலே, உயர்நிலைக் கல்வியிலே பாடம் நடத்துகிறவர்கள், தொடக்கப் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு பாடநூல் இயற்றுவார்களேயானால், அந்தப் பிள்ளைகள் அந்தப் பாடநூலை இயல்பாகப் புரிந்துகொண்டு படிக்கிற ஒரு நிலை இல்லை என்பதற்காக, மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் மூலமாக, அதிலே ஈடுபட்டு இருக்கிற ஆசிரியர்கள்—நூற்றுக்கு மேற்பட்டவர்களை ஈடுபடுத்தி, தொடக்க வகுப்புப் பாடப் புத்தகங்கள் அண்மையிலே புதிதாக இயற்றப்பட்டு வெளியிடப்பட்டு இருக்கின்றன. இப்படிப் பல்வேறு வகையிலேயும் தொடக்கக் கல்வியின் தர வளர்ச்சிக்கு அரசு பணியாற்றுகிறது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, இந்த விகிதாச்சாரக் கணக்கைப்பற்றி, இங்கே பல பேர் பேசிய காரணத்தால், ஒரு புள்ளிவிவரத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன். 1994-95-ல் அரசாங்கம் ஏற்றுக்கொண்ட பள்ளிக்கூடங்கள், அரசாங்கம் நடத்துகிற பள்ளிகளிலே இருந்த ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் விகிதாச்சாரம், Primary School-லிலே 1:50. 1994-95-லேயே ஓர் ஆசிரியருக்கு 50 மாணவர்கள். 1995-96-லேயும் ஓர் ஆசிரியருக்கு 50 மாணவர்கள். 1996-97-ல் நாம் பொறுப்புக்கு வந்ததற்குப் பின்னர் 1:40. 1997-98-ல் மாணவர்கள்

எண்ணிக்கை அதிகமாகி இருக்கிறது; அப்போதும் 1:40. இப்போது, 1998-99-ல் 1:38, இந்த விகித்தில் நாம், ideal என்பது 1:35; அதுவரைக்கும்தான் போக முடியும். ஆக, இந்த வளர்ச்சி, இந்த 5 ஆண்டுகளில் மெல்ல மெல்ல ஏற்பட்டு இருப்பதைப் புள்ளிவிவரத்தின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இடைநிலை ஆசிரியர்களுடைய பணியிடங்களிலே எல்லாம் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று ஒரு கருத்து சொல்லப்பட்டது. ஒரு கொள்கை; பட்டதாரி ஆசிரியர்களை நடுநிலைப்பள்ளி இடங்களில் எந்த அளவுக்கு வாய்ப்பு இருக்கிறதோ, அந்த அளவுக்கு நியமிக்கலாம் என்று ஏற்கப்பட்டு ஒவ்வோர் ஆண்டும் 100 பட்டதாரி ஆசிரியர்கள் நடுநிலைப் பள்ளிகளுக்காக அனுமதிக்கப்பட்டு, அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால், இடைநிலை ஆசிரியர் இடங்களையே குறைத்து, அந்த இடங்களில் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க முடியுமா என்று கேட்டால், 2 குறைபாடுகள் இருக்கின்றன; ஒன்று, இடைநிலை ஆசிரியர், அதாவது Secondary Grade Teacher இடத்தை பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பக் கூடாது என்பது நீதிமன்றத் தீர்ப்பு. என்ன காரணம் என்றால், இது வேறு பயிற்சி; அது வேறுவகைப் பயிற்சி. மற்றொன்று, இடைநிலை ஆசிரியர் சம்பளத்தில் பட்டதாரி ஆசிரியர்கள் தொடர்ந்து வேலை செய்ய விரும்புவார்களா என்பது அடுத்த கேள்வி. ஆகவே இந்த இரண்டு பிரச்சினைகள் காரணமாக நினைத்தபடி செய்ய முடியாது. அதேபோல இடைநிலை ஆசிரியர் சங்கங்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற நிலை ஏற்பட்டு ஒரு கருத்து மாறுபாடு வருவதற்கு அதிக வாய்ப்புண்டு. எனவே, எந்தெந்த இடங்களில் வாய்ப்பிருக்கிறதோ, அந்தந்த இடங்களில் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

பிற்பகல் 1-20

மற்றொன்று, பட்டதாரி ஆசிரியர்களாகப் B.Ed. பயிற்சி ஓராண்டுக்குக் குறைந்தது 6,000, 7,000 பேர்கள் பயிற்சி பெறுகிறார்கள். அது தவிர பல்கலைக்கழகங்களில் correspondence course மூலமாக, தொலைத் தொடர்பு கல்வி மூலமாக வழங்கப்படுகிறது. அதனால் சில குறைகள் ஏற்படுகின்றன. என்னைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள் பயிற்சி என்பது தொலைத் தொடர்பு கல்வி மூலமாக (correspondence course) வழங்குவது விரும்பத்தக்கதல்ல. எந்தப் பயிற்சியையும் அப்படி வழங்குவது நல்லதல்ல. அதிலும், U.G.C.



என்னும் மத்தியப் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவேகூட, இப்படிப் பல்கலைக்கழகங்களிலே correspondence course மூலமாக B.Ed., பயிற்சி வழங்குவது தவறு என்று அறிவித்துவிட்டார்கள். அந்த முறையிலே அறிவித்திருந்தாலும்கூட, 85,000 பேர் பணி பெறாத நிலையில் பட்டதாரி ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அந்த 85,000 பேர்களில் ஓராண்டிற்கு 5,000 பேர் அல்லது 6,000 பேர்களுக்குத்தான் அரசு வேலை தர முடியும். அதிலே கூடுமான வரையில் பதிவு செய்த முன்னுரிமை அடிப்படையிலே உள்ள 3 பேர்களை அழைத்து ஒருவருக்கு வேலை தரப்படுகிறது. 30 பேர்களைக் கூப்பிட்டால் 10 பேர்களுக்கு வேலை. 30 பேர்களில்கூட 15 பேர், 10 பேர் தேர்வு வாரியத்துக்கு வராத நிலைமை இருக்கிறது, Teachers Recruitment Board, ஆசியர்கள் தேர்வு வாரியம் வருகின்றவர்களை வைத்துக்கொண்டு, வந்தவர்களிலே—Choice-க்கு அதிக வாய்ப்பு இல்லை—வேண்டும் என்கிறவர்களை எடுக்கிறார்கள் என்ற நிலை கிடையாது. வருகின்றவர்களுடைய முன்னுரிமை பெருமளவுக்கு மதிக்கப்படக்கூடிய அளவுக்குத் தேர்வு செய்யப்படுகிறார்கள். அந்த முறையில் எடுத்தாலும்கூட, பட்டதாரி ஆசிரியர்கள் அனைவருக்கும் வேலை கொடுக்க வேண்டுமென்று சொன்னால் மேலும் 15 வருடங்களாகும். ஏனென்றால் தேவைக்கும் பயிற்சிக்கும் இடையிலே ஒன்றும் முறை வைப்பு இல்லை. ஏற்கெனவே எந்த ஒரு முறையும் வைக்கப்படவில்லை.

இந்த ஆண்டு அரசாங்கம் நடத்துகிற ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலே குறிப்பாக, B.Ed. பயிற்சிப் பள்ளிகளிலே 10 விழுக்காடு இடத்தைக் குறைக்க வேண்டும் என்று முடிவு எடுத்திருக்கின்றோம். எந்த இடங்களில் 10 விழுக்காடு குறைக்க முடியும் என்ற ஆலோசனையும் வழங்கப்பட்டிருக்கிறது. உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலே பயிற்றுவிப்பதற்கு உரியதாக இல்லாத பொருளாதாரம் முதலான சில பாடங்கள், உயர்நிலைப் பள்ளிகளிலே பயிற்றுவிப்பதற்குரிய பாடங்கள் அல்ல என்பதால் அவர்களுக்கு ஆசிரியர் வேலை கிடைப்பதில்லை. ஆகவே அந்தப் பாடங்களைக் குறைப்பதன் மூலம் 10 விழுக்காடு குறைத்து பயிற்சி அளிக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேலும் நம்முடைய இடைநிலை ஆசிரியர் பயிற்சியிலே கூட, உயர்நிலை ஆசிரியர் பயிற்சி (Higher Grade) பெற்றவர்கள் சிலர் இருக்கிறார்கள். உயர்நிலை என்றால் S.S.L.C. படித்தவுடனே, பிளஸ்-2 வகுப்பில் படிக்கிறபோதே, 3,000 பெண்களுக்கு ஒரு

காலகட்டத்திலே மேல்நிலைப் பள்ளிகளிலே ஒரு பயிற்சி அளிக்கப்பட்டது. எனக்கு அது உடன்பாடானது அல்ல. ஆனால் பயிற்சி பெற்றார்கள். அந்தப் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை தர வேண்டுமென்று சொன்னால் இடைநிலை Secondary Grade தரத்தில் பணி தர முடியாது. உயர் நிலையில் Higher Grade நிலையில்தான் தர முடியும். ஏற்கெனவே இந்த உயர் நிலையிலே ஒரு முறை வேலை கொடுத்தவர்களுக்கு, தொடர்ந்து அவர்கள் Higher Grade ஆக நடத்தப்படக் கூடாது என்று கேட்டு, இடைநிலையாக மாற்றி, உயர் நிலை ஆசிரியர் என்பதை ஒழித்துவிட்டார்கள். இவையெல்லாம் சங்கங்கள் செய்கின்ற நற்பணிகள். சில அடிப்படையான நியாயங்களை மறந்து அடித்தட்டில் பயிற்சி பெற்றவர் வேலை பெறும் முறைக்கே வாய்ப்பில்லாமல் செய்வதை, எப்படியோ அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, அவர்களெல்லாம் இடைநிலை ஆசிரியர்களாக மாற்றப்பட்டனர். இப்போது மறுபடியும் Higher Grade நிலையில் நியமித்தால்தான் அந்த 3,000 பேர்களுக்கும் வேலை தரலாம் என்ற நிலை உள்ளது. ஆகவே அந்த 3,000 பேரில் 2,000 பேர்கள் வேலைக்குக் காத்து இருப்பதாக வைத்துக் கொண்டாலும்கூட இடைநிலை ஆசிரியர் சம்பளத்தைவிட குறைவான சம்பளத்துடன் அவர்களை வேலைக்கு எடுக்க வேண்டிய ஒரு கட்டத்தில் இருக்கிறோம். அதே மாதிரியான வேறு சில பயிற்சி பெற்றவர்களும் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். அப்படிப் பயிற்சி பெற்றவர்கள் வேறு வேலைக்குச் செல்ல முடியாது. அதையும் அரசு கருதுகிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-25*

தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களில் பட்டதாரி ஆசிரியர் தகுதி உடையவராக இருந்தாலும்கூட, பட்டதாரி நிலையிலே அவர்களுக்கு வேலை கிடைக்கிற இடத்தில் முன்னுரிமை—அவர்களுக்குள்ள சமூக அடிப்படையிலே உள்ள முன்னுரிமை—தரப்படுகிறது. அவர்களிலே பலருக்கு வேறு வேலை வாய்ப்பு இல்லாதது காரணமாக அவர்கள் இடைநிலை ஆசிரியராக வரத் தயாராக இருந்து, இடைநிலை ஆசிரியர் பணி இடங்களில் எத்தனை இடங்கள் அவர்களுக்கு வழங்கப்படாமல் இருந்ததோ, அந்த இடங்களுக்கு அவர்களை, அந்தப் பட்டதாரிகளைத் தேர்வு செய்ய ஒரு முறை வைத்து எடுப்பதற்கு அரசு முன்வந்தது. அது கடந்த ஆண்டே மேற்கொள்ளப்பட்டது. 1,100 பேர், Secondary



Grade S.C./S.T. இடங்களுக்கு பட்டதாரி ஆசிரியர்கள் வர இசைகிறார்கள். அவர்களை எடுக்கிறோம். ஆனால் நீதிமன்றத்தில் ஏற்கெனவே உள்ள தீர்ப்பு காரணமாக, பட்டதாரிகளை Secondary Grade இடத்தில் நியமிக்கக் கூடாது என்றுள்ள தடைக்குப் பதில் சொல்வதற்கு வாய்ப்பாக, அறிவியல், கணிதம், ஆங்கில மொழி துறைகளில் Secondary Grade ஆசிரியர்கள் பாடம் நடத்துவதற்குப் போதுமான தேர்ச்சி உடையவர்களாக இல்லாத காரணத்தால், இந்தத் துறைகளில் பயிற்றுவிப்பதற்கு நாங்கள் தாழ்த்தப்பட்ட மக்களில் யார் அந்தத் தகுதி உடையவர்களோ அவர்களை எடுத்துக்கொள்கிறோம் என்று தெரிவித்து அந்த இசைவைப் பெறலாம் என்ற அடிப்படையிலே எடுக்கத் தொடங்கினோம். ஆனால் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசியதைப் போல, அந்தச் சமூகத்தைச் சார்ந்தவர்களே வழக்குப் போட்டுத் தடை பெற்றனர். 1,100 பேருக்கு வேலை தரப்பட்டது. அடுத்த 1,000 பேருக்கு வேலை தருவது ஓராண்டாக நின்று போய்விட்டது. ஏனென்றால் தடை போட்டியில், நீதிமன்றத்தில் தடையாணை பெற்றால், எந்தச் சமூகமும் தலையெடுக்க முடியாது. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு தடையாணையால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது விரைவில் விலக்கப்பட்டால்தான் அடுத்த 1,100 பேருக்கு வேலை தர முடியும்.

அதேபோல, தாழ்த்தப்பட்ட சமூக மாணவர்கள் போதுமான அளவு இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற முடியாத நிலையில், அதிக எண்ணிக்கையிலே அவர்கள் எடுக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறபோது, நியமனத்தில் தொய்வு வருகிறது என்பதற்காக தாழ்த்தப்பட்டவர்களுக்கென கடந்த ஆண்டே பயிற்சி தொடங்கப்பட்டு, இப்பொழுது இரண்டாவது ஆண்டு ஏறத்தாழ 750, 800 பேருக்கு சிறப்புப் பயிற்சியாக, இரண்டாண்டு காலப் பயிற்சி (S.C./S.T.) மாணவர்கட்கு மட்டும், வழங்கப்படுகிறது. வேலையில் சேருகின்ற இடத்தில் S.C./S.T.-யில் பின்னடைவு இருக்குமானால், உதாரணமாக, 12 காலியிடங்களுக்கு, 8 பேர்தான் தகுதியுடையவர்கள் இருக்கிறார்கள் என்றால், 4 இடங்கள் நிரப்ப முடியாமல் இருக்குமானால், அடுத்த ஆண்டுக்கு அந்தக் காலியிடங்கள் எடுத்துச் செல்லப்படுகிறது. அடுத்த ஆண்டு 9 காலியிடங்கள் இருந்தால், இந்த 4-ம் சேர்த்து 13 S.C./S.T. பிரிவினர் எடுக்கப்படுகிறார்கள். மிகவும் பின்தங்கிய வகுப்பில் இதுமாதிரி நிலை இருக்கிறதா என்று கேட்டார்கள். பெரும்பாலும் இல்லை. இருக்கிறது என்றால், ரொம்பக் குறைவாக 100 இடங்களில்

5 இடங்களுக்கு அவர்களில் தகுதியுள்ளவர்கள் இல்லாத நிலை இருந்தால், அடுத்த ஆண்டுக்கு எடுத்துக்கொண்டு போய் அந்த 5 இடங்களை நிரப்ப வேண்டுமென்ற முறையில், இந்தக் கல்வி இலாகாவைப் பொறுத்தவரையில், ஏற்றுகொள்ளச் செய்வதற்கு நான் கருதியிருக்கிறேன். விரைவில் ஏற்றுக்கொள்ளப்படும் என்று நம்புகிறேன்.

அடுத்து, இங்கே பேசிய திரு. அப்பாவு அவர்கள் சொல்கிறபோது, மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்திலே தமிழ் ஏட்டில் 173 கோடி என்று காணப்படுகிறது என்று சொன்னார்கள். அதிலே என்ன தவறு என்றால், 173 lakhs என்று ஆங்கிலத்திலே இருப்பதைத் தமிழில் இலட்சம் என்ற சொல், வடசொல், என்பதற்காக கோடி என்று போடவேண்டுமென்பதற்காக 1.73 என்ற இடத்தில் அந்தப் புள்ளியை விட்டுவிட்டு கோடி என்று போட்டுவிட்டார்கள். புள்ளிதான் விடப்பட்டுள்ளது என்பதை இரண்டையும் பார்ப்பவர்கள் நன்றாக உணர்ந்துகொள்ளலாம். இது பெரிய தவறு அல்ல. இருந்தாலும்கூட, அப்பாவு அவர்கள் பார்த்தால் அதைத் தெரிந்துகொள்ள முடியும். அதாவது, 1.73 அதற்கு அப்புறம் 00 இருந்தால், 1 கோடியே 73 இலட்சம் என்று அர்த்தம். ஆகவே புள்ளிவிவரத்திலே தவறு இல்லை. கட்டடத்தை ஒழுங்காகக் கட்டி முடித்துத் திறந்து வைத்திருக்கிறார்கள். கடந்தகாலக் கட்டடம் மாதிரி, கட்டாமலேயே நிதி செலவிடும் முறையிலே அமையவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் உருது ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதேபோல, திரு. வெங்கடசாமி அவர்கள் தெலுங்கு ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்தக் குறைபாட்டைப்பற்றி என்னிடம் ஓராண்டாகத் தெரிவித்து வருகிறார்கள். கடந்த ஆண்டும் லத்தீப் அவர்கள் பேசினார்கள். எப்பொழுதும் அரசாங்கத்தினுடைய விதிமுறைகளில் இருக்கிற சிக்கலை அதிகாரிகள் நமக்கு முதலில் தெரிவிக்கமாட்டார்கள். நமக்குத் தெரிந்து சொன்னால்தான், பிறகு, 'ஓஹோ', அப்படியா என்பார்கள். அவர்கள் வேலை பார்க்கிறார்கள், என்பது உண்மைதான். ஒரு பழமொழி, 'பாப்பாத்திஅம்மா, மாடு வந்தது, நீயாகக் கட்டினாலும் கட்டு, அதுவாக நின்னாலும் நிக்கட்டும் என்று போவான்' என்பது. அதுமாதிரி மனப்பான்மை அரசுத் துறைகளில் இருக்கிறது. அதற்கு நான் வருத்தப்படுகிறேன். இந்த உருது ஆசிரியர்களைப் போதுமான அளவு எடுக்கமுடியவில்லை என்பதைக்கூட என்னிடம் அவர்கள்



சொல்லவில்லை. திரும்பக் கேட்போம், எடுத்திருக்கிறோம், எடுத்திருக்கிறோம் என்பார்கள். இரண்டு பேர் எடுத்திருப்பார்கள், 3 பேர் எடுத்திருப்பார்கள். தெலுங்கு ஆசிரியர்களைப்பற்றி ஓசூர் திரு. வெங்கடசாமி அவர்கள் சொல்வார்கள், திரும்பப் திரும்ப 12 பேர் எடுத்திருப்பார்கள், 15 பேர் பாக்கி இருக்கும். மலையாள ஆசிரியர்களைப்பற்றி மணி அவர்கள் பேசுவார்கள். அவர் தமிழில்தான் பேசுகிறார். ஆனால் மலையாள ஆசிரியர்கள் தேவைக்காகப் பேசுவார். அண்மையில் அதிகாரிகளுக்கு நான் தெரிவித்து இருக்கிறேன். இதிலே communal representation - இட ஒதுக்கீட்டு முறையின்படி ஆசிரியர்களை எடுக்க முடியாது. ஏனென்றால், 12 பேர் மலையாள ஆசிரியர்கள் வருகிறார்கள் என்றால், அதிலே ஒன்று பிற்படுத்தப்பட்டவராக இருப்பார், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் ஆள் கிடைக்காது. தாழ்த்தப்பட்ட வகுப்பில் ஆள் கிடைக்காது. உருது மொழி ஆசிரியர்களை எடுத்துக்கொண்டால், அதில் தாழ்த்தப்பட்டவர்களும் கிடையாது, மிக மிகப் பின்தங்கியவரும் இருக்காது. ஆக, உருது பேசுகிற முஸ்லீம் ஆசிரியர்கட்கு வருகிறவர்களை நாம் எப்படி O.C., M.B.C., S.C. என்ற பிரிவினர் என்று ஆள் எடுக்க முடியும்? ஆக விகிதாச்சார முறை, சிறுபான்மை மொழி ஆசிரியர்களைத் தேர்வு செய்கிறபோது கருதப்படத் தேவையில்லை, அந்தப் பிரிவுகளைக் கருதாமலேயே அவர்களை எடுத்துக்கொள்ள, அதற்கான விதிவிலக்கை முதலிலேயே பெற்றுக்கொள்ளுங்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது...

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் ஆசிரியர் சங்கங்களுடைய கோரிக்கைகள் பலவற்றை இங்கே எடுத்து வைத்தார்கள். இதை ஏன் நான் திரும்பச் சொல்லுகிறேன் என்றால், அவர் பேசாத காரணத்தால் குறை வந்துவிட்டது என்று யாரும் நினைக்கக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். இந்தப் பிரச்சினைகள் பற்றி எல்லாம் ஏற்கெனவே நாங்கள் பலமுறை பேசியிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் ஆசிரியர்களுடைய குறைகளைப் பொறுத்தவரையில் கடந்த 2, 3 ஆண்டுகளில் பல குறைகளைப் போக்கியிருக்கிறோம். தலைமை ஆசிரியர்களுடைய

குறைகள், P.G. ஆசிரியர்களுடைய குறைகள்— அவர்களுக்குச் சம்பள உயர்வு கொடுக்கிறபோது தகுந்த அளவுக்குக் கிடைக்கவில்லை என்ற குறை—வேலையே நிரந்தரமாக இல்லாத நிலையில் இருந்த Markers -ஐ நிலையான வேலையில் வைத்து ஊதியம் தருகின்ற ஒரு முறை, தொழிற்கல்வி ஆசிரியர்கள் ஏறத்தாழ 250 பேர், 300 பேர் பகுதி நேர ஆசிரியர்களாக இருந்தவர்களை நிரந்தர ஆசிரியர்களாக ஆக்கும் ஆணை என்று இப்படிப் பல கடமைகள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் இந்தப் பணிகள் தொடர்ந்து நடைபெற வேண்டியிருக்கிறது.

ஆசிரியர் குறைகளைப் பொறுத்தவரையில், ஒருவருக்கு ஒரு நியாயம் கிடைத்த உடனேயே அடுத்தவரிடமிருந்து அதே நியாயம் எனக்கு ஏன் வழங்கவில்லை என்ற கேள்வி எழும், அதுவரையில் அவர் விண்ணப்பம் போடமாட்டார்; ஆனால், இன்னொரு சாராருக்குக் கிடைத்ததை வைத்து, அதைப் பார்த்து அதே முறையில் எங்களுக்கும் சம நிலை தர வேண்டுமென்று கேட்பது ஒரு இயல்பான உணர்வாகும். அதன் காரணமாகப் புதிய, புதிய கோரிக்கை விண்ணப்பங்கள் வரக்கூடிய நிலைமை இருக்கிறது.

இங்கே நண்பர் திருநாவுக்கரசு அவர்களும், மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச்சொன்ன தமிழ்நாடு தொடக்கக்கல்வி தலைமை ஆசிரியர் கழகம், அதேபோல பாதிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் சங்கங்கள் எல்லாம் கொடுத்திருக்கின்ற வேண்டுகோள்களை நிச்சயமாக இந்த அரசு இயன்றவரையில் கருதிப்பார்க்கும். ஒல்லும் வகையால் குறை போக்க முயற்சிக்கும். இந்த ஒல்லும் வகையால் என்று சொன்னால், முடிந்த வரையில் என்று அர்த்தம். எனவே, முடிந்த வரையில் குறை போக்கப்படும். முடியவில்லையென்றால் நாங்கள் என்ன செய்யப்போகிறோம்? ஆகவே முடிந்த வரையில், நியாயமான முறையில் குறைகளைப் போக்க முயற்சிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்று, சிறுபான்மை ஆசிரியர்கள் நியமனத்தைப் பொறுத்தவரையில், ஒரு மாவட்டத்திலேயே ஆசிரியர்கள் கிடைக்காவிட்டால், வேறு மாவட்டத்திலே கிடைத்தாலும் அவர்களை ஈடுசெய்து கொள்ளலாம் என்னும் முறை இருக்கிறது. ஏனெனில், இதுவரையில், மாவட்ட அடிப்படையிலேதான் Secondary Grade ஆசிரியர் தேர்வு நடைபெறுகிறது. அதற்கு முன்னர் ஊராட்சி ஒன்றிய அடிப்படையிலே இருந்தது. இப்போதுகூட பள்ளிக்கூடங்களுக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் இடையிலே ஓர் உறவு, ஒரு தொடர்பு



இருக்க வேண்டுமென்று நாம் கருதுகிறோம், ஆதிக்கமான ஒரு நிலை ஏற்படக்கூடாது என்னும் ஒரு கருத்தை ஆசிரியர்கள் தெரிவித்தாலும்கூட, உள்ளாட்சி மன்றங்களில் உள்ளவர்கள் பரிந்துரை செய்கின்ற அளவுக்காவது ஒரு தொடர்பு இருப்பதுதான் பள்ளிக்கூடங்களுக்கு, பயிலும் குழந்தைகளுக்கு நன்மை என்று நாம் உணர்ந்திருக்கிறோம்.

மாவட்ட அளவிலே எடுக்கப்படுகின்ற ஆசிரியர்களைத்தான் ஒன்றியங்களுக்குப் பங்கிட்டு வழங்கப்பட வேண்டுமே தவிர, மாநில அளவில் ஒரே பட்டியலை வைத்துக்கொண்டு எடுப்பது என்பது அவ்வளவு சரியல்ல என்பதைத்தான் நான் வலியுறுத்த விரும்புகிறேன். கடந்த காலத்தில் அப்படி ஒரு முறையை வைத்திருந்தார்கள். ஓர் ஆசிரியருக்கு 50 ஆயிரம் ரூபாய்தான் குறைந்த விலை. பிறகு அதிகபட்சமாக போட்டி போட்டு கொடுத்தால், இலட்ச ரூபாய் வரை கொடுத்துவிட்டு என்னிடம் புகார் கொடுத்தவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அப்போது ஓர் இலட்சம் கொடுத்தேன், ஏமாந்தேன். நீங்கள் வாங்கித் தாருங்கள் என்று கேட்டார்கள். நான் சொன்னேன் என்னால் முடியாதப்பா, வீரபாண்டி ஆறுமுகம் மாதிரி கொஞ்சம் தெம்பாக இருக்கின்ற ஆளைப் பார்த்துக் கேளுங்கள் என்று சொன்னேன். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் என்னவென்றால் மாநிலம் முழுவதற்கும் மொத்தமாக ஆசிரியர் தேர்வு என்று வைத்ததுதான். இப்போது நாம் அந்தந்த மாவட்டத்திலுள்ள பட்டியலில் முன்னுரிமை உள்ளவர்களுள், சட்டப்படி தகுதி உள்ளவர்களைத் தேர்வு செய்கிறோம். தருமபுரி மாவட்டத்தில் தெலுங்கு ஆசிரியர் இல்லையென்றால், திருவள்ளூர் மாவட்டத்தில் அல்லது வேறு எந்த மாவட்டத்தில் இருந்தாலும்கூட அவர்களை எடுத்துக்கொள்ளலாம்.

இன்னும் சொல்லப்போனால், S.C./S.T. பிரிவைச் சேர்ந்தவர்கள், M.B.C. பிரிவைச் சேர்ந்தவர்கள் ஒரு மாவட்டத்தில் இல்லையென்றால், இன்னொரு மாவட்டத்தில் இருப்பார்களேயானால் அவர்களையும் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் கேட்பதெல்லாம் எங்கள் மாவட்டத்தில் நிறைய பேர் வேலைக்குக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்; அதனால் பட்டியலை ஒன்றாக்கிவிடுங்கள் என்று. மாநில அளவில் தேர்வு செய்யுங்கள் என்று நாகர்கோவில் ஆசிரியர்கள் கேட்பார்கள், திருநெல்வேலி ஆசிரியர்கள் கேட்பார்கள். ஆனால் அவர்கள்தான் பிற மாவட்டங்களிலும் பரவலாகிப்போய், வேலையற்றோர் பட்டியலிலே பதிவு செய்துகொண்டு அங்கே இடம் பெற்றிருக்கிறார்கள்.

[பேராசிரியர் க. அன்பழகன்] [1999 ஏப்ரல் 1

இந்த ஆண்டுகூட, பெரியார் மாவட்டத்திலும் தருமபுரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்ட ஆசிரியர்கள் வந்திருக்கிறார்கள். அதனால்தான் 5 வருடங்களாவது அந்த மாவட்டத்திலே பணியாற்றினால்தான் பின்னர் மாறுதல் கேட்டுத் திரும்பப் போகலாம் என்று அரசு விதி போட்டிருக்கிறது. ஏனென்றால் எந்த மாவட்டத்தின் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் இல்லையோ அந்த மாவட்டத்திற்கு வந்து வேலையை வாங்கிக் கொண்டு, பிறகு மாமியார் வீடு அங்கேதான் இருக்கிறது என்று உடனடியாக ஒரு விண்ணப்பத்தை எனக்குப் போட்டு, அந்த மாமியார் யாருக்குச் சொந்தமானவர், என்று, அதைக்கூட எழுதிக் காட்டி, "உங்களுக்குச் சொந்தக்காரர்தான் எங்கள் மாமியார்" என்று சொல்லி, சொந்த மாவட்டத்திற்குப் போகிற அந்த முறையையும் ஆசிரியர்கள் கைவிட வேண்டும். எந்த மாவட்டத்திற்கு வேலைக்கு வருகிறார்களோ, அந்த மாவட்டத்தில்தான் வேலை பார்க்க வேண்டும். நானே தீர்மானிப்பதானால் 10 ஆண்டுகள் என்று விதித்திருப்பேன். கல்வி இலாகாவிலே உள்ளவர்கள் ஐந்து ஆண்டுகளுக்கு மேலே எந்த விதிமுறை போட்டாலும், நீதிமன்றத்திற்குப் போனால் அடிபட்டுப் போகும் என்று சொன்னார்கள். அதனால் ஐந்து ஆண்டுகள் என்று தடை போட்டிருக்கிறோம்.

பிற்பகல் 1-35

இன்னும் ஒன்று, தொழிற்கல்வி வளர வேண்டும் என்பதற்காக 250, 300 மேல்நிலைப் பள்ளிக்கூடங்களில், அதற்கான சில ஏற்பாடுகள் இருக்கின்றன. அதை இன்னும் சிறப்பாக நடத்த வேண்டுமென்றும், அப்பொழுதுதான் தொழிற்கல்வி வளரும் என்றும் ஒரு கருத்து இருக்கிறது. மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வியைப் பெற்றாலும்கூட, அவர்கள் உடனடியாக Polytechnic போன்றவற்றிலே சேர்ந்து மேலே படித்தால்தான் அவர்கள் நல்ல வேலை வாய்ப்பைப் பெற முடியும். இல்லையென்றால், பள்ளிக்கூடத்திலே கிடைக்கின்ற தொழிற்கல்வி என்பது ஒரு background knowledge, ஒரு பின்னணி அறிவாகத்தான் இருக்குமே தவிர, செயற்பாட்டிற்கு உடனடியாகப் பயன்படும் என்ற நம்பிக்கையோடு படிப்பை நிறுத்த முடியாது. அதற்கான வழிமுறையும் ஆலோசிக்கப்படுகிறது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வருகிற 21 ஆம் நூற்றாண்டு, கணினி மூலமாகத்தான் உலகம் மாபெரும் மாற்றத்தை, வளத்தை அடைய இருக்கிறது. ஆகவே, நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் மிகப் பெரிய அளவிலே



1999 ஏப்ரல் 1] [திரு. பேராசிரியர் க. அன்பழகன்]

அதனுடைய தாக்கம் இருக்கும் என்பதை உணர்ந்து, இந்த 'ஆண்டு தொடக்கத்திலேயே அதற்கான ஏற்பாடுகளைச் செய்து, அந்தக் கணினியிலே தமிழை உரியமுறையில் பயன்படுத்துவதற்கான அடிப்படைகளை உருவாக்குவதற்கும், Internet மூலமாகத் தமிழ் பயன்படுவதற்கும் வழிகாண ஒரு மாநாடு, இரண்டு மாதங்களுக்கு முன்னாலே நடத்தியதுடன், தமிழையும் பயன்படுத்துவது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டு இளைஞர்கள் அதிலே நல்ல தேர்ச்சி பெற்று, அதைப் பயன்படுத்தி, வாழ்க்கையில் தொழில் வாய்ப்பைப் பெற வேண்டும். அதிலும் தமிழ்நாட்டில் +2 வகுப்பில் படிக்கிற மாணவர்களுக்கு, பரவலாக இந்தக் கணினி அறிவை வழங்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார். அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. முதலிலே 100 பள்ளிக்கூடங்களில் வழங்கலாம் என்று கருதி, ஒரு திட்டம் தீட்டப்பட்டது. இப்போது 1200 மேல்நிலைப் பள்ளிக்கூடங்களிலேயும் அந்த வாய்ப்பை உருவாக்குவதற்கு, கணினி உற்பத்தியில் ஈடுபடுகிற பெரிய நிறுவனங்கள் இந்தப் பள்ளிக்கூடங்களில் பயிற்றுவிக்கும் பொறுப்பேற்றுக்கொண்டு, மூன்று ஆண்டு, ஐந்து ஆண்டு ஒப்பந்த முறையில் இந்தப் பள்ளி மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தம் செய்வதற்கான ஏல அறிவிப்பு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. விரைவாக ஒரு முடிவு ஏற்பட்டு, அதன் மூலமாக, அந்த முறையிலேயும் கல்வி வளர்ச்சி மாணவர்களிடத்திலே, கிராமத்து மாணவர்களிடத்திலே ஏற்படும் என்று நான் நிச்சயமாக எதிர்பார்க்கிறேன்.

மற்றொரு கருத்து, 15 விழுக்காடு கிராமத்து மாணவர்களுக்கு ஒற்றைச் சாளர முறையில், பொறியியல் கல்லூரியில், அதேபோல, பல்தொழில் பயிலகங்களில் (Polytechnics) வழங்குவதற்கு ஏற்பாடு செய்து, கடந்த ஆண்டு அது செம்மையாக நடைபெற்றிருக்கிறது. அந்தக் கிராமப்புறப் பள்ளிக்கூடங்கள் எவை என்னும் பெயர்ப்பட்டியலை, மாவட்ட ஆட்சித் தலைவர் நமக்கு அனுப்பினாலும்கூட, Rural Institutions என்ற அடிப்படையில் அனுப்பினாலும்கூட, பேரூராட்சி மன்றப் பகுதி அதிலே விடுபட்டுப் போகின்ற காரணத்தால், பேரூராட்சி மன்றத்திலே இருக்கின்ற மேல்நிலைப் பள்ளிக்கூடங்களையும் அதிலே இணைக்க வேண்டுமென்று ஒரு கருத்து இருக்கிறது. பேரூராட்சிப் பகுதியிலே இருக்கின்ற பள்ளிக்கூடங்கள் என்ற முறையிலே அவை இணைந்தால், சுற்றுப்புற கிராமத்துப் பிள்ளைகளும் அந்தப் பள்ளிக்கூடத்திலே படிக்கிறார்கள்

என்பதை ஒரு காரணமாகச் சொன்னாலும், அங்கே கிராமத்துப் பிள்ளைகள் மட்டும் படிக்கவில்லை என்பதை அங்கே படிக்கிற முனுசாமி, முத்துசாமி, கந்தசாமி முதலானோரில் எவன் பேரூராட்சியைச் சார்ந்தவனாக, urban oriented ஆக இருப்பானோ அவன்தான் அதிலே மதிப்பெண்கள் வாங்கிக் கொண்டு வருவானே தவிர, இந்தப் கிராமத்துப் பிள்ளை வரமாட்டான், பின்தங்கிய சமூகம் சார்ந்த மணி வீட்டுப் பிள்ளை வரமாட்டான். வேறு வீட்டுப் பிள்ளைதான் வருவான். ஆகவே, கிராமத்துப் பிள்ளைக்குத்தான் அந்த இடம், 15 விழுக்காடு கிடைக்க வேண்டுமெனில் பேரூராட்சிப் பள்ளிக்கூடங்களும் அதிலே இடம் பெறாமல் இருப்பதுதான் பாதுகாப்பாகும். சமுதாய அடித்தட்டிலே இருக்கிறவனுக்குக் கிடைக்கிறபோது, இடையிலே இருக்கின்றவனுக்குக் கிடைக்காவிட்டாலும் சமூக நீதி காப்பாற்றப்படும். பந்தியிலே என்ன பரிமாறுகிறோமோ அது கடைசி இலைக்கும் பரிமாறப்பட வேண்டும். சமுதாயத்தில் இடைநிலையிலே ஒருவருக்கு விட்டுப் போனால்கூடக் கவலை இல்லை. அது கடைசி நிலையினருக்குக் கிடைப்பதுதான் முக்கியம். அதில் பேரூராட்சிப் பள்ளிக்கூடங்கள் இடம் பெறுமானால், இந்த உரிமை, அடித்தட்டு மக்களுக்குக் கிடைக்கிற உரிமை பறிபோகும். கிராமத்துப் பிள்ளை என்ற பெயரில் கொஞ்சம் வசதியாக உள்ள, வியாபாரி வீட்டுப் பிள்ளை, ஏழை விவசாயி வீட்டுப் பிள்ளைக்குரிய இடத்தை எடுத்துக் கொள்வான். அதையும் வரவேற்கிறீர்களென்றால், நாம் ஏற்றுக்கொள்ளலாம்.

அதேமாதிரி, Rural Institutions என்ற பெயரிலே, ஆங்கில மொழி மூலமாகப் பயிற்சி வழங்கி, மாதச் சம்பளம் வாங்கிக்கொண்டு நடைபெறும் சில Convent போன்ற பெரிய பெரிய பள்ளிக்கூடங்கள் எல்லாம் இருக்கின்றன. அவை Rural கிராமப் பள்ளிக்கூடங்களில் இடம் பெறக்கூடாது என்று அரசு கருதுகிறது. அப்படிப்பட்ட முறையில் பிள்ளைகளிடத்தில் சம்பளம் வாங்கிக் கொண்டு நடைபெறுகின்ற Residential Institutions போன்ற பள்ளிக்கூடங்கள்—இங்கேகூட ஸ்ரீபெரும்புதூர் பக்கத்திலே செயின்ட் ஜான் அல்லது செயின்ட் ஜோசப் போன்ற பெயரில் மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. அப்படி இருக்கின்ற பள்ளிக்கூடங்கள் கல்வித் தரமுயர்ந்த பள்ளிக்கூடங்கள். அந்தப் பிள்ளைகள் நேரடியாக போட்டியிலே வெற்றி பெற முடியும். ஆகவே, அவர்கள் கிராமப்புறப் பள்ளி மாணவர்களுக்கு ஒதுக்கிய



இடத்தை எடுத்துக் கொள்ளாமல் இருப்பதற்கும் வழி செய்ய வேண்டும் என்று அரசு கருதியிருக்கிறது. தொடர்ந்து அரசு இப்படிப்பட்ட நியாய அடிப்படையில் முயற்சி செய்யும். அதற்கான ஆலோசனைகளை நீங்கள் எப்போதும் வழங்கலாம். ஆகவே இங்கு வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அதை வலியுறுத்தாமல் இந்த மானியத்திற்கு ஆதரவு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் முழு அளவிற்குப் பதில் சொல்லாவிட்டாலும்கூட, நான் சொன்னதிலிருந்து என் அடிப்படையான உணர்வை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டு, என் உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண் 17—கல்வி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 17—கல்வி. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சி. ஞானசேகரன் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. நிஜாமுதீன் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.41,44,00,61,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் (5-4-1999) திங்கட்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-42 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

113. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆண்டு விவர கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. (1948 ஆம் ஆண்டு மின்சார (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (ஆங்கிலம்)

114. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் இருபத்தி நான்காவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

115. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் ஆறாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)



116. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் இருபத்தொன்றாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

50. உடுக்குறியிடாத வினாக்கள்- விடைகள் பட்டியல் (ஒன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

51. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பத்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

ദ്ദ

D
V 21/3/99
n99.68.3
221077